# மீட்டாத வீணை

பாலகுமாரன்

விசா பப்ளிகேஷன்ஸ்
55, வெங்கட்நாராயணா சாலை
தியாகராயநகர், சென்னை - 600 017.

முதற் பதிப்பு : நவம்பர் 1995
உரிமை : ஆசிரியருக்கு


## விசா பப்ளிகேஷன்ஸ் வெளியீடு


MEETATHA VEENAI
By : BALAKUMARAN
First Edition : November 1995

**விலை : ரூ. 45-00**

**கிடைக்குமிடம்:**
**திருமகள் நிலையம்**
55, வெங்கட்நாராயணா சாலை
தி. நகர், சென்னை-600 017
போன் : 4342899, Fax : 91-44-4341559



3736362
20249



அச்சிட்டோர் :
ஸ்ரீ ராஜேஸ்வரி பிரிண்டிங் ஒர்க்ஸ்
12, கஜபதி தெரு சென்னை-5.


யோகி ராம்சுரத்குமார்

வேலூர்

என் இனிய பாலாவிற்கு அநேக நமஸ்காரங்கள். நலம். தங்கள் நலமும் சுற்றத்தார் நலமும் அறிய விருப்பம். தெரியப்படுத்தவும். பல்சுவை நாவலில் தாங்கள் எழுதிய மீட்டாத வீணையைப் படித்தேன். சிறிய, மெல்லிய நூலிழை போன்ற கருவைக் கொண்டு விதியின் விமர்சனத்தை விவரமாய் சொல்லுகின்ற பக்குவம் உங்களுக்கே உரியது. அற்புதமாய் எழுதியிருத்தீர்கள். அதை விமர்சனம் செய்ய எனது சிற்றறிவுக்கு தகுதி இல்லை. அத்தோடு ஜரிகைக் கனவுகள் என்கின்ற சினிமாவில் நுழைவதைப் பற்றி தொடர் கட்டுரை எழுதுகிறீர்கள். நல்லது. மாத நாவலில் கட்டுரை இல்லை. எதை எழுதினாலும் படிப்போம். எழுதுங்கள், தாங்கள் நிறைய எழுதுங்கள். இடைவிடாது எழுத இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

தமிழரசியில் திருப்பூந்துருத்தி தொடர் எழுதி முடித்துள்ளீர்கள். அது புத்தகமாக வெளிவந்தவுடன் பொக்கிஷமாக பாதுகாத்து வைக்க எனக்கு எண்ணம்.

எழும்பூர் ரயில்நிலையத்தில் ஒரு முப்பத்தைந்து வயது இளைஞரைப்பற்றி சொன்னீர்கள். அவருக்கு பதிலாக நான் முதலில் மன்னிப்பு கேட்கின்றேன். உங்கள் கடிதம் இந்த வாசகர்களுக்கு ஞானபீட பரிசு. அதனால் தான் அப்படி வற்புறுத்துகிறார்கள். உங்களுடைய எண்ணமும் புரிகிறது. வகையாய் நெஞ்சிலிருந்து நெஞ்சத்தைத் தொட ஆசை என்கின்ற இந்த ஆசையே போதும் பாலா நாவலிலே தாராளமாய் பேசுங்கள் கடிதம் எழுதத் தோன்றினால் தவிர எழுத வேண்டாம்......

வேணும் நலம்.

பிரியமுடன்
கோ. அன்பழகன்

*13, சாவடி வீதி சத்துவாச்சாரி*
வேலூர் **Pin. 632 009.**

திருச்சி - 14

25—9—95

இனிய பாலாவிற்கு,

நமஸ்காரம்.

தீபாவளிக்கு பிடித்த கலரில் கெட்டிக் கரை போட்ட பட்டுப் புடவை கிடைத்த மாதிரியான சந்தோஷம்... சம்பவங்களின் இறுக்கமும் நடையின் நேர்த்தியும்... சரஸ்வதி ஹேமா, சந்தானம் இவர்களோடு கூடவே வாழ்ந்திருந்த பாதிப்பு மனசுக்குள் இன்னமும் இருக்கிறது.

கணவனைப் பிரிந்து சிரமப்பட்டிருந்தாலும் அவனுடைய இறுதி காலத்தில் அவனுக்குக் கருணையும் பரிவும் காட்டும் சரஸ்வதி...காதலும் காமமுமாய் சுந்தரத்துடன் இழையும் வினோலியா, கல்யாண ஆசை வராமல் லட்சியத்தில் வெற்றி பெற துடிக்கும் ஹேமா... ரொம்பவும் இயல்பாய் தன் காதலை வெளிப்படுத்தி காத்திருக்கும் சந்தானம்... யாருமே கற்பனையாகத் தோன்றவில்லை. இருக்கிறார்கள்... எங்கேயோ இருக்கிறார்கள். அவர்கள் வாழ்க்கை ஒரு பாடமாய் அவர்களே ஒரு பாடமாய் எங்களுக்கு உணர்த்தியிருக்கிறீர்கள்.

நன்றி.

என்றென்றும் பிரியமுடன்

ராஜலட்சுமி

20249
3736362

# மீட்டாத வீணை

## 1

இராமாயணத்தின் சுந்தரகாண்டப் பகுதியை அன்றைய தினத்தில் இரண்டாம் முறையாகப் படித்து விட்டு புத்தகத்தை கண்ணில் ஒற்றிக் கொண்டு சரஸ்வதி அதைப் பூஜை அறையில் வைத்தாள். இரண்டு வேளை தினமும் சுந்தர காண்டம் படிக்க வேண்டுமென்பது அவள் தீர்மானம்.

''ஒரு நாளைக்கு ஒரு தடவை படிங்கோ போறும். உங்க புள்ள தானே சரியாவான் அவனுக்கு ஒரு குறையும் வராது.'' என்று அவளிடம் சொல்லியிருந்தார்கள்.

பிள்ளைக்கு என்று முதல் நாள் ராமாயணம் படிக்கிற போது பெண்ணுக்கு என்ன படிப்பது என்கிற கேள்வி வந்தது. இரண்டு குழந்தைகள் பெற்றிருக்கும்போது அதில் ஒன்று மட்டும் உயர்வடைய, ராமாயணம் படிப்பது சரியா என்கிற எண்ணம் வந்தது. பெண்ணுக்கு என்ன படிக்கலாம். திருமுருகாற்றுப்படை படிக்கலாமா? ராமாயணம் வாங்கும்போதே திருமுருகாற்றுப்படையும் சரஸ்வதி வாங்கினாள். இரண்டு குழந்தைகளையும் ஒரே விதமாய் நடத்த வேண்டும். ஒரே விதமாய் எண்ண வேண்டும் என்று யோசித்தாள்.

ஆனால் முதல்நாள் சுந்தரகாண்டம் படித்தபோது மனம் அந்த ராம காதையையே சுற்றிச் சுற்றி ஓடிற்று.

பிற்பகலும் சுந்தர காண்டமே படிக்கத் துவங்கினாள். அந்தக் கதையை நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்கிற தூண்டுதலால் புத்தகத்தைப் பிரித்தாலும் பிரித்து கண்ணில் ஒற்றிக் கொள்ளும்போது.

''பகவானே, இந்த நேரம் இந்தக் கதையைப் படிக்கிற புண்ணியம் என் குழந்தை ஹேமாவைப் போய்ச் சேரட்டும். ஹேமலதாவுக்கு என்னைப் போலல்லாது சந்தோஷமான வாழ்க்கை அமையட்டும். அந்தக் குழந்தை திடமும், திறனும், அழகும், அறிவும் உள்ளவளாகவும் வளரட்டும். அவள் அழகு அவளுக்கு ஆபத்தைக் கொடுக்காததாகவும் அவள் அறிவு அவளுக்கு அகம்பாவத்தைக் கொடுக்காததாகவும் இருக்கட்டும். சர்வேஸ்வரா. எப்பொழுதும் என் குழந்தைகளுக்கு அருகிலேயே இரு. அவர்களின் எல்லாச் செயல்களிலும் தர்மம் இருக்கும் படி செய்.'' என்று படிக்கத் துவங்கினாள்.

குழந்தைகளுக்கு என்று படிக்க சரஸ்வதியின் மனசு அந்தக் காவியத்தால் லேசாகியது. இரண்டு முறை சுந்தர காண்டம் படித்தாலும் நேரம் கிடைக்கும் போதெல்லாம் இராம காதையை படிக்கிறபோது மனசுக்குள் புது வெளிச்சம் வந்தது. வெறும் பக்திக்காக மட்டும் பாராயணம் செய்யும் கதை யல்ல அது. உள்ளடங்கி, மெல்லிய குரலில் வேறு ஏதோ ஒரு செய்தியை ராமாயணம் சொல்கிறது. அது என்ன செய்தி என்று ஒட்டு மொத்தமாய் யோசிக்க வேண்டும் படிக்கிறபோது வார்த்தைகளால் சம்பவமும், அச்சம்பவங்களால் மனோநிலை மாறுதல்களும் ஏற்படுகின்றன.

சரஸ்வதி இராம கதையை நினைத்தவாறு பால்கனிப் பக்கம் நின்று தெருவை எட்டிப் பார்த்தாள். நான்காவது மாடியிலிருந்து தெருவும், சென்னை நகரத்தின் ஒரு பகுதியும் அந்த நான்கு மணி வெயிலில் மிக ரம்மியமாய் மின்னிக் கொண்டிருந்தன.



சென்னை நகரம் 'பச்'சென்றிருக்கிறது. அவள் இருபது வயசில் ஹைகோர்ட் லைட் அவுசிலிருந்து பார்த்திருக்கிறாள். அப்பொழுது சென்னை இன்னும் பசுமையாக இருக்கும். தென்னந்தோப்பாக இருந்த மைலாப்பூரெல்லாம் கட்டிடமாகி விட்டது என்று அப்போது யாரோ சொன்னார்கள். இப்போது மைலாப்பூர் தாண்டி வெகு தூரம் வரையில் கட்டிடம்தான். கட்டிடமே இல்லாத சென்னை நகரம் எப்படியிருக்கும் என்று கற்பனை கூடப் பண்ணிப் பார்க்க முடியவில்லை

ஆனால் ஒரு காலத்தில் சென்னை நகரம் காடாய் இருந்திருக்க வேண்டும். மைலாப்பூர் கிராமம். திருவல்லிக்கேணி கிராமம். திருவொற்றியூர் கிராமம் என்று இருந்திருக்க வேண்டும். திருவொற்றியூருக்கும், திருவல்லிக்கேணிக்கும் நடுவே வெள்ளைக்காரனுக்குக் கோட்டை கட்ட நிலம் விற்றுவிட்டு, இந்த ஊருக்கு என் பெயரை வை என்று சென்னப்ப கேசவ நாயக்கர் சொல்லியிருக்க வேண்டும்.

சென்னப்ப கேசவருக்கு முன்னால் சோழர் காலத்து சென்னை நகரம் எப்படியிருந்தது. அதற்கு முன்னால் யாரெல்லாம் ஆண்டார்கள். யாரெல்லாம் வாழ்ந்தார்கள். அப்போது சென்னைப்பட்டணம் வயலா, காடா, காடெனில் எப்படிப்பட்டது? புலி, சிங்கம், கரடி, மான், குரங்கு இவை நிறைந்த காரிருள் காடா, நிறைய வானரங்கள் இருக்குமோ... கிஷ்கிந்தையின் ஒரு பகுதியாக சென்னை இருந்திருக்குமோ...அகத்தியர் நடந்து வந்த இடமோ... இலங்கைக்குப் போக அந்த ராமன் இந்தப் பக்கமாய் போக வாய்ப்பிருக்குமோ... அண்ணனும், தம்பியும் அயோத்தியிலிருந்து நடந்து வந்து ஆந்திரா வழியாக சித்தூர், புத்தூர். நகரி, நாகலாபுரம், திருவொற்றியூர், திருவல்லிக்கேணி, மைலாப்பூர் என்று போயிருப்பார்களோ...இது சீதையோடு நடந்த இடமா.. சீதையைத் தொலைத்து விட்டு நடந்த இடமா...

சரஸ்வதி மனசுக்குள் சட்டென்று சென்னை நகரம் காடாக மாறி, காட்டின் நடுவே ஒரு மண்பாதை போக இரண்டு வீரர்கள் வில்லும் அம்பராத்துணியுமாய் மிகுந்த கவலையோடு நடக்கிற காட்சி தென்பட்டது. அந்த மாதிரி பசியும் தாகமுமாய் நடக்கிறவர்களுக்குத்தான் ஏதாவது செய்ய வேண்டும் என்று தோன்றியது.

"நீங்கள் யார்? எங்கிருந்து வருகிறீர்கள்? மிகுந்த களைப்போடும் கவலையோடும் இருக்கிறீர்களே, உங்களுக்கு என்ன நேர்ந்தது?" என்று விசாரிக்கிற பெண்ணாய்த் தன்னைக் கற்பனை பண்ணிக்கொள்ளத் தோன்றிற்று. தனக்கு ஒரு குடிசை இருப்பது போலவும், மூங்கில் படலைத் திறந்து அவர்கள் இருவரையும் வரவேற்று உட்கார வைப்பது போலவும், கை, கால் கழுவ நீர் கொடுப்பது போலவும், திண்ணையில் படுத்துக் கொள்ள பட்டுப் பாயும், தலைக்கு வைக்க மனைப் பலகையுமாய் ஒரு காட்சி மனசுக்குள் ஓடிற்று.

ஆனால், ராமருக்கு என்ன சமைத்துப் போடுவ தென்று தெரியவில்லை. குழம்பு, ரசம், மோர் சாதமா, இல்லை உப்புமா, கிச்சடி போன்ற பலகாரமா, மனசு மயங்கிற்று. காயும், கனியும், கிழங்குமாய்க் கொடுக்க மனசு ஒப்பவில்லை.

வழி முழுவதும் அதையே சாப்பிட்டு வந்த அந்த இரண்டு வீரர்களுக்கும், தன் குடிசைக்கு வந்தபோது அதையே கொடுப்பது சங்கடமாயிருந்தது. சிரமம் பார்க்காமல் ராமருக்கு எதையாவது செய்து போட மனசில் ஆசை வந்தது.

மைலாப்பூர் கிராமமாய் இருக்கின்ற அந்த காலத்தில் காடுகள் சூழ்ந்து, எந்த வசதியும் இல்லாத அந்த நேரத்தில் என்ன விதமான உணவுப் பொருட்கள் கிடைக்கும்?



சரஸ்வதி மனசு மயங்கி தன் குடிசையில் பாத்திரங்களை உருட்டி என்ன இருக்கிறதென்று தேடினாள். ஏதாவது கொடுக்க வேண்டுமே என்று பரபரத்தாள்.

கேழ்வரகு மாவு இருந்தது. பச்சை மிளகாய், இஞ்சி துண்டுகள் இருந்தன. கொல்லை முழுக்க புதினா முளைத்திருந்தது. மாவைக் கரைத்து, இஞ்சி, பச்சை மிளகாயெல்லாம் நறுக்கிப் போட்டு, விறகு மூட்டி, இரும்புத் தகடு வைத்து தோசை வார்த்தாள்.

காடுகள் சூழ்ந்து மைலாப்பூர் இருக்கும்போது தோசைக்கல் இருக்குமா என்று தெரியவில்லை. அப்போது தோசைக்கல் கண்டு பிடித்திருப்பார்களா என்று தெரியவில்லை. இருக்கலாம். இருந்திருக்கக் கூடும். அது இருந்தால்தானே ராமருக்கு தோசை வார்த்துக் கொடுக்க முடியும் என்று தோன்றியது.

தோசை வார்க்கும்போதே புதினா துவையல் அரைத்தாள் உட்குழிந்த மண் தட்டில் நிறைய தோசைகள் வார்த்து, தோசை மீது இன்னொரு மண் சட்டி வைத்து, ஒன்றில் காலையில் செய்த குழம்பும், இன்னொன்றில் புதினா துவையலுமாய் வெளியே வந்தாள்.

அந்த இரண்டு வீரர்களையும் காணவில்லை. ஒரு கணம் 'பக்' கென்றிருந்தது.

ஆனால் ராமரும், லட்சுமணரும் மூங்கில் படலுக்கு வெளியே நின்றிருந்தார்கள். ஏன் வாசலிலேயே நின்று விட்டீர்கள். சரஸ்வதி தோசைக் கலத்தோடு அவர்களை நோக்கிக் கேட்டாள்

"அம்மா, நீங்கள் தனியே இருக்கிற பெண்மணி, ஒரு பெண் தனித்திருக்கும்போது அவள் வீட்டிற்கு ஆண்கள் வரக்கூடாது. அதனாலேயே நாங்கள் வெளியே வந்

தோம். உணவை இங்கேயே கொடுத்து விடுங்கள்.'' இராமன் சிரித்தபடி நிதானமாய்க் கூறினான்.

''வீட்டிற்குள் வர வேண்டாம் ஐயனே. இங்கே தோட்டத்தில் அமர்ந்து உணவு கொள்ளலாமல்லவா?

தோசைத் தட்டுக்களைத் திண்ணையில் வைத்து விட்டு, பெரிய மணைப் பலகை போட்டாள். அருகருகே போட்ட மணைப் பலகைகளில் இருவரும் உட்கார்ந்து கொண்டார்கள். வில்லையும் அம்பையும் திண்ணைத் தூணில் மாட்டி வைத்துவிட்டு சாப்பிட அமர்ந்தார்கள். துவையிலில் தோய்த்துக் தோய்த்து ராமன் நிறைய கேழ்வரகு தோசை சாப்பிட்டான். லட்சுமணன் விரலால் அந்த தோசையை தொட்டுவிட்டு 'போதும்' என்று சொன்னான். ஒரு சொம்பு நீரை குடித்து விட்டு ராமன் கையலம்பினான். தோளிலிருந்த மர உரியால் முகம் துடைத்துக் கொண்டார்கள். அந்த வீரர்கள் வில்லையும் அம்பையும் எடுத்துக் கொண்டான். அவளை நோக்கி சிரித்தபடி கையுயர்த்தினார்கள்

''ரொம்ப திருப்தி. ரொம்ப திருப்தி.'' என்று இருவரும் சொன்னார்கள். ராமன் வில் வளைத்து. நாணேற்றி சரம் கொடுத்து அவர்கள் சாப்பிட்ட இடத்தில் எய்தான். அம்பு பாதி பூமியிலும் பாதி வெளியிலுமாக நின்றது.

''தாயே. நீங்கள் கொடுத்த உணவுக்கு நன்றி உங்களுக்கு எந்தத் தீங்கும் நேராதவாறு இந்த அம்பு காப்பாற்றும். நாங்கள் போய் வருகிறோம்.'' என்று கை கூப்பினான்.

''உன் காரியம் வெற்றியடையட்டும் ராமா.'' அவளும் கை கூப்பினாள்.

அடர்ந்த மைலாப்பூர் காடுகளுடே அவர்கள் தெற்கு நோக்கி நடந்தார்கள். மூங்கில் படலைப் பிடித்தபடி சரஸ்வதி அவர்கள் போவதையே பார்த்துக் கொண்டிருந்



தாள். மிருந்த சந்தோஷமும். நிறைவும் அடைந்தாள். அவர்கள் சாப்பிட்ட கலத்தை மடியில் வைத்துக் கொண்டு அந்த அம்புக்கு அருகே அமர்ந்தாள்.

● ● ●

ஆட்டோ கிறீச்சிட்டு பிரேக் போட்டு நின்றது. குறுக்கே வந்த பசு மாட்டை உரசியபடி வலமாய் சுற்றிக் கொண்டு முன்னேறியது. சரஸ்வதி கனவு கலைந்தது போல் தலையை உலுக்கிக் கொண்டாள்.

சென்னை நகரம் நிறைய கட்டிடங்களுடன். இன்னும் அழகாய்.பொன்னிறமாய் ஜொலித்துக் கொண்டிருந்தது. வாசல் மணி 'ப்ளாங்... ப்ளாங்க...' என்று பலமுறை ஒலித்தது. சரஸ்வதி ஓடிப்போய் கதவு திறந்தாள். வெளியே அவள்மகன் சுந்தரம் பொறுமையின்றி நின்று கொண்டிருந்தான்.

''என்ன ஆச்சும்மா. தூங்கிட்டியா? கதவைத் தள்ளிக்கொண்டு உள்ளே வந்தான். ''மூணு நிமிஷமா பெல் அடிக்கறேன். நிதானமா வந்து கதவு திறக்கற?''

''பால்கனியில் நின்னு கொண்டிருந்தேனா காதிலேயே விழலை.''

''ஏதாவது கனாக் கண்டுண்டிருப்பே. அலர்ட்டா இரேம்மா. எப்பவும் தூங்கி வழிஞ்சுண்டே ஏன் இருக்கே ப்ரிஸ்க்கா, ப்ரைட்டா. இருக்கவே மாட்டேங்கற.''

''வயசாயிடுத்துடா. ''சரஸ்வதி திரும்பினாள்.

''கதவு சாத்தும்மா.'' பிள்ளை அலுத்துக் கொண்டான், தானே முன்னேறி டொம்மென்று கதவு சாத்தி தாழிட்டான். பிள்ளை ஏதோ கோபத்திலிருக்கிறான் என்பதாய் சரஸ்வதி உணர்ந்து கொண்டாள்.

''என்ன வயசாச்சு உனக்கு. நாற்பதுதானே? இதுக்குள்ள 'ஹான்னு உட்கார்ந்துடணுமா? நிக்கறது. நடக்கறது எல்லாத்தையும் ஸ்லோவா பண்ணணுமா?''

சரஸ்வதிக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை.

''பசிக்கிறது, ஏதாவது குடு.''

''கேழ்வரகு தோசை...சரஸ்வதி பேச ஆரம்பித்து நிறுத்திக் கொண்டாள் ஒரு மண் கலத்தில் உயரமாய் அடுக்கப்பட்ட தோசைகள் என்று அவளுக்கு நினைவு வந்தது.

''என்ன?''

''ஒண்ணுல்ல, இதோ தரேன். உப்புமா இருக்கு.''

''ஏதோ கேழ்வரகு தோசைன்னியே...''

''ஒண்ணுல்ல. வேறேதோ நினைவு. உப்புமாவும். காப்பியும் தரேன். மறுபடியும் போகணுமா?''

ஆமாம் இன்னிக்கு வக்கீலைப் பார்க்க வரேனு சொல்லியிருக்கேன். இந்தா சேலரி கவர்.''

அவன் கனமான கவரை எடுத்து அவளிடம் நீட்டினான், ஹாலை ஒட்டிய பாத்ரூமிற்குப் போய் முகம் அலம்பிக் கொண்டான். சம்பளக் கவரை பூஜை மாடத்தில் ராமாயணப் புத்தகத்தின் மீது வைத்துவிட்டு. சரஸ்வதி கைகூப்பினாள். சமையலறைக்கு வந்து உப்புமாவும், சாம்பாரும் எடுத்து பிள்ளைக்குக் கொண்டு வந்து நீட்டினாள்.

''அனேகமா இந்த ஹியரிங்க் ரெண்டுல ஒண்ணு தெரிஞ்சிடும். தருவேன், தரமாட்டேன் ஏதாவது ஒன்று அந்த ராஸ்கல் சொல்லியாகணும். தந்தா சரி. தரலை நடுரோட்டுல சட்டையைப்புடிச்சு'பொக்கு பொக்கு'ன்னு குத்திடப் போறேன்.''



சரஸ்வதி அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். பிள்ளை உப்புமா சாப்பிடும் வேகத்தில்கூட ஒரு கோபம் தெரிந்தது.

''அப்படி ஏதும் பண்ண வேண்டாம் சுந்தர். அமைதியா இரு நமக்கு என்ன விதிச்சிருக்கோ நிச்சயம் அது கிடைக்கும்.''

''உதை இல்லாம அந்த சோம்பேறி ஒரு பைசா காசு தரமாட்டாம்மா. நான் இன்னைக்கு எழுதித் தரேன்.''

''அந்தக் காசு வேண்டாப்பா.''

''உனக்கு வேண்டாம். எனக்கு வேணும். எத்தனை நாளைக்கு இந்த டபுள் பெட்ரூம் ப்ளாட்லேயே இருக்கறது?'' பிள்ளை தட்டிலேயே கை கழுவி வாய் துடைத்துக் கொண்டான்.

''நான் வரேன்.''

சுந்தர் கூட ராமனுடைய உயரம். ஒரு வேளை ராமன் சுந்தருடைய உயரமா...உயரமாய், நீள புஜங்களாய், மெல்லிய உதடும், கூரிய மூக்குமாய் இருபத்தி நாலு வயது சுந்தரைப் பார்க்கும் போது பரவசமாய் இருந்தது. ஆனால் முகத்திலுள்ள கோபம்தான் இந்தக் குழந்தையைக் கோரமாகக் காட்டுகிறது. ராமனுக்குக் கோபம் வருவதே கிடையாது. ''காட்டுக்குப் போ'' என்று கைகேயி சொன்னபோது கூட முகம் வாடவில்லை. அப்பாவை ''ராஸ்கல்'' என்று சொல்லவில்லை 'பொக்கு பொக்கெ'ன்று குத்துவேன் என்று பல் கடிக்கவில்லை.

● ● ●

மறுபடி மணி அடித்தது. சரஸ்வதி அவசரமாய் ஓடிப் போய் கதவு திறந்தாள்.

''ஹாய் மம்மி.'' சரஸ்வதியின் மகள் ஹேமலதா செருப்புகளை உதறினாள். அவை புரண்டு திரும்பிக் கொண்டன. தோள் பையை சோபாவில் போட்டுவிட்டு, அண்ணாவைப் பார்த்து ''ஹலோ'' என்றாள். தன் அறைக்கு ஓடினாள்.

''நான் வரதுக்கு லேட்டாகும், கவலைப்படாதே. ராத்திரி சாப்பாடு வெளியே பார்த்துக்கறேன். எனக்காக ஒன்னும் பண்ண வேண்டாம்.'' வாசலுக்குப்போனான்.

''சுமுகமா முடிக்கச் சொல்லு சுந்தரம்.''

பிள்ளை பதில் சொல்லாது படியிறங்கினான்.

''மம்மீ இங்கே வாயேன்.''

பெண் அதட்டல் உள்ளே கேட்டது. பூப்போட்ட டாப்ஸை தலை வழியே உடுத்திக் கொண்டு உடம்பி லிறக்கி கீழ்ப் பகுதியை சரஸ்வதியை நோக்கி ஹேமா வீசினாள்.

''எல்லாத்திலேயும் நாடா உருவிக்கிடக்கு. பார்க்கவே மாட்டியா நீ. இந்தா, இதைப் போட்டுக் குடு. அடுத்த தடவை அந்த சலவை செய்யற பொம்பளை வரட்டும். 'கன்னு'ன்னு உறைக்கறா மாதிரி கேக்கறேன். எதுக்கு நாடாவ உருவணும். எல்லாத்திலேயும் நாடாவை உருவி வச்சிருக்கு, சனியன்.''

''இதுக்கு ஏண்டீ கத்தறே ஒரு நிமிஷத்துலே போட்டுடலாமே.''

''எனக்கு போடத் தெரியாது. போட்டுக் கொடு சீக்கிரம். நான் வெளியே போகணும்.''

ஹேமலதா பாப் தலையை வெடுக்வெடுக்கென்று சில ஆரம்பித்தாள். சரஸ்வதி நாடா போட்டுக் கொடுத்த பைஜாமாவைப் போட்டுக்கொண்டு இறுக்கிக்கட்டினாள். ''எனக்கு டிபன் வேணாம். நான் டின்னருக்குப் போறேன்.



வரலட்சுமிக்கு இன்னைக்குப் பர்த்டே. ஒன்பது மணிக்குத் தான் வருவேன். 'பயந்தே போயிட்டேன், பயந்தே போயிட்டேன்'னு உள்ள நுழைஞ்சதும் கத்தாத. வரட்டா.'' புயல் மாதிரி வெளியேறினாள். வீடு மறுபடி யும் அமைதியாயிற்று.

சரஸ்வதி மனசுக்குள் ராமனை நினைக்க ஆரம்பித் தாள்.

## 2

தனிமையிலிருப்பது சரஸ்வதிக்கு ஒன்றும் புதிய விஷயமில்லை. அது அவளுக்குப் பன்னிரண்டு வருடப் பழக்கம்.

முப்பத்திரண்டு அறைகள் கொண்ட ஒருமாளிகையை விட்டு விட்டு, முந்நூற்றி அறுபது சவரன் நகைகளை விட்டு விட்டு, மூன்றுகாரும் இரண்டுஜீப்புகளும், இரண்டு வேன்களும் உள்ள சௌகர்யத்தை விட்டுவிட்டு, இருபதா யிரம் ரூபாய் மதிப்புள்ள புடவையை என்னுடைய தில்லை என்று தூக்கி எறிந்துவிட்டு, மேம் சாகேப் என்று நூற்றுக்கணக்கான வேலையாட்கள் கை கூப்பும் மரியாதைகளைத் தவிர்த்து விட்டு எல்லாம் வல்ல புருஷ னை ''நீ எனக்கு வேண்டாம்'' என்று விவாகரத்து வாங்கிக் கொண்டு வந்து, பக்கத்திற்கொன்றாய் இரண்டு குழந்தைகளும், காலில் ஹவாய் செருப்புகளும், இடுப்பில் பழம் பட்டுப் புடவையும், காதில், கழுத்தில், தோளில் என்று பதினோரு சவரன் நகைகளும், நெற்றியில் பொட் டும், தலையில் துணுக்குப் பூவுமாய் வெளியே வந்த நிமிடம் இனி தனிமைதான் என்று தெளிவாகப் புரிந்து போயிற்று.

இந்த தனிமை வாட்டும், வதைக்கும், வழிமயக்கம் ஏற்படுத்தும். ஆனால் அதற்கு பயப்படக் கூடாது. அந்த தனிமையை எதிர்த்துத் தைரியமாய் நிற்க வேண்டும். அதை வளைத்து ஸ்நேகமாக்கிக் கொள்ள வேண்டும் என்பது புரிந்து விட்டது.

அப்படிப் பழக்கப்படுத்திக் கொண்டதன் விளைவு தான் தனக்குள்ளே யாரையாவது நிறுத்திப் பேசிக் கொண்டிருப்பது.

சில சமயம் சத்தமாய்க்கூட பேச நேரிடும். பூஜை அறை படங்களோடும். விக்ரஹங்களோடும் தான் அதிகமாகப் பேச நேரிடும். சிலசமயம் துணிக்கடையில் கொடுத்த காலண்டரில் உள்ள பெண்ணோடும் சரஸ்வதி பேசியிருக்கிறாள்.

"அடிப்பாவி, உனக்குக் கல்யாணம் ஆயிடுத்தாமே. யாரோ கல்யாணமானவனோட குடித்தனம் பண்றியாமே. இத்தனை அழகா இருக்கே. அறிவு வேண்டாமா? தோளும் இடுப்பும் என்னமா இருக்கு. சந்தனக்கட்டி மாதிரி இத்தனை வில் வளைவா உதடு யாருக்கு உண்டு? தென்னிந்தியா முழுக்க உன்னை தேவதை, தேவதைன்னு சொல்லிண்டிருக்கு. நீ ஏன் கல்யாணமானவனோட ஸ்நேகிதம் வச்சுண்டே? சௌக்கியமா இருக்கியா? உன்னைத் திட்டாம, அடிக்காம இருக்கானா? சந்தோஷமா வச்சுண்டிருக்கானா? சன்ன புன்னுன்னு விழுந்து பதறடிக்காம இருக்கானா? இலை மாதிரி வயிறு. இப்ப உண்டாயிருக்கியா?"

பார்த்துக் கொண்டேயிருக்கும்போது காலண்டர் காற்றில் ஆடித் திரும்பிக் கொண்டது.

"போயேன். சொல்லாட்டிப் போயேன் இந்த ராங்கி புத்திக்கு நன்னாப்படுவே. மத்தவங்களை மதிக்காதவா இன்னிக்கில்லேன்னா இன்னொரு நாள் மதிப்பில்



லாமத்தான் போவா. தன் மதிப்பு அழியும்போதுதான் மத்தவாளை அல மதிச்சது புரியும்.

என்னை வீட்டை விட்டு துரத்தித்தே, அதும் பிசினஸ்ல ஹெவிலாஸாம். தலை மயிரை பிய்ச் சுண்டு திண்டாடறதாம். நெஞ்சு வலிக்கறதுன்னு ஆஸ்பத்திரில படுத்துண்டு யாரையும் பார்க்க மாட்டேங்கறதாம். தன் வினை தன்னைச் சுடும். பேஷா மூஞ்சிய திருப்பிக் சுறியே நீயும் சூடு படணுமா?"

"வேண்டாம். எந்த பொம்மனாட்டியும் சூடு பட வேண்டாம். காத்து திருப்பி விட்டுடுத்து. நீ என்ன பண்ணுவே? ஏன் திருப்பினேன்னு காத்தே கோபிச்சுக்க முடியுமா? காத்து அப்படித்தான் திருப்பும், அலைக்கழிக்கும். அள்ளி உசரத்துல வைக்கும். அப்படியே கொண்டு வந்து தரைல தேய்க்கும். காத்து. காலம் எல்லாம் ஒண்ணுதான்.

சாதாரண சப்-கலெக்டர் பொண்ணுதான். கோடீஸ்வரனுக்கு வாழ்க்கைப்படலியா? பதினைஞ்சு வருஷம் மகாராணியா வாழலியா? அதே காத்து, காத்து மாதிரியான காலம் என்னைத் தரைக்குக் கொண்டு வரலியா?

"கடவுளே, உயரப் போகவும் வேண்டாம், தரைக்கு வரவும் வேண்டாம்?"

இந்த இரண்டு பெட்டும் குடித்தனம் போதும். எவர் தொடர்பும் இல்லாதது நான், என் குழந்தைகள், என் கனவு என்கிற சுகம் போதும். இந்தக் குழந்தைகளை ஏதோ ஒரு விதமாய் ஒப்பேற்றி முடித்து விட்டால். அவர்கள் வாழ்க்கையை அவர்கள் பார்த்துக் கொள்ளும் தைரியம் வந்துவிட்டால் எங்கேயாவது ஹோமில் சேர்ந்து, ரொம்பவும் முடியாதவர்களுக்கு உதவி செய்து, தலை நரைத்து, உடம்பு சுருங்கிய பிறகு செத்துப் போகலாம்.

செத்துப் போகும்போது கூட பெண்ணோ, பிள்ளையோ அருகே இருக்க வேண்டியதில்லை.

எல்லா வேலைகளையும் விட்டு விட்டு பதறியடித்துக் கொண்டு ஓடிவர வேண்டிய அவசியமில்லை. ஆஸ்பத்திரியில் கிடக்கிற உடம்பை எரிப்பதற்கு மட்டும் வந்தால் போதும். எரிப்பதற்கு முன் துணியை உருவி அசிங்கப் படுத்தாது சரியானபடி மரியாதையாய் இருக்கிறதா என்று பார்த்துக் கொண்டால் போதும்.

அதென்னமோ சாவு பற்றிய பயமே போய்விட்டது. எந்த நேரம் வீட்டை விட்டு வந்தோமோ அப்போதே செத்துப் போய் விட்டோம் என்று தோன்றிவிட்டது.

இது இரண்டாவது சாவு. இரண்டாவது முறை சாவதற்கு யார் பயப்படுவார்கள்? சாவு மாதிரி–வேதனையனுபவித்த பிறகு சாவு எப்படி வேதனையாகும்? சாவுபயம் போன பிறகு வாழ்க்கை சந்தோஷமாகத்தான் இருக்கும். உள்ளே மிகுந்த அமைதியிருக்கிறது. அன்றாட பிரச்னைகளுக்கு ராமன் துணை இருக்கிறான் என்கிற நம்பிக்கை இருக்கிறது.

''ராமா இன்னிக்கு கார்ப்பரேஷன் வாட்டர் வரலியே யாரைக் கேக்கறது?'' என்று பரிதவித்தால் போதும் எதிர் போர்ஷன் ஆள் அசோஸியேஷனுக்குப் போய் உரக்கச் சண்டையிட்டு தனக்கும் அவனுக்குமாய்த் தண்ணீர் வர ஏற்பாடு செய்து விடுவார். தலைவலி, ஜுரம், வயிற்றுப் போக்கு எல்லாவற்றிற்கும் ராமனோடு பேச முடியும்.

''குழந்தை ப்ளஸ் டூ விழுந்து விழுந்து படிக்கிறானே. இவ நல்ல படியா பாஸ் பண்ணனுமே. அவபட்ட கஷ்டத்துக்குப் பலன் கிடைக்கணுமே? என்ற சிந்தனையோடு இரவு படுத்துக் கொண்டால போதும். நடு ராத்திரியில் யாரோ எழுப்பி விடுவதுபோல் தூக்கம் கலையும். கனவில் உளறி, காலை தொப்பு தொப்பென்று போட்டுக் கொண்டிருக்கிற குழந்தையின் அருகே உட்கார்ந்து அவன் தலையை வருடி, நெற்றியைப் பிடித்துவிட குழந்தை ஆழ்ந்து உறங்குவது தெரியும்.



''நான் பண்ணிட்டேன். கணக்குல சென்ட் பர்ஸெண்ட் வரும் என்று பெண் நடுக்கூடத்தில் நடனமாட, 'ராம ராம' என்று மனசு கை கூப்பும். மாநிலத்திலேயே நான்காவது கணக்கில், வணிகத்துறையில் முதலாவது என்று பெண் தெரியதும் பாயசம் பண்ணி நைவேத்யமாய் வைத்து பதினாறு முறை விழுந்து விழுந்து நமஸ்காரம் செய்து 'ரொம்ப சந்தோஷமப்பா... ரொம்ப சந்தோஷமப்பா. இப்படியே என் குழந்தைக்கு ரொம்ப துணையா இருக்கணும்'' என்று வசனம் வரும்.

''பக்தி இருக்க வேண்டியதுதான். ஆனா இப்படி எப்ப பார்த்தாலும் சுவாமிய கட்டிண்டு அழப்படாது. உன் புருஷன் மேல தப்பில்லைன்னு தோன்றது. ஓர் ஆம்பளை பொம்மனாட்டிகிட்ட என்ன எதிர்பார்க்கிறானோ அதை எதிர்பார்க்கிறான். அதை அனுசரிச்சு நடந்துக்காத இப்ப அவஸ்தைப்படற.''

''அதுக்குப் பேரு அனுசரணையா? ''ஆபாசமில்லையா?'' அப்பாவிடம் அதைக் கேட்கப்பிடிக்கவில்லை. நீலப் படங்களைப் பார்க்கப் பெண்டாட்டி அருகே வேண்டுமென்பது கொடுமை

''அவ வெங்கலக் கட்டை மாதிரி இருக்காளே-நீ ஏன் இப்படி இருக்கே?'' என்று புருஷன் கின்னினால் வாய் விட்டுக் கத்தாமலிருக்க வேண்டுமென்பது இன்னும் கொடுமை.

அந்தத் திண்டை வேற ஆம்பளையா நினைச்சுக்கோ, அதைக் கட்டி அணைச்சு முத்தம் கொடு'' என்று புருஷன் கட்டளையிட அதற்குக்கீழ்ப்படிவது இன்னும் கொடுமை.

''ஏன் தரையில போட்ட பழைய விளக்குமாறு மாதிரி கிடக்கே.'' என்று புருஷன் பளீரென்று அறைய, தன்னை விளக்குமாறு மாதிரி நினைத்துக் கொண்டு கிடப்பது இன்னொரு கொடுமை.

''பதினாறு வயசில கல்யாணம் பண்ணிக் குடுத்துட்டீங்க சார். அவளை விட பத்து வயசு பெரிய ஆளுக்குக் குடுத்துட்டீங்க. செக்ஸ் அப்பமே அருவெறுப்பாயிடுச்சு அவளுக்கு.

எது, என்னன்னு தெரியறதுக்கு முன்னாடியே அவஸ்தைப்பட்டுப் போச்சு உங்க பொண்ணு. அதையெல்லாம் இனிமே மாத்த முடியாது.

அந்த மடையன்கிட்ட சொல்லுங்க. பொம்பளை நெருக்கமாகணும்னா பிரியமா பேசணும்னு சொல்லுங்க.

பதினாறு வயசு வரைக்கும் அவளை நீங்க வளர்த்தீங்களா, இல்லையே? நீங்க ஊர் ஊரா உத்தியோகத்துல போறதுக்கு அவளைத் தாத்தா பாட்டிகிட்ட விட்டுட்டீங்க. ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இருபதாவது வயசு புத்திய, ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பதுல கொண்டாந்து அவங்க வச்சிருக்காங்க.

பதினாறு வயசில இவளுக்கு நல்லா தெரிஞ்ச விஷயம் என்ன தெரியுமா? துளசி பூஜை. எச்சிலிடறது. எம்பிராய்டரி. இவ்வளவுதான்.

அவளுக்குக் கல்யாணம் தேவையான்னு கேட்டுக்காம, இத்தினி வருஷம் கழிச்சி டைவர்ஸுக்கு வந்து நிக்கறீங்களே நீங்கள்ளாம் என்ன படிப்பு படிச்சீங்கன்னே எங்களுக்குப் புரியலை..' ஃபேமிலி கோர்ட் வக்கில் அனிதா மாத்யூஸ் சலித்துக் கொண்டாள்.

''உடல் ரீதியாகவும், மனரீதியாகவும் சரியான மனைவியா இல்லைன்னு வக்கில் நோட்டீஸ் விட்டிருக்கான். அவன்கிட்ட பேசி மியூச்சுவல் கன்செல்ட்க்கு



சம்மதிக்க வச்சுட்டேன். ரெண்டு மாசத்ல மூணு ஹியரிங் வச்சு விவாகரத்து கொடுத்துருவாங்க.

பசங்க அம்மாவோடதான் இருக்கும்னு சொல்லிட்டேன். சரின்னுட்டான். இப்ப காம்பன்சேஷன் பத்தித்தான் என் கவலை. என்னா வீடு சார். அது வீடா... மாளிகை-நாய்க்குத் தனியா ரும் கட்டி ஃபேன் போட்டிருக்கான். மாட்டுக்குக் கொசுவலை போட்டிருக்கான். இவளுக்கு அங்க ஒரு இடம் இல்லையா-சோம்பேறி ராஸ்கல்.

எனக்குப் பவர் இருந்தா அவன் உள்ளங்கையில ஆணியடிச்சு சிலுவையிலே ஏத்துவேன். ஆனா அங்க நாயா, மாடா இருக்கறதுக்கு உங்க பொண்ணு தனியா வந்துடறது பெட்டர்.

மாசம் அஞ்சாயிரம். பத்தாயிரம் காம்பன்சேஷன்லாம் நடக்காத கதை. புள்ளைங்களுக்குச் சொத்து வாங்கிக் கொடுக்காதவரைக்கும் நான் ஓயப் போறதில்லை.''

''போன மாசம் ஒரு கிரிமினல் கேஸ்ல மாட்டிண்டு முழிச்சுட்டிருந்தேன். ரெண்டு சாட்சி திரும்பிட்டானுங்க. என் கட்சிக்காரன் பொண்டாட்டி படுத்த படுக்கையாயிட்டா. ஒரு வலுவான சாட்சி. எதிர்க்கட்சி க்ராஸ் எக்ஸாமின்ல குளறுபடி பண்ணிடுச்சு.

துட்டு பேறாத கேஸ்தான். ஆனா கோர்ட் சிரிச்சுடுமேன்னு ஒரே கவலை. நீங்க ஜெயிச்சுடுவீங்க மேடம். நான் உங்களுக்காக பிரே பண்றேன்னு இது, தரைல உட்கார்ந்துடுச்சு. ஒரு மணி நேரம் இத்தாண்டை, அந்தாண்டை அசையல. நான் அழுதுட்டேன் சாமி.

இதும் பிரேயரா, என் புத்தியா ஒன்னும் புரியலை- எம் பக்கம் சாட்சியா இருந்து எதிர்பக்கம் போனவனை குட்டைக் காய்ச்சி இழுத்த மாதிரி இருபது கேள்வி கேட்டேன். சாட்சிய விலைக்கு வாங்கிட்டாங்கன்னு நிருபிச்சேன்.

அடுத்த வாரம் நமக்கு ஃபேவரா தீர்ப்பாகிப் போச்சு. எது கவலையா இருந்ததோ அதுலே காப்பாத்துச்சு, என் கட்சிக்காரன் அவன் வீட்டை எனக்கு எழுதி வச்சுட்டு தேசாந்தரம் போயிட்டான். சரஸ்வதி கேஸுக்கு நான் ஃபீஸ் கேட்கலை. கேட்க மாட்டேன். அவ கேஸை எங்கிட்ட விட்டுருங்க.''

விவாகரத்து ஒரு பதிவுத் திருமணம்போல மிக அமைதியாய் நடந்து முடிந்துவிட்டது. சொத்து பற்றிய கேசுக்குத்தான் பொறி பறந்தது. அது நீ சம்பாதிச்சது இல்லை. உன் அப்பன் சொத்து என்று நிருபிப்பதற்குக் காலம் கடந்தது.

● ● ●

பன்னிரண்டு வருட கேஸ் அடுத்த வாரம் தீர்ப்பாகும். வக்கில் அனிதா, சரஸ்வதியை மறந்துவிட்டாள். அவன் பிள்ளையைத் தூண்டிவிட்டான்.

''சுந்தரம் உங்கப்பன் சொத்து உனக்குத்தான்டா.'' என்று உருவேற்றினான். பிள்ளைக்குக் காசு பைத்தியம் பிடித்துக் கொண்டது. தனியே தொழில் துவங்கும் திட்டங்கள் இருந்தன. நாளைக்கு சொத்து வந்து விட்டால் அதை எப்படிப் பிரிப்பது என்று அவன் கணக்குப் போட்டுக் கொண்டிருந்தான்.

பெண்ணுக்குக் காசு ஆசை இன்னும் ஏற்படவில்லை. அதற்குப் பதிலாய் ''அர்விந்தசாமி...ஐ லவ் யூ'' என்று டி.வி. பார்த்து நடிகனை நோக்கிக் கத்துகிறாள். ''நான் அவனை டாவடிக்கிறேன்'' என்று அம்மாவிடம் சொல்கிறாள். ஆண்கள் அழகாக இருக்க வேண்டும் என்று இலக்கணம் பேசுகிறாள்.



சரஸ்வதிக்குத் தன் குழந்தைகள் எந்த மாயத்திலும் சிக்காமலிருக்க வேண்டுமே என்ற கவலை மட்டுமிருந்தது. அதற்கு ராமரைத்தான் அதிகம் நம்பியிருந்தாள்.

இருட்டியது. பூஜை மாடத்தில் விளக்கேற்றினாள்.

''எப்பவாவது உன்னை நேர பார்க்கணும்ப்பா. கனவிலயாவது பார்க்கணும்.'' என்று கை கூப்பினாள். விளக்குச்சுடர் தெறித்து தனியே ஒரு பொறியை வெகு உயரத்துக்கு அனுப்பியது.

# 3

ஆட்டோவில் எக்மோர் போகும்போது ஹேமலதாவுக்கு ரொம்ப சந்தோஷமாக இருந்தது.

பதினேழு பெண்கள் வேலை செய்கிற அவள் கூரியர் கம்பெனியில் பார்ட்டி என்று சொன்னதும் ஏழுபெண்கள் தான் வருவதாக ஒப்புக் கொண்டனர்.

ஒருத்தி ஊசலாட்டமாய் முடிந்தால் வருவதாகச் சொல்லிவிட்டாள். மற்ற ஒன்பது பேரும் திட்டவட்டமாய் 'ஆளை விடும்மா' என்று கை கூப்பி விட்டார்கள்.

''நீ ஏழு மணிக்குப் பார்ட்டி ஆரம்பிச்சு, எட்டு மணிக்கு கேக் வெட்டி, ஒன்பது மணிக்கு சோத்துக்கடை முடிஞ்சு, நாங்க எப்போ வீட்டுக்குப் போறது?

நாங்க நங்கநல்லூர் போகணும். அங்கேர்ந்து இருட்டுல ஒன்றரை கிலோமீட்டர் நடக்கணும். பத்து மணிக்கு வீட்டுக்குப் போன உடனே கெட்ட வார்த்தை தான் சொல்லுவாங்க. பதில் பேசினா உடனே செருப்பால போடுவாங்க.''

''ஏய், இதுக்கு முன்னாடி நீ வீட்டுக்கு லேட்டா போனதே இல்லையா? நாலாயிரத்து ஐநூறு லெட்டர்

பல்க் கன்ஸைன்மெண்ட் ஸார்ட் அவுட் பண்ணினோமே. அன்னிக்கு எட்டே முக்காலுக்குக் கிளம்பலையா?''

''போன் பண்ணிச் சொன்னேன். அன்னிக்க 'ஓவர் டைம் இருக்கு லேட் ஆகும்'னு போன் பண்ணினேன். ஸ்டேஷனுக்கு வந்து கூட்டிட்டுப் போனாங்க.''

''அதையே சொல்றது'' வரலட்சுமி கூச்சலாய்ப் பேசினாள்.

''வாணாம்மா. தெரிஞ்சு போச்சுன்னு வச்சுக்க, ஓவர் டைம்ல மண்ணு விழும். 'இத்தனை நாள் ஓவர் டைம், ஓவர் டைம்னு சொன்னியே, அதெல்லாம் ஓவர் டைமா, 'பார்ட்டி'யான்னு கேள்வி வரும். 'பொய், திரிசமன்'னு எங்கம்மா தொடையிலே திருகுவா.''

''சும்மா ரீல் விடாதே. ரெண்டாயிரத்து ஐநூறு ரூபா சம்பாதிக்கற பெண்ணை தொடையில திருகுவாங்களா?'' வரலட்சுமி இடித்துக்காட்ட சம்பந்தப்பட்டவள் கையிலிருந்து ரிஜிஸ்டரை மேஜையில் தொபேரென்று போட்டாள்.

''இதோ பார், நீ சிட்டி குயின். பெரிய கிரிமினல் லாயர் பொண்ணு பர்த்டே பார்ட்டின்னா எங்கம்மா என்ன கேட்பா தெரியுமா? 'உன் ஃப்ரெண்டுக்கு என்ன வயசாகுது?'ன்னு கேட்பா. இருபத்திமூணு'ன்னு சொல்லுவேன். 'இருபத்தி மூணு வயசுப் பொண்ணுக்கு என்ன பர்த்டே வேண்டிக்கிடக்கு?' ஏதோ ஏழு வயது. எட்டு வயசுக் குழந்தைக்கு பர்த்டே கொண்டாடுவா. குழந்தை சந்தோஷத்துக்கு கேக் வெட்டி, பலூன் உடைச்சு, ஏதோ கொண்டாடுவா. உன் ஃப்ரெண்ட் என்ன சினிமாக் காரியா? இதுக்கு என்ன பர்த்டே கொண்டாட்டம்?''

வரலட்சுமி அந்த பதிலுக்குத் திகைத்துப் போனாள். ''பர்த்டே கொண்டாட வயசு முக்கியமா? நான் சாகற



மட்டும் பர்த்டே கொண்டாடுவேன் என்ன தப்பு? நங்க நல்லூர் என்ன நாட்டுப்புறமா? உங்கம்மா ஏன் அப்படி கேட்கணும்?''

''நங்கநல்லூர் நாட்டுபுறமில்லை. எங்கம்மா நாட்டுப் புறம். எங்கப்பா நாட்டுப்புறம் எங்கண்ணா நாட்டுப் புறம். ஆறே முக்கால் தாண்டிடுத்துன்னா போறும். நான் வரலையேன்னு வீடு முழுக்கப் பதறும். ஏழே காலுக்கு வீடு வாசல்ல நின்னுடும். எட்டு மணியாச் சுன்னா ஸ்டேஷனுக்கு வந்துடுவாங்க.''

''ஒன்பது, பத்து ஆச்சுன்னா?''

ஹேமலதா வியப்போடு கேட்டாள்.

''ஆபீசுக்கு வந்துடுவாங்க. பதினோரு மணியாச் சுன்னா என்னாகும்? அதுவும் கேளு. போலீஸ்ல கம்ப் ளெய்ண்ட் கொடுத்துடுவாங்க.

ஒரு தடவை ப்ளஸ்டு படிக்கறபோது பன்னிரண்டு மணிக்கு வீட்டுக்கு வந்தேன். 'சானடோரியம்ல ஒரு ஃப்ரண்ட் வீட்டுக்கு படிக்கப் போறேன்'னு அங்கேயே தூங்கிட்டேன். ஐயோ பாவம்னு என் ஃப்ரெண்ட் வீட்டு லேயும் விட்டுட்டாங்க. என் ஃப்ரெண்டோட அப்பாவ கூட்டிண்டு வீட்டுக்கு வந்தேன். உள்ள நுழைஞ்சதும்... பொத்து பொத்துன்னு அடி விசிறிக்காம்பாலே போட் டாங்க. என் ஃப்ரெண்ட் அப்பா காப்பாத்தினார்.

''நீ சொல்லிட்டுப் போகலையா?''

''ப்ரெண்ட் வீட்டுக்குப் படிக்கப் போறேன்னு சொல் லிட்டுப் போனேன். எந்த ஃப்ரெண்ட் வீட்டுக்குன்னு சொல்லலை.''

''இப்பவும் லேட்டாப் போனா அடிப்பாங்கன்னு சொல்றியா?''

''அடிக்க மாட்டாங்க. கன்னா பின்னான்னு திட்டு கிடைக்கும். 'உன் ரெண்டாயிரம் ரூபா காசும் வேண்

டாம். தினம் சாயங்காலம் நாங்க வயித்துல நெருப்பக் கட்டிண்டிருக்கறது வேண்டாம்னுடுவாங்க. மறுநாளே வேலைக்குப் போக வேண்டாம்னு நிறுத்திடுவாங்க''

''ரெண்டாயிரம் காசு முக்கிய மில்லையா?''

''முக்கியம்தான். அதைவிட மானம் முக்கியம்.''

''உன்மேல அத்தனை சந்தேகமா?'' ஹேமலதா வியந்தபடி கேட்டாள்.

''ஊரைப் பத்தி சந்தேகம் பொண்ண யாராவது கையைப் பிடிச்சு இழுத்துட்டா குடும்பமானம் சந்தி சிரிச்சிசுடுமேன்னு பயம்.''

''ஆறேமுக்காலுக்கு வீட்டுல இருந்தே ஆகணுமா?''

''ஒரு அவசரம்போதுன்னா சரி. அதுக்காக பாட்டி. கீர்ட்டியெல்லாம் போக முடியாது.''

''ஏதாவது சொல்லி டபாய்ச்சுட்டு வாடி.''

''முடியாதும்மா. நான் ஒன்பதாகும்னுவேன். உடனே எங்கப்பா, அண்ணாவுக்குப் போன் பண்ணி, 'குழந்தையை இருந்து கூட்டிட்டு வாடான்னுவார். அண்ணா ஏழுமணிக்கு ஆபீஸ் வாசல்ல வந்து நிற்பான். பார்ட்டின்னு தெரிஞ்சுடும்.

பார்ட்டி நடக்கற இடத்துக்கு வருவான். 'ப்ளீஸ், நான் என் தங்கைய கூட்டிண்டு போறேன்'னு உங்கிட்ட சிரிச்சபடியே சொல்லுவான் உங்க வீட்டை விட்டு வெளில வந்ததும் நாற நாயேன்னு ஆரம்பிப்பான். வீட்டுக்கு வர்றது வரைக்கும் திட்டு விழும். அதுக்கப்புறம் நான் என்ன சொன்னாலும் பொய்யின்னு தோணும்.''

'போடா சோம்பேறின்னு சொல்லிவிட்டு திரும்பி உள்ளே வந்துடு. நான் பார்த்துக்கறேன்.'' வரலட்சுமி சீறலுடன் பேசினாள்,



''நீ என்ன பார்த்துப்பே? நான் பண்ணினது தப்பு. அதுக்கு திட்டக்கூடாதுன்னா எப்படி?

''நீ இருக்கறது வீடா? ஜெயிலா?''

''டோண்ட்டாக் லைக் திஸ். பார்ட்டிக்கு அனுப்பிச்சா வீடு. இல்லைன்னா ஜெயில்னு அர்த்தமா? தெலல்மீ வெரி மச். தீபாவளி புதுப்படம் போகணும்னு அண்ணாகிட்ட சொன்னா போறும். மேட்னி ஒரு படம் ஈவ்னிங் ஒரு படம் எனக்கு. அம்மாவுக்கு. மன்னிக்கு தங்கைக்கு, தம்பிக்கு எல்லாருக்கும் டிக்கெட் வாங்கிட்டு வருவான். ஈவினிங் டிபன், லைட் டின்னர் எல்லாத்துக்கும் செலவழிப்பான். செம ஜாலியா இருக்கும். எங்க வீடு ஜெயில் இல்லை வரலட்சுமி. சின்ன சின்னதா ரூல்ஸ், ரெகுலேஷன்ஸ் உண்டு அவ்வளவுதான்.''

''உங்க அண்ணன் பன்னிரண்டு மணிக்குவரலாமா?''

''இதென்ன கேள்வி? அவன் ஆம்பளை?''

''அவன் தண்ணிபோட்டுட்டு, பன்னிரண்டு மணிக்கு வந்தா பேசாத இருப்பீங்க?''

''போட மாட்டானே. வீட்டுக்குக் கஷ்டம் தர விதமா ஒருகாரியம்கூட பண்ண மாட்டானே.''

''இருபத்து மூணு வயசில தங்கை இருக்கும்போது கல்யாணம் மட்டும் பண்ணிப்பானாக்கும். ராஸ்கல்.''

''இருபத்தி ஒன்பது வயசு அவனுக்கு. எங்கக்காவுக்கு கல்யாணம் மட்டும் பண்ணின இடத்திலேயே அவனுக்கும் பெண் கொடுத்தா, தட்ட முடியலை.''

''ஹேமா, இவளுக்கு அடிமை வாழ்வு பிடிச்சுப் போச்சுடீ. இவள பார்ட்டிக்குக் கூப்பிட்டுட்டு நாம பயந்துண்டிருக்கணும்.''

''அதனாலதான் வரலேன்னேன். சந்தோஷமா கொண்டாடிட்டு மறுநாள் வந்து எல்லா கதையையும் சொல்லுங்க. கேக்கறேன்.''

''வரணும்னு ஆசையே இல்லையா?''

''இருக்க முடியாது.''

''இப்படி அடிமையா இருக்கணுமேன்னு வருத்தமேயில்லையா?''

''இல்லை. என் வீட்டை விட மோசமான வீடெல்லாம் உண்டு. என் வீடு எதுக்கு பர்மிஷன் கொடுக்கணுமோ, எவ்வளவு கொடுக்கணுமோ அதுக்குக் கொடுக்கும். எனவே, என் அண்ணாவைத் திட்டாதிருப்பது நலம்.''

செந்தமிழில் அந்த நங்கநல்லூர் பெண் முடிக்க வரலட்சுமி வாயடைத்துப் போனாள்.

ஹேமா தொடர்ந்து யோசித்தாள். இப்போது ஆட்டோவில் போகும்போது யோசித்துக் கொண்டிருக்கிறாள்.

ஹேமா ப்ளஸ்டு படிக்கிற பொழுது அவளை, ''என்ன படிக்கிறாய் எப்படிப் படிக்கிறாய்?'' என்று யாரும் கேட்டதில்லை. ''டியூஷன் வேண்டுமா?'' என்று அண்ணா கேட்டான்.

''ஒரு பத்து பசங்களை ஏற்பாடு பண்ணு நான் சொல்லித்தரேன். நான் சொல்லிக் கொடுத்த மாதிரியும் இருக்கும். படிச்சா மாதிரியும் இருக்கும்.''

''ஸ்டேட் ஃபர்ஸ்ட் வருவியா?''

,'சொல்லமுடியாது. ஒரு ஸெண்ட்டம் நிச்சயம்.''

''வேற என்ன ஹெல்ப் வேணும்.''



''சத்தம் போடாத ஃபேன், ஒரு ஸ்பான்ச் திண்டு, காட்டன் பில்லோ, அஞ்சடிக்கு நாலடி ப்ளாக் போர்ட்''

''ப்ளாக் போர்டா எதுக்கு?''

''கணக்கு போட்டுப் பார்க்க.''

அண்ணா மறுக்கவேயில்லை. ஒரு வாரத்தில் எல்லாம் வந்தது. அவள் படிக்கும் நேரமெல்லாம் அம்மா விழித்திருந்தாள். டீ போட்டுக் கொடுத்தாள்.

அண்ணா தினமும் தன் டு வீலரில் பரீட்சை ஹாலுக்கு கொண்டுபோய் விட்டான். பரீட்சை முடிந்ததும் கூட்டி கொண்டு வந்தான்.

வந்து சாப்பிட்டு, தட்டிலேயே கை அலம்பி மூன்று மணி நேரம் அடித்துப் போட்டது போல் தூங்குவாள். கடைசிநாள் பரீட்சையின் போது, என்றுமில்லாதபடிக்கு அண்ணா அவளோடும், அம்மாவோடும் கோவில் கோவிலாய்ச் சுற்றினான்.

''என்ன நீ கோவிலுக்கெல்லாம் வரே?''ஹேமா வியப்போடு கேட்க ''உன் எதிர்காலத்திற்காக என்று ஒரே வரியில் பதில் சொன்னான்.

எல்லா கோவில்களிலும் அண்ணாவின் எதிர்காலத்திற்காகவும் ஹேமா வேண்டிக் கொண்டாள்.

அந்த ப்ளஸ்டு ரிஸல்ட் பார்த்து விட்டு அண்ணா லேசாய் சிரித்தான், உன்னைப் பற்றி பெருமைப் படுகிறேன் சகோதரி'' என்று சொன்னான்.

அண்ணாவைவிட ஒரு மார்க் அதிகம் வாங்கியிருந்தாள். அதற்கு அலட்டிக் கொண்டாள். அவன் சகித்துக் கொண்டான்

அதற்குப் பிறகு, அவன் எது குறித்தும் அவளைக் கேட்பதில்லை. அவளாக காலேஜில் சேர்ந்தாள். அவளே வேலை தேடிக் கொண்டாள்.

தான் வேலை செய்யும் ஜெம்கூரியர் கம்பெனிக்கு அவளே அண்ணாவைக் கூட்டி கொண்டு போனாள்.

டைரக்டரை அறிமுகப் படுத்தினான். பத்து நிமிடம் அங்கே இருந்துவிட்டு. ''நல்ல கம்பெனி. ஒட்டிக் கொள்.'' என்று அண்ணா சொன்னான். அப்படியே போலதாக இருந்தாலும் வேறு கூரியர் கம்பெனிக்குப் போ. பிற்பாடு நீயே ஒரு கூரியர் கம்பெனி துவங்கலாம், இதற்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது.'' என்று சொன்னான்.

மற்றபடி அவன் வருகையையும், போக்கையும் அண்ணா கேட்பதேயில்லை பெங்களூர் பிராஞ்ச் ஆரம்பித்தபோது முதல் முறையாய் விமானம் ஏற அண்ணா விமானப் பயணம் பற்றிப் பேசினான்.''எங்கே தங்குவாய் யாரோடு தங்குவாய்? என்று கேட்கவேயில்லை.

ஆனால் அம்மா கவலைப்பட்டாள்.

''அவனை காப்பாத்திக்க அவனுக்கு தெரியும் அம்மா அவனால சமாளிக்க முடியாத கஷ்டம்னா நான் இருக்கேன்னு அவனுக்குத் தெரியும். அவளை வெறும் க்ளார்க்கா நினைக்காதே

''அவ தனியா ஒரு கம்பெனி ஆரம்பிக்கணும். அந்த அளவுக்குத் அவ தன்னை ட்ரெய்ன் பண்ணிக்கட்டும். அதுக்கு நாலு ஊர் சுற்றியாகணும். நாலு பேரைப் பார்த்தாகணும். பார்ட்டீ மீட்டிங்னு அட்டெண்ட் பண்ணணும். தயவுசெய்து உன்னை மாதிரி அவளை சமையல் கட்டுப் பொம்பளையா வளர்க்காதே''

''சமையல்கட்டுப் பொம்பளையா எப்படி வளர்க்கறது? அவனுக்குத்தான் சமைக்கவே தெரியாதே. '

''அது தெரிய வேண்டிய அவசியமில்லை. சமையல் மட்டும் தெரிஞ்ச தனால தான் உன் லைஃப் இப்படி ஆயிடுத்து. உங்கப்பா சொல் கேட்டு என்ன செய்தாலும் தலையாட்டிண்டு இருக்கும்படியா ஆயிடுத்து அவ சந்தோஷமா இருக்கணும்னா சுதந்திரமா இருக்க விடு.'' தீர்மானமாய்ச் சொல்லி விட்டான்.



ஹேமா சுதந்திரம் கேட்கவில்லை. வாங்கப் போராடவில்லை. சுதந்திரம் அவளுக்கு வழங்கப்பட்டது. தங்கத் தாம்பாலத்தில் வைத்து நீட்டப்பட்டது.

ஹேமா அந்த சுதந்திரத்தை மிக மரியாதையுடன் வாங்கிக்கொண்டாள். காப்பாற்றினாள்.

பார்ட்டி ஒன்றும் புதிய விஷயமல்ல. ஆனால் இந்தப் பார்ட்டியில் வரலட்சுமியின் காதலன் கலந்து கொள்கிறான். அவன் காதலனின் நண்பர்கள் கலந்து கொள்கிறார்கள். அங்கே வரலட்சுமியை தன் உட்பி என்று அவன் டிக்ளேர் செய்யப் போகிறான்.

வரலட்சுமியின் காதலன் ஒரு லாயர். மிகப் பெரிய லாயரின் ஜூனியர். அந்த பார்ட்டிக்கு நிறைய இளம் வக்கீல்கள் வரக்கூடும்.

ஹேமாவுக்கு நல்ல வக்கீல் ஸ்நேகம் இப்போது அவசியம். இப்போதைக்குச் சொத்து விஷயம் குறித்தும், பின்னால் தனியே கூரியர் கம்பெனி துவக்கினால் அதற்கு துணையாகவும் வக்கீல் வேண்டும்.

அப்படி அங்கே யாரும் கிடைக்காமல் போனாலும். வெறுமே மனிதர்களைத் தெரிந்து கொள்வது நல்லது.

வாழ்க்கை தன்னை நங்கநல்லூரில் அடைத்துவிடவில்லை. நடுபட்டணத்தில் நாலு மாடிக் கட்டிடத்தில் வாழ வைத்திருக்கிறது. மேலும் வளர முயற்சி அவசியம். முயற்சிக்கு பார்ட்டி முக்கியம்.

# 4

வரலட்சுமி வீட்டுத் தோட்டக் கதவைத் திறந்த போது தோட்டத்தில் பார்ட்டிக்காக பென்ச் போடத் துவங்கியிருந்தார்கள்.

வரலட்சுமி கடைக்குப் போயிருப்பதாய் தகவல் தெரிந்தது எங்கே போவது என்று யோசித்த போது மாருதி காரில் இரண்டு வாலிபர்கள் இறங்கினார்கள். கதவு திறக்குமுன் அவளைப் பார்த்து விஷமமாய்ச் சிரித்தார்கள்.

கதவு திறந்த பிறகு பவ்யமாய் அவளை நோக்கிக் கை கூப்பினார்கள். இரண்டு விரியன் குட்டிகள் அவளை நோக்கி வருகின்றன என்று ஹேமா நினைத்துக் கொண்டாள்.

தன்னைப் பார்த்துச் சிரிக்கிற எந்த ஆளைக் கண்டாலும் பெண்ணுக்கு விரியன் பாம்புக் குட்டியாய்த்தான் தோன்றுகிறது. ஸ்நேகமற்ற நிலை உடனே வந்து விடுகிறது. இவன் ஆபத்தானவன் என்று மனசு அஞ்சுகிறது. அவனை விட்டு அப்பால் நீங்க மனசும், உடம்பும் தயாராகின்றன. நீங்க முடியாதபோது நின்று எல்லாவற்றையும் எதிர்க்கும் குணம் வந்து விடுகிற்து. பவ்யமாய் கைகூப்பி வணங்கினாலும். 'போடா. 'கூஸ்' என்று பாராமுகம் காட்ட வைக்கிறது.

கைகூப்பித் தன்னை நோக்கி வந்தவர்களைக் கண்டு ஹேமா அது தன்னை நோக்கி இல்லை என்பதாய் முகம் திருப்பிக் கொண்டாள். அவளுடைய முகம் திருப்பல் அந்த இளைஞர்களை ஒரு கணம் தடுமாற வைத்து, கண் சுருக்க வைத்தது.



''தோமா, குட்டி சிலும்புது.'' என்று பேச வைத்தது. பவ்யம் மாறி விஷமம் வந்தது. ஒருவரையொருவர் விஷமத்துடன் பார்த்துக் கொண்டார்கள். மீண்டும் பவ்யமானார்கள். ஹேமா ஓரக் கண்ணால் இதையும் கவனித்து விட்டாள். கடும் அலட்சியத்திற்கு தயாரானாள்.

பேசிப் பழகி மனசு தெரிந்து கொள்ளும் வரையில் ஆணுக்கும்,பெண்ணுக்கும் இடையே நடக்கும் சகஜமான போராட்டம் இது-ஒரு பெண்ணைப் பார்த்து ஏன் விஷமமாகச் சிரிக்க வேண்டும் என்று எந்த ஆணைக் கேட்டாலும் உடனே அதற்குப் பதில் தயாராக இருக்கும்.

''என்ன தப்பு -குட்டி ஷோக்கா இருந்தது. சட்டுன்னு பார்த்து சிரிச்சுக்கிட்டோம். அழகா ஒரு பொண்ணு பார்த்தா ஆம்பளை சந்தோஷப்பட்டு சிரிக்கக் கூடாதா? நாங்க என்ன கத்தி கலாட்டா பண்ணினமா. மார்ல கைவெச்சமா? ஆகா என்ன உடம்புன்னு ஒரு பரவசப் பட்டோம் தப்பா?''

அதுதான் அவளை மிரட்சி அடையச் செய்கிறது என்பதை அவர்கள் அறியாது செய்கிறார்கள். பெண்ணுக்கு அவள் அழகுதான், கவர்ச்சிதான் மிரட்சி.

தன்னை உடம்பாக மட்டும் பார்க்கிற ஆணை அவள் நம்புவதேயில்லை. உபயோகப்படுத்திவிட்டு வீசி எறிந்து விடுவானோ என்கிற கவலைதான் அவளுக்கு முதலில் தோன்றுகின்ற விஷயம். மிகப் பெரிய பயம். தன்னுடைய கவர்ச்சி தன்னிடம் வெகுநாள் தங்காது என்று அவளுக்குத் தெரியும். கவர்ச்சியால் மட்டுமே தான் மதிக்கப் படுவது அவளுக்குக் கொஞ்சம் அசிங்கம்.

தன நிறம் கண்டே வண்டு தன் அருகே வருகிறது என்று பூ ஏற்றுக் கொண்டதைப் போல பெண் ஏற்றுக் கொள்வதில்லை. ஏனெனில் பூ அஃறிணை. பெண் உயர்

திணை. பெண் மனுஷி. ஆறறிவுடையவள். ஆறாவது அறிவான பகுத்தறியும் அறிவால் வாழ்பவள்.

பகுத்தறிவதை ஆறாவது அறிவு எனக் கொண்டால் மற்றது என்னவென்று கேள்விவரும். ஓரறிவு உடையவை புல், மரம், செடி இவை ஸ்பரிசம் மட்டுமே அறியும். இரண்டறிவுடையவை சிப்பி சங்கு இவை ஸ்பரிசமும், ரசமும் அறியும். மூவறிவுடையவை கரையான், எறும்பு, இவை பரிசமும் ரசம், கந்தம் (வாசனை) அறியும். நாலறிவுடையன தும்பி, வண்டு இவை ஸ்பரிசமும், ரஸம் கந்தம் (ரூபம்) அறியும். ஐந்தறிவுடையன பறவையும் மிருகங்களும். இவை ஸ்பரிசம், ரஸம், கந்தம், ரூபம், சப்தம் அறியும்

ஆறாவது அறிவுள்ள மானிடன். இவை அனைத்தையும் அறிவதோடு. தனக்கு எது நல்லது. எது தீயது என்று பகுத்தறிவு ஆற்றலும் உடையவன்.

ஆனால் எல்லா நேரமும் எல்லா மனிதர்களாலும் பகுத்தறிய முடிவதில்லை.

ரூபம் மட்டுமே புத்திக்குத் தெரியும் நேரங்களும், ஸ்பரிசம் மட்டுமே தேவை என்று தவிக்கின்ற மனிதர்களும். இனிய சப்தம் கேட்டு வேண்டாம் என்று கண்களை மூடிக் கொள்ளும் நிலைகளும், மனிதருக்கு ஏற்படுவதுண்டு.

வயலின் இசை நெஞ்சைப் பிழிய கண் மூடி, இடம் மறந்து பசி, தாகமற்று மனிதர்கள் கிடப்பதுண்டு. ஆனால் வாழ்நாள் முழுவதும் அப்படி இருக்க இயலாது அந்த நேரம் அவ்விதம். அது சப்தநேரம்.

அதேபோல் மனிதனுக்கு ரூபம் நேரமும் உண்டு.

ஆணை அதிகம் கவர்ந்த ரூபம் பெண். பெண்ணைக் கவரும் வனப்புடைய பெண் பார்த்தால் அவனுக்குக்



காலதேசம் மறந்து போகிறது. வயலின் இசையைப் போல் அவள் ரூபம் அவனை வசமிழக்கச் செய்கிறது.

இது பெண்ணுக்கும் உண்டு. பெரிதாக்கி ரசிப்பதில்லை. ரசித்தால் குளறுபடியாகுமென்று தடுக்கப்பட்டிருக்கிறது. தன்னைத் தானே கட்டுப்படுத்தும் குணம் தோன்றியிருக்கிறது. ரசிக்கும் போதே ரசித்ததிலிருந்து உடனடியாய் விலகி, எதற்கு வம்பு என்று உடனடியாய் ஒதுங்க வைத்திருக்கிறது. ரசிப்பதற்குள் நசுக்கப்பட்டு விடுவோமோ என்கிற பயம் வருகிறது.

இந்தப் பெண் பயத்தைத் தான் ஆண்கள் அழகின் அழகு என்று ரசிக்கிறார்கள். அழகு அச்சப்படும்போது ஆரவாரிக்கிறார்கள்.

''என்ன மிஸ்டர் வரும் போதே 'ஈ'ன்னு வரே. என்னைப் பார்த்தா உன் தங்கச்சி மாதரி இருக்கா. அதனால சிரிச்சியா?''

சின்னக் கேள்விக்கு ஆண்கள் செத்துப் போய் விடுவார்கள். உற்றுப் பாக்கையில். ஆழ்ந்து யோசிக்கையில் ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள இடைவெளிக்கு இந்தப் பகுத்தறிவே காரணம்.

வண்டு தொட, பூ வெட்கப்படுவதேயில்லை. ஏகப்பட்ட வண்டுகள் தொட்டு விட்டனவே என்று இடிந்து போவதில்லை. வண்டும் எண்ணிக்கை வைத்துக் கொள்வதில்லை. எத்தனை தின்னுட்டேன் போதுமா என்று இறுமாப்பு கொள்வதில்லை. இவை இயல்பாக இருக்கின்றன. தொடுவதும், தொடப்படுவதும் ஜீவிதம் என்றிருக்கின்றன.

பகுத்தறிவதாலேயே பயம் வந்துவிட்டது. இதற்கு பகுத்தறிவு, பாமரத்தனம் என்று அர்த்தமில்லை. பகுத்தறிவு தேவையில்லை என்கிற வாதமில்லை. பகுத்தறிவு ஒரு பரிணாம வளர்ச்சி. மனிதனுக்கு மட்டுமே கிடைத்த மாபெரும் சொத்து.

ஆனால் எத்தனை பகுத்தாலும் ஸ்பரிச, ரஸ, கந்த, ரூப, சப்த விஷயங்கள் மனிதனை சில சமயம் மதி மயங்க வைத்துவிடும் என்பதையும் புரிந்துகொள்ள வேண்டும். இவைகளைப் பகுத்தறியும் முயற்சியில் வழுக்கித் தடம் மாறுவது மனித இயல்பு.

இந்த தடம் மாறுதல் ஆணுக்கும், பெண்ணுக்கும் பொது என்றாலும் ஆணின் வேகம் அதிகம் அவனை தடுமாற வைக்கிறது

''ஐயோ, என்ன அழகு.'' என்று அவன் ரூபம் பார்த்து அலமலந்து போவது இயல்பு. அதே வயதில் அவனுக்குத் தங்கை இருந்தாலும் அதே நேரம் மறந்து போகிறது என்பதே உண்மை

ஆண் அதிசயப்பட்டு நிற்பதற்கு பெண் பயந்து போக சேச்சே பயப்பட வச்சுட்டோம். ,என்று பின் வாங்குவது பகுத்தறிவு.இப்படிப் பகுத்து அறியும் முயற்சி சிலருக்கு விரைவாகவும் சிலருக்கு வெகு தாமதமாகவும் வரும் சூழ்நிலை காரணம்.

இரண்டாவதுமுறை விஷமமாகச் சிரித்துவிட்டு அந்த இளைஞர்கள் சட்டென்று மாற்றிக் கொண்டார்கள். இத்தனை அழகான பெண்ணை முகம் சுருங்கச் செய்வது கேவலம் என்று கருதினார்கள். விஷமமாய்ச் சிரித்துவிட்டு பிறகு வினயமாய்ப் பேசுவது எடுபடாது என்று தெரிந்து கொண்டார்கள். விஷமமாய்ச் சிரித்ததற்கு நொந்து கொண்டார்கள். விலகினார்கள்.

வேறு பக்கம் போய் விரித்துப் போட்ட நாற்காலியில் அமர்ந்து கொண்டார்கள். வீட்டு வேலையாள் போலிருந்த ஒருவரிடம் வரலட்சுமி பற்றி விசாரித்தார்கள்

''ட்ரெஸ் போடறபோது பிய்ஞ்சு போச்சு சார். அம்மா அவசரமா டெய்லர் கடைக்குப் போயிருக்காங்க. உட்காருங்க. இதோ வந்துடுவாங்க.''



''புது டிரெஸ் பிய்ஞ்சு போச்சா. ஏன்?''

சிகப்பு சட்டை இளைஞன் வெள்ளைச் சட்டை இளைஞனைக் கேட்டான்.

''ஒரு சந்தோஷந்தான்''

''சந்தோஷத்துல டிரெஸ் பிய்ஞ்சு போயிடுமா எப்படி?''

''தைக்கக் கொடுக்கறபோது டிக்ளேர் ஆகலை. தைச்சு வரதுக்குள்ள டிக்ளேர் ஆயிடுச்சு. டிக்ளேர் ஆன சந்தோஷம் ட்ரெஸ் பிய்ஞ்சுக்கிச்சு.''

''அப்போ இந்தப் பார்ட்டி டிக்ளேர் பண்ணினதுக்குன்னு சொல்லு. என்னடா ரமேஷ் வரிஞ்சு வரிஞ்சு கூப்பிடறானேன்னு நினைச்சேன். அப்போ கூரியர் போணுக்கும் ஜூனியர் வக்கீலுக்கும் சிக்கிரம் கல்யாணமா?''

''கூரியர் வேலை 'ஒழஒழ' காட்டிக்கு. பௌடர், செண்ட் வாங்கறதுக்கு இன்னிக்கு ஊரறிய டிக்ளரேஷன் நடக்கும். நாளைலேர்ந்து வேலைக்குப் போக மாட்டாங்க.

''வேலைக்குப் போனா என்ன தப்பு''

''மந்த வேலைய யார் கவனிக்கிறது. கிரிமினல் லாயருக்கு பெண்டாட்டியா வர்றதுன்னா சும்மாவா—செக்ஷன் த்ரி நாட் ஃபோர். செக்ஷன் த்ரி நாட் டு. செக்ஷன் த்ரி நாட்ஃபோர். ஃபோ ஏ தெரிஞ்சுக்க வேணாமா? வாய்தா வாங்கறதுன்னா என்னன்னு புரிஞ்சுக்க வேணாமா? ஜட்ஜ்மெண்ட் என்னாகும்னு புருஷனுக்கு ஜோஸ்யம் சொல்ல வேண்டாமா. ஐயா முழு வக்கீல்னா. அம்மா அரை வக்கீல்.''

''இவனே அரை வக்கில் தானடா.''

''முழுசா ஆயிடுவான். அது வரலட்சுமியம்மா கையில் இருக்கு.''

''சரி யாருக்கும் யாருக்குமோ கல்யாணம் எனக்கு இங்க ஒரு கொக்ககோலா.''

''நல்லாருக்கே. சொந்தச் சரக்கா?''

''இல்லை. எங்கேயோ படிச்சது.''

''அதுதான பார்த்தேன். அண்ணன் திடீர்னு அறிவாளி ஆயிட்டீங்களோன்னு...''

அவர்கள் தாங்கள் செய்த கேலிக்குத் தாங்களே சிரித்துக் கொண்டார்கள். ஹேமாவுக்கு அவர்கள் பேச்சு முழுவதும் கேட்டது. போரடித்தது. தனக்காகவே அவர்கள் உரக்கப் பேசி உரக்கச் சிரித்தார்களோ என்று தோன்றியது.

வரலட்சுமி அம்பாஸடர் காரில் வாசல் வந்திறங்கி. ஒரு புயல் போலவும் தோட்டத்திற்குள் நுழைந்தாள்

''கடவுளே, எல்லாரும் வந்துட்டீங்களா? ஸாரிம்மா நான் தான் ரெடியாகலை. ட்ரெஸ் மாத்தி கொடுத்துட்டான் டெய்லர். அதுதான் ஓடி போய்ட்டு ஓடி வரேன். பத்தே நிமிஷத்ல ரெடியாயிடுவேன். நீங்க பேசிக்குங்க. பை த வே இது ஹேமா. ஜெம்சூரியர்ல என் கொலிக். இது சந்தானம். கிரிமினல் லாயர். இது வெங்கடேஷ். கார்மெண்ட் எக்ஸ்போர்ட்டர். பேசிட்டிருங்க. இப்ப வந்துடறேன்.''

படியேறினாள்.

''வரலட்சுமி'' சந்தானம் கூவினான். என்ன என்பது போல் வரலட்சுமி திரும்பிப் பார்த்தாள்.

''ரமேஷ்தானே, யார்னா-ட்ரெஸ் மாத்திட்டது போல மாத்திடப் போறாங்க, பார்த்து...''

''ச்சீ... பொறுக்கி.''



வெட்கம் கலந்த சிரிப்போடு வரலட்சுமி, தோரணமாய்க் கட்டியிருந்த ப்ளாஸ்டிக் மணியை அறுத்து அவனை நோக்கி வீசினாள். தரையில் விழும்முன் அதைப் பிடித்த சந்தானம் ஒரு நடிப்பாய் அதைக் கண்ணில் ஒற்றிக் கொண்டான்.

''மணியே மணியின் ஒளியே ஒளிரும் மணி புனைந்த அணியே அணியும் அணிக்கழகே.''

என்று உரத்த குரலில் பாட வரலட்சுமி சிரித்தாள். டேபிள் சரி செய்து கொண்டிருந்தவர்கள் சிரித்தார்கள்.

ஹேமாவுக்கும் சிரிப்பு வந்தது. வரலட்சுமி உள்ளே போக அந்த சூழ்நிலையின் இறுக்கம் கொஞ்சம் சரியாயிற்று.

இந்த முறை அந்த இளைஞர்கள் இருவரும் பவ்யமாய் கைகூப்ப ஹேமாவும் கை கூப்பினாள்.

''என் பேர் சந்தானம். மிஸ்டர் நடராஜன்னு கேள்விப்பட்டிருக்கீங்களா? பெரிய கிரிமினல் லாயர். அவர்கிட்ட ஜூனியரா இருக்கேன். வர மாசத்துலேர்ந்து தனியா ப்ராக்டீஸ் பண்றேன். எங்கப்பாவும் லாயர்தான். ஆனா சிவில் சைடு.''

வெங்கடேசன் தன்னை, தன் அப்பாவை, தன் அண்ணனைக் கூட அறிமுகப்படுத்திக் கொண்டான். எல்லோருக்கும் கார்மண்ட் எக்ஸ்போர்ட் தான் பிசினஸ் என்று சொன்னான்.

ஹேமா தன் படிப்பையும் வேலையையும் மட்டும் சொன்னாள்.

''அப்போ பேர் என்ன?''

வெங்கடேஷ் சாதாரணமாகக் கேட்டான். ஹேமா முகம் இருண்டாள். தயங்கினாள். அந்த நண்பர்கள் அவள் முக மாற்றத்தைக் குறித்துக் கொண்டார்கள். பேசாதிருந்தார்கள்.

''எங்கப்பா பேரு கே. ஆர். சாம்பசிவம். இண்டஸ்ட்ரியலிஸ்ட். பேரிங் கம்பெனி வச்சிருக்கார்.

''கே. ஆர். எஸ் பேரிங்கா. ஒரு சிவில் கேஸ் அவர் மேல இருக்கே. அவர் ஃபர்ஸ்ட் வைஃப் அவர் மேல ஜீவனாம்ச கேஸ் போட்டிருக்காங்களே. அவரா?''

ஹேமா மெல்ல 'ஆம்' என்று தலையசைத்தாள்.

''அந்தம்மாவுக்கு வக்கீல் அனிதா மேத்யூஸ். இழுபட்ட கேசில்ல அது. எனக்கு எப்படித் தெரியும்னு பார்த்திங்களா? கே. ஆர்.எஸ். எங்கப்பா க்ளையண்ட். ரொம்ப நாள் இழுத்தடிக்கிற கேசாச்சேன்னு நான் ஒரு நாள் படிச்சுப் பார்த்தேன். அவங்க பேர் சரஸ்வதியம்மால்ல. அப்ப நீங்கதான் ஹேமலதாவா. சுந்தரேசன் அலயஸ் சுந்தரம்னு இன்னொரு பார்ட்டி. ஆம் ஐ ரைட்?''

அவன் வீட்டு அந்தரங்கம் முழுவதும் தரையில் ஊற்றிய தண்ணீராய் அங்கே பரவுது கண்டு ஹேமலதா வேதனையுற்றாள். அந்த நண்பர்கள் அதைப் புரிந்து கொண்டார்கள்.

வரலட்சுமி ஸ்நேகிதன், காதலன், அவளைக் கல்யாணம் செய்துக் கொள்ளப்போகிறவனான ரமேஷ் உள்ளே நுழைய எல்லோரும் திசை திரும்பினார்கள்.

''ரமேஷ் வரலட்சுமி ட்ரெஸ் மாத்தி வந்திடுச்சு. அதுதான் லேட்டாம். உள்ள போய் இந்த ட்ரெஸ் போட்டு பார்க்கும். இதும் சரியில்லேன்னா நீ மாப்பிள்ளை இல்லையாம். வேற மாத்திடப் போகுதாம். அதுதான் நாங்க ரெண்டு பேரும் முன்னாடியே வந்து காத்துக்கிட்டிருக்கிறோம். இந்த ரெண்டு விரல்ல ஒண்ணு தொடு.''

சந்தானம் அவனிடம் விரல் நீட்டினான்.

''எதுக்குடா?'' ரமேஷ் சிரித்தபடி கேட்டான்.



''நீயா நானா பார்த்து விடு.''

''அப்ப நானென்ன ஒப்புக்கு சாப்பாணியா? மூணு விரல் நீட்டுடா.'' வெங்கடேஷ் அதட்டினான்.

மூன்று விரல்கள் நீட்டப்பட்டன. நடுவிரலை ரமேஷ் தொட்டதும் சந்தானம், ''நான் தான்...நான்தான்.'' என்று கத்தினான்.

''எந்த விரலைத் தொட்டாலும் இவன், இவன் பேரைத்தான் சொல்லுவான் புளுகாணி. பொதுவான ஆள்கிட்ட விளைய'டுவோம்.'' என்று வெங்கடேஷ் கத்தினான்.

''ஹேமா, எங்க மூணு பேரையும் நினைச்சுக்கிட்டு ஏணு விரலை நீட்டுங்க. ரமேஷ் தொடட்டும்.'' மாற்று ஏற்பாட சந்தானம் சொன்னான்.

ஹேமா சிரித்தபடி மூன்று விரல்களை நீட்டினாள். ரமேஷ் நடுவிரல் தொட்டதும், ''வரலட்சுமிக்கு ஜோடி ரமேஷ் '' என்றாள்.

ரமேஷ் அங்கேயே நடனமாடினான்.

''எப்படிங்க இது? என் பேருல்ல வந்திருக்கணும்.''

''உங்க பேர் வராது ''

''ஏன்?''

''எந்த விரல் தொட்டாலும் ரமேஷ்தான்னு நான் ஏற்கனவே முடிவு பண்ணிட்டேன் ''

நண்பர்கள் அதிர்வெடியாய்ச் சிரிக்க வரலட்சுமி தேவதை போல புது உடையில் வெளியே வந்தாள்.

ஆரம்பத்திலிருந்த சூழ்நிலை முற்றிலும் மாறி, குளிராய் ஒரு மாலைக் காற்று அங்கே வீசத் துவங்கி விட்டது.

# 5

பகல் நழுவி இருட்டு கவிழ்ந்து விளக்கு வெளிச்சம் ஆளுமையை எடுத்துக் கொண்ட பொழுதில் செண்ட் வாசனை மணக்க வித விதமான உடையுடன் நிறைய பேர் வந்து விட்டார்கள்.

பெரிய பிறந்த நாள் கேக் வந்தவுடன் வரலட்சுமியை யும், ரமேஷையும் சேர்ந்து நின்று வெட்டச் சொன்னார் கள். அது பிறந்த நாள் மட்டுமில்லை என்று எல்லோருக் கும் தெரிந்து விட்டது ஒரு நாகரிகமான நிச்சயதார்த்தம் என்று எல்லோருக்கும் புரிந்து விட்டது. 'எப்ப கல்யாணம் என்று ஒருவர் நேரடியாய் ரமேஷைக் கேட்ட போது அதுக்கென்ன அவசரம்...தொழில்ல இண்டி பெண் டெண்டா மாறணும் சார். என் சீனியர்கிட்ட சொல்லிவிட் டேன். இப்ப போலாம். அப்புறம் போலாம்னு இழுத் தடிக்கிறார். தனியாகவும் போகணும். அவர் மனசும் நோகடிக்கக் கூடாது அதான் டிலே.''

''அறுத்துக்கோப்பா, எந்த சீனியர் சந்தோஷமா ஜூனியரை வெளில அனுப்பிச்சிருக்கான். தடார்னுதான் வெளில வரணும். மடமடன்னு கேஸ் பிடிக்கணும். நாலு ஜெயிச்சிட்ட... நீயும் சீனியர்தான். இது நாலு மாசத்துல யும் நடக்கும். நாலு வருஷத்துலயும் நடக்கும்.''

''எனக்குப் புரியுது. ஆனா இங்க சத்தமா பேச வேணாம்.''

''ஏன்?'' பேசியவர் வியந்தார்.

''என் சீனியரையும் பார்ட்டிக்குக் கூப்பிட்டிருக்கேன்.



நிறைய வக்கீல்கள் உள்ள பார்ட்டியாய் அது மெல்ல மெல்ல மாறிக் கொண்டிருந்தது. கேக் வெட்டியவுடன் பாட்டுப் பாடினார்கள். பரிசளித்தார்கள்.

வரலட்சுமியின் அப்பா அவளுக்கு எட்டு பவுனுக்கு வளையல்கள் போட்டார். அண்ணன் கைனடிக் ஹோண்டா ஸ்கூட்டர் கொடுத்தார். ஒரு மாமா நாலாயிரம் ரூபாய் பட்டுப் புடவை பரிசளித்தார். ரமேஷ் அவளுக்கு தங்க மோதிரம் அணிவித்தான். வரலட்சுமியின் உறவுகள் அவளுக்குப் பரிசுகள் அளித்துக் கொண்டே இருந்தன.

''லக்கி ஃபெல்லோ...'' யாரோ ஹேமலதாவின் காதுக்குப் பின்னால் பொருமுவது கேட்டது.

ஹேமலதா சட்டென்று திரும்பிப் பார்த்தாள். சந்தானம் மார்பின் குறுக்கே கையைக் கட்டிக் கொண்டு பரிசுப் பொருள்களைக் கொஞ்சம் வெறுப்போடு பார்த் துக்கொண்டிருந்தான்.

''இவனுக்குத் தனியா போறதுக்குப் பயம். சீனியர், ஜூனியர்னு கதை அடிக்கிறான். சொடக்கு நேரத்துல வரலட்சுமி அலங்கப்பா போர்ட் மாட்ட இடம் போட்டு டுவார். போர்ட் மாட்டிட்டா போறுமா? கேஸ் புடிக்க வேணாமா? புடிச்ச கேஸ் புரிய வேணாமா? புரிஞ்சு கிராஸ் எக்ஸாமினேஷன் பண்ண வேண்டாமா? சீனியர் டைரியை மெயின்டெய்ன் பண்றதுதான் ஜூனியர் வேலையா? கோர்ட்டுக்கு வெளியே ரஜினிகாந்த் மாதிரி குறுக்கு நெடுக்க நடந்து போறான். உள்ள போய்ப் பேசினா உளர்றான்.''

''ஏன் அப்படி?'' ஹேமலதா வியப்போடு வக்கீல் வேலை தெரியாமல் கேட்டாள்.

''வேலை தெரியாது. தெரிஞ்ச மாதிரி பால்லா. ஐயம் ஸாரி. உங்க ஃப்ரெண்ட் ஆளைப்பத்தி நான் என்னென்னவோ சொல்றேன்.''

''ஏன் ரமேஷ் உங்களுக்குத் தெரிஞ்சவரில்லையா?''

''தெரிஞ்சவன்தான். அவன் கூப்பிட்டுதான் பார்ட்டிக்கு வந்தேன். அவன் பார்ட்டிக்குக் கூப்பிட்டது பந்தா பண்ணத்தான். அந்த பந்தால கரெக்டா பண்றான் பாருங்க...புளியங்கொம்பா பொண்ணு புடிச்சிருக்கேன்னு எங்களுக்கெல்லாம் காட்டறான். அதுல ஒரு மதிப்பு எங்கக்கிட்ட தேடறான். எல்லாம் சரி. வேலை தெரியாத வக்கில் இந்த அலட்டலுக்கு அர்த்தமில்லை.''

இந்த வார்த்தைக்குப்பிறகு அடுத்த கேள்வி உனக்கு வேலை தெரியுமா என்பதாகத்தான் இருக்கும். அப்படி கேட்க வேண்டும் என்பதற்காகவே இவை சொல்லப்பட்டதுபோல் ஹேமலதாவுக்கு தோன்றியது. கேள்வியை வார்த்தையாக்காது அவனை உற்றுப் பார்த்தாள்.

நீ என்ன கொம்பனான்னு என்னைப் பாக்கறீங்கள்ள.. நான் கொம்பன்தான். உங்க கேஸ்ல உங்க வீக் பாய்ண்ட் உங்கப்பாவோட வீக் பாய்ண்ட் ரெண்டும் எனக்குத் தெரியும். ரெண்டு ஹியரிங்ல முடிக்க வேண்டிய கேசு. இழுத்துட்டுப்போறதுக்கு எங்கப்பா காரணம். இழுந்துக் கிட்டுப் போற வரைக்கும் காசு வருமேங்கற எண்ணம் காரணம்' உங்க வக்கீல் அனிதா மேத்யூவோட வயசு காரணம். அந்த அம்மா முன்ன மாதிரி இல்லை. ரொம்ப சிக்காயிட்டாங்க. சம்பாரிச்சது போறும்கற இடத்துக்கு வந்துட்டாங்க. நம்ம ஊர்ல டாக்டரோ, வக்கிலோ இளமையா இருந்தா மதிப்பில்லை. வயசானாதான் மதிப்பு. அப்படி ஒரு பிரமை...''



''நீங்க என்ன சொல்ல ட்ரை பண்றீங்க சந்தானம்?'' ஹேமா புரியாமல் கேட்டாள்.

அனிதால விரட்டுங்க. போய் சத்தம் போடுங்க. ஏன் சாவடிக்கிறேன்னு கேள்வி கேளுங்க, வக்கீலை மாத்திருவேன்னு மிரட்டுங்க. ஒரு ஜீவனாம்ச கேஸ் இத்தினிதான் இழுபடுமா..இழுபடவேண்டியது அவசியம் தானா?''

''அதுபத்தி எனக்கொன்னும் அதிகமா தெரியாது. எங்கண்ணன்தான் டீல் பண்றாரு.''

''உங்கண்ணன் பேரு...சுந்தரம் இல்லை? கண்ணாடி போட்ட ஆளா...?''

''ஆமாம். பாத்திருக்கீங்களா?''

''அனிதா சேம்பர்ல பார்த்தேன். தப்பா நினைச்சுக் காதீங்க நீங்க பிராமின்தானே?''

''ஆமாம்.''

''அப்ப சரி.''

''என்ன திடீர்னு இந்தக் கேள்வி?''

''சும்மா கேட்டேன்.''

''சும்மா யாராவது ஜாதி கேட்பாங்களா?''

''நான் காரணத்தோடதான் கேட்டேன். சொல்லலாமான்னு தெரியலை.''

''நீங்க பேசறது எனக்கு புரியலை.''

''அனிதா மேத்யூஸுக்கு மூணு பொண்ணு. உங்கண்ணா மூத்த பொண்ணை லவ் பண்றாருன்னு நினைக்கிறேன்.''

''நோ. அவன் லவ் பண்ற டைப் இல்லை.''

''நான் தப்பாவும் இருக்கலாம். ஆனா ஒரு லவ்வைக் கண்டுபிடிக்க பெரிய புத்திசாலித்தனம் தேவையில்லை.''

''எங்கயாவது பார்க், பீச்சுல பாத்தீங்களா?''

''இல்லை. சேம்பர்லதான்,''

''ரொம்ப நெருக்கமா பேசினாங்களா?''

''இல்லை. தள்ளித் தள்ளிதான்.''

''அப்புறம் எப்படி சொல்றீங்க?''

''அப்படி மனசுல பட்டது.''

''லவ் பண்ணனும்னு ஏங்கறவங்களுக்கு யாரைப் பார்த்தாலும் தப்பாத் தோணும். ப்ரதர், ஸிஸ்டர் கூட தப்பா தோணும்.''

''சாரி. நான் முட்டாள்.''

''ஏன் அப்படிச் சொல்றீங்க?''

''நான் இதை உங்ககிட்டே பேச ஆரம்பிச்சிருக்கவே கூடாது.

''அப்ப ஏன் பேச ஆரம்பிச்சீங்க...?''

''உங்களை இம்ப்ரெஸ் பண்ணணும்னு நினைச்சு உளறிட்டேன்.''

''என்னை ஏன் நீங்க இம்ப்ரெஸ் பண்ணணும்?''

''நீங்க அழகா இருக்கறது காரணமா இருக்கலாம். நீங்க தனியா வந்தது காரணமா இருக்கலாம். அழகா ஒரு பொண்ணு தனியா நின்னா எல்லா ஆம்பளைக்கும் வாலாட்டத் தோணும்.''

''இது மட்ட புத்தி இல்லை?''

''எஸ். மட்டம்தான். ஆனா தவிர்க்க முடியாது.''



''உங்களுக்கு அக்கா தங்கச்சி இல்லையா?''

''இருந்துட்டா...? ஆம்பளைங்க பாறையா ஆயிடுவானா? எல்லா பொண்ணும் பேசற மாதிரி பேசறீங்க? எனக்கு அக்கா இல்லை. தங்கச்சி இருக்கு. அவளும் அழகா தான் இருப்பா. அவக்கிட்டயும் எவனாவது டீல் வுட்டு தான் பார்ப்பான்.''

''என்னது?''

''அவளையும் யாராவது இம்ப்ரெஸ் பண்ண பார்ப்பான்னுதான் சொல்ல வரேன்.''

''சரி, என்னை இம்ரெஸ் பண்ணியாச்சா?''

''இடத்தைக் காலி பண்றுன்றீங்களா? சோறு போடற வரைக்கும் எதுனா பேசிட்டு இருக்கணும்ல. அதனால அறுத்தேன்.''

''அப்பா... ஐேழ பாருங்க...'' காலை நகர்த்திக் கொண்டு ஹேமா காண்பித்தாள்.

''ஆமா...நிறைய ரத்தம். ரொம்ப அறுத்துட்டேன்ல. சரி, நான் வேற யாரையாவது புடிக்கறேன். நம்ம ரமேஷ் சீனியர் வந்துட்டார். அவரு கொஞ்சம் தாங்குவார். சாப்பிடறதுக்குக்கூப்பிட்டா எனக்கொரு சிக்னல் பண்ணுங்க. எனக்கு ரொம்பப் பசி'' பாக்கெட்டில் கைவிட்டு எக்கி எக்கி நடந்து போகிறவனைப் பார்த்து ஹேமாவுக்கு சிரிப்பு வந்தது.

வர வர இந்த ஆண்கள் கெட்டிக்காரர்களாகி விட்டார்கள். ஆளை அசத்த சுற்றி வளைத்துப் பேசி சும்மா அறுத்தேன் என்று சொல்லிவிட்டுப் போய் விடுகிறார்கள். எப்படியும் ஒரு பாதிப்பு ஏற்படும். ரெண்டாந்தடவை பார்க்கறபோது மீதி பாதிப்பை ஏற்படுத்துவோம் என்று நகர்ந்து போகிறார்கள். தடால் தடால் என்று வெடி கொளுத்தி விட்டு போகிறார்கள். அவனையே நினைத்து

படுக்கையில் புரளுவோம் என்று நினைத்துக் கொள்கிறார்கள்.

இவன் என்னைப் பாதித்தானா? இல்லை... இவன் வஞ்சகம் எனக்குப் பிடிக்கவில்லை. அனிதா மேத்யூஸ் மட்டம், உன் அண்ணன் டாவடிக்கறான்...என்கிற தகவல்களில் நான் ஆடிப் போய் விடப் போவதில்லை. சுந்தரத்தை லவ் பண்ணுகிற ஆளாய் நினைத்துக் கூடப் பார்க்க முடிகிறதில்லை. அப்படியே யாரையோ அண்ணன் காதலித்தாலும் அது கொலை பாதகமில்லை.

ஆனால் அம்மாவிடம் சொன்னால் அலறுவாள். அனிதா மேத்யூஸா...மலையாள கத்தோலிக்க கிறிஸ்துவர்... இல்லையோடி? என்று முதலில் ஜாதி பேசுவாள். இந்த தடியன் என் ஜாதியைக் கேட்டுவிட்டு தன் ஜாதியைச் சொல்லாது போய்விட்டான். சரி... எந்த ஜாதியாய் இருந்தாலும் எனக்கென்ன? ஜாதி இரண்டொழிய வேறில்லை. வேறில்லை என்பது உண்மைதானா? ஒரு சின்ன ஆசை. இவன் ஜாதியைப் பற்றி தெரிந்து கொள்ள ஒரு விழைவு ஏற்படுகிறதே...உண்மையில்லையா?

''ஏய் வா. சாப்பிட போலாம்.'' வரலட்சுமி அவள் நினைவுகளை அறுத்தாள். இழுத்துக் கொண்டு போய் தன் பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டாள்.

சந்தானம் நேர்க்கோடியில் ஒரு வயதானவரோடு பேசிக் கொண்டிருக்க சாப்பாட்டு மேஜைக்கு எல்லோரும் நகர்ந்தார்கள். •சந்தானத்தைக் கை தட்டிக் கூப்பிட வேண்டும் என்கிற உணர்வு ஹேமாவுக்கு அதிகமாயிற்று.

''என்ன சொல்றான் சந்தானம்?'' சிப்ஸ் கடித்துக் கொண்டே வரலட்சுமி கூட்டத்தைப் பார்த்தபடி கேட்டாள்.

''தன் ப்ராக்டிஸ் பத்தி பேசினான்.''



''நம்பாதே. சரியான ஃப்ராடு அது. கொஞ்சம் பேசினா உடனே லவ் யூன்னுடும்.''

''அப்படி ஒண்ணும் பேசலையே'' ஹேமா பொய் சொன்னாள். ஏன் சொல்கிறோம் என்று தெரியாமலே பொய் சொன்னாள்.

''அதும் தவிர அவன் வீடு சரியில்லை.''

''ஏன்?''

''அவன் அவங்கப்பாவோட செகண்ட் ஒய்ஃப் ஸன். மூத்தவங்க உயிரோட இருக்கறச்சையே அவங்கப்பா இன்னொரு லேடியைச் சேர்த்துக்கிட்டார். ரெண்டு பேரும் ஒரே வீட்ல இருக்காங்க. மூத்தவங்க பசங்கள்ளாம் ரொம்ப டைன மிக். ஒரு பெண் உட்பட எல்லாரும் ஃபாரின்ல இருக்காங்க இவனை மட்டும் எங்கயும் அனுப்பாம தன் கூடவே எடுபிடி வேலைக்கு வச்சிருக்காங்க. அதுல ஒரு காம்ப்ளக்ஸ் இவனுக்கு. பிராமின் கேர்ள்னா டாவடிப்பான்.''

''ச்சீ...ஏன் ஜாதி பேசற?''

''பேசித்தான் ஆகணும். வெளிய பேசிக்காட்டாலும் உள்ளுக்குள் ரகஸியமா ஒருத்தரையொருத்தர் கேட்டுக்கத்தான் செய்யறோம். சந்தானத்தோட அப்பா பிராமின். அம்மா பிரமின் இல்லை.''

ஹேமா தலையிலடித்துக் கொண்டாள்.

யாரோ உட்கார்ந்தவர்கள் எழுந்து சீனியருக்கு இடம் கொடுத்தார்கள். சீனியர் சந்தானத்துக்கு சேர் என்று கேட்டதும் அவனுக்கும் இடம் கொடுத்தார்கள்.

அவளுக்கு எதிர் வரிசையில் இடது கோடியில் சந்தானம் உட்கார்ந்து சாப்பிடத் துவங்கினான். ஹேமா அவனையே கவனிக்கத் துவங்கினாள்.

தான் அவனைக் கவனிப்பது அவன் பேச்சினால் கவரப்பட்டா...அல்லது அவனைப் பற்றிய பேச்சினால் கவரப்பட்டா என்று ஹேமாவுக்குப் புரியவில்லை.

## 6

''யாரது?''

நாற்காலியை சுவருக்கு எதிராகப் போட்டு அந்த வெள்ளைச் சுவருக்குள் மனது செலுத்திப் பழைய நினைவுகளை அசை போட்டுக் கொண்டிருந்த அனிதா மேத்யூஸ் பேச்சுக் குரல் கேட்டு முகம் திருப்பாமல் குரல் கொடுத்தாள்.

''சுந்தரம்.''

சமையலறையிலிருந்து அவளுடைய மகளின் குரல் பதில் கொடுத்தது.

''எனக்கு மாத்திரை வாங்கணும்.''

''சொல்லியிருக்கேன்.''

''ஜன்னல் ஸ்கிரீன் கழண்டு விழுந்துடுச்சுன்னு சொன்னியா?''

''சொல்றேன்.''

''குழாய் அடைச்சிருக்குன்னு சொன்னியா?''

''அதுதான் சரி பண்ணிட்டிருக்கு.''

''போகும்போது என்னைப் பார்த்துட்டு போகச் சொல்லு.''

''மாத்திரை வாங்கறதுக்கு நானும் போறேன்.''



''அவன்தான் போறானே. நீ எதுக்கு?''

''எனக்கு சிலது வாங்கணும்.''

அனிதா மேத்யூசுக்கும், சமையலறைக்கும் நடுவே மரத்தடுப்பு இருந்தது. மரத்தடுப்பு தாண்டி டைனிங் டேபிள் இருந்தது.

டைனிங் டேபிள் தாண்டி உள்ள சமையலறைக் கதவு ஒருக்களித்து மூடப்பட்டிருந்தது. சமையலறை மேடையில் வினோலியா உட்கார்ந்து கொண்டிருந்தாள். அவளுக்கு பத்தடி தள்ளி க்யாஸ் அடுப்பில் பால் காய்ந்து ஆடை இறுகிக் கொண்டிருந்தது.

சுந்தரம் அவள் மார்பில் முகம் கொடுத்து முரண்டிக் கொண்டிருந்தான்.

''என்னது கன்னுக்குட்டி மாதிரி வந்ததும் கட்டி, முத்தி கலாட்டா பண்றே...''

அவன் காதுக்கு மட்டும் கேட்கும்படி வினோலியா மெல்லப் பேசினாள். அவன் காது மடலை பற்களால் கவ்வினாள்.

பால் ஆடைகளை மீறி விளிம்போரத்தில் நுரைகட்ட ஆரம்பித்தது.

வினோலியா அவன் தோளைப் பிடித்து நகர்த்தினாள். மேடையிலிருந்து குதித்தாள். நைட்டியின் மேல் ஜிப்பை சட்டென்று இழுத்து விட்டுக் கொண்டாள்

விநாடி நேரத்தில் பால் திமிறிப் புரண்டு வெகு வேகமாய் மேலெழும்பியது. சட்டென்று கிடுக்கியால் பால் கிண்ணத்தைத் தூக்கினாள். பால் தளர்ந்து பின்னடைந்து சமனப்பட்டது. ஆடை மட்டமாய் பாலை மூடிக் கொண்டது.

பால் பொங்கும் நேரமும், ஒரு பெண் உணர்ச்சி வசப்படும் நேரமும் ஒரே கால அளவு என்பதாய் வினோலியாவுக்குத் தோன்றியது.

பால் பொங்கத் துவங்குகிறது என்றதுமே கிடுக்கிக்கு புத்தி போய்விட வேண்டும். கிடுக்கி எங்கே என்று மனசு தேடி, கண்களால் அதன் இருப்பிடம் கவனித்து, மனசால் அதை ஒருமுறை இயக்கிப் பார்த்து பால் பொங்கும் நேரத்தைக் கண்காணித்துக் கொள்ள வேண்டும். பொங்கும் என்கிற நேரத்தில் சட்டென்று பாய்ந்து பால் விளிம்பிற்கு வரும்வரை அனுமதித்து விட்டு, கிடுக்கியால் பாத்திரத்தை அப்புறப்படுத்த வேண்டும் இல்லாதுபோனால் பால் பொங்கி வழிந்து வீணாவது நிச்சயம். அடுப்பு உலர்ந்து போகும். பர்னர் துருப்பிடிக்கும்.

உணர்ச்சிகள் கூட இவ்விதம் தான் அது பொங்குவதைக் கவனித்துக் கொண்டேயிருக்க வேண்டும். சட்டென்று கட்டிக் கொண்டிருக்கிற புருஷனை கலவரப்படுத்தாமல் அப்புறப்படுத்த வேண்டும். ரொம்ப மயங்கினால் உணர்ச்சி வழிந்து எல்லாம் நாசமாகும். ஊர் முழுக்க வாசனையடிக்கும்.

''என்னாடி? என்ன ஆச்சு அங்கே...?''

ஹாலில் உட்கார்ந்தபடியே அம்மா தீய்தலைக்கண்டு பிடித்து விடுவாள். அழுவாள். அணைந்து போவாள்.

அவள் மனசுக்குள் ஏற்கனவே பல ஒட்டைகள். எல்லா ஒட்டையிலும் துரு அடைப்புகள். இன்னும் துரு அடைப்பு அம்மாவுக்கு அதிகமாகும்.

தன்னைக் குறித்த கவலை அதிகமாகும். பாலைப் பொங்கவிடக்கூடாது. அம்மாவைக் கவலைப்பட விடக்கூடாது. அதே சமயம் பொங்காத பால், ஆரோக்கியமும் இல்லை. பாலைக்காய்ச்சும் முன்பே கிடுக்கி பற்றிய



கவனம் அவசியம். அவனிடம் நல்ல கிடுக்கி இருக்கிறது. அந்த கிடுக்கியின்மீது எப்பொழுதும் கவனம் இருக்கிறது.

எப்பொழுது சுந்தரம் கட்டிக் கொண்டாலும் கட்டிக் கொண்டவனை அப்புறப்படுத்த அவளால் முடியும்.

''இந்தக் குழாய்ல மெல்லிசா ஜலம் வருது பாருங்க. என்னவோ அடைச்சுக்கிட்டிருக்கு' கொஞ்சம் கழட்டிப் பார்க்க முடியுமா? ஸ்பேனர் வேணுமா?''

சுந்தரந்துக்கு மனம் அடக்கம் ஏற்படக் கொஞ்சம் தாமதமாயிற்று. லேசாய்ப் பெருமூச்சு விட்டான்.

''இந்தக்கிடுக்கி போதும்'' என்று பாத்திரக் கிடுக்கியை எடுத்துக் கொண்டான்.

வினோலியா காய்ச்சின பாலை இரண்டு டம்ளர்களில் பகிர்ந்து, ஒன்றில் ஹார்லிக்ஸ் கரைத்தாள், மற்றொன்றில் காப்பித்தூள் போட்டாள். ஹார்லிக்சை எடுத்துக் கொண்டு அம்மாவை நோக்கிப் போனாள்.

ஹார்லிக்ஸ் வாசனையை மீறி அளவுக்கு அவள் மீது சுந்தரம் வாசனையடித்தது.

சுந்தரம் கிடுக்கியை குழாயில் மாட்டி பலம் கொண்ட மட்டும் இடது பக்கம் திருப்பினான். குழாய் கொஞ்சம் கோணிற்று. இன்னும் பலம் கொடுக்க, பளிச்சென்று நகர்ந்தது. ஓரங்களில் நீர் கசிந்தது. குழாய் திறக்கத் திறக்க நீரின் வேகம் அதிகரித்தது. கடைசி முறை கழட்டுகிறபோது நீர் பொங்கி மேலே அடித்தது.

குழாயில் அடைப்பேதுமில்லை. உள்ளங்கையால் நீரைத்தடுத்து, எட்டி கைப்பிடித்துணியை எடுத்து குழாய்க்குள் திணித்து நீர் வருகையைத் தடுத்தான். அதற்குள் பாதி சட்டை நனைந்துவிட்டது.

நீர்க்குழாயில் அடைப்பில்லை. பின் ஏன் தண்ணீர் வரவில்லை? யோசித்தான்.

திருகுக் குழாயைச் சமையல் மேடைமீது தட்டினான். வெள்ளையாய்த் துணிபோல் ஏதோ குழாயிலிருந்து நீண்டது. இழுக்க, நீரில் நனைந்த பஞ்சுபோல் இழுபட்டது.

துடைப்பத்திலிருந்த குச்சியை உருவி, என்ன வகைத் துணி இது என்று யோசித்தபடியே திருகை முற்றிலும் திறந்து, பின்பக்கம் வழியே குச்சியைச் செலுத்தினான். பொத்தென்று ஏதோ விழுந்தது. உற்றுப் பார்த்தான், பல்லி. ஒரு குட்டிப் பல்லி. நீரில் நனைந்து சொதசொதவென்றிருக்கும் பல்லி.

''ஐயையே...'' என்று அருவருப்புக் குரல் நெஞ்சிலிருந்து புரண்டு தொண்டைக் குழியில் சுழன்று, வார்த்தையாகும் முன் தடுத்தான்.

சமையலறையின் வாசல் பக்கம் பார்த்தான். வினோலியா அம்மாவோடு ஹாலில் ஏதோ பேசிக் கொண்டிருந்தாள். ஹார்லிக்ஸ் ஆற்றுகிற சத்தம் கேட்டது.

மேடையிலிருந்த பல்லியைக் குச்சியால் பேசினுக்குள் தள்ளினான். பேசின் சல்லடையை விரலால் எடுத்தான். துணியைச் சற்று இழுத்து நீர் பொங்கவிட்டு, அந்த நீர் பல்லியை அடித்துக் கொண்டு போகும்வரை காத்திருந்தான்.

வழியும் தண்ணீரில் குழாயைப் பலமுறை அலம்பினான். குச்சியைச் செலுத்தி சுத்தம் செய்ய பாதி பாச்சை வெளியே வந்தது.

பாச்சைக்காக, பாச்சை பின்னே பல்லி துரத்திப் போயிருக்கிறது. பாச்சைக்கு அந்தக் குழாய் இருப்பிடம் போலும். பல்லிக்கு அது குழாய் என்று தெரியவில்லை



போலும். உள்ளே போய்ப் பாதி கல்ல, யாரோ குழாய் திறக்க மூச்சு முட்டிச் செத்துப்போயிருக்க வேண்டும். பயத்தில் குழாயோடு ஒட்டிக் கொண்டிருக்க வேண்டும். அது ஒட்டிக் கொண்ட நிலையிலேயே மரணம் சம்பவத்திருக்கும். ஊதி உப்பிக் குழாயை அடைத்திருக்க வேண்டும்.

அப்பா...எவ்வளவு கொடிய மரணம். உணவைத் தின்று கொண்டிருக்கும்போதே ஏற்பட்ட மரணம்.

என்ன இடம், என்ன நடக்கிறது என்பது கூடப் பல்லிக்குத் தெரிந்திருக்காது. வேறு எவர் கண்ணிலும் இந்த மரணம் பட்டிருக்காது.

வினோலியாவுக்குத் தெரிந்தால் வீறிட்டுக் கத்துவாள். காட்டி, அவள் கத்துவதைப் பார்த்திருக்கலாமோ?

வேண்டாம். வினோலியா வீறிட்டால் அனிதா மேத்யூசிற்குத் தெரிந்துவிடும். அதன்பிறகு எப்போது தண்ணீர் கொடுத்தாலும், ஹார்லிக்ஸ் கொடுத்தாலும், அனிதா மேத்யூசிற்குப் பல்லி ஞாபகம் வரும்.

அனிதா மேத்யூசிற்கு ஹார்லிக்ஸ் மட்டும்தான் சத்துணவு. அதையும் பல்லியைக் காட்டிக் குலைத்துவிட வேண்டாம். இந்த அருவருப்புத் தன்னோடு போகட்டும்.

துணியை விலக்கிக் குழாயை மடமடவென்று பொருத்தினான். பலம் கொண்ட மட்டும் இறுக்கினான். இப்போது சட்டை நெஞ்சு முழுவதும் நனைந்து விட்டது, இந்த ஈரத்தோடு எப்படி வெளியே போவதென்று தெரியவில்லை.

யோசித்துக் கொண்டிருந்த போது வினோலியா உள்ளே வந்தாள்.

''சரியாயிடுச்சா?'' சந்தோஷமாய்க் கத்தினாள்.

''என்ன... எதுனா அடைச்சுட்டிருந்துச்சா?''

''ஸ்க்ரு லூசா இருந்தது - திருகு போகலை இப்ப சரியாயிடுச்சு.''

''ஒரு குட்டி பல்லி இங்கே சுத்திக்கிட்டிருந்தது. அது உள்ளே போயிருக்குமென்று ஒரு பயம்.''

''பல்லியெல்லாம் தண்ணிகிட்டலே போகாது. எப் பத்திலேர்ந்து தண்ணி வரலை?''

''காலைலேர்ந்துதான். ஏன்?''

''சில சமயம் குழாய்ல பாச்சை அடைச்சுக்கும். உங்க வீட்ல பாச்சை கொஞ்சம் ஜாஸ்தி. மருந்தடிக்கக் கூடாதா?''

''மருந்தடிக்கணும். நான் மட்டும் ஒத்தையா எப்படிச் செய்யறது? ஒரு சன்டே வர்றீங்களா? ரெண்டு பேரும் மொத்தமும் அடுக்கி வச்சு, க்ளீன் பண்ணி, மருந் தடிச்சுடலாமா?''

''வரேன்.'' சுந்தரம் ஒற்றை வார்த்தையாய் ஒப்புக் கொண்டான்.''

''எங்க வீட்டுக்கு வந்தாலே உங்களுக்கு ஏதாவது வேலைல்ல?''

வினோலியா அருகே வந்து கொஞ்சினாள்.

''அதனால என்ன இப்போ?''

''சட்டையெல்லாம் ஈரமாயிடுச்சே.''

''குழாய் ரிப்பேர் பண்ணினா சட்டை ஈரமாத்தான் ஆகும்.''

''அப்படியே அவிழ்த்துக் கொடுங்க. ஹேங்கர்ல உலரப் போடறேன்.''



''பரவால்ல இருக்கட்டும்.''

''அவிழ்த்துக் கொடுங்க. சளி பிடிச்சுக்கும்.''

அவள் பட்டன்களைக் கழற்ற, அவன் சட்டையை உடம்பிலிருந்து பிரித்துக் கொடுத்தான். நீரை உதறி வரண்டாவுக்கு எடுத்துப் போய், அவன் சட்டையை ஹேங்கரில் மாட்டினாள்.

''அம்மா மருந்து வாங்கணும்னு சொன்னாங்க. போயி என்னன்னு கேட்டுட்டு வந்துடுங்க. ரெண்டு பேரும் வெளில போகலாம்.''

அவள் குரலிலிருந்தது அன்பா, கட்டளையா, உரிமையா, புரியவில்லை. ஆனால் சொல்லாமலிருந்தது. அவனைக் காதலிக்கிறேன் என்று சுந்தரம் சொன்ன கணத்திலேயே அவளுக்கு இந்த மாதிரிதான் ஏற்பட்டு விட்டது.

''காதலிக்கிறேன்னா என்ன அர்த்தம்? டாவடிச்சுட்டு மேலே உரசிட்டு போயிடறதா?''

சில சமயம் வினோலியா ரொம்பக் கொச்சையாய் பேசுவாள். தெளிவாய் புரிந்து கொள்ள வேண்டும் என் கிற முனைப்பில் சகல பேச்ச மரபுகளையும் உடைப்பாள்.

''காதலிக்கிறன்னா கல்யாணம் பண்ணிக்கிறது தான்.'' சுந்தரம் பதில் சொன்னான்.

''எப்போ?'' உடனே கேள்வி வந்தது.

''கேஸ் முடிஞ்ச பிறகு.''

''உனக்கு தங்கச்சி ஒண்ணு இருக்கே. அது கல்யாணம் முடிய வேண்டாமா?''

''அவ கல்யாணம் அவ இஷ்டம். எனக்காக அவளோ அவளுக்காக நானோ காத்திருக்க வேண்டிய அவசிய மில்லை.''

''உங்கம்மா இங்க வந்து ஒன்னு அழுததுன்னா.''

''அழ மாட்டாங்க. நிச்சயமா அழ மாட்டாங்க. உன்னைப் பற்றி கொஞ்சம் பயம் இருக்கும். நல்ல பொண்ணா, நல்ல பொண்ணா'ன்னு நாலு தடவை கேட்பாங்க. நாலு தடவையும் நான் பதில் சொல்லு வேன்.''

''நல்ல பொண்ணுன்னா என்ன அர்த்தம்? உங்களை மாதிரி உண்டா மாமியாரேன்னு சொல்லிட்டிருக்க ணுமா?''

''அப்படியில்லை'' சுந்தரம் என்ன பதில் சொல்வ தென்று தெரியாமல் தயங்கினான்.

''நான் சொல்லுவேன். தாராளமா ஒண்ணுக்கு நாலா வார்த்தை தூக்கிப் போடுவேன். அவங்களை ரொம்பப் புடிச்சா மாதிரி நடிப்பேன்.''

''எதுக்கு நடிக்கணும்?''

''அடடே...நல்லவங்க முன்னாடி நடிச்சுத்தான் ஆகணும். நல்லவங்களா இருக்கற நிறையப் பேர் வெகு ளியா இருப்பாங்க. சந்தேகத்தோட இருப்பாங்க. அதும் தவிர இன்றைய உலகத்தில எல்லா இடத்திலேயும் நடிப்புதான், 'உன்னை மாதிரி உண்டான்னு ஒரு வார்த்தை கேட்கத்தான் எல்லாரும் பிரியப் படறாங்க. நல்லவங்க கெட்டவங்க எல்லோருமே காது குளிரப் புகழ்ச்சி கேட்க ஆசைப்பட றவங்கதான்.

''எவ்வளவு நேரம் புகழ்ந்து பேச முடியும்?''

''காசா பணமா? எவ்வளவு நேரம் வேணுமானா லும் புகழ்ந்து பேசலாம். கனி இருப்பக் காய் கவர்ந் தற்று'ங்கறாரே... அந்தக் குறள் உங்களுக்கு எப்போ புரி யும்?'' வினோலியாவின் கேள்விக்கு சுந்தரம் மௌனமாக இருந்தான்.



''காய்க்கும் கனிக்கும் நடுவுல உள்ள ஒரே வித்தியாசம் காலம். காயை விடக் கனி கொஞ்சம் தாமதம். காயைப் பறிச்சு அரிசி மூட்டைக்குள்ள வச்சா மறுநாள் கனி.''

''அறிவிருக்காடீ...யாராவது என்னைக் கேட்டா... உடனே பதில் சொல்லக் கூடாது. பதில் சொன்னா, வார்த்தை காயாதான் வரும். ரெண்டு நிமிஷம் மனசுக் குள்ள தாமதிச்சா கனிஞ்சிரும். நான் பேச்சுல கொஞ்சம் சோம்பேறி, சட்டென்று பதில் சொல்ல மாட்டேன். உடனே எதிர்த்துர மாட்டேன் கொஞ்சம் தாமதமா பேசறபோது வார்த்தை நிதானமாதான் வருது.''

''எனக்கு அதெல்லாம் தெரியாது. ஐ லவ் யூ... நீ என்னை லவ் பண்றியா?''

''நீ என்னை லவ் பண்றியான்னு உன்னைக் கேள்விக் கேட்டு புரிஞ்சுக்கறதுக்கு முன்னாடி நான் என்னை கேள்வி கேட்டிருக்கணும். உன்னை லவ் பண்றேனான்னு. கேட்டுக்கிட்டேன். புரியலை.''

''ஏன் புரியலை?''' அவன் கேட்டான்.

''ஒரு தடவை லவ்வுன்னு தோணுது. இன்னொரு தடவை லஸ்ட்ன்னு தோணுது. இன்னொரு தடவை சரி ஒரு சான்ஸ் செய்துபார்க்கலாம்னு தோணுது. இது சரியா வராட்டி என்ன ஆவும்னு பயம் வருது. ஒரே விஷயம் பற்றி இத்தனை அபிப்பிராயம் இருக்கச்சே இது லவ் தான்னு எப்படிச் சொல்றது?''

''என் மேல ஏன் சந்தேகம் உனக்கு?''

''என் மேலேயே சந்தேகம். என்ன வேணும்னு தெரி யாத ஒரு நிலை. ஏதோ கேசுன்னு வந்தே. அம்மாவுக்கு உதவி செய்தே. என் கூட எதெது பற்றியோ பேசினே. இதெல்லாம் ஆக்ஸிடெண்ட் தானே. இங்க ஒரு பெண்ணே இல்லைன்னா யாரை லவ் பண்ணியிருப்பே.

என் அழகைப் பார்த்து நீ மயங்கிட்டேன்னு நான் உன்னை எப்படி எடுத்துக்கறது? உட்கார்ந்து பேச தினம் ரெண்டுமணி நேரம் கிடைச்சா எந்த ஆளும் ஒரு வாரத்ல 'லவ் யூ'ன்னுதான் சொல்லுவான்.''

''நான் இதை விளையாட்டாவே சொல்லலை வினோலியா. ரொம்ப சீரியஸா சொல்றேன். உன்னை காதலிக்கிறேன்...கல்யாணம் பண்ண ஆசைப்படறேன்.''

''சொல்லு. முடிஞ்சா பண்ணிக்க, முடியாட்டி விட்டுடு.''

''நீ என்னை லவ் பண்ணவே இல்லையா?''

''நீ நல்லாதானே இருக்கே. லவ் பண்றதுக்கென்ன? உன்னை எவ வேணாலு லவ் பண்ணுவா. இந்தக் கேஸ் ஜெயிச்சுதுன்னா முப்பது முப்பத்தைஞ்சு லட்சம் ஈஸியா கிடைக்குமே உனக்கு.''

''அதனாலேதான் லவ் யூன்றியா?''

''அதனாலேயும் லவ் யூன்றேன்.''

''என்னைக் கல்யாணம் பண்ணிட்ட பிறகு வேற எவனாவது நாற்பது லட்சம் தரேன்னா அங்க போயிடு வியா?''

''எந்த பைத்தியக்காரன் தருவான்? கல்யாணமான பெண்ணுக்கு நாற்பது லட்சம்?''

''தரேன்னு சொன்னான்னு வச்சுக்க.''

''சொல்றபோது பார்த்துக்கலாம்.''

''அப்ப காசுதான் உன் லவ்.''

''ஐயைய. அப்படியில்லை. உனக்கு முப்பத்தைஞ்சு லட்சம் கிடைக்கலை. போடான்னு உதறிடுவேனா. உங்கிட்ட வேற க்வாலிட்டீஸ் இருக்கே.''



''என்ன க்வாலிடி?''

''ஜென்டில்னெஸ்.''

''கல்யாணத்துக்குப் பிறகு அது காணோம்னா?''

''தூக்கிப் போட்டுடுவேன்.''

''எதை?''

''உன்னை. உன்னால பொறந்த குழந்தையை. எல்லாத்தையும்.''

''எப்படி முடியும்?''

''ஏன் முடியாது. என்னை நீ திட்டிட்டிருந்தா நான் பொறுத்திட்டே இருப்பேனா? போடா மயிருன்னு என் வழியைப் பார்க்க போயிடுவேன்.''

''அப்படி முடியுமா?''

''என் சுகம் எனக்கு முக்கியம். வாழ்க்கை பூரா அழுதுக்கிட்டே வேறு யாரையும் நான் சுகப்படுத்த முடியாது. சுகப்படுத்தவும் கூடாது. என்னை அழிச்சுக்கிட்டு இன்னொருத்தரை வாழ வைக்க நான் பொறக்கலை. அப்படி செய்ய வேண்டிய அவசியமும் இல்லை. புள்ளையால சுகம். புருஷனால சுகம்னுதான் இருக்க முடியும்.''

# 7

''அவங்களும் உன்னை மாதிரியே நினைச்சா?''

''தப்பேயில்லை. அப்படித்தான் நினைக்கணும். பரஸ்பர சௌகர்யத்துக்குத்தான் கல்யாணம், குடும்பம்.

என்னை அழிச்சுக்கிட்டு எந்த சோம்பேறியையும் நான் வளர்க்க மாட்டேன்.''

''அதாவது...'' சுந்தரம் ஆழமாய் அவளை ஊடுருவினான்.''

''கில் அண்ட் டேக் பாலிஸி. நீ ஏமாற்றினே.நானும் ஏமாற்றுவேன். நீ கொஞ்சினே. நானும் கொஞ்சுவேன்.''

''சில சமயம் திட்டிடலாம்.''

''தாராளமா. திட்டின பிறகு யோசிச்சுப் பார்க்கணும். அர்த்தத்தோட செய்யணும்னு யோசிச்சுப் பாருங்க. உன் ஆங்காரம்தான் பெருகன்னு தொடர்ந்து கத்தினே. குட் பை. தைரியமா சொல்லிடுவேன்.''

''காதல் என்பது விட்டுக் கொடுத்தல்.''

''யாரு இல்லேன்னா சுந்தரம். ஒருத்தரே விட்டுக் கொடுத்திட்டிருந்தா ஒடிஞ்சுடும். அடடே திட்டறபோது சைலன்ட்டா இருந்தது என் பெண்டாட்டின்னு தெரிஞ்ச பிறகு, ஸாரிம்மா திட்டிட்டேன்னு கொஞ்ச ஆரம்பிக்கணும். அப்பதான் திட்டினதை விட்டுக் கொடுக்க முடியும். சும்மா திட்டிக்கிட்டே இருந்தா, எனக்கென்ன தலையெழுத்தா பொறுத்துக்கிட்டுப் போகணும்னு.''

''வக்கணையா பேசறே.''

''பேச்சுதான் முதல். பேச்சு தெளிவாருந்துட்டா செய்கை சரியா இருக்கும். பொய் பேச ஆரம்பிச்சுட்டா நீயின்றி நானில்லைன்னு பெரிய பெரிய பொய்யா அவிழ்த்து விட்டுட்டா, நீ ரொம்ப முக்கியமோன்னு என்னை நானே வதைச்சுக்கத் தோணும். ஸோ...பொய்யில்லாது ஆரம்பிப்போம்.''



சுந்தரம் திகைத்துப் போய் நிற்க அவள் முன்னேறி அவனைத் தழுவிக் கொண்டு அவன் இதழ்களில் முத்தமிட்டாள். சுந்தரம் திகைத்தான்.

''எனக்கு கிஸ் பண்ணணும்னு தோணிச்சு இப்ப பண்றேன். எனக்கு உடம்பு முக்கியமில்லை. உள்ளம் தான் முக்கியம்னு எதுக்கு பொய் சொல்லணும்.''

அவள் உண்மைக்கு சுந்தரம் ஆச்சரியப்பட்டான். இறுக்கிக் கொண்டான்.

இந்த இரண்டு வருடத்தில் ஆயிரக்கணக்கில் முத்தம் கொடுத்தாகி விட்டது. ஆனால் ஒரு முறை கூட அவள், பால் பொங்க அனுமதித்ததில்லை. அவளுக்கு கிடுக்கி மீது எப்பொழுதும் ஒரு கண் இருந்தது.

சுந்தரம் அனிதா மேத்யூஸ் முன் போய் நின்றான்.

''இந்தத் தடவை ஜட்ஜ்மென்ட் கொடுத்துடுவாங்கன்னு நினைக்கிறேன். உனக்கு சாதகமா வரும்னு நினைக்கிறேன். இந்த ஒரு கேஸ் முடிச்சுட்டா எனக்கு பெரிய நிம்மதி. கவலையில்லாம செத்துப் போவேன். இந்த மாத்திரை கொஞ்சம் வாங்கிட்டு வா. உங்கிட்ட காசு இருக்கா. இல்லை நான் தரட்டுமா?''

இந்த இரண்டு வருடத்தில் சுந்தரம்தான் மருந்துக்கு காசு கொடுத்திருக்கிறான். அனிதா மேத்யூஸ் கொடுத்ததேயில்லை. அது வறுமையிலா, அல்லது வேறெதாவது காரணமா என்று அவனுக்குப் புரியவில்லை.

● ● ●

மருந்துகள் வாங்கிக் கொடுத்துவிட்டு, ஹாலுக்குள் நுழைந்து வினோலியாவுக்காகக் காத்திருந்த போது, அந்த வீட்டின் பழமை சுந்தரத்தை ஒரு மாதிரியான சங்கடத்திற்குள்ளாக்கியது.

குறைந்த பட்சம் ஐம்பது வருடப் பழமையான கட்டிடம் அது. அனிதா மேத்யூஸின் வாழ்க்கைச் சம்பவங்களோடு ஒட்டிக் கிடந்த வீடு அது.

இந்த டேபிளில் உட்கார்ந்து கொண்டுதான் நான் பள்ளி இறுதி படித்தேன். இந்த அறையிலிருந்து கொண்டுதான் பி.எஸ்.க்குப் படித்தேன். இந்த ஹாலில்• இந்த கோடியிலிருக்கும் போதுதான் எனக்குத் திருமணம் நிச்சயமாயிற்று.

இந்த இடத்தில்தான் என் பிள்ளை விளையாடுவான். இந்த இடத்தில்தான் மகன் சாதம் சாப்பிடுவான் என்று பழங்கதைகள் அந்தக் கட்டிடத்தை முன் வைத்துப் பேசக் கேட்டிருக்கிறான்.

அந்த வீடு பகலில் மிகுந்த வெளிச்சமாகவும் இரவு நேரத்தில் அதிகம் இருட்டாகவும் இருக்கும். தனக்கும் வினோலியாவுக்கும் காதல் வர அந்த இருட்டுதான் காரணம் என்று சுந்தரத்திற்குத் தோன்றியது இருபதடிக்கு இருபதடி ஹாலில் காரை பெயர்ந்த மஞ்சள் சுவருக்கு நடுவே அந்த ஒற்றைக் குழல் விளக்கு பலஹீனமாய் எரிந்து கொண்டிருந்தது. ஒரு பகல் கனவான சூழ்நிலையை உருவாக்கியது.

ஆறு வருடம் முன்பு அடையாறிலுள்ள அப்பாவின் வீட்டுக்கு அனிதா மேத்யூஸ் சுந்தரத்தைக் கூட்டிக் கொண்டு போனாள்.

அந்த வீடும் கனவு போல்தான் காட்சியளித்தது. அது இன்னும் அகலமான ஹால். நிறைய கண்ணாடிச் சிப்பிகளுள்ள லஸ்தர் விளக்கு. ஏகப்பட்ட வளைவுச் சட்டங்களுடைய மர நாற்காலிகள். நாற்காலிக்குள் பின்னடங்கி சப்பணம் கூட்டி உட்கார்ந்தாலும் இன்னும் ஒரு சாண் தாராளமாய் முன் பக்கம் இடமிருக்கும். ஆறடிக்கு மேல்



உயரமானவர்கள்தான் அதில் கால் தொங்கப் போட்டு முதுகு சாய்ந்து உட்கார முடியும்.

''இது உன் வீடு. இந்த இடம் உனக்கு வேண்டுமென்று தான் நான் வழக்கு தொடுத்துக் கொண்டிருக்கிறேன்.''

இதை உனக்குக் கொடுக்கக்கூடாது என்பதற்காகவே, உன் அப்பா, தான் இருந்த வீட்டை விற்று விட்டு இங்கே குடி வந்திருக்கிறார் தான் வசிப்பதற்கு வேறு இடமில்லை என்று பொய் சொல்கிறார். இந்த வீட்டை உனக்கு வாங்கிக் கொடுக்காமல் நான் சாக மாட்டேன் சுந்தரா.''

அதைத் தன்னுடைய வீடு என்பதாய்ச் சுற்றிப் பார்த்தாலும், அந்த ஹால் அவனுக்கு அன்னியமாகவே இருந்தது.

வீட்டுத் தோட்டம் முழுக்க கோரைப் புற்கள் காய்ந்து கிடந்தன. தோட்டச் சுவர் சிதிலமாகியிருந்தது.

அப்பா உள்ளே நுழைந்தவுடன் அவனை வெறித்துப் பார்த்தார். கேலியாகச் சிரித்தார்.

உள்ளே வந்து எல்லாவற்றையும் விட அகலமான சேரில் உட்கார்ந்து கொண்டார். கால்களை நீட்டி முதுகைப் பின்னால் சரித்துக் கொண்டார்.

அனிதா மேத்யூஸ் 'மாலை வணக்கம்' என்று சொன்னதைக் காதில் போட்டுக் கொள்ளாமல், ''இங்கே வா,'' என்று அவனை விரல் சொடுக்கிக் கூப்பிட்டார்.

''இந்தக் கிழவி ஒரு மக்கு. உனக்கு வேறு வக்கீலே கிடைக்கவில்லையா? இவளோடு வருவதற்குப் பதில், என் பேச்சுக்கு அடங்கி, உன் அம்மா நடந்திருந்தால் இதைவிட அதிகமான சொத்து உனக்குக் கிடைத்திருக்கும்.

''படித்ததாலேயே கெட்டிக்காரர்களாக மாறிவிட முடியாது. படிப்புக்கும் கெட்டிக்காரத் தனத்திற்கும்

சம்பந்தமில்லை. இந்தக் கிழவி ஒரு படித்த மக்கு. உன் அம்மா ஒரு படிக்காத மக்கு.

''கெட்டிக்காரத்தனம் அனுபவத்தோடு சம்பந்தப்பட்ட விஷயம், பெண்கள் அனுபவக் குறைவு மிக்கவர்கள். அவர்களை மதிக்க வேண்டிய அவசியமில்லை. அதே சமயம் மதிப்பது போல் நடிக்கவும் கற்றுக் கொள்ள வேண்டும். நான் சொல்வது வாழ்வின் மிகப் பெரிய சூட்சமம். உன் அனுபவம் ஒருநாள் உனக்கு இதைப் புரிய வைக்கும்.''

அனிதா மேத்யூசிற்கு அப்பாவின் மீது கோபம் வந்திருக்க வேண்டும்.

''பெண்களை மதிக்காதே என்றுதான் உங்கள் அனுபவம் உங்களுக்குச் சொல்லிக் கொடுத்திருக்கிறதா?''

''ஆமாம்.'' அப்பா நெஞ்சு நிமிர்த்திச் சிரித்தார்.

''உங்கள் அம்மாவையும் செருப்பாலடிப்பீர்களா? அவளையும் பெண் என்று இழிவு படுத்துவீர்களோ?''

''தேவைப்படின் அம்மாவையும் அதட்டி வைப்பேன். என் அம்மாவுக்கு தான் புத்திசாலி இல்லை என்பது தெரியும். உனக்கும், உன் கட்சிக்காரருக்கும் தெரிய வில்லை. இதுதான் பிரச்சினை.''

அனிதா மேத்யூஸிற்குக் கண்கள் சிவந்தன.

''நீ ஓர் ஆணாதிக்கப் பன்றி. உண்மையிலேயே வீர முள்ளவன், பெண்களை இழிவுபடுத்த மாட்டான். தன் வீரம் பற்றிச் சந்தேகமுள்ளவனுக்கே, பெண் மீது ஆத்திரம் திரும்பும்.''

''புத்திசாலித்தனம் அல்லது அனுபவம் சரியானபடி இருப்பின் எவருக்கும் கொடுமை விளைவிக்காது. புத்தி



யின் வேலை, பிறரைப் புரிந்து கொள்வது. அறிந்து கொள்வது. ஆளுமை செய்வது அல்ல.''

''முட்டாள் கிழவியே, அறிவு என்பது இருப்பின் ஆளுமை தவிர்க்க முடியாத விஷயம். இது இயற்கை. இது உலக நியதி-புலி மாமிசம் தின்னும் என்பது போல் அறிவு ஆளுமை செய்யும். இது தவிர்க்க முடியாத விஷயம். ஆளுமை என்பதற்கு வேறு எது தகுதியாக இருக்கும்?''

அப்பா கேள்வியோடு நிறுத்த, அனிதா மேத்யூஸ், ''அன்பு,'' என்று கத்தினாள்

''அது கோழையின் கவசம். அன்பு என்பது பிரமை, மிகப் பெரிய பொய், அல்லது மிகப்பெரிய தந்திரம். பெண்களால் ஆண்களுக்குச் சொல்லப்பட்ட பொய். வலிமையுள்ளது எஞ்சும் என்பது உண்மையாயின் அன்பு என்பதற்கு அர்த்தமேயில்லை.''

''அன்புதான் வலிமை, முட்டாளே.''

''கிழவி, உன் அன்பால் ஒரு புல்லைக் கூடப் பிடுங்க முடியாது. ஒரு பூ கூட உதிராது. ''இவ்வுலகம், வெடித் துச் சிதறிய வன்முறையால் உண்டானது. வலிமையால் உயிர் வாழ்வது.' இந்த தேசம் நாசமானதற்கு அன்பு என்கிற பொய் காரணம். மாயை காரணம்.''

''உனக்கு அன்பு தேவையான நாள் ஒன்று உண்டு. அப்போது புரியும். உன் அகங்காரம் எவ்வளவு பொய் என்று.''

''எப்போது எனக்குத் தேவைப்படுமென்று நினைக் கிறாய் கிழவி.'' அப்பா நீட்டிய காலை மடக்காமல் கேட்டார்.

''உன் உடல் தேய்ந்து உயிர் துடிக்கிற நேரம் வரும். அப்போது அன்பு செய் என்று பிறரிடம் இறைஞ்சுவாய், ஏங்குவாய்.''

''உனக்கு என் தத்துவம் புரியவில்லை கிழவி. உன் அன்பால் நான் உயிர் வாழ வேண்டிய நிலை எனக்கு வந்தால் அதுதான் மிகப்பெரிய நோய். அப்படியொரு நோய் எனக்கு ஏற்பட்டால் நான் தற்கொலை செய்து கொள்ளுவேன். என் நெற்றிப் பொட்டில் சுட்டுக் கொண்டு இறந்து போவேன்.''

''மரணம் அவ்வளவு எளிதல்ல மனிதனே. உயிர் வாழும் விழைவை அப்படித் தூக்கி எறிய முடியாது.''

''வீரனால் முடியும்.''

''வீரம் ஒரு கற்பனை. உடலில் வலுவிருக்கும்போது உண்மை என்று தோன்றும் பிம்பம்.''

''உன்னோடு நான் தத்துவம் பேச வரவில்லை.''

''உனக்குப் புரியவில்லை என்று சொல்.''

''மற்றபடி நீ என்ன பேசினாலும் நான் கேட்பதாக இல்லை.''

''கேட்டுத்தான் ஆக வேண்டும். நான் பேச நீ கேட்டுத்தான் ஆக வேண்டும்.'' அனிதா மேத்யூஸ் ஹால் அதிரப் பேசினாள்.

''இவன் உன் பிள்ளை. வெறும் ஐந்தாயிரம் ரூபாய்க்கு நாங்கள் சம்மதிக்க மாட்டோம். கோர்ட் தீர்ப்பை எதிர்த்து சுப்ரீம் கோர்ட் வரை போவேன். சுப்ரீம் கோர்ட் போகும் முன் உன்னிடம் நேரடியாகப் பேச ஆசைப்பட்டேன். உன் சொத்தில் ஒரு பகுதியாவது இந்தப் பிள்ளைக்குக் கொடுப்பாயா. மாட்டாயா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.''

அப்பா சிரித்தார்.



''அவனை சுப்ரீம் கோட்டுக்கு அனுப்பு. என்னோடு நீ வந்து விடு. நீ கிழவியாய் இருந்தாலும்...''

அப்பாவின் திமிர் பிடித்த கேலியை அனிதா மேத்யூவால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

செருப்பு ஓசைப்பட வெளியேறினாள்.

அவள் வெளியே போய் மறுபடியும் உள்ளே வருவாளென்று சுந்தரம் முட்டாள் தனமாகக் காத்திருந்தான்.

அப்பா இடி முழக்கமாய்ச் சிரிப்பதையே மிகக் கவனமாய்க் கண் கொட்டாமல் ஒருவித லயிப்போடு பார்த்துக் கொண்டிருந்தான். அப்படி அவன் லயிப்பைப் பார்த்ததும் சட்டென்று சிரிப்பை நிறுத்தினார்.

''இங்கு வா.'' விரல் சொடுக்கி அவனை அருகே அழைத்தார்.

''உன்னிலும் வலிமை மிக்கவராய் ஒருவரையும் நினைக்காதே, அப்படியொருவரைச் சந்திக்க நேர்ந்தால் வியக்காதே. பாராட்டாதே. உடனே அவரை எதிரியாக நினை. அவரினும் வலிமையுள்ளவனாக மாறு. மாறியதை நிரூபி. அந்தக் கிழவியை உபயோகப்படுத்திக் கொள். ஜெயிப்பதற்குப் போராட வேண்டும். போராடுவதற்கு வலிமை வேண்டும். வலிமைக்குத் தனிமையே ஆதாரம். எவரையும் சார்ந்தே இராதே. போ.''

அப்பா கடுமையாய்ச் சொல்ல, துரத்தப்பட்ட நாய் போல் சுந்தரம் வெளியே வந்தான். அனிதா மேத்யூஸுடன் சேர்ந்து கொண்டான்.

''உலகத்தில் இவ்வளவு பெரிய அயோக்கியனைச் சந்தித்ததேயில்லை. அயோக்கியத்தனம் என்பதுகூட மனிதத் தரம். உன் தகப்பன் மனிதனே இல்லை. மிருகம்.''

சீறினாள் சுப்ரீம் கோட்டிற்குப் பேப்பர்களை ஏற்பாடு செய்தாள்.

வெகுநாள் கழித்து அம்மாவிடம் இந்த உரையாடலை விளக்கிச் சொல்ல, அம்மா சிரித்தாள்.

''அது ராட்சஷத்தனம் என்றாள். அப்படி இருப்பதைப்பற்றி அதற்கு வெட்கமேயில்லை. அதற்கு வெட்கப்படுகிற காலம் வருகிற போது வேதனையும் படும்.''

வலிமைதான் ஆதாரம் என்று கொண்டால் நம்மிலும் வலியவன் ஒருவன் உண்டு என்பதும் உண்மையாகிவிடும். வலியவனைக் காட்டிலும் வலியவனாவது இடைவிடாத போர் தரும்.

இவர்களுக்குப் போரில் தோல்வியைத் தாங்குவது கடினம். தோல்வியின் விளைவு தற்கொலை என்று அப்பா சொல்கிறாரா. அந்தத் தற்கொலை நேரம் சந்தோஷமானது அல்ல

வாழ்வின் எல்லா துக்கத்தையும் அந்தத் தற்கொலை நேரம் அனுபவிக்க நேர்ந்து விடும்.

மரணத்திற்குப் பிறகும் தவிக்க நேரிடும். உலகத்தின் எந்தமதமும் தற்கொலையை நியாயம் என்று சொன்னதேயில்லை.''

''ஜப்பானியர்கள் தற்கொலை செய்து கொள்வார்கள் என்று படித்திருக்கிறேன் அம்மா,'' சுந்தரம் பதில் சொன்னான்.

''அதுதான் பிரச்னை. உன் அப்பா அங்கிருந்துதான் கற்றுக் கொண்டார். உலகம் முழுவதும் சுற்றியதன் பலன் அது. ஊர் ஊராய்த் தங்கியதன் விளைவு அது.

இது கருத்து நாசம். செய் அல்லது செத்துமடி என்பதைத் தப்பாய் புரிந்து கொண்டிருக்கிறார். செத்துமடியவே காரியம் செய்கிறார்.''



சுந்தரத்திற்கு எல்லாம் குழப்பமாக இருந்தது. ஆனால எந்த உரையாடலும் மறக்கவில்லை.

இந்த உரையாடலையேதொடர்ந்து யோசித்துஒருநாள் வினோலியாவிடம் தன் உரையாடலாய் வெளிப்படுத்திய போது. தர்க்க ரீதியாய் வினோலியா அதை எதிர்த்தது அவனுக்குப் பிடித்திருந்தது.

''உன் தகப்பன் மிகப் பெரிய முட்டாள். போக்கிரி என்று எனக்குத் தோன்றுகிறது சுந்தரம். என் கேள்விக்குப் பதில் சொல். மிருகங்களில் யானை வலிவா, சிங்கம் வலிவா?''

''யானை, இல்லை சிங்கம்.'' இரண்டு பதில்களாய்ச் சுந்தரம் திகைத்து நின்றான்.

''உனக்குப் பதில் சொல்ல முடியவில்லையல்லவா? எது வலுவுள்ளது என்று தீர்மானமாகவில்லை சுந்தரம் யானை பலகீனப் பட்டபோது சிங்கம் சிங்கம் பலகீனப் பட்டபோது யானை என்றுதான் தீர்மானமாயிருக்கிறது.

யானையா, சிங்கமா என்கிற போட்டியில் அவைகள் இறங்கவில்லை. இறங்கியிருப்பின் ஏதாவது ஒரு இனம் இந்நேரம் அழிந்திருக்கும்.

உன் வலிவு உனக்கே. என் வலிவு எனக்கே என்று ஒதுங்கி விட்டன. அவசியம் நேர்ந்தாலொழிய சண்டையிடுவதில்லை.

ஆலமரமா, அரசமரமா எது வலிவு என்று போட்டியே யில்லை. ஒன்றை ஒன்று அழித்துக் கொன்ன முயலவில்லை.

அழிப்பதன் மூலம் வலிமையை நிரூபிக்க அவை முயற்சி செய்யவேயில்லை.

மனிதருக்கு மட்டுமே அழிவுக்கு யோசனை பண்ணும் புத்தி வந்துவிட்டது. மனிதர்களில் மட்டுமே பெருமைக்காக யுத்தம் நடக்கிறது.

மனிதன் கேவலமானவன் என்பதற்கு இதுவே சாட்சி.

அன்பு கோழைத்தனமில்லை சுந்தரம். அது ஒரு வளர்ச்சி நிலை. ஒரு பூத்த பருவம். அடுத்த தலைமுறையை, வழித்தோன்றலை குடும்பச் சங்கிலி அறுந்து விடக் கூடாது என்ற உன்னத எண்ணத்தை அடிப்படையாகக் கொண்ட விஷயம்.

மரத்துக்கு பலத்தால் உபயோகமில்லை. கல்லடியும், கிளை முறிப்பும்தான் நடக்கும். ஆயினும் மரம் இடைவிடாது கனி கொடுக்கும். அதன் பொருட்டே பூக்கும், காய்க்கும்—இன்னொரு மரம் வேண்டுமென்று இடைவிடாத இயற்கையான உந்துதல் அது. ஒரு லட்சம் கனியில் ஒன்று மரமானாலும் அது மரமாய் வளர்ந்ததற்கு அர்த்தமிருக்கிறது.

மரம் என்பது நேசம். இயல்பான அன்பு. மனிதர்கள் மரத்திடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டியது நிறைய உண்டு. வம்சம் அழிந்து விடக்கூடாதென்றே வலிமையுடையவர்கள் சண்டையிடுவதில்லை.

''உன் அம்மா, அப்பாவை ஏன் ராட்சஷன் என்று சொன்னாள் தெரியுமா?

அந்த ராட்சஷர்கள் யார் தெரியுமா? வலிமையே வேதமென்று கொண்டவர்கள். அந்தத் தவறான கருத்தினாலேயே அந்த வம்சம் அறுந்து போய்விட்டது.

வலிவு உள்ளது எப்படி அறுந்து போகும். உன் அப்பாவின் தியரிப்படி வலிமையுள்ளது எஞ்சியிருக்க



வேண்டுமே...உயர்ந்த இடத்திலிருந்து ஆட்சி செய்து கொண்டிருக்க வேண்டுமே...

ஏன் ஆட்சி செய்யவில்லை? எதனால் அறுந்து போனார்கள்? அப்படி அறுந்து போனதனாலேயே அது வலிமையற்றது என்று ஆகி விட்டதல்லவா?

அன்பு செலுத்திய மன்னர்கள், அல்லது மனிதர்கள் இன்னும் உயிரோடு இருக்கிறார்களில்லையே? அப்பொழுது அன்பே வலிமையுள்ளது என்று தீர்மானமாகி விட்டதில்லையா?

இனவிருத்தியை விடவும் முக்கியமான விஷயம் இவ்வுலகத்தில் எதுவுமில்லை. இந்த உலகத்தின் எல்லா நியதிகளும் அதன் பொருட்டே. மதம், கடவுள் நம்பிக்கை, திருமணம், சடங்கு எல்லாம் அதற்காகவே. இனிமேல் இனவிருத்தி கிடையாது என்று நினைத்துப் பார். என்ன நடக்கும் என்று யோசித்துப் பார். உன் அப்பா சொன்ன ராட்சஷத்தனம் வரும்.

இனவிருத்தி ஆசைதான் உலகம். அதுதான் சகல உயிர்க்கும் இயல்பு. இந்த இயல்பின் விளைவே அன்பு, காதல், காமம் எல்லாம். நான் சொல்வது புரிகிறதா?

சுந்தரம் வியப்பாய் அந்த இருபத்திமூன்று வயதுப் பெண்ணைப் பார்த்தான்.

''புரிகிறது வினோலியா என்று வியப்பு குறையாமல் சொன்னான்.

இவ்வளவு தெளிவாகப் பேச எங்கு கற்றுக் கொண்டாய்?''

''ஏன் கற்றுக் கொண்டாய் என்று கேள்.''

''சரி, ஏன் கற்றுக் கொண்டாய்?''

''இன விருத்திக்காக.''

"இதில் என்ன இனவிருத்தி."

"உன் அப்பன் என்ன சொன்னால் எனக்கென்ன, அதை எதிர்த்து ஏன் உன்னிடம் பேசிக் கொண்டிருக்கிறேன்?"

"ஏன்?" சுந்தரம் விழித்தான்.

"நீ ஆண். நான் பெண்."

"அதற்கென்ன இப்பொழுது?"

"இது இனவிருத்தியால் ஏற்பட்ட ஒட்டுதல்."

"கொஞ்சம் அசிங்கமாக இருக்கிறதே" சுந்தரம் வெட்கப்பட்டான்.

"நீ என் முன்னே வெட்கப்படுவது எனக்குப் பிடித்திருக்கிறது. எனக்கு சந்தோஷமாக இருக்கிறது. இதுவும் இனவிருத்திக்கான சூழ்ச்சி."

"இதையே, நீ ஒரு பெண்ணிடம் பேசினால்..."

"ஒரு ஆணிடம் பேச என்றாவது அது உபயோகப்படும் என்று அவள் கேட்டுக் கொள்வாள்."

"எல்லாமே அது தானா?"

"அதுவே."

"எனக்குப் பிடிக்கவில்லை."

"மிகவும் பிடித்துவிட்டது என்று இதற்குப் பொருள். உன்னால் இதைப் பற்றி, இதைப் பேசிய என்னைப் பற்றி யோசிக்காமலிருக்க முடியாது."

சுந்தரம் அவளைப் பற்றியே அன்று இரவு முழுவதும் யோசித்துக் கொண்டிருந்தான். அது இனவிருத்தியின் ஆரம்பப் பாடமான காதலில் போய் முடிந்தது.



# 8

எப்படிப் பிறந்தநாள் வைபவத்துக்கு கூட்டம் கூடியதோ அதே போல மெல்லக் கலையவும் செய்தது. சாப்பிடவே வந்தவர்கள் போல பலர் கைகூப்பி சரசரவென்று வெளியேறினார்கள்.

"இருடி போலாம். இருடி போலாம்" வரலட்சுமி, ஹேமலதாவை பலமுறை கெஞ்சினாள். இனி இருந்து என்ன செய்ய என்கிறது? என்று அயர்ச்சி வந்தது ஹேமலதாவுக்கு.

விருந்து என்று ஆரம்பிக்கும் போது உண்டான சந்தோஷப் பரபரப்பு முற்றிலும் மாறிப் போனது தெளிவாய்த் தெரிந்தது.

இதற்கு மேல் அங்கே நிற்கக் கூடிய எல்லா நேரமும் விரயமான நேரம் என்பதாய்த் தோன்றியது.

அந்தக் கணமே வரலட்சுமி தனக்கு உரிமையானவள் என்பதாய் அவள் ஸ்நேகிதனின் நடவடிக்கைகள் இருந்தன. அதை ஊக்கப்படுத்தும் விதமாய் அங்குள்ள முதிர் பெண்கள் சிரித்துச் சிரித்துப் பேசினார்கள்.

ஹேமலதா ஓர் அயர்ச்சியை உணர்ந்தாள். இதுவல்ல ஆண், பெண் உறவு. இதுவல்ல கொண்டாட்டம் என்பதாய் யோசித்தாள்.

ஒருவேளை எனக்குப் பொறாமையோ? தோழியின் காதல் களியாட்டம் எனக்கு எரிச்சலைத் தருகிறதா? எனக்கு இல்லை என்கிற ஏக்கமா? என்னால் இப்படி இருக்க முடியுமா?

ரமேஷு, தோள்ள கை போட்டுக்காதடா. வரலட்சுமி இடுப்பச் சுத்திப் போட்டுக்கோ. இடுப்பத் தொட்டாதான் பொம்மனாட்டிக்குப் புடிக்கும்.

எவனோ சொல்ல இவனும் செய்ய, கரண்டி விட்டுக் கலக்கிய ரசம் சட்டென்று சொம்போடு கொட்டியது போல ஹேமலதாவுக்கு ஒரு திகைப்புப் படர்ந்தது.

அரை நிர்வாண ஆணைப் பார்த்து முகம் திருப்பிக் கொள்ளத் தோன்றுமே அதுபோல அந்தக் களியாட்டம் பார்த்து வேறு திசைக்கு முகமும் மனசும் திரும்பின.

சந்தானம் யாரிடமோ கை கூப்பிக் கிளம்பத் தயார் செய்து கொண்டிருந்தான். அவன் ஸ்நேகிதன் ரமேஷின் ஸீனியர் காரில் ஏறிக் கொண்டிருந்தான்.

"சந்தானத்தோடு ஒட்டிக் கொள்ளலாமா? எனக்கு வண்டி இல்லை. நான் சந்தானத்தோட போறேன் வரலட்சுமி என்று கழன்று கொள்ளலாமா?"

"சந்தானமா, கார்லியா, இத்தனை நேரத்துக்கு மேலயா? வெரிகுட். ஆல் த பெஸ்ட். நாளைக்கு வந்து என்ன ஆச்சுன்னு சொல்லு."

வரலட்சுமி கண்சிமிட்டுவாளோ...

கடவுளே...காதல் என்பதில் கவிழ்ந்து விழுவதைவிட காதலில் விழுந்துவிட்டாயே என்கிற கேலி மோசமானது.

'சந்தானமும் வேண்டாம். சாரதியும் வேண்டாம். மீட்டருக்கு மேல் இரண்டு ரூபாய் கொடுத்தால் வீட்டில் ஆட்டோ இறக்கி விட்டுவிடும். போறும் பர்த்டே பார்ட்டி. வரலட்சுமி, ஆளைவிட உ மனசுள் பேசி வெளியே சிரிப்பு காட்டி...

"நேரம் ஆச்சு. அம்மா திட்டுவாங்க.நான் வரேன்." உதறியது போல பின்னடைந்து புல்வெளி தாண்டி வாசலுக்கு நகர—



சந்தானம் காரிலிருந்தபடியே, "எங்கே போறீங்க? வீட்டுக்கா?"

"ஆமாம்."

"வண்டி இருக்கா?"

"இல்லை. ஆட்டோல போறேன்.

"இருங்க. ஆட்டோ பிடிச்சுத் தரேன்" கார்விட்டுக் கீழிறங்கினான். வெளியே வந்தான்.

வாங்க ட்ராப் பண்றேன் என்றுதானே எல்லா ஆண்களும் சொல்வார்கள்.

வேணாம் தாங்க்ஸ் என்று போனால் முகம் சுருங்கி, வேதனைப்படுவார்கள். இது என்ன டக்கென்று இறங்கி ஆட்டோ பிடிச்சுத்தரேன் என்று ஓடுகிறது. இந்த சந்தானம் கொஞ்சம் இங்கிதம் தெரிந்தகேஸா. வழியாத ஆசாமியா?

"எதுக்கு...வேணாம்...நான் பார்த்துக்கறேன்." வாய் உரத்து சொன்னாலும் ஆட்டோ கிடைக்க வேண்டுமே என்கிற கவலை வந்தது.

இரண்டு மூன்று ஆட்டோக்களுக்குக் கை தட்டியும் நிற்காமல் போயிற்று.

கார்ல போயிடலாமா என்று கேட்பானோ என்று ஹேமலதா காத்திருந்தாள். அவன் நாலாவது ஆட்டோவை நிறுத்தினான். மீட்டருக்கு மேல் அஞ்சு ரூபா என்று கேட்டபோது சத்தம் போட்டு மூன்று ரூபாயாக்கினான்.

"அப்போ, மறுபடி எங்கேயாவது சந்திப்போம். இன்று சந்தித்த சந்தோஷம் நெடுநாள் என்னுள் இருக்கும். கவிதையாய். ஆங்கிலத்தில் சொன்னான்.

காருக்குத் திரும்பினான். ஆட்டோ வளைந்து தார்ச் சாலை விழுங்கியது.

சட்டென்று சந்தானம் மனசுள் ஒட்டிக் கொண்டு விட்டான் என்று ஹேமலதாவுக்குத் தோன்றியது.

வீட்டு வாசலில் வண்டி நிற்க மீட்டருக்குமேல் ஐந்து ரூபாய் கொடுத்துவிட்டு இருக்கட்டும் என்று மிதப்பாய்ச் சொல்லிவிட்டு படியேறினாள்.

மாடியேறி அழைப்புமணி குமிழ் அழுத்திவிட்டு நிற்க, கீழே மெல்லியதாய் மாருதி ஹார்ன் கேட்டது. ஏதோ ஓர் உந்துதலில் எட்டிப் பார்க்க கீழே சிவப்பு மாருதி கதவு திறந்து வீடு பார்த்தபடி சந்தானம்.

'ஐயோ. பின்னாலயே வந்துருக்கே இது' வியந்தாள்.

''என்ன?'' கூவினாள்.

''ஜாக்கிரதையா போய் சேரணுமேன்னு கவலை. அதான் பின்னாலேயே வந்தேன், குட்நைட்.'' கீழே இருந்தபடியே குரல கொடுத்தான். கார்க் கதவு சாத்தினான். இஞ்சின் உயர் வேகத்துக்கு போக கார் நகர்ந்தது. மறைந்தது.

'என்ன இது எதுக்கு இப்படி பண்ணினான்? அக்கறையா, அசத்தற ஐடியாவா? அப்ப ஏன் கார்ல வான்னு கூப்புட்டுருக்கக் கூடாது.

'கூப்புட்டா நான் வந்திருக்க மாட்டேன். ச்சீ போடான்னு சொல்லிருப்பேன். அவமானப்பட பயம். அதனாலே...உனக்கு ஆட்டோதானே வேணும். நான் ஏற்பாடு பண்றேன்னு வந்து...ஏத்திவிட்டுட்டு பின்னாலையே...

'க்ளவர்...வெரி க்ளவர். தானும் கேட்டுட்டு அவமானப்படாம, அதேசமயம் எப்படியோ போன்னு தள்ளாம...ஒருவேளை இதான் பொண்ணுங்களைக்



கவுக்கற வழியா? இப்படி ஒதுங்கி நின்று பேசினாதான் பெண்களுக்குப் பிடிக்கும்னு தந்திரமா?

'நிறையக் கவுத்துருப்பானோ? கவுத்துப் பழக்கம் உள்ளவனோ'

ஒரு நிமிஷம் யம்மா...அவனைப் பார்த்ததும் ஆடிப் போச்சு. படவா! என்ன கெட்டிக்காரத்தனம். இது வேற எவனாவது இருந்தா இந்நேரம் ஆடிப்போயிருப்பா. நான் கூட ஆடிப்போய்ட்டேனோ.

சந்தானம் என்ன பேசினான். லவ்யூன்னானா? கிட்ட சேர்க்காதே. சரியான ப்ராடு.'' வரலட்சுமி எச்சரிகை மனசுள் ஓடிற்று.

எதுக்கு அவன் ப்ராடா இருக்கணும்? என்னை எதுக்கு ஏமாத்தணும்?

அழகா ஒரு பொம்பளை தனியா நின்னா ஆம்பளைக்கு வாலாட்டிப் பார்க்கத் தோணும். அவன் இயல்பு அது. இது மட்ட புத்திதான். ஆனா, தவிர்க்க முடியாது.

நிஜம் சொல்வதாய் நடிப்பா. நான் ரொம்ப திறந்த மனசு உடையவன் என்கிற வேடமா? ஆனால் அசத்தி விட்டான் என்பது உண்மை. உள்ளே அவனைப் பற்றியே யோசனை ஓடுகிறது உண்மை.

● ● ●

அழைப்புக்குமிழை இரண்டு முறை அழுத்தியாகி விட்டது. அம்மா கதவு திறக்கவில்லை.

அம்மா உள்ளே ஏதாவது கனவில் இருப்பாள். ராமர் போன வழி இதுதான். ஆஞ்சனேயர். இப்ப எங்க இருப்பார். சிரஞ்சீவின்னா சாவு கிடையாதா? சாவு

இல்லைன்னா எங்கயாவது உயிரோட இருக்கணு மில்லையா? எங்க இருப்பார்? அனுமாரா இருப்பாரா?

இல்லை மாறு வேஷத்துல வருவாரா? குடுமியும் பூணு லும் நாமும் யாரைப் பார்த்தாலும் அனுமார் வேற வேஷத்துல வராரோன்னு தோன்றது ஹேமா. அனுமார் சிரஞ்சிவிதானே.

ஹேமா இல்லாது வீட்டுக்குள் அம்மா ஹேமாவை நோக்கி பேசிக் கொண்டிருக்கலாம். நான்கூட அப்படித் தான் என்னவோ எனக்குள் பேசி இந்த நடையில் நிற்கிறேன்.

மூன்றாவது முறை குமிழ் அமிழ்த்த முடியாமல் ஏதோ யோசனையில் அழுத்தினால், யோசனையைக் கலைத்து விடுவார்களோ என்கிற பயத்தில் நிற்கிறேன்.

வீடே பைத்தியக்கார வீடாய்ப் போய்விட்டது. தனக் குத்தானே பேசுகிற வீடாய் மாறி விட்டது. ஆளுக்கு ஒரு திசைச் சுவர் பார்த்து அமர்ந்து தனிததனியே தங்க ளுக்குள் பேசி இருக்கப் போகிறோம்.

வேறு எந்த வீட்டிலாவது இப்படி உண்டா?

''சாப்பிடவா.''

''சரி.''

''தூங்கப் போறியா?''

''ஆமாம்.''

''காசு வேணுமா?''

''தா.''

ஒற்றை வார்த்தையாய்ப் பேசுதல்தான் இயல்பாகி விட்டது.



வீட்டில் குதூகலம் குறைவாய் இருக்கிறது. அதனால் தான் வெளியில் பார்க்கிற குதூகலம் மனசுள் ஒட்டுகிற தோ. அதே நேரம் அந்தக் குதூகலம் ஆபாசமாய்ப் போனால் பயம் வருகிறதோ. அப்படி பயம் வரக்காரணம் இந்த வீடோ? பழக்கமின்மையோ?

இடுப்புல கை போட்டுக்கோடா. அந்தப் பெண்ணால் பப்ளிக்காய் எப்படிப் பேச முடிகிறது. அப்படியானால் அந்தரங்கத்தில் எத்தனை பேச்சு ஓடும். கொஞ்சம் கூட பயமின்றி, கூச்சமின்றி ஆபாசம் பேச ஒரு பயிற்சி வேண் டுமா, சூழ்நிலை வேண்டுமா?

ரமேஷும் கை போட்டுக் கொண்டான். வரலட்சுமி யும் வாங்கிக் கொண்டாள். உடனே உடம்பெல்லாம் உதறிப் போட்டாற் போல ஒரு வெட்கம்... என்னால இதையெல்லாம் பார்க்க முடியாது என்கிற வெட்கம்.

இதுக்கே வெட்கப்பட்டேன்னா சொச்சத்துக்கு என்ன பண்ணுவோம்? அந்த மாமி கேட்பாளோ. வெட்கப்பட்ட மாதிரி நடிக்கறா ஹேமா என்று நொடிப்பாளோ

என்னுடையது நடிப்பு வெட்கமா. சந்தானம் நடிப்பு உதவி. நான் நடிப்பு வெட்கமா?

மறுபடி கீழே கார்ச் சத்தம் கேட்டது. ஆவலாய் ஹேமா எட்டிப் பார்த்தாள்.

யாரோ... யாருடைய காரோ. எட்டிப் பார்த்து தலையை உள் வாங்கும் போது நேரே தெரு முனையில் யாரோ தெரியாத உருவமாய் மனதில் பதிய மறுபடி எட்டிப் பார்த்தாள். அண்ணா. சுந்தரம் அண்ணா, யார் அது. அண்ணாவின் ஸ்கூட்டரில் உட்கார்ந்து கால் ஆட்டிக் கொண்டிருப்பவள். வி னோ லி யா வா? வினோலியா தான்.

அங்கென்ன பார்க்கிங்? அங்கென்ன பேச்சு? இன்னும் எட்டிப் பார்க்க அடுத்த வீட்டு மாமரம் மறைத்தது. காற்றில் தழைந்து கால்கள் மட்டும் காட்டியது

அனிதா மேத்யூஸுக்கு மூணு பொண்ணு. உங்க ப்ரதர் முதல் பொண்ணை லவ் பண்றாருன்னு நினைக்கிறேன். சந்தானம் சொன்னது நினைவுக்கு வந்தது.

லவ்வா அது பேசினால் லவ் என்று நானும் கொள்வதா? எதற்குத் தெருமுனையில் பேச்சு. அவன் தோளில் அவள் கை வைத்து ஏதோ வற்புறுத்தி சொல்லிக் கொண்டிருக்க சட்டென்று ஒரு பொறாமை ஓடியது.

மனசு பொறாமைக்குத் தாவிய கணமே கை செயல் பட்டது. அழைப்பு மணியை விடாது அழுத்தினாள்.

கதவு திறந்தது.

''ரொம்ப நேரமா காலிங் பெல் அழுத்தறியா?''

''இங்க வா.''

''என்னது?''

''எட்டிப் பாரு''

''என்ன?''

''உம்புள்ளை எவளோடயோ ரோட்ல பேசிண்டு நிக்கறான்.''

''சுந்தராவா?''

''வேற யாரு உன் புள்ளை. சுந்தரம்தானே. இல்லை ரகசியமா எங்கயாவது பெத்து விட்டிருக்கையா?''

''ச்சி. என்னடி பேச்சு. எங்க தெரியலையே.''

''தெரு முனைல.''

''சுந்தரம்தான். யார் அது?''



''விநோலியா.''

''அனிதா மேத்யூஸ் பொண்ணா?''

''ஆமாம்.''

''சின்னூண்டா இருந்தது ஜிங்குன்னு வளர்ந்துடுத்தே. இப்ப என்ன படிக்கறா?'' அம்மா பார்வையில் விகல்பமே இல்லை.

''லவ்... லவ் பாடம் படிக்கறா. பிராக்டிக்கல் க்ளாஸ் நடக்கறது அங்கே.''

''ச்சே. சுந்தரா அப்படியெல்லாம் இல்லை. கேஸ் பத்தி பேசிண்டிருப்பான்.''

''இவளோட என்ன பேச்சு?''

''வேற ஏதாவது பேசுவான்.''

''என்ன பேசுவான்?''

''தெரியலையே.''

''எனக்குத் தெரியும். இரண்டு மூணு பேர் முன்னமே சொன்னாங்க. இது பத்தி.''

''யாருடி..''

''உனக்குத் தெரியாது அவங்களை.''

''இப்ப என்ன பண்றது?'' அம்மா விழித்தாள்.

''வந்தா கேளு.''

''என்ன கேட்கறது?''

''என்னடா வேலை அங்கன்னு கேளு.''

''சுந்தரத்தைத் தப்பாச் சொல்றியா?''

''கேளேன், கேட்டாத்தானே தெரியும். தப்பா சரியான்னு.''

அம்மா எட்டிப் பார்த்துக் கொண்டேயிருக்க, வினோலியா சுந்தரத்தின் கன்னங்களைத் தாங்கி மூக்கோடு மூக்குரசி கொஞ்சினாள். அம்மா தலை இழுத்துக் கொண்டாள். அவள் பார்த்ததை மகளிடம் சொல்லவில்லை. கவலைப்பட்டாள்.

## 9

உள்ளே நுழைந்து சரஸ்வதி மறுபடி வெட்கிரைண்டர் ஸ்விட்ச் போட்டாள்.

கிரைண்டர் சுழல, மாவு தடுப்பில் மறிக்கப்பட்டு திசைமாறி ஓடியாது.

கார் போகும் போது கதவு விளிம்பில் கன்னம் வைத்துக் கொண்டால் தார்ச்சாலை ஓடுமே அதுபோல ஓடியது. விமானம் கிளம்பும்போது வெள்ளை சிமிண்ட் சாலை பின்னுக்கு விரையுமே அந்த மாதிரி மாவு ஓட்டம் தெரிந்தது.

விதம் விதமாய்க் கோடுகள் மாறி, மாறிச் சுழன்று ஓடுவதையே சரஸ்வதி பார்த்துக் கொண்டிருந்தாள்.

சில சமயம் எந்தக் காரணமுமின்றி மாவு ஓட்டத்தில் சளக்கென்று தெறித்து வழிந்தது. சளக்கென்ற சப்தம் கூட இல்லை. பச் என்ற அலுப்புச் சத்தம் கூட மாவு ஓட்டத்தில் கேட்டது—அது அலுப்பு சத்தமா, இல்லை முத்த சப்தமா.

அவ்வளவு உயரத்திலிருந்து பார்க்கும்போது சப்தம் கேட்கவில்லை. வெறும் செய்கை மட்டுமே தெரிந்தது.



உள்ளே வந்தவுடன் இடைவிடாது சப்தம் மட்டுமே கேட்கிறது. முத்த சப்தம். காட்சி தெரியவில்லை. காட்சி மனகள் இருக்கிறது.

எட்டி இறுக்கி அரையிருட்டில் நடுத்தெருவில் சடாரென்று எப்படி அந்த வினோலியாவால் முத்தம் தர முடிகிறது? என்ன வெட்கம் கெட்ட காரியம் இது என் பிள்ளைக்கு எதற்கு முத்தம்? என்ன இரகச்சாரம்!

பதற வேண்டாமா? தப்பு வினோலியா. இதெல்லாம் தப்பு. எனக்குப் பிடிக்காது. எங்கம்மாவுக்குப் பிடிக்காது என்று பின்னடைய வேண்டாமா?

சுந்தரம் நகரவேயில்லை. என்ன செய்தான். எட்டி தாவியவளை கைகளில் வாங்கிக் கொண்டான். தழுவல் இல்லை. ஏந்தல். ஏந்தி வாங்கிக் கொண்டான்.

''உள்ள வாங்கோ, இரண்டு பேரும் முத்தம் தானே கொடுத்துக்கனும். அந்த ரூமுக்குப் போங்கோ. கதவு சாத்துங்கோ. வேண மட்டும் பரிமாறிக்கலாம். எதுக்கு வெளியே நடுத் தெருல்ல மானம் போற மாதிரி...''

மனசு கத்தியது. கண், மாவிலேயே இருந்தது.

''யாருக்கும்மா மானம் போறது. சுந்தரம் கேட்பானா? உனக்காம்மா...இதுல என்ன அவமானம்? அவளை எனக்குப் பிடிச்சிருக்கு. எனக்கு அவளைப் பிடிச்சிருக்கு. யாருக்குப் பயப்படணும். இதுல என்ன அவமானம்?''

''நடு ரோட்ல அவமானமில்லையா?''

''டேஸ் ஆர் சேஞ்சிங்''

''அதுக்காக எல்லாம் தெருவிலியே பண்றதா?''

''உனக்கு வயசாயிடுத்தும்மா.''

''எனக்குப் பிடிக்கலை. என்புள்ள இப்படிப் பண்ணப்படாது.

''நீ வேற. நான் வேறம்மா.''

''என்னடா வேற. நான் சாகறவரைக்கும் உனக்கு அம்மாதாண்டா.''

''யெஸ் ஆனா, உன் வாழ்க்கை வேற, என் வாழ்க்கை வேற.''

''எப்படி, எப்படி வேற? நீயும் சோறுதானே திங்கற, நான் எட்டு வயசுல சாப்பிட்ட மாதிரியேதானே குழம்பும், ரசமும், மோரும்...

பிள்ளை சிரிப்பானோ...?

முன்பு சிரித்தான், எதற்கோ இப்படி கோபித்ததற்குச் சிரித்தான்.

''நீ குழம்பு. ரசம். நான் மட்டன், சிக்கனுக்கு மாறக் கூடாதா?''

பகீர் என்று ஆயிற்று.

அவன் திகைப்பானது பார்த்து சமாதானப்படுத்தினான்.

''மட்டனோ. சிக்கனோ சாப்பிடலை இதுவரை. சாப்பிட்டா என்ன தப்பு? சாப்பிடும்படியா எனக்கு நேர்ந்தா என்னை என்ன செய்வே? புள்ளையே இல்லைன்னு தள்ளி வச்சிடுவியா? தள்ளி வைக்க முடியுமா உன்னால?

''அதான், சொல்றேன், நீ எனக்கு அம்மா. நான் பிள்ளை. எப்பவும்...எல்லா நேரமும்...ஆனால். உன்



வாழ்க்கை வேறு, என் வாழ்க்கை வேறு. என் உணவு வகை வேறு, உன் உணவு வகை வேறு.''

'உணவு மாதிரி உறவும் வேறுவகை உறவாய் வந்து விட்டதோ. இவ சிநேகிதம்தான் மட்டன், சிக்கன் என்று பேசவைத்ததோ'

உடம்பு சிலிர்த்தது. உண்டி வகை மனசுள் படமாய்த் தோன்ற உடம்பு சிலிர்த்து அடங்கியது.

● ● ●

''காடை சாப்பிடறியா, சரஸ்வதி?'' மதுரையில் தனி பங்களாவில் பத்து நாட்கள் தங்கியபோது புருஷன் கேட்டான். பெரிய டிபன் பாக்ஸ் பிரித்தபடியே கேட்டான்.

''காடைன்னா?''

''ஒரு பறவை.''

''ஐயோ, மாமிசமா?''

''அது தனி. இது பறவை.''

''நீங்க மாமிசம் சாப்பிடுவேளா?''

''ம்ம்...தோணிச்சுன்னா.''

''ஐயோ, எதுக்கு?''

''ஒரு டேஸ்ட்டுக்குத்தான்.''

''குருவி குருவியாய் தலை, கண், மூக்கு, உடம்பாய் ஆறு பறவைகள் டிபன் பாக்ஸின் வட்டமாய் அடுக்கப்பட்டிருந்தன. மனசு சொரேல்லென்று அருவருப்பில் மூழ்கியது.

ஐயோ, ராமா என்று அந்தப் பறவைகளுக்காய் அழுதது. 'எங்ஙனம் ஆளும் அருள்' என்று குறள் ஞாபகம் வந்தது.

'தன் ஊன் பெருக்கற்குத் தான் பிறிது ஊன் உண்பான் எங்ஙனம் ஆளும் அருள்.'

அருளே இல்லாத மனிதன்.

மது வாசனையான முத்தம். முரட்டு இறுக்கம். உடம்பை நோக அடிக்கற வெறி. ஹிம்ஸிக்கிற ஆனந்தம்,

''முடியலையே ராமா.''

''முடியணும். அப்புறம் எதுக்கு பொண்டாட்டி.''

''மென்மையா நடத்த வேண்டாமா மனைவிய?''

''அது வெளியில. ரூம்ல என்ன மென்மை?''

''உள்ளொன்று வைத்து, புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்' அவள் மனசு பாடியது.

' மூச்சுத் திணறிச் செத்துருவேன் போலருக்கே.''

''எனக்குக் கவலை இல்லை. எனக்கு வேணும்றது பொண்டாட்டி. பெரிய பதிவிரதை மாதிரி வெளியில நடிக்கற. இப்ப என்ன கேடு உனக்கு? நான் சொல்றபடி நட''

''இப்படியெல்லாம் பழக்கமில்லை.''

''பழகிக்க''

''மனசு ஒப்பலை.''

''வெளிய போடி. போடி வெளிய! கருமம், பீடை, துடப்பக்கட்டை போ, அன்னன்ட...'' டமாரென்று கட்டிலிலிருந்து தள்ளிவிட்டான். வெறித்துப் பார்த்தான்



''எதுக்கு உன்னைத் தள்ளினேன்? தள்ளிட்டா, நான் தூங்கறது எப்படி? உனக்கு இஷ்டமில்லைன்னாலும் வா. எனக்கு இஷ்டம். எனக்கு என் வெறி அடங்கணும் வா.''

'மதி வேண்டும் நின் கருணை நிதி வேண்டும். நோயற்ற வாழ்வு நான் வாழவேண்டும். தருமமிகு சென்னையில் கந்தக்கோட்டத்தில் வளர் தலமோங்கும் கந்தவேளே'

மதியே இல்லாத புருஷன் கருணையே இல்லாத மிருகம். தானும் நோய்ப்பட்டுத் தன்னை சார்ந்தவர்களையும் நோய்க்குத் தள்ளிய கணவான்

'மாமிசம் தின்று, மாமிசம் வளர்த்து மாமிசம் தேடும் மனிதன்.

''தோ பார். உனக்கு முடியலை. உன் உடம்பு என் உடம்பைத் தாங்கற மாதிரி இல்லை. அதும் தவிர உனக்கு இதுல டேஸ்ட் இல்லை. சும்மா சாமி, பூஜைன்னு பட்டினி கிடந்த சாவற. என் லைன் வேற. நான் உன்னைய வுட்டுடறேன். நீ பாட்டுக்கு பூஜை செய்துக்கிட்டு இரு. என்னைய கண்டுக்காத.''

''கண்டுக்காதன்னா?''

''எவனா எதுனா சொன்னா பெரிசா அலட்டாத. அப்படியான்னு இரு.''

''புரியலையே.''

''பீனா ருஸியான்னு ஒரு பொண்ணு. கொங்கணி கேர்ள். ரொம்ப பிரியமா இருக்கு என் மேல,''

''இது தப்பில்லையா?''

''உன்னால முடியலையே.''

''மனசு அடக்க வேண்டாமா?''

''எதுக்குடி அடக்கணும்?''

''புலனடக்கம் முக்கியமில்லையா? ஒழுக்கம் விழுப்பம் தரலான்...''

''உதைபடுவே.''

''ஏன் கோவிச்சுக்கறேள்?''

''எவனா செத்தவன்கிட்ட வச்சுக்க இந்தப் பேச்செல்லாம். நான் சாமியார் இல்லை. கிரஹஸ்தன். தின்னு ருசி கண்டவன். நேரத்துக்கு சோறு இல்லைன்னா, எதுக்கு ஒருத்தன் சம்பாதிக்கணும். நீ சரியா இருந்தா நான் ஏன் அலையணும்?''

''சரி.''

''என்னடி சரி?''

''வீட்டுக்கு வராத இருந்தா சரி.''

''அப்பவும் வரேன்னு சொல்றாளா பார்.''

''என்னால முடியலையே?''

''ஏன் முடியலை?''

''என்கிட்ட ஆசையா பேசி, அன்பா பழகினா...''

''நாப்பதாயிரத்துக்கு வைர நெக்லஸ் போடலை உனக்கு?''

''தூக்கி மடில போட்டேன்.''

''உன்னைத் தூக்கி மடில வச்சுகிட்டு போடணும்றியா? என்னால கொஞ்ச முடியாது.''

''ஏன் முடியாது?''

''ஐ யாம் எ பிஸினெஸ்மேன்.''



''அதனால என்ன?''

''இதுக்கு அது. அதுக்கு இது. இன்னின்ன விஷயத்துக்கு இன்னின்ன விலை...அவ்வளவுதான்.''

''பொண்டாட்டிகிட்ட கூடவா?''

''உலகத்துல இருக்கிற எல்லா மனுஷான்கிட்டேயும், எல்லா விஷயத்துலயும் வியாபாரம்தான் இருக்கு.''

''கடவுள் கிட்ட கூடவா?''

''கடவுள்? யார் கடவுள்? எது கடவுள்?''

''ஆத்மா.''

''மயிரு. எதிர்க்க இருக்கறவன் புத்திய, மனசைப் புரிஞ்சுக்க முடியலை. இவ ஆத்மாவைப்பத்தி பேசறா. ஆத்மான்னா என்ன?

''உயிர்.''

''சரி, இப்ப என்னா அதுக்கு.''

''அது சந்தோஷப்பட வேண்டாமா?''

''அது சந்தோஷப்படறதுக்கு தானே சாப்பாடு, தண்ணீ, பொம்பளை, படுக்கை...?''

''ஆத்மா அழிவில்லாதது. விருப்பு, வெறுப்பு கடந்தது.''

''அடி போடி. ஒருவேளை சோறு நிறுத்தினா உடம்பு துடிக்குதில்லை. ஏன்? உசிரு ஆடுதில்லை. ஏன்? ...?...ஒண்ணும் தேவையில்லைன்னா அது ஏன் இங்க வந்து புகுந்துருக்கு? அது ஏன் இன்னொரு உசிரு தேடுது? அது ஏன் உடம்பு விட்டு போவுது? உசிரு உடம்பு வழியா பேசும்டி.''

அவள் பேசாது நின்றாள்.

''புரியலை இல்லை...? உனக்குப் புரியாது. நீ எவனோ பேசினதை படிச்சுட்டு என்கிட்ட பேசற. நான் என்னைக் கவனிச்சுட்டு உன்கிட்ட விளக்கறேன். அதுனால இந்தப் பேச்ச என்கிட்ட வேண்டாம்.

''காமம் தப்பில்லை. தப்பா இருந்தா இந்த உலகத்துல இருந்துருக்காது. நீங்களா இது சரி, இது தப்புன்னு பிரிச்சு வச்சுக்கிட்டு ஏன்டி சாவறீங்க? இருக்கறமுட்டும் அனுபவிங்கடி.

''நீயும் எங்களா மேயறதா இருந்தா மேயலாம். நான் ஒண்ணும் கண்டுக்க மாட்டேன்.'' கண் சிமிட்டினான்.

'தீயவை தீய பயத்தலால் தீயவை தீயினும் அஞ்சப் படும்.

அஞ்சினாள். அஞ்சியபடி விலகினாள். தீ, தீயவை தழுவி கிளர்ந்து எழுப்பியது.

● ● ●

பீனா ருஷியா எங்கோ குடியமர்த்தப்பட்டாள். குடிக்கும் வீடாய் மாற்றப்பட்டாள்.

''தெலியலேது ராமா பக்தி மார்க்கமு' இந்த வீட்டில் சரஸ்வதி குரல் அழுதது. 'நிதி சாலசுகமா' பாட்டாய்க் கேள்வி வந்தது. 'புனரபி ஜனனம், புனரபி மரணம்' என்று வியப்பில் கரைந்தது.

'எங்கோ எதுவோ என்னவிதமாகவோ நடைபெறட்டும். மூட மனதே, உனக்கென்ன, மௌனமாய் இரு.' என்று மன்றாடியது.

'சும்மா இரு...சொல் அறவென்றலுமே, அம்மா பொருளொன்றும் அறிந்திலனே.' என்று தவித்தது.



ஆனால் அவன் அவளைவிட அவள் குழந்தைகள் மீது நாட்டமுள்ளவனாய் இருந்தான். அதுவும் ஒருநாள் அழிந்தது. அழிக்கப்பட்டது.

● ● ●

பீனா ரஷியாவுக்கு பெண் குழந்தைகள் இரண்டு பிறந்தன.

அவன் சொத்துக்குக் குறி வைத்தான். கம்பெனியில் பார்ட்னரானான். என் குழந்தை, எது வீடு... என்ன சொத்து... என்று நச்சரித்தான்.

அவன் சரஸ்வதிக்குத் தெரிவிக்காமல் பலது விற்றான். பலது வாங்கினான்.

இந்த வீட்டில் சுந்தரத்துக்கு சைக்கிள் வாங்கினால், அங்கே இரண்டு சைக்கிள் வாங்க வேண்டும்.

இந்த வீட்டில் ஹேமாவுக்கு தங்கச் சங்கிலி போட்டால் அங்கே இரண்டு போட வேண்டும். இங்கே அம்பாஸிடர் வந்தால், அங்கே ப்ளிமத் நிற்க வேண்டும்.

சுந்தரம் கொடைக்கானலுக்குப் படிக்கப் போனால் அவர்களும் போக வேண்டும். அங்குதான் படிக்க வேண்டும்.

''இவர்கள் உன் சகோதரிகள் சுந்தரம். இது ஆர் தெரியுமா உனக்கு.'' எட்டாவது படிக்கும் பிள்ளையை பீனா கேட்டதற்கு

தெரியாது என்று பிள்ளை சொல்லியிருக்கிறது.

''நான் யார் தெரியுமா உனக்கு?''

''ப்ளடி பிட்ச்.'' சீறியிருக்கிறது. அம்மா அவஸ்தைக்கு

அவளே காரணம் என்று எவரோ உறவு சொல்ல, புரிந்தும் புரியாததுமாய் எகிறியிருக்கிறது.

ரெண்டும்கெட்டான் என்று ஒதுங்கியிருக்கலாம். பேயாட்டம் ஆடினான். பிள்ளையை முடியைப் பிடித்து இழுத்து அடித்தான். இங்கே வந்து கத்தினான்.

மறுபடி ஊட்டிக்குப் போய் திரும்பவும் அடித்து மன்னிப்புக் கடிதம் எழுதி வாங்கினாள்.

சுந்தரம் லீவு போட்டுவிட்டுத் தனியே பஸ் ஏறி, சென்னை வந்து வீட்டு வாசலில் நின்று ஓவென்று அழுதான். விவரம் சொன்னான்.

அந்த சுந்தரம், அப்படி அழுத சுந்தரம், இன்று தெருவில் முத்தம் தருகிறான்.

'ராமா, என் கர்மவினை இன்னும் போகவில்லையா' சரஸ்வதி திகைத்தாள்.

## 10

அரவை முடிந்து விட்டது என்பதை மாவின் ஒட்டம் காட்டியது. மிஷினை நிறுத்தி மாவை வழித்துப் பாத்திரத்தில் போட்ட போது சுந்தரம் உள்ளே நுழைவதை சமையலறையிலிருந்தே உணர முடிந்தது.

இவன் செய்கையைக் கண்டிப்பதா வேண்டாமா என்ற கேள்வி எழுந்தது. தலைக்கு மேல் வளர்ந்தவனிடம் கேட்க முடியுமா? இத பற்றி விசாரிக்க முடியுமா? பெற்றவன் இதுகூட விசாரிக்கவில்லையெனில் வீட்டிற்கு நல்லதா? எனக்குத் தெரியும் என்று தெரிவித்துவிட வேண்



டாமா? உனக்கு ஒரு தங்கை இருக்கிறாள் என்று புத்தி சொல்ல வேண்டாமா?

வினோலியாவுக்கு முத்தம் கொடுக்கிறியே என்ன அர்த்தம்? காதலா? கல்யாணமா? உன்னால அவளைக் கல்யாணம் பண்ணிக் குடித்தனம் பண்ண முடியுமா?

சரி, நீ இப்படிக் குடித்தனம் பண்ற இடத்துல நான் இருக்க முடியுமா?

இங்க சுவாமி படம் இருக்கக் கூடாதென்று அவ தூக்கிப் போட்டுட்டா, நான் ஒரு நாள் உயிர் வாழ முடியும்? இத்தனை பாடுபட்ட அம்மாவை வெங்கல பொம்மையெல்லாம் எடுத்துண்டு வெளியே போன்னு சொல்விடுவியா? உனக்கும் என் பொண்டாட்டிக்கும் சரிப்படலை, நீ நகர்ந்துக்கோ என்று துரத்தி விடுவாயா?

ஒரு வகையில் நிம்மதி. ஒன்னரையங்குல உயர ராமர், சீதை, லட்சுமணர், அனுமார் பொம்மைகளை மடியில் கட்டிக் கொண்டு ஊர் ஊராய்க் கோவில் கோவிலாய்ப் போகலாம்.

ஆனால், பெண் பிள்ளை நாற்பது வயசுக்காரி போக முடியுமா? ஒற்றைத் துணியுடன் ஊர் சுற்ற ஆணால் முடியும். பெண்ணால் முடியுமா?

எங்கே போவது? ஆசிரமம் மாதிரி இடத்துக்கா? அங்கு என்ன பிடுங்கல் இருக்குமோ? பிள்ளையை விட்டால் வேறு வழியில்லையா? வினோலியா கையால்தான் இனி சோறு திங்க முடியுமா?

என்ன வேதனை இது.

துக்கம் ஏற்படும் முன்பே துக்கம் நடந்ததாய்க் கற்பனை செய்து, துக்கத்தில் மனசு தவித்தது. கண்ணீர் பொங்கியது.

யாருமே இல்லை என்கிற அநாதை உணர்வு மனசை அலைக்கழித்தது.

● ● ●

''என்னடி இது? வேற யாரோடயோ இருக்காராமே? உன் கூட இல்லையாமே, என்ன இது? ஏன் எனக்கு முன்னாலேயே சொல்லலை இதை?''

அப்பா கத்தினார்.

சொன்னால் என்ன செய்ய முடியும்? எட்டு வேலி பட்டாமணியத்துக்குச் சென்னைப் பட்டணத்து எழுபது கிரவுண்ட் ஆளை மடக்கத் துணிவு உண்டா? வெட்டி வீசிப்புடுவேன் என்று கும்பகோணத்தில் கத்தலாம். கூவம் நதிக்கரையில் செல்லுபடியாகுமா?

எனக்கு விவசாயத்தைக் கட்டிண்டு மாரடிக்க முடியலை. பட்டணத்தோட வந்துடலாமான்னு பார்க்கறேன். மாப்பிள்ளை இருந்து எனக்கு ஒரு வகை செய்யணும். கெஞ்சி, கொஞ்சிப் பேசிய மாப்பிள்ளையிடம் இன்று எதிர்க்க முடியுமா?

''பேங்க்ல காசப் போட்டுட்டுப் பேசாத வட்டில சாப்பிட்டுண்டுருக்கலாம். பட்டணத்துல போட்டால் திரும்பி வரும்னு எந்த உத்திரவாதமும் இல்லை. அதும் தவிர இந்தக் காசு போட்டுக் காசு பார்க்கறதுக்குச் சாமர்த்தியம் வேணும். திண்ணைல உட்கார்ந்து விவசாயம் பண்ணா மாதிரி இங்க முடியாது.''

''உங்களுக்கு மட்டும் வருதே அது எப்படி?''

பேரிங் தொழிற்சாலைக்கு மாமனாரைக் கூட்டிக் கொண்டு போய் இடம் இடமாய் சிக்கல்களைச் சோல்ல அப்பாவுக்குத் தலை சுற்றி விட்டது.

''ப்ராபிட் வருமா?''



''வருது ஏதோ.''

''எத்தனை தெரிஞ்சுக்கலாமா?''

''ஏழு கோடி டர்ன் ஓவர்.''

''லாபம்.''

''ஒரு கோடி. மறுபடி காசு போடணும். காசா தெரியாது...இருப்பா, சரக்கா, கட்டிடமா நிக்கும். போன வருஷம் கிரவுண்ட் எண்பதாயிரம்னு வாங்கினேன். இந்த வருஷம் இரண்டு லட்சம் விலை. நான் வாங்கினதும் விலையேறிடுத்து.''

''கிரவுண்ட் வாங்கி...''

''இன்னொரு பேரிங் கம்பெனி.''

''மறுபடி சிக்கல் வருமே?''

''வரும். தீர்க்கறதுக்கு நான் இருக்கேனே.''

''பகவானே தூங்க முடியறதோ?''

''குடிக்கறது எதுக்கு?''

''உடம்பு ஸ்பாயிலாயிடுமே.''

''தூங்கலைன்னா என்ன ஆகும்?''

''கஷ்டம்தான். பேசாம...''

''விவசாயம் பண்ணச் சொல்றேளா? பூந்தமல்லில பண்ணை இருக்கு. அதுவும் பண்றேன்.''

மாப்பிள்ளை சாமர்த்தியத்துக்கு உறை போடக் கூடத் தன் பணம், தன் சமர்த்து போதாது என்று தன்றாய்த் தெரிந்த அப்பா என்ன கத்த முடியும்? எதை மறிக்க முடியும்?

● ● ●

''நான் வேணா சரஸ்வதிய ஊருக்குக் கூட்டிண்டு போய்ட்டமா?'' என்றுதான் பேச்சுத் துவங்கினார்.

''ஏன்?'' அதட்டல் எதிர்ப்பக்கத்திலிருந்து வந்தது.

''உங்களுக்கு இடைஞ்சல். சுமை, பாரம்.''

''நான் சொன்னேனா?''

''அதில்லை.''

''நான் சொன்னேனா?''

''இல்லை.''

''சரஸ்வதி சொன்னாளா?''

''இல்லை. எனக்குத் தோணித்து.''

''சரி, உங்க இஷ்டம். குழந்தைகளையும் கூட்டிண்டு போறேளா?''

''உங்க அனுமதியோட...''

''எனக்குச் சம்மதம். இது எங்கப்பா உங்களோட பேசி எனக்குப் பண்ணி வச்ச கல்யாணம். எனக்கு என்னைப் புரியறதுக்கு முன்னாடி நடந்த விஷயம்.

''நானா தள்ளலை. என் சௌகரியத்தை எனக்கு இப்ப தேவையானதைத் தேடிண்டேன். இது அவளுக்கு நஷ்டம்னு உங்களுக்கு தோணித்தா...நீங்க கூட்டிண்டு போகலாம். இருக்கறதார்த்தாலும் இருக்கலாம்.''

''இருக்கறது மரியாதையா படலையே.''

''என்ன...கந்தைத் துணியும் மோர் சாதமுமா இருக்க? உங்க பொண்ணு...பசங்களுக்கு உடுத்த துணியில்லாதயா அலையறது. காசு பணம் தராதயா வச்சுருக்கேன்?''

''என்கிட்டயும் காசு இருக்கு.''



''ம்ம்''

''சட்டைத்துணி தரமுடியும். புருஷனைத் தர முடியாது. அது ஒரு தடவதான்.சபைல நிக்க முடியாது. அதுவும் மனுஷானுச்குத் கேவலதான்.''

''சரி.''

''உங்களுக்கு என் மேல என் பொண் மேல அபிமானம் குறைஞ்சு போச்சு.''

''என்ன செய்யணும்ங்கறேள் நீங்க. சொல்லுங்கோ. இங்க எதுவும் மாறாது. என் இஷ்டப்படிதான் நடக்கும். யாரும் தடுக்க முடியாது.''

''அடடா, தடுக்கறது பற்றிப் பேசலேயில்லை. நான் யார் தடுக்கறதுக்கு? என்ன ஓய் கேள்விப்பட்டேன்னு அடுத்த ஊர் பட்டாமணி கேட்டா நான், பதில் சொல்லணுமான்னு.''

''பொண்ணைக் கிராமத்துக்குக் கூட்டிண்டு வந்துட்டேன்னு பெருமையா சொல்லிடுங்கோ.''

''ஒரு வகைல அதும் பெருமைதான். காக்கா எச்சமிட்டுட்டா துடைச்சுக்காதயா போக முடியும்.''

''தலைக்கே குளிக்கலாம். தப்பில்லை.''

''குளிச்சுடறேன்.,'

பெரிய மனிதர்களல்லவா பூடகமாகவே பேசிக் கொண்டார்கள். நீ இல்லாட்டி நான் செத்துருவேனா என்பதாய் எதிர்த்துக் கொண்டார்கள்.

● ● ●

''சரி ஓய் கூட்டிண்டு வந்துட்டீர். முப்பது கோடி சொத்துல உம்ம பொண்ணுக்கும் பேரன்களுக்கும் பங்குண்டே. இங்க அதுகள் சாணி வாசனைல வாழ

ணும்னு தலையெழுத்தா? ஒரு லீகல் நோட்டீஸ் தட்டி விடும். வரது வரட்டும்,''

கேஸ் போடலாமா, போடலாமா என்று கேட்டு வருடம் கழித்துச் சென்னை வந்து விவாகரத்துக் கேட்டு வந்தபிறகு ஜீவனாம்சத்துக்குத் தாக்கல் செய்த வேளை நெஞ்சடைப்பில் செத்துப்போனார்.

அனிதா மேத்யூஸ்தான் இதை வாங்கியே தீருவேன் என்று கங்கணம் கட்டிக் கொண்டாள். கும்பகோணத்தில் உள்ள அண்ணாவும் மன்னியும் உன்னுது இது, என்னுது இது என்று பிரித்துப் பேச ஆரம்பித்தார்கள்.

எதுக்கு கொடைக்கானல் பள்ளிக்கூடம்? கும்பகோணத்திலேயே சேர்த்துரு என்றார்கள். ''எங்க குழந்தைகள் ஏங்கறது. இந்த படிப்பு இவளையும் அவளையும் வித்தியாசப்படுத்தறது.'' என்றார்கள்.

அவள் பிரிந்து சென்னை வந்தாள். இரண்டு பெட்ரூம் ப்ளாட் விலைக்கு வாங்கிக் கொண்டாள். ராமச்சந்திரமூர்த்தியே துணையென்று குடித்தனம் துவங்கினான்.

ஏதாவது வேணுமா? உங்க கதை கேட்டேன். ஏதாவது வேணுமா? அடுத்த பிளாட் கிழவர் வந்து வந்து போவார்.

''எனக்கு உன் தனிமை பார்க்கப் பாவமா இருக்கு. நானும் தனிதான்,'' என்றார்.

''உன்னைப்போய் ஒருத்தன் தள்ளி வச்சானே. இந்தக் காப்பி குடிக்கிறபோது என் வொய்ப் ஞாபகம் வருது. அவ செத்தபிறகு நான் குடிக்கிற நல்ல காப்பி இது. சொல்லு நான் துணையா இருக்கட்டுமா?''

உடம்பே நடுங்கி உதறிற்று. இனிமே வர வேண்டாம் என்று திட்டவட்டமாய்த் துரத்தினாள்.



ராமா என்னை ஏன் இன்னும் வதைக்கிறே என்று அழுதாள். ராமனுக்குக் காது கேட்டுவிட்டதா, தள்ளிப் போ என்றுசீறியது கிழவரைப்பாதித்ததா தெரியவில்லை.

''பெரிய பிள்ளை, ஜாம்ஷெட் பூர்ல இருக்கான். அங்க கொஞ்சநாள் இருக்கப் போறேன்.'' போனவர் வரலேயில்லை.

● ● ●

ராமர் இருக்கறவரைக்கும் எந்தத் துன்பமும் வராது என்கிற நம்பிக்கை அதிகமாயிற்று. எல்லா உதவிக்கும் ராமரைத் தேடுவது அதிகரித்தது.

இப்பவும் இந்தப்பிள்ளை சுந்தரத்தையும், ராமன் தான் வழிக்குக் கொண்டு வர வேண்டும். நானாய் எதிர்த்து அழுவதைவிட ராமா என் பிள்ளையை நல்ல திசைக்குக் கொண்டுவா என்று வேண்டலாம்.

என்ன நடந்துவிட்டது. எவளுக்கோ முத்தம் கொடுத்தான். வயசு. வயசு படுத்தற பாடு.

போகட்டும். கொலைக் குத்தம் பண்ணா மாதிரி புலம்பினா முடிஞ்சுதா? என்ன, ஏதுன்னு விசாரிப்போம்.

அவதான் முக்கியம்னாலும் சரி. ராமர் பேர்ல பாரத்தைப் போட்டுட்டு இருப்போம். இத்தனை நாள் உள்ளங் கைல வச்சு தாங்கின சாமி, எனக்குத்தெரியாதுன்னு விழவிட்டுறுவாரா? புள்ளையா தாங்கினான்? எதுக்கு அழுகை. கண்ணைத்துடை.

● ● ●

''வந்துட்டியா சுந்தரம்?''

''யெஸ்மா.'' அவன் குரலில் சந்தோஷம் இருந்தது. பெண் பிள்ளையை முத்தமிட்ட சந்தோஷமா இது?

''காப்பியா, சாப்பாடா?''

''காப்பி.''

''லேட்டாயிடுத்தே.''

''அரைமணில சாப்பிடறேன். இப்ப காப்பி கொடு. வெந்நீர் போடும்மா. குளிக்கணும்.''

''எதுக்குடா?''

''கசகசன்னு இருக்கு?''

''என்னா சொல்றா?''

''யார்?''

''அனிதா மேத்யூஸ்.''

''நாலு நாள்ல திர்ப்பாயிடும்ங்கறா. எண்ணி நாலே, நாள்.''

''என்னவாகுமாம்.''

''அப்பா வீடு நமக்குதான்.''

''அத்தனை பெரிசு எதுக்கு?''

''வித்துருவேன். வித்து அப்படியே பிஸினஸ்ல போடுவேன்.''

''நிச்சயமா நம்ம பக்கம் சாதகமாகுமா?''

''யெஸ்.''

''அனிதா சொன்னாளா?''

''யெஸ்''

''அதான் இத்தனை நாழியா?''



''அப்பமே வந்துட்டேன். வினோலியாகூட தெரு முனைல பேசிண்டுருந்தேன்.''

''தெருமுனைல பேசுவானேன். இங்க கூட்டிண்டு வரது?''

''அவளுக்கு அடிக்கடி இங்க வரது கஷ்டமாயிருக்காம்.''

''என்ன சங்கடம் நம்ம வீட்ல?'' சாதாரணமாய் சரஸ்வதி கேட்க.

ஹேமா சட்டென்று இடையே புகுந்து சீறினாள்.

''இங்க முத்தம் கொடுக்க முடியுமா? அதான் அங்கியே நின்னுட்டா''

பளிச்சென்று சுந்தரம் முகம் மாறினான், தங்கையைக் கூர்ந்து நோக்கினான்,

''யெஸ் அதுவும் ஒரு காரணம்''

நிதானமாய்ச் சொன்னான்.

பிள்ளையின் நிதானம் சரஸ்வதிக்கு அவள் புருஷனை நினைவூட்டியது.

20249
11 3736362

ஆணோ பொண்ணோ மனதில் இருப்பதை அடுத்தவரிடம் வாய் வார்த்தையாய், சொல்வது நல்லதில்லையா? எனக்கு இது பிடிக்கும். என்னை இந்த விதமாய்ப் புரிந்து கொள் என்பது உயர்வு இல்லையா?

''உங்களுக்கு என்ன மாதிரி சமையல் பிடிக்கும்''

''ஏன்?''

''பண்ணிப் போடத்தான்.''

''நீ கண்டுபிடி. அதைவிட உனக்கு என்ன வேலை?'

''ஏன்? இது பிடிக்கும்னு சொன்னா என்ன தப்பு?''

''உன் சமையல் கடன் எழவா ஆய்டும். உங்களுக்குப் புடிக்கும்னு சொன்னதால கத்திரிக்கா கூட்டுன்னு வாரி வாரி மரியாதையில்லாத ராப்பிச்சைக்கு வழிச்சுப் போடறா மாதிரி போடுவே.''

''ஏன் இப்படின்னு கேட்டா, நீங்கதானே கத்திரிக்கா கூட்டு வேணும்ன்னேன்னு பதில் சொல்வே.''

''இல்லை...கூட்டு போட்டுட்டு தின்னுன்னு நகர்ந்துடுவே.''

''சோறு போட்டுட்டு, நான் எப்படி எதைச் சாப்பிடறேன்னு கவனி. அதைவிட என்ன வேலை உனக்கு?''

''வாயத் திறந்து சொல்லிட்டா என்னைக் கவனிக்கிற அக்கறை போய்டும். என்னை கவனிக்காத பெண்டாட்டி எனக்கு எதுக்கு?''

''நான் எப்படிக் கண்டுபிடிக்கறது? உங்களுக்குப் பிடிச்சது பிடிக்காதது எதுன்னு உத்துப் பார்த்தா தெரியுமா?''

''எனக்குத் தெரியாது அவஸ்தைப்படு. கண்டுபிடி''

''ஏன் இப்படி பிரியமே இல்லாத, ஸ்நேகமே இல்லாம இருக்கேன்?''

''என்னால மக்கு பொம்மனாட்டியோட ஸ்நேகமா இருக்க முடியாது. என்கூட ஸ்நேகிதமா இருக்க ஒரு தகுதி வேண்டாமா?''

''அப்ப ஏன் கல்யாணம் பண்ணிண்டேள்?''



''படுத்துக்க ஒரு பொட்டைநாய் வேணும். காசு கொடுத்தா கிடைக்கும். நோய் வந்துருமோன்னு பயம். ஸோ, எனக்குன்னு ஒரு நாய்...புரியறதா ஸ்பஷெலி மேட் ஃபார் மீ. மேட் ஃபார் ஈச் அதர் இல்லை· புரியறதா. போ போய் வேலையைக் கவனி.''

''புருஷன் பேச்சுக்குக் கலவரமானாள். வயிறு அடிக்கடி கலங்கியது. உணவு வயிற்றில தங்காது இம்சை செய்தது. உடம்பு முழுக்க நிரந்தரமாய் ஒரு பதறல் இருந்தது.

நாலு நாட்கள் கழித்துக் கேட்டாள்.

''நான் புத்திசாலியாக இருக்க என்ன செய்யணும்?''

''தினம் என் ஷூவை துடைச்சு வைக்கணும். அடி மண்ணை நெத்தில இட்டுக்கணும். முடியுமா உன்னால? செய்தா, அடுத்த ஜென்மத்திலியாவது புத்திசாலியா ஆகலாம்,''

இரண்டு நாட்கள் இதை எப்படிச் செய்வது என்று தயக்கமாய் இருந்தது. மூன்றாம் நாள், செய்தால் என்ன என்று தோன்றியது.

செய்தாள். இடைவிடாது செய்தாள்.

அவள் செய்வது பார்த்து புருஷன் சிரித்தான்.

''நீ மக்குங்கறதுக்கு இதுதான் சரியான உதாரணம். உன்னால புத்திசாலியா மாறவே முடியாதுங்கறதுக்கு இதுதான் சாட்சி.

''உண்மையா என் பேச்சுக்கு உனக்குக் கோவம் வந்துருக்கணும்.''

''போடா நாயே. நான் எதுக்கு உன் ஷூவைத் துடைக்கணும்னு ஆத்திரம் வந்திருக்கணும்'''

''உனக்கு ரோசம் இல்லை. ரோசம் வராதபோது புத்தி வேலை செய்யாது. எதிர்க்க எதிர்க்கத்தான் புத்தி சூட்சமமாகும்னு உனக்குப் புரியலை.''

''உன்னைப் பார்த்தா பாவமா இருக்கு. உன்னைப் போய் கல்யாணம் பண்ணிண்டேனேன்னு வெட்கமா இருக்கு.''

''இங்க வா. இந்த லெட்டர் பார். இங்லீஷ் படிக்கத் தெரியுமில்லையா உனக்கு?''

''என்னை வெட்டிக் கொன்னுடுவேன்னு டைப் பண்ணி கடுதாசி போட்டுருக்கான் எவனோ ஒருத்தன். தொழிலாளர் விரோதின்னு டைட்டில் கொடுத்துருக் கான். படி.''

''ஐயோ''

''ஐயோன்னா முடிஞ்சு போச்சா. இதுதான் உற்சாகம் எனக்கு. இது எந்த டைப்ரைட்டர், யார் எழுதினது கண்டு பிடிச்சுட்டேன். என் கம்பெனி டைப் ரைட்டரிலேயே எனக்கு மிரட்டல் லெட்டர் டைப் பண்ற வனை எவன்னு தெரிஞ்சுகிட்டேன். இனி என்ன பண்ணனும்...''

''போலீஸ்ல சொல்லி...''

''இல்லை.''

''வேற எப்படி?''

''இருபதாயிரம் காஷ், இரண்டு முழு பாட்டில் விஸ்கி, கேக்,பிஸ்கெட் அவன் வீட்டுக்கு அனுப்பினேன்.''

''குடிக்காதவனைக் குடிக்க வைப்பேன். குடி கெடுப் பேன். என்கிட்டே லஞ்சம் வாங்கினான்னு அவன் ஆட்கள்கிட்ட ரகஸியமா பரப்புவேன். அவனுங்களே வெட்டிச் சாய்ப்பானுங்க''



''இந்த லெட்டர் வந்ததும் எவ்வளவு சுறுசுறுப்பா ஆச்சு தெரியுமா புத்தி. என்னைப் புரியறதா உனக்கு?''

''பயமா இருக்கு.''

''எதுக்கு?''

''ஏதாவது ஆயிடுத்துன்னா?''

''சாவுக்குப் பயப்படறியா? தடுக்கி விழுந்தாகூட சாவு வரும். மேல சுத்தற ஃபேன் கழண்டு தலைல விழுந்தா சாவு வரும். நிச்சயம் வரும். அது வரும்போது வரட்டும். அதையே நினைச்சு தினம் தினம் சாகக்கூடாது புரியறதா?''

''பயமே இல்லையா?''

''பயமும் சாவும் ஒரே மாதிரி விஷயம். எல்லாப் பயத் துக்கும் அடியில மரணம்தான் இருக்கும்.''

''நீங்க பாவம்.''

''ஏன்?''

''நான் சரியே இல்லை. உங்களுக்கு.''

''தேங்க் யூ. முதன் முதலா ஒரு விஷயம் புரிஞ்சிருக்கு. இதைக் கொண்டாட வேண்டாமா? சாயந்திரம் ரெடியா இரு. கிளப்புக்குக் கூட்டிண்டு போறேன்.''

● ● ●

குடிகாரக் கும்பல். அவன் உள்ளே நுழைய அவனை சுற்றிச் சுற்றி எங்கு போனாலும் கும்பல்.

''முத முதலா லேடிய கூட்டிக்கிட்டு வந்திருக்கே. எதுனா பெரிய தொகை டொனேட் பண்ணு தோழா. லேடி பேர்ல பண்ணு.''

புத்தி பேதலித்த குழந்தைகளுக்காக தன் மனைவி பெயரில் ஐம்பதாயிரம் கிளப் மூலம் நன்கொடை தருவதாய் அறிவித்தான்.

பலர் வியந்து பொறாமைப்படுவது தெரிந்தது.

கிளப் காசு கேட்டபோது முதல் தவணையாய் பத்தாயிரம் கொடுத்தான். இன்கம்டாக்ஸ் பிரசினை என்றான். மீதி காசு தரவேயில்லை. கடைசி வரையும்.

''இன்னிக்கு எனக்கு கிளப்புலேர்ந்து ஃபோன் பண்ணினா. மீதி காசு கேட்டு, ''கிடையாது'ன்னு சொல்லிடு.''

''எப்படி வார்த்தையிலையா?''

''வார்த்தைதானே, பத்திரமா கொடுத்தேன்?''

அவனைப் புரிந்து கொள்ளவே முடியவில்லை. அவன் பேச்சை, பொய்யை, கோபத்தை எதுவுமே புரிந்து கொள்ள முடியவில்லை. கடைசிவரை புரியாமலேயே விவாக ரத்து கிடைத்தது.

● ● ●

அதேவிதமாய் பிள்ளையும் புரியாதவனாய், புதிராய், உள்ளே இருப்பதை வெளியே சொல்ல மறுக்கிற திமிராய், அகம்பாவியாய், நான் வேறு நீ வேறு என்கிற அலட்சியமாய் இருப்பது கவலை கொடுத்தது. கவலை, கோபம் உண்டு பண்ணிற்று.

என் புருஷனுக்கு எதிரே என்னால் கோபப்பட முடியவில்லை. என்னிடம் அவனுக்கு இணையாய் மாற முடியாத குறை இருந்தது. அவனுக்கு உபயோகமில்லாதவள் என்கிற வெட்கம் இருந்தது.

'உனக்கும் நான் உபயோகமில்லாதவள் என்று



நினைக்கிறாயா? அப்பன் புறக்கணித்த உன்னை, நான் வளர்க்கப்பாடுபட்டது தெய்வமே அறியும்.

'போதும் வாழ்க்கை என்று சுருக்கிட்டுச் சாகாது சகலமும் சகித்து வாழ்ந்தது உனக்காக. உன் படிப்புக்கும், உன் படிப்புக்கான பணத்துக்கும் நான் நாய்போல் அலைந்தேனேடா.'

உள்ளே சீற்றம் பொங்கியது.

ஓர் உணர்ச்சி வேகத்தில் தவறு செய்து விட்டேன் என்றால், 'சரி, போ' என்று விட்டுவிடலாம். ஆமாம். அப்படித்தான் என்ன அதனால், என்று உடன் பிறந்தவளிடமே பேசுவது அயோக்கியத்தனம். வயசுப் பெண்ணின் மனநிலைஅறியாது என் போக்கில் போவேன் என்பது நிர்மூடம்.

''என்னடா நினைச்சுண்டுருக்கே உன் மனசுல? என்ன நினைப்புல பேசற நீ?'' சரஸ்வதி சீறினாள்.

''உன் தங்கைக்குக் கல்யாணம் கார்த்தி நடக்க வேண்டாமா? உனக்கு அதுல பொறுப்பு இல்லை? இப்படி கிறிஸ்துவப் பெண்ணோட தெருவுல முத்தம் கொடுத்துண்டு இருந்தா உன்னை மதிச்சாவது யாராவது பேசுவாளா? பெண் கேட்பாளா? நீ கல்யாணம் பண்ணிக் கிழிக்க வேண்டாம். என்கிட்ட ஒரு மரியாதை வேண்டாம்? ஆமாம். அப்படித்தாங்கறியே?''

''வினோலியா கிறிஸ்டியன். அதுதான் தப்பா? பிராமினா இருந்தா சரியா?''

''முட்டாள் ஊர் மரியாதை வேண்டாம்?''

''என்ன கெட்டுப்போச்சு இப்ப. அவளை நான் லவ் பண்றேன். அவ என்னை லவ் பண்றா.''

''அதுக்கா தினம் போனே, அனிதா மேத்யூஸ் வீட்டுக்கு?''

''கேஸ்தான். அதுல பழக்கம் வந்தது. ஒருத்தரை ஒருத்தர் புரிஞ்சுகண்டோம்.''

''நா இப்ப சொல்றேம்மா. அனிதாவுக்கு இனிமே வேலை பார்க்க முடியாது. பொண்ணைக் காட்டி இவனை இழுத்துட்டா போகட்டும். எங்கியாவது போகட்டும். நடுத்தெருவில் அசிங்கம் பண்ணாம இருந்தா சரி.''

''நீ என்னடி ஒழுங்கு?''

''ஏன், என் ஒழுங்குக்கு என்ன குறைச்சல்?''

''நீயும்தான் சாயந்திரம் ஆறு மணிக்கு பார்ட்டின்னு போய் ஒன்பதுக்கு வரே, பார்ட்டிக்குப் போனியா, வேற எங்கேயாவது போனியா?''

''பல்லை உடைப்பேன் ராஸ்கல்.'' ஹேமா சீறினாள்.

''உன்மேல் தப்பை வச்சுண்டு, என்னை அனாவஸ்யமா பேசாதே.''

''ஏம்மா, இவகூட நான் பேச இஷ்டப்படலை. என்னைக் கண்டிக்க இவ ஆள் இல்லை. நீ கேளு. பதில் சொல்றேன். நீ கேட்காத போனாலும் நான் இது பத்திப் பேசியிருப்பேன்.''

''அனிதா மேத்யூஸ் இந்த கேஸுக்கு இதுவரைக்கும் நம்மகிட்ட எத்தனை ஃபீஸ் வாங்கியிருக்காங்க?''

''நானூறு ரூபா ஒரு தடவ கொடுத்தேன்.''

''ஆ...டைவர்ஸ் கேஸுக்கு. இந்த ஜீவனாம்ஸ கேஸுக்கு எத்தனை வாங்கினாங்க?''

''தெரியலையே.''



''ஒரு பைசா இல்லை.''

''அதுக்காக அவ பொண்ணை உன் தலைல கட்டப் போறாளா?''

''அவ கட்டலை. நான் எடுத்துண்டேன்.''

''அம்மாகிட்ட ஒரு வார்த்தை இதுபத்தி இதுவரைக்கும் சொன்னியா, கண்டுபிடிச்ச பிறகு நியாயம் பேசறியே?''

''என்ன கண்டுபிடிச்சே? என்ன ஒளிச்சு வச்சோம்? ஒளிக்கறவன் ஏன் வீட்டுவாசலுக்கு அவளைக் கூட்டிண்டு வரேன்?''

''நாளைக்குக் கேஸ் கோவிந்தா, அப்ப பொண்ணை என்ன பண்ணுவே?'' ஹேமா இடக்காகக் கேட்டாள்.

''நாளைக்கு முப்பத்தியாறு லட்ச ரூபா சொத்து வந்தது. அப்ப என்ன பண்ணட்டும்?''

''ஒரு பர்ஸென்ட், இரண்டு பர்ஸென்ட் விசிறிப் போடு. காசுக்குத்தானே அனிதா மேத்யூஸ் வக்கீல் வேலை பண்ணினா. இல்லை, வேற ஏதாவது ஐடியாவா?''

''ஹேமா. தரக்குறைவா பேசாதே.உன் வயசு என்ன? அனிதா வயசு என்ன?''

''அனிதா மேத்யூஸுக்குத் தெரியுமாடா, நீ வினோவியாவோட பழகறது?'' சரஸ்வதி கேட்டாள்.

''தெரியும்.''

''கேடு கெட்டதுகள்.'' ஹேமா கத்தினாள்.

அறைஞ்சு பல்லை உதிர்த்துடுவேன் ஹேமா. உனக்கு கல்யாணம் பண்ணாம,நான் ஓடிப் போய்டுவேனோன்னு பயப்படறியா? உன் கல்யாணம், கருமாதி எல்லாம் முடிச்சுட்டுப் போறேன். சரியா?''

''தேவையில்லை. என்னைப் பத்தி எந்த அக்கறையும் நீ படவேண்டிய அவசியமில்லை. அம்மா வயித்தெறிச்சலைக் கொட்டிக்காத இரு. போறும்.''

''நீ உனக்காகப் பேசு. அம்மா, அவளுக்காகப் பேசுவா. உங்களுக்குப் பதில் சொல்ல எனக்குத் தெரியும்.''

''என்னைச் சமாதானப்படுத்திடலாம்னு இப்படி பண்றியா சுந்தரம்?''

''இல்லம்மா, வேற வழியில்லாத பண்றேன்.''

''என்ன அர்த்தம் இதுக்கு?''

''அனிதா மேத்யூஸ் தவிர வேற எந்த வக்கிலும் இந்தக் கேஸை நடத்தியிருக்க முடியாது. அப்பா காசு கொடுத்து இந்தக் கேஸைக் கையலம்பிடுன்னு சொன்னபோது சிரிச்சுண்டே அனிதா அதை வெளிய விசிறிப் போட்டது உனக்குத் தெரியும்.

''முப்பத்தியாறு லட்சம் சொத்து வந்தா. அதுல பாதி எனக்குன்னுதான் எந்த வக்கீலும் பேரம் பேசுவான். ஸ்டாம்ப் பேப்பர் காசுகூட நம்மகிட்ட வாங்காத அனிதா நம்மிடம் போராடினதுக்குக் காரணம்...''

''வினோலியாவ மருமகளா இந்த வீடு ஏத்துக்கணுமா?''

''இல்லை. அனிதாவும் அனாதை. நம்ம மாதிரி அனாதை. உறவே இல்லாத ஜென்மம். ஒரு வேளை நான் நடுவே செத்துப் போய்ட்டா எங்கே புதைக்கணும்னு இதில எழுதி வச்சுருக்கேன் சுந்தரம். சிரமம் பார்க்காத உதவி செய்யுன்னு சொல்லியிருக்கா.''

''ஏன், என்ன கேடு அவளுக்கு?''

''என்லார்ஜ்ட் ஹார்ட்.''

''எனக்குப் பிடிக்கலை இந்தப் பேரம்.''



''வேற வழி என்ன ஹேமா? வேற யாரை நம்பறது? யார் கிட்ட போறது? யாருக்கும் நம்மைப் பத்தி அக்கறை கிடையாது. கேஸ் ஜெயிக்குமா? ஜெயிச்சா காசு வருமா?''

''ஜீவனாம்ஸம் ஜீரோன்னு தீர்ப்பாச்சுன்னா?''

''ஒன்று செய். தீர்ப்பு வரைக்கும் இதுபத்திப் பேசாதே.''

''அதுவரைக்கும் நீயும் பேசக்கூடாது.''

''யார்கூட?''

''வினோலியா கூட.''

சுந்தரம் சிரித்தான்.

''சரி,'' என்றான்.

# 12

மிகப் பெரிய மலை அது.

வளைந்து வளைந்து ஓர் ஒற்றையடிப் பாதை மலை உச்சிக்குப் போகிறது.

சரஸ்வதி அந்தப் பாதையில் வெகுநாளாய் நடந்து கொண்டிருக்கிறாள்.

அவள் உடைகள் கிழிந்திருக்கின்றன. குறிப்பாய் ரவிக்கை இரண்டு கைகளுக்கு அடியிலும் பெரிதாய்க் கிழிந்து பார்க்கும் போதெல்லாம் ஓர் அவமானத்தைத் தருகிறது.

வேறு யாரும் மலையில் எதிர்ப்படவில்லை. வேறு யாரும், 'என்ன, ரவிக்கை கிழிசலா?' என்று கேட்க

வில்லை. இருந்தாலும் எவரேனும் எதிர்ப்பட்டுக் கேட்டு விடுவார்களோ என்கிற பயம்.

புடவையைப் போர்த்திக் கொண்டு காற்று இழுத்தாலும் விடாது தலைப்பு பிடித்துக் கொண்டு மலையில் நடக்கிறாள்.

மலைப் பாதையில் ஒரு வளைவு. திரும்ப முயலும் போது யாரோ மூச்சு விடுகிற சப்தம் கேட்கிறது.

பயந்து நிற்கிறாள். மெல்ல எட்டிப் பார்க்கிறாள்.

யாருமில்லை. இருப்பினும் மூச்சு விடுகிற சப்தம் கேட்டுக் கொண்டே இருக்கிறது.

யார் அது? என்ன ஆயிற்று?

இப்படி மூச்சு விட வேண்டுமென்றால் ஏதோ ஆபத்தில் இருக்கிறார்கள் என்றல்லவா அர்த்தம்? போய்த் தேடலாமா? தேடி உதவலாமா? ரவிக்கை கிழிந்திருக்கிறதே...உதவி செய்யும் போது உடம்பு தெரியுமே?

தெரியட்டும். என்ன செய்வது...யாரோ என்னை மாதிரி மலையேறிக் களைத்துப் போய் சுருண்டு கிடக்கிறார்கள். அவர்கள் கண்ணில் என் உடம்பு தெரிந்தால் என்ன?

வளைவில் விரைவாய் நடக்க இடது பக்கப் புதரிலிருந்து சப்தம் பெரிதாய் வந்தது. புதர் விலக்கி முன்னேற முட்களுக்கு நடுவே ஒரு பறவை.

பறவையல்ல கருடன்.

ஐயோ...கருடன் கூட இல்லை. ஜடாயு. ராமாயணத்தில் வருமே அந்த ஜாடயு.

ஜடாயு, செத்துப் போகவில்லையா? ராவணன் சிறகுகளை வெட்டிப் போட்டும் இறக்கவில்லையா? அடப் பாவமே, என்ன கோரம் இது...ஜாடயு மிகப்பெரிய



பறவை இல்லையே...ஒரு காக்கை அளவில் கழுத்து வெள்ளையாய் சுருண்டு சுருங்கிப் போய் என்ன வேதனை இது.

ஓடிப்போய் முட்கள் விலக்கி எடுத்து புடவைத் தலைப்பில் சுருட்டிப் பாதைக்கு வந்தாள். பாறையிலிருந்து கசியும் நீரில் கை நனைத்து உடம்பில் தடவினாள்.

புடவைத் தலைப்பை விலக்கி அப்படியே சொட்டச் சொட்ட நனைத்து கருடன் உடம்பில் சுற்றினாள்.

குளிரில் பறவை நடுங்கிற்று. உதறி உதறிப் போட்டது. கையிலிருந்து துள்ளியது.

ஈரத்தை விலக்கி விட்டு ஈரமில்லாத புடவைப் பகுதியில் சுற்றி நெஞ்சோடு பறவையை இறுக்கிக் கொண்டாள்.

உடம்புச் சூடு பறவைக்கு ஏறியது. இன்னும் நெஞ்சுடன் இறுக்கிக் கொள்ள அவளின் உடம்பு அனலில் பறவை உலரத் துவங்கியது. சிறகுகள் படபடவென்று உதறியது. விழிகளை உருட்டி அவளைப் பார்த்தது.

''இப்ப பரவாயில்லையா ராமா,'' என்று பறவையைப் பார்த்துக் கேட்டாள். அது ஜடாயு என்று தெரியும். ஆயினும் அதுவும் ராமனின் அம்சம். ராமா என்று கூப்பிடுவது பொருத்தம். ராமா ராமா என்று பறவையைத் தடவ பறவை அலகில் புன்னகை தோன்றியது. விழிகளில் வெளிச்சம் மின்னியது.

''ராமா என்னாச்சு உனக்கு? நீ பெரிய்ய பலசாலி ஆச்சே.''

பறவை மறுபடி சிரித்தது. அவள் உள்ளங்கையில் உட்கார்ந்து கொண்டது. சடசடவென்று உதறி எதிர் பக்கப் பாறைக்குப் போயிற்று.

அலகால் உடம்பை நீவிக் கொண்டது. நீவ நீவப் பெரிதாயிற்று. அகலமும் உயரமும் காத்தியும் கூடின. காக்கை மாதிரி இருந்த பறவை கருடன் மாதிரி மாறி, ராஜாளி உயரத்துக்கு வந்து, இன்னும் பெரியதாகி கண் முன்னே மடமடவென வளர்ந்து யானை அளவுக்கு மாறியது.

''நான் ஜடாயு. ரொம்ப சந்தோஷம்?'' என்று நன்றியுடன் பேசியது.

''ராமாயணத்துல வர ஜடாயுவா?''

''ஆமாம்.''

''நமஸ்காரம் பண்றேன்.''

குனிந்து கால்மடக்கி நெற்றி நிலம் பட வணங்கும் போது சட்டென்று மேகம் மாதிரி உடம்பில் நிழல் விழ பறவை அவளைத் தூக்கிக் கொண்டு உயரே பறந்தது.

அவள் இடுப்பில் கால் விரல்கள் சுற்றிக் கொண்டிருந்தன. இது ஜடாயுவா இல்லை யாராவது ராட்சஸனா? பயந்தாள்.

''பயம் வேண்டாம்.'' பறவை சொல்லியது. மேகங்களைக் கிழித்துக் கொண்டு பறந்தது. சிறகுகள் இடைவெளியூடே காற்று அவள் முகத்தில் மோதியது.

மலை உச்சியில் கொண்டு போய் அவளை இறக்கியது அவள் அங்குதான் போகவேண்டும்.

அங்குதான் அவளுக்குத் தெரிந்தவர்கள் இருந்தார்கள் என்று ஓர் எண்ணம் வந்தது. ஆனால் யார் என்று தெரியவில்லை. பெரிய பாறை இடுக்கு வழியே வினோலியா ஓடி வந்தாள்.

''கேஸ் ஜெயிச்சுடுச்சு ஆன்ட்டி.'' என்று கூவினாள். கட்டிக் கொண்டாள்.



''அப்படியா அப்படியா, எத்தனை தரப்போறா?''

''முப்பத்தி ஒன்பது லட்சம் ஆன்ட்டி.''

''என் ராமா,'' வினோலியாவை சரஸ்வதி கட்டிக் கொண்டாள். வினோலியா கூட ராமரின் அம்சம்.

''உங்களுக்குத்தான் சுந்தரம் போன் ட்ரை பண்ணிக்கிட்டு இருக்கு. உள்ளே வாங்களேன்.'' வெள்ளை நிற கவுன் பறக்க அவளை இழுத்துக் கொண்டு ஓடினாள்.

''வினோலியாவோட நமக்குச் சண்டை இல்லையோ? இப்படி அவ இழுத்த இழுப்புக்கு ஓடறோமோ'' என்கிற நினைப்பு உள்ளே வந்தது.

பாறை இடுக்கு வழியே போனபோது அங்கே ஒரு மண்டபத்தில் நிறையப் பேர் இருந்தார்கள். சரஸ்வதி நுழைய கை தட்டினார்கள். தட்டில் பெரிய அன்னாசிப் பழம் வைத்து நீட்டினார்கள்.

''இதுவா முப்பத்தியொம்பது லட்சம்?''

''ஆமாம். இதுதான் அது. இதுக்குள்ளதான் இருக்கு. எடுத்துக்கோ '' என்றார்கள்.

அவள் சுற்றிப் பார்க்க அனிதா மேத்யூஸ் கறுப்பு கவுனில் சிரித்தபடி உட்கார்ந்திருந்தாள்.

''எடுத்துக்கோ'' என்றாள்.

அன்னாசியை எடுத்துக் கொள்ள கனத்தது. இரும்பு மாதிரி கனத்தது.

ஒரு பழம் இவ்வளவு கனமாய் இருக்கும் என்று தெரியவில்லை. தூக்கி பறவையை இறுக்கிக் கொண்டது போல் நெஞ்சில் இறுக்கிக் கொள்ள கனம் தாங்காமல் வளைத்துக் கொள்ள அந்த அன்னாசிப் பழம் நெஞ்சைக் கிறியது. எரிச்சல் ஏற்பட்டது. இருப்பினும் இறுக்கிக் கொண்டாள்.

எங்கு தொட்டாலும் முட்கள் இருந்தன. விரல்களின் இடுக்குகளில் குத்தின.

''சுந்தரம்'' என்று கத்தினாள்.

சுந்தரம் ஓடிவந்து பழம் வாங்கிக் கொண்டான். கோட்டும் சூட்டும் போட்டிருந்தான்.

''கையையக் கிழிக்கிறது' ஜாக்கிரதையடா.''

ஆனால் சுந்தரம் கிளவுஸ் போட்டிருந்தான். ரொம்ப எளிதாய் எடுத்துக் கொண்டான். பழம் கீறின இடத்தைச் சோதித்துப் பார்க்க மார் முழுக்க ரவிக்கை தாண்டி கீறல் கீறலாய் இருந்தது.

சட்டென்று நிமிர்ந்தாள்.

எல்லோரும் அவள் மார்புகளையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

'ஐயோ' என்று வெட்கத்துடன் புடவை தேட கனவு கலைந்து விட்டது.

● ● ●

சரஸ்வதி விழித்துக்கொண்டாள். புடவைத் தலைப்பு தேடினாள். தலைப்பு எங்கேயோ சிக்கிக் கொண்டிருந்தது.

பலம் கொண்ட மட்டும் இழுத்தாள். புடவை தலைப்பு அவள் உடம்புக்கு அடியிலேயே சிக்கிக் கொண்டிருந்தது. அவள் புரள கைக்கு வந்தது.

புடவையைப் போர்த்திய பிறகுதான் கனவுக்கும் நனவுக்கும் உண்டான இடைப்பட்ட இடம் சரஸ்வதிக்குப் புரிந்தது.



கடவுளே என்ன கனவு இது...எல்லாரும் என் மார்பையே பார்க்கிற கனவு. ஏன் அப்படி பார்த்தா...''

அன்னாசி எடுத்தோம் எதனால், எது அன்னாசி? முப்பத்தியொம்பது லட்சம்.

ஏழு முப்பத்தியொம்பது லட்சம்? காம்பன்சேஷன் சொத்து உரிமை, கோர்ட் தீர்ப்பு.

என்னிக்கு? இன்னிக்கு.

ஆயிடுத்தா? இல்லை. இன்னிக்குத் தீர்ப்பு ஆகும். ஆற மாதிரி கனா.''

ஐயோ கனவா இது. அப்ப தீர்ப்பு நல்லபடியா முடியுமா? எங்க பக்கம் ஜெயிக்குமா? முப்பத்தியொம்பது லட்சம் கிடைக்குமா?

கனா பலிக்குமா? பலிச்சால் குழந்தைகள் எதிர்காலம் பத்தின கவலை விட்டது. இது உங்க காசு உன் பாடு என்னை விட்டுடடா.

எப்படி விடுவாங்க? எல்லாரும் உன் மார்பையே பார்ப்பாங்க. ஆமாம். இது என்ன அர்த்தம்? புடவைத் தலைப்பு போர்த்தாம நடுச் சபைல நெஞ்சுக் கீறலைத தடவிண்டு வெட்கம் கெட்டவளா நின்னேனே...

வெட்கம் கெட்டவளா மாறப் போறியோ என்னவோ?

ராமா நானா, வெட்கம்கெட்டவளாவா? யாரையோ பார்த்து ராமான்னேனே.

வினோலிபா? ஆமாம் அதுக்குக் கல்யாணம். அந்த ட்ரஸ்ல வந்தது. வேறு யாரையோ சொன்னேனே.

ஜடாயு. காக்கை அளவு ஜடாயு. இல்லை. பெரிய ஜடாயு. என்னைத் தூக்கி மலை உச்சிக்குக் கொண்டு போன ஜடாயு. ராமர் அம்சம்.

ஆமாம் இதுக்கென்ன அர்த்தம். கடவுள் உன் பக்கம் இருப்பார்ன்னு அர்த்தம். நடந்து நடந்து மலையேற வேண்டாம்ன்னு அர்த்தம். சொடுக்கு நேரத்துல உசரக் கொண்டு போய்—ராமருக்கு வேண்டிய உன்னைக் கொண்டு போய் வச்சுடுவான்னு அர்த்தம்.

ராமா. இது நல்ல கனவா? கெட்ட கனவா?

இரண்டும்தான்.

எப்படி? எல்லா நல்லதுலயும் கெட்டது இருக்கும். இரண்டும் கலந்ததுதான் வாழ்க்கை. எப்படி? முப்பத்தி யொம்பது லட்சம் கிடைக்கறது நல்லதில்லையா? ஆமாம் நல்லது. அது வந்தா பிரசினையும் வராதா? வரும் என்ன செய்யறது? கொடுத்துடு பிள்ளை கிட்ட. கொடுத்துட் டேன். கிளவுஸ் போட்டுண்டு வாங்கிண்டானே. அவன் கெட்டிக்காரன்.

ஆமாம். சுந்தரம் கெட்டிக்காரன். அவன் அப்பா மாதிரியே. ஹேமாவுக்கு ஒண்ணும் இல்லையா? உண்டு. தரலையே. சுந்தரம் தருவான். தரலையே. தரணும். தரலைன்னா அப்பத்தான் பிரசினையே வரும்.

ஐயோ, அதான் சொன்னேன் ஒரு நல்லதுல கெட்டதும் இருக்கும். சுந்தரம் தரமாட்டேம்பானா. தரும்படி செய்.

சரஸ்வதி கனவுக்கு க் கவலையானாள். பின்பக்கம் போனாள். குளித்து அடுப்பு மூட்டி காப்பி போட்டுக் குடித்தாள்.

குழந்தைகளை எழுப்பப் படுக்கையறைக்குப் போனாள். வராண்டாவில் அண்ணனும் தங்கையும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

''இல்லை, சுந்தர். நீ வினோலியாவைத் தாராளமா



கல்யாணம் பண்ணிக்கோ. அவ நல்லவ. எனக்குத் தெரியும்.''

''எதுக்கு தெருவுல நின்னு பேசணும்?''

''உன்ன கூட்டிட்டு வந்தா நீ கத்துவியோன்னு பயம். நான் அம்மாவுக்குக் கூடப் பயப்படலை.உன்னைப் பத்திக் கவலைப்படறேன்.''

''ஏன்?''

''வெல், உனக்குக் கல்யாணம் பண்ணிட்டுத்தான் நான் செய்துக்கணும் நான் முன்னாடி லவ் பண்ண ஆரம் பிச்சுட்டேன். ஒரு வேளை உனக்கு அதுல பொறாமையா?''

''நெவர்.''

''நீ யாரையும் லவ் பண்றியா?''

''இல்லையே. ஏன்?''

''பண்ணினா எனக்குப் பாரம் குறையும்.''

''பண்ணலாம். பயமா இருக்கு.''

ஏன்?''

''யாரையும் எவனையும் நம்ப முடியலை சுந்தரம். அது தவிர...''

''சொல்லு.''

''காசு வந்தா ஏதாவது பிஸினஸ் ஆரம்பிச்சு செட்டி லாயிடணும்.''

''என்ன பிஸினஸ் ஹேமா?''

''சூரியர், உழைச்சா நல்ல காசு அதுல.''

''வேலை தெரியுமா? எப்ப ஆரம்பிக்கப் போற?''

''நல்லாத் தெரியும். நெட் வொர்க் தேவையானா, கூட்டுச் சேர்ந்துக்கலாம்.என்ன லேபர் ஓரியண்டட். ஆட்களைக் கட்டி மேய்க்கணும்.''

''எவ்வளவு ஆகும்?''

''ஆறு ஏழு ரூபா ஆகும். நல்ல இடம் வேணும். அது முக்கியம். அப்புறம் ஆபீஸ் ஃபர்னிச்சர்ஸ்.''

''மூணா பிரிச்சிடுவோம்.''

''எதை?''

''வர காசை. உடனே பிரிச்சு தனித்தனியா எடுத்துப்போம்.''

வெட்டிக்கலாம்ன்னு பார்க்கறியா?.'

''ச்சே. ச்சே. எப்படி வெட்டிக்கறது. எப்படி வெட்டிக்க முடியும்? இது அம்மா காசு. அமமாவோட கஷ்டத்துக்குக் கிடைச்ச காசு.''

''அம்மாவ கடைசி வரை காப்பாத்துவியா சுந்தரா?

''வினோலியாகிட்ட நான் போட்ட முதல் கண்டிஷன் அதுதான். அம்மா முக்கியம். அவளை நோகடிக்கக் கூடாதுங்கற ப்ராமிஸ்தான்.''

''வினோலி என்ன சொன்னா?''

''எங்கம்மா பட்ட கஷ்டம் எனக்குத் தெரியும். நான் கஷ்டப்படுத்த மாட்டேன். என்னை ராமர் பூஜை பண்ணச் சொல்லாத இருந்தா சரின்னா.''

''அம்மா அதெல்லாம் சொல்லமாட்டா. நீ கிறிஸ்டியனா மாறினா ஒரு வேளை கஷ்டப்படுவாளோ என்னவோ.''

''எனக்குக் கடவுள் நம்பிக்கையே இல்லை. உனக்கு?''



''எதுக்கும் பயப்படாத தேரமா. என்ன பிரசினையானாலும் எங்கிட்ட பேசு.''

''நீயும் பேசணும்.''

''பேசுவேன். பேசாத போகணுமா?''

''எப்ப உன் கல்யாணம்?''

''இன்னிக்குத் தீர்ப்பான உடனே அனிதா மேத்யூஸ் வீட்டுக்கு வருவாங்க. வந்து அம்மாகிட்ட எல்லாம் பேசுவாங்க.''

''ஐய்யோ முப்பத்தியொம்பது லட்சம். முப்பத்தியொம்பது லட்சம். மூணா வகுத்தாபன்னிரெண்டரைவா. கால்குலேட்டர் எடுத்துண்டு வரட்டா?''

''வேண்டாம். அவசரப்படாதே தீர்ப்பாகட்டும்?''

''எப்ப தீர்ப்பு?''

''பத்தரை. பன்னிரெண்டு மணிக்குள்ள.''

''நமக்குச் சாதகமா ஆயிடுமா?''

''ஆகும்.

''நமக்கு எப்பத் தெரியும்?''

''ஒண்ணு ஒன்னரை. அனிதா மேத்யூஸ் வந்து சொல்வாங்க.

ஆபீஸ் போகலையா?''

லீவு போட்டுட்டேன் நீயும் போட்டுடு பெட்டர்''

● ● ●

பன்னிரெண்டே முக்கால் மணிக்குக் கீழே ஆட்டோ வந்தது.

அனிதா மேத்யூஸ் இறங்கினாள். சுந்தரம் கீழே ஓடினான்.

அனிதா மூச்சிரைக்க வந்து வாசலில் நின்றாள். சரஸ்வதி என்று இரண்டு கைகளையும் விரித்தாள்.

''நாம ஜெயிச்சிட்டோம்.'' என்றாள்.

## 13

வழக்கு வல்லடி என்பவை குரூரமான விஷயங்கள். சபிக்கப்பட்டது போல் சிலருக்கு இவை அமையும். மனதைப் புண்ணாக்கும். புத்தியைத் தவிக்க வைக்கும். பண விரயமும் உடல்*சோர்வும் நிச்சயம். இதில் ஈடுபட்டு மீண்டவர்க்கே இதன் வேதனை தெரியும்.

இவ்வித வழக்கில் வெற்றி என்பது வாண வேடிக்கை சந்தோஷம். அப்பா...இனிதான் வாழ்க்கை என்கிற ஆரவாரம் தோன்றும்.

விவாகரத்து என்று ஆரம்பித்து பல வருடங்கள் கழித்து சாதகமாய் ;ஜீவனாம்சம் கிடைத்திருப்பதை அறிந்ததும் சரஸ்வதிக்குப் பீறிட்ட அழுகை வந்தது.

எந்தச் சன்மானமும் எதிர்பார்க்காமல் அனிதா மேத்யூஸ் அதைச் சொந்த வழக்காய் நடத்தி ஜெயித்துக் கொடுத்த நன்றி கேவலாய் விம்மலாய் வெளியாயிற்று.

''நானில்லை, சரஸ்வதி. இது நான் கொடுத்த வெற்றியில்லை. உன் தவம்...உன் கடவுள் நம்பிக்கை... உன் ராமன் கொடுத்த பரிசு. சரஸ்வதி.''

அனிதா மேத்யூஸும் அழுது கொண்டே சரஸ்வதி முதுகு தடவினாள்.



''காசு கையில் கிடைக்கும்வரை சந்தோஷப்பட முடியாது சரஸ்வதி. வில்லங்கம் இல்லாத சொத்து வருமா என்று பார்க்க வேண்டும்.

''எதிர்ப்பக்கம் ஆடிப்போயிருக்கிறார்கள் மிகக் குறைவான காம்பன்சேஷன் தீர்ப்பாகும் என்று நினைத்தார்களாம்.

''ஆனால், தீர்ப்பு மிகத் தெளிவாய் மேற்கொண்டு எதற்கும் எந்த சட்ட ரீதியான நடவடிக்கையும் கூடாது. ஏற்கெனவே தாமதம் அதிகம். உடனடியாய் பதினைந்து நாட்களுக்குள் சொத்து அல்லது பணம் தரப்பட வேண்டும் என்று தீர்ப்பாகியிருக்கிறது.''

''அங்கே டெல்லியில் வழக்கு நடத்தியவருக்குப் பணம் தரவேண்டாமா?'' சரஸ்வதி கேட்டாள்.

''வேண்டாம்.''

''ஏன்?''

''அனிதா வெறித்து சுவர் பார்த்தாள்.

''உன்னிடம் பல விஷயங்கள் இந்த வழக்கு பற்றி நான் சொல்லவில்லை, சரஸ்வதி. என்னை நம்பிய உன்னை நான் குழப்பத்தில் ஆழ்த்த விரும்பவில்லை. வழக்கு நடத்தப் பணம் கேட்க வேண்டாம் என்றேன். சரி என்று சொல்லி விட்டார்கள்.''

''எப்படி? உங்களுக்குத் தெரிந்தவர்களா?'' ஹேமா ஆங்கிலத்தில் கேட்க அவளைப் பார்த்து அனிதா சிரித்தாள்.

''ரொம்ப தெரிந்தவர்கள் ஹேமா?''

''நண்பரா?''

''இல்லை, உறவு.''

வீடு பேசாமல் அவள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தது.

''ஏழு வருட உறவு. மூன்று பெண்கள் பெற்றுத் தந்த உறவு.''

''ஐயோ.''

''அது என் புருஷன் ஹேமா.''

''நீங்கள் டைவர்ஸி இல்லையா?''

''டைவர்ஸிதான். மகத்தான எதிர்காலம் தேடி. மகத்தான அனிதாவை விட்டுவிட்டு டெல்லியில் தன் சாம்ராஜ்யம் நிலைநாட்டப் போயிற்று.''

''நல்ல வக்கீலா?''

''பெரிய சாம்ராஜ்யம். கொடிபறக்கும் செல்வாக்கு.''

''எப்படி உங்களுக்கு மறுபடி காண்டாக்ட்...?''

''நாங்கள் ஜீவனாம்ச வழக்குப் போடுவதில்லை என்று ஏற்பாடு செய்து கொண்டோம். பதிலாய் சென்னையிலுள்ள அவர் வழக்குகளை என்னிடம் ஒப்படைத்துப் போய்விட்டார்.

''நானாய் சம்பாதித்த முதல் வழக்கு உன்னுடையது சரஸ்வதி. இது வெற்றி பெற வேண்டும். இதைச் சொல்லி டெல்லியில் அவரிடம் பேசினேன்.''

''எப்படி ஒப்புக் கொண்டார்?''

''எங்களுக்குள் சண்டை. டைவர்ஸி ஆகிவிட்டது. டைவர்ஸ் ஆனபிறகு சண்டை என்ன? சக வக்கீல்.''

''காசு வேண்டாம் என்பது ஆச்சரியமில்லையா? சக வக்கீல் தானே?'' மறுபடியும் ஹேமாவே பேசினாள்.

சரஸ்வதிக்கும் அந்தக் கேள்வி நெஞ்சுவரை இருந்தது.



சுந்தரம் மட்டும் அனிதா மேத்யூஸையே அசையாது ஒரு பணிவோடு பார்த்துக் கொண்டிருந்தான்.

''சக வக்கீல் தான். என் மாஜி புருஷன். அவன் டைவர்ஸ் செய்தது என்னைத்தான். என் குழந்தைகளை அல்ல.

''குழந்தைகளின் தகப்பன் தானில்லை என்று அவன் சொல்லவில்லை; சொல்லுகிற தகப்பனுமில்லை. குறிப்பாய் வினோலியாவின் மீது அவனுக்குக் கொள்ளை அன்பு. இதற்குக் காசு வேண்டாம் என்று சொல்வதற்கும் வினோலியாதான் காரணம்.''

''என்ன சொல்கிறார்கள் ஆன்ட்டி?''

''அவன் பெண்ணுக்கு அவன் ஏதாவது செய்ய வேண்டாமா? செய்திருக்கிறான். இதை ஜெயித்துத்தர வேண்டியது என் கடமை. கவலையே வேண்டாம் என்று வாக்குறுதி கொடுத்தான். காசோ சொத்தோ உங்கள் கைக்கு கிடைக்கும் வரை வினோலியாவின் தகப்பன் ஓயப்போலதில்லை.

வீடு மௌனமாய் இருந்தது. எதனால் சரஸ்வதி யோசிக்கு முன்பே, ஹேமா யோசித்து, புரிந்து கொண்டாள்.

''வினோலியாவுக்கு சீதனமாய் இந்த வெற்றி கொடுக்கப்பட்டதா, அனிதா மேத்யூஸ்?''

வெற்றி பெற்ற சந்தோஷம் தாண்டி வேறு ஒரு பிரச்சினைக்கும் பேச்சு போவது அனைவருக்கும் புரிந்தது.

''ஏன் பெண்ணே, வேண்டாம் இந்த வெற்றி என்று தள்ளப் போகிறாயா?''

''என் கேள்விக்கு நேரிடையாய் பதில் சொல்லுங்கள் அனிதா மேத்யூஸ்''

''நீ சிறுபெண் ஹேமா. விஷயம் கனமும் ஆழமும் மிக்கது. படபடவென்று பேசும் விஷயமில்லை இது.''

''ஆர் யூ ப்ளாக்மெயிலிங் திஸ் ஃபேமிலி?''

''கொடுமையான வார்த்தை.''

''சில சமயம் கேட்க வேண்டியிருக்கிறது.''

''கேட்க வேண்டியவர்கள் கேட்கட்டும். நீ சும்மா இரு ஹேமா.''

''என் அம்மாவைச் சொல்கிறீர்களா, அவள் கேட்க மாட்டாள். கேட்கத் தெரியாது ஆம் என்று சொல்வீர்களானால் ராமரிடம் போய் அழுவாள்...பிறகு...''

''அப்போது ராமர் பதில் சொல்வாரில்லையா?'' அனிதா மேத்யூஸ் இடைமறித்தாள். இது பற்றி ஹேமாவிடம் பேச விரும்பவில்லை என்று தெளிவாய் முகம் காட்டினாள்.

''அம்மாவிடம் ராமரை வைத்துப் பேசினால் இளகிவிடுவாள் என்று எண்ணம்.''

''எனக்கு எண்ணம் ஏதுமில்லை ஹேமா. எல்லாம் கடவுள் செயல்''

''இது தப்பித்தல்.''

''உன்னிடம் நான் பேச விரும்பவில்லை.''

''பேசித்தான் ஆக வேண்டும். நீங்கள் பேசாது போனாலும் நான் பேசுவேன். மேத்யூஸ்.''

''சரி, உன் அபிப்பிராயம் சொல்.''

''உங்கள் மகள் என் தமையனைக் காதலிப்பதை நான் விரும்பவில்லை.''

''காரணம்?''



''என் தாய் வேறு. உங்கள் மகள் வேறு. என் தாய் அவள் மகனோடுதான் இருக்க வேண்டும். வாழ்நாளின் கடைசியிலாவது அவள் நிம்மதியாய் இருக்க வேண்டும்.''

''வினோலியா அதற்குத் தடையா?''

''இருக்கலாம்.''

''அனுமானம் தானே.''

''சகலமும் அனுமானம் தான் இங்கே...

''எதனால் இந்த முடிவு?''

''தெருவில் முத்தமிடுகிற வினோலியா வேறு. எங்கள் வீடு வேறு...''

''தெருவிலா, யாரை...எப்போது?''

''இதை வினோலியாவிடம் கேட்டுத் தெரிந்து கொள்வது நல்லது மேடம்.''

''சரி இருக்கட்டும். நான் இதை மிகப் பயங்கரமான குற்றமாய்க் கருதவில்லை.''

''இங்குதான் மனநிலையில் மாற்றம் இருக்கிறது. என் அம்மாவுக்கு இது குற்றமாய்ப்படலாம். பட்டு விட்டது.

''அம்மாவுக்குத் தெரியுமா?''

''பார்த்தால் தெரியும் அளவுக்கு நடந்தது?''

அனிதா கண்மூடிக் கொண்டாள்.

சுந்தரம் அவளையே பார்த்தபடி இருந்தான். மெல்லச் சிரித்தான். யார் என்ன சொன்னாலும் அதுபற்றி கவலையில்லை என்பதாய் அந்தச் சிரிப்புக்கு அர்த்தம் இருந்தது.

''நான் வினோலியாவைக் கண்டிக்கிறேன். ஹேமா. இது எனக்கும் சம்மதமான விஷயமில்லை. எனினும் இதை அன்பின் வெளிப்பாடு என்றுதான் இன்னமும் கருதுகிறேன்.',

''என் கேள்விக்குப் பதில் சொல்லவில்லை மிஸ். மேத்யூஸ்? இந்த வெற்றிக்கு விலை உண்டா? அதற்குப் பெயர் என் தமையன் சுந்தரமா?''

''இல்லை ஹேமா. பெண்ணை அப்படி எவர் வீட்டி லும் கொண்டு போய்த் தள்ள முடியாது. ஆனால் நான் என் பெண்ணைப்பற்றி இங்கே பேச வேண்டியிருக்கிறது. அவள் விருப்பத்தை உன் அம்மாவிடம் சொல்ல வேண்டி யிருக்கிறது''

''காலம் கடந்து விடவில்லையா? உங்கள் பெண் அவசரப்பட்டு விட்டாள் என்று தோன்றவில்லையா?'' ஹேமா குரலில் சீற்றம் இருந்தது.

''ஹேமா இது அதிகம். நீ மரியாதைக் குறைவாய் என்னை நடத்துகிறாய். பதிலுக்கு உன் த்வனியில் பேசி னால் இரண்டு பக்கமும் சேதமாகும்.''

''நான்...?''

''சும்மா இரு ஹேமா,'' சரஸ்வதி சட்டென்று தெளிந்து அதட்டினாள்.

''என் குழந்தைகள் மேல எனக்கு நம்பிக்கை இருக்கு அனிதா. அதே மாதிரி உன் பொண்கள் மேலயும் உனக்கு நம்பிக்கை இருக்கும்.''

''என்ன இப்ப வினோலியா சுந்தரத்து மேல ஆசைப் படறா. சுந்தரத்துக்கும் வினோலியாவ புடிச்சிருக்கு. என்ன தப்பு இதுல. வினோலியா தான் என்னைச் சீராட்ட ணும். சுந்தரம் தான் என்னைக்காப்பாத்தணும்ன்னு நான் நினைக்கலை. எதிர்பார்க்கலே இல்லை. என்னை ராமர் காப்பாத்துவார். எதுக்கு பேச்சு. வினோலியாவ கூட்டிண்டு வந்திருக்கியா?''

''கார்ல இருக்கா.''



''சுந்தரம் போய்க் கூட்டிண்டு வா.''

வினோலியா நுழையும் வரை வீடு மௌனமாய் இருந்தது.

பேண்ட்டும் பேகி ஷர்ட்டும், முடியாத அலை குழலும், உதட்டுச் சாயமுமாய் வினோலியா வந்தபோது-

'இவளா என் மருமகள்?' என்று பயம் தோன்றத்தான் செய்தது.

''வா. உட்கார் வினோலியா. உன்னைப் பத்தித்தான் பேசிண்டிருக்கோம். ஜூஸ் சாப்பிடறியா?'' சரஸ்வதி உள்ளே போனாள்.

''தெருவில் முத்தமிடுகிறாயாமே வினோலியா ஹேமா சொல்கிறாள்.''

''மம்மி...''

''உனக்கு நாகரிகம் கற்றுத் தரவில்லையா நான்?''

''அது இல்லை மம்மி.''

''மரியாதை என்பது பெறுவது. வாங்குவதில்லை வினோலியா.''

''நாங்கள் கைகோர்த்து பேசிக் கொண்டிருந்தோம் மம்மி.''

''உன்னை நான் பேசஅனுமதித்தது, புரிந்து கொள்ள மகளே. உன்னை வசமிழக்கச் செய்வதல்ல, வினோலி.''

''நான் மன்னிப்புக் கேட்கிறேன் அம்மா. நான் தவறு செய்தேன்.''

''இங்கு ஒரு கேள்வி கேட்கப்பட்டது. சுந்தரத்துக்கு நீ மனைவியாவது தவிர இங்கே உனக்கு ஒரு கடமை இருப் பதாய் சுட்டிக் காட்டப்பட்டது. இதுபற்றி சுந்தரம் ஏதாவது பேசியிருக்கிறானா?''

'பேசியிருக்கோம் மம்மி. எனக்கு சுந்தரத்தின் அம்மா மீது மதிப்பும் அன்பும் உண்டு.''

''அதற்கு ராமர் மீதும் மதிப்பும் அன்பும் வைக்க வேண்டும் தெரியுமா?'' ஹேமா கடுப்பாய் பேசினாள்.

''தேவையில்லை நான் வற்புறுத்த மாட்டேன். கடவுள் சொந்த விஷயம். நீ சுந்தரத்திற்கு ஏற்றவளாய் இருந்தால் போதும். வினோலியா'' அம்மா மறுத்தாள்.

''சுந்தரா என்னசொல்கிறாய்?'' மேத்யூஸ் கேட்டார்.

''வினோலி என் மனைவி. இந்த கேஸ் தோத்திருந்தா லும் வினோலி என் மனைவி.''

''ஆக இது விஷயமில்லை இல்லையா?''

''இல்லை.''

''எனக்கு விருப்பமில்லை அம்மா,''

''ஏன்?''

''என்னால் எவனையும் காதலிக்க முடியாது.''

''சரி ''

''எவனிடமும் தெருவில் கைகோர்த்து முத்தமிட முடியாது.''

''யாரும் அப்படி செய்யச் சொல்லலையே ஹேமா.''

''எனக்கு எப்படிக் கல்யாணம் ஆகும்...என்னை எப்படி...ச்சே ஏன் யாருக்கும் புரியலை? செல்ஃபிஷ் எல்லாரும் செல்ஃபிஷ் உங்களையும் சேர்த்துச் சொல்கி றேன் அனிதா யூ ஆர் செல்ஃப் செண்டர்ட் வுமன்.''

அவளைப் புரிந்து கொள்ள அவர்களுக்குத் தாமதமாகியது.



# 14

சிலசமயம் பெண்ணை பெண்ணால் கூடப்புரிந்து கொள்ள முடிவதில்லை.

மகள் மகள் என்று கொஞ்சிக் கொண்டிருக்கிற பெண் மனசில் ஏற்படும் மாற்றங்கள் தாயின் கவனத் திற்கும் வந்துவிடாமல் போகிறது.

காரணம், பெண் தன் எண்ண ஓட்டங்களை எவரிட மும் பகிர்ந்து கொள்வதில்லை. இது பயத்தினால் ஏற் பட்ட தயக்கம். அடிபட்டு விடுவோமா என்பதால் வந்த அடக்கம்.

சடேரென்று ஹேமா அப்படிப் பொங்குவாள் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை.

ரொம்ப சுலபமாய் இதை ஏற்றுவிடக்கூடாது மட்டமாகி விடுவோம் என்பதால் எதிர்க்கிறாளோ என்று சரஸ்வதி நினைத்தாள்.

வயசு. ஆண் இல்லாது வளர்ந்ததால் உண்டான வாய் அரட்டை அலட்டுகிறது என்று அனிதா மேத்யூஸ் நினைத்தாள்.

என்னவோ இனம் சொல்ல முடியாத பொறாமை. அதை இவ்விதம் காட்டுகிறாள் என்று சுந்தரம் எண்ணிக் கொண்டான்.

வினோலியா மட்டும் ஹேமாவைக் கூர்மையாய் எதை நோக்கி இவள் பாய்கிறாள் என்பதை கவனித்துக் கொண்டிருந்தாள்.

கடைசியில் இந்தப் பெண் இப்படி முடிக்கப் போகிறது என்கிற எண்ணம் துளிர்க்க அதே வார்த்தைகள் சீறலாய் வெறுப்பு கலந்து வெளியே வந்து ஹாலில் விழுந்தபோது சடேரென்று அதிகம் தாக்கப்பட்டாள். மிக வலுவான ஆயுதம் சபை நடுவே வீசப்பட்டு விட்டது என்பதைப் புரிந்து கொண்டாள்.

அம்மாவோடு காரில் வந்து தயங்கிப் படியேறி அழைக்காமல் போகிறோம் என்று கொஞ்சம் குழம்பி வாசல் தெரியும்படி வராண்டாவில் நின்றபடி உள்ளே நடக்கும் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்துவிட்டு அந்தப் பேச்சு உச்சத்தில் போக கதவிடுக்கில் தலைகுனிந்து கேட்டாள்.

அடுத்த போர்ஷன் கதவு கொஞ்சம் திறந்தது.

''என்னன்னு தெரியலையே யாரோ வந்திருக்கா. ஏதோ கல்யாணப்பேச்சு போலிருக்கு.''

திறந்தவர்கள் திறக்கச் சொன்னவருக்குப் பதில் சொல்வது கேட்டது.

கதவு திறந்தவர் ''யாரு'' என்று அவளை விசாரித்தார்.

வினோலியா பதில் சொல்லவில்லை.

பதில் சொன்னால் என்ன அங்கே என்ற அடுத்த கேள்விக்கும் பதில் சொல்ல வேணடி வரும்.

மெல்ல நகர்ந்து உள்ளே போனாள். வாசற்கதவு தாண்டி சுவரோடு ஒட்டிக்கொண்டிருந்தாள்.

சுந்தரம் மட்டும் அவள் வருகையைப் பார்த்தான். விழி உயர்த்தினான், அவளை அமைதியாய் இருக்கச் சைகை காட்டினான்.

மற்றபடி யாரும் யாரையும் கவனிக்கவில்லை.



அவரவர் கவலையில் அவரவர் இருந்தார்கள்.

''என் கல்யாணத்தைப்பத்தி யோசிச்சேளா? நீங்க எல்லாரும் செல்ஃபிப் சென்ட்ர்ட்'' என்று ஹேமா கத்தியதும் நழுவி வெளியே போனாள். வராண்டா வழியே தெருவை வெறித்துப் பார்த்தாள்.

தவறு செய்துவிட்டோமா என்று வருந்தினாள். குழம்பினாள்.

ஹேமா வெறுப்போடு பேசினாலும் அந்தப் பேச்சில் ஒரு நியாயம் இருப்பதை உணர்ந்தாள்.

அடக்கி அடக்கி வைத்து ஒரு கட்டத்தில் அடக்க முடியாமல் ஹேமா இதைக் கேட்டுவிட்டாள் என்பதைப் புரிந்து கொண்டாள்.

இப்படிப் பேசிவிட்டபிறகு வெட்கம் கெட்டுப்போய் பேசிவிட்டோமே என்று அந்தப் பெண் வருத்தப்படும் என்று யோசனை வந்தது.

அப்படி வெட்கம் வர. சரி நான் ஏதோ பேசிட்டேன். நான் பேசியது தப்பு. உங்க இஷ்டம் என்று எழுந்து விடலாம்.

வினோலியாவுக்கு கஷ்டம் சுந்தரத்துக்கும் இஷ்டம் எங்கம்மா சரின்னா எனக்கும் சரி. எங்கே எப்ப கல்யாணம் இது மட்டும் எனக்குச் சொல்லுங்க போறும். மற்றபடி நான் தப்பா பேசியிருந்தா மன்னிப்புக்கேட்டுக்கறேன்.

மலை உச்சிக்குப் போய் நாலுமுறை ஆழ சுவாசித்து விட்டு மடமடவென்று ஓட்டமும் நடையுமாய் சரிவில் இறங்குவது மாதிரி ஹேமா இறங்கி வருவாள் என்று தோன்றியது.

ஆனால் இப்படி அவள் பேசிவிட்டபிறகு அவளே கீழே இறங்கினாலும் அந்தப்பேச்சு இறங்காது. உச்சியிலிருந்து பார்த்த காட்சி நெஞ்சில் தைததுபோல் ஹேமா பேசியதன் வேதனை இவன் நெஞ்சு விட்டுப்போகாது.

இனி மேற்கொண்டு எது நடந்தாலும் நடப்பது முழுமையாய் இருக்காது. உள்ளே சரியோ இது சரியோ என்கிற பயம் எப்போதும் எல்லாவற்றிலும் கலந்து நிற்கும்.

ஹேமாவைக் கலந்து ஆலோசிக்கத் தோன்றும்.

அப்படி ஆலோசிக்க ஹேமா 'தெரியாது' என்று அலட்சியம் செய்வாள். அன்னியப்படுத்துவாள்.

அது சகலருக்கும் குறையாகும். சில சமயம் கோபம் வரும். அந்தக் கோபம் காரியங்கள் செய்ய இடைஞ்சலாகும்.

ஹேமாவை மறந்தது பிசகு. அம்மா இத்தனை சீக்கிரம் இந்தப் பேச்சை ஆரம்பித்தது பிசகு. வழக்கு வெற்றியை மட்டும் சொல்லி விடைபெற்று வந்திருக்க வேண்டும்.

வெற்றி என்பது இங்கு தீர்ப்பு மட்டுமல்ல. காசு. சொத்து இடம் மாறுதல், அப்போது சொல்லியிருக்க வேண்டும். அப்போது காது கொடுத்து இவர்கள் கேட பார்களா என்கிற பயம் வந்திருக்கலாம் அம்மாவுக்கு.

உடனே ஆரம்பித்துவிட்டாள்.

இப்போது அவள் போட்ட மனுவில் குறை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இனி கெஞ்ச வேண்டும் அல்லது மனுவை வாபஸ் பெற வேண்டும்.

அம்மா என்ன செய்வாள் தெரியாது. அவள் ஏதும் சொல்வதற்கு முன்தான் ஏதாவது செய்தாக வேண்டும்.



ஹேமாவை மறந்தது தவறு. ஹேமாவைப்பற்றி சிறிதுகூட நினைக்காமல் இந்தக் காதலில் இறங்கியது பிசகு.

சட்டென்று இந்தத் தவறை சரி செய்தாக வேண்டும் அம்மா காயம் பட்டிருப்பாள். பேச்சால் தாக்கப்பட்டிருப்பாள். அவளை முன்னிறுத்திப் பேச முடியாது. சுந்தரம் தாழ்ந்து பேச வெட்கப்படலாம். நான் எதற்கு பேசவேண்டும் என்று கோபப்படலாம்.

இது என் வாழ்க்கை. என் விதி. என்னை மறைமுகமாய் தாக்கப் போகிறது. இவன் பேச்சுக்கு நான் இறங்க வேண்டும். எதிராய் இறங்கக் கூடாது. இணக்கமாய்ப் பேசவேண்டும்.

இவன் கவலை நியாயம். இவன் துக்கம் உண்மை. எவனாவது உனக்குன்னு கிடைக்க மாட்டானா அப்ப பண்ணிக்கோ என்று பேசுவது அலட்சியம். சொல்படி கேட்கிற புருஷனாய் சுந்தரம் இருப்பான் என்று இங்கிருந்து பிய்த்துச் செல்வது நல்லதல்ல. எத்தனை நாள் ஆணைப் பிரித்து வைக்க முடியும்? பெண்ணை விலக்கிவிட்டு அம்மாவை மட்டும் அழைத்துக்கொள்ள முடியுமா? ஹேமா என்ன பாபம் செய்தாள்.

என் வீடு போல இந்த வீடும் அவஸ்தைப்பட்ட வீடு. ஆனால் வஞ்சிக்கப்பட்ட வீடு.

எனக்கொரு அண்ணன் இருந்து அவன் இப்படி செய்தால் நானும் சீறுவேனோ என்னவோ. சுந்தரம் மட்டுமே முக்கியம் என்று நினைப்பது பேதமை, எல்லா உறவோடும் சுமூகமாய் இருத்தலே சிறப்பு. என்ன செய்ய தடுமாறினாள். நகம் கடித்தாள். சட்டென்று வீட்டுக்குள் புகுந்தாள்.

"ஹலோ ஹலோ"

ஹால் நடுவே நின்றாள், சிரித்தாள்.

சகலரும் திரும்பி வினோலியாவைப் பார்த்தார்கள்.

''நீ பேசினது ரைட் ஹேமா. நான்கூட செல்ஃபிஷா தான் இங்க நடந்துகிட்டேன். உன் கல்யாணம் முக்கியம்ன்னு எனக்கும் தோணலை. ஸாரி.

''உன் பயம் ரொம்ப நியாயம் ஹேமா. என்னைக் கல்யாணம்ன்னு சுந்தரம் செய்துகிட்டா. உன் நிலைமை சிரமமாகும். புரியுது.

''ஸோ இப்படிச் செய்யலாமா? நீ எப்ப கல்யாணம் செய்துகிறாயோ அதுக்கு ஆறுமாசம் கழிச்சுதான் சுந்தரத்தைக் கல்யாணம் செய்துகிட்டமா?''

''இது கூடவே கூடாதுன்னு சொல்லிடாத ஹேமா சொல்லிட்டா நான் செத்துர மாட்டேன். எங்கம்மா செத்துரலாம். அவளுக்கு இப்ப பயம் புருஷன்கிட்ட இல்லை. மாமனார் மாமியார் பற்றி நடுக்கம் இல்லை.

''வர மாப்பிள்ளை பத்தி பயப்படறாங்க. வாழ்க்கைல சந்திக்க எல்லா ஆம்பளை போல மாப்பிள்ளையும் இருந்துட்டா என்ன ஆகுமோன்னு கலவரப்படறாங்க. இது ஒரு வகைல நியாயம்.

''சுந்தரம்போல அவங்களுக்கு நம்பிக்கை இருக்கு. என் இரண்டு தங்கச்சிய காப்பாத்தணுமேங்கிற கவலை கூட இல்லை. தன் கடைசி காலத்துல தன்னைத் தூக்கி உட்கார வச்சு துணி மாத்த யாருமே இருக்க மாட்டாங்களோங்கற கவலை.

''எனக்காகத்தான் அம்மா அப்பாகிட்ட எல்லாம் மறந்து பேசினாங்க. எப்படியாவது கேஸ் ஜெயிச்சுக் கொடுக்கும்படி கேட்டாங்க. அப்பா இல்லைன்னா இது ஜெயிச்சிருக்காது. நிச்சயம்.



''ஆனா இது என் கல்யாணம். அதுக்கு பிரதியுபகாரப் இல்லை. அது வேற இது வேற. கேஸ் தோத்துருந்தாலும் நானும் சுந்தரமும் ஒன்னாதான் இருந்திருப்போம். நல்லவேளை கேஸ் ஜெயிச்சுடுச்சு.

''ஹேமா அவசரப்பட்டு ஸாரி... நான் அவசரப்பட்டு உங்க தெருவுலியே நெருங்கி நின்னுட்டேன். ஸாரி ரியலி ஸாரி. தப்பு எம்பேர்ல இருக்கு.

''இப்ப கேட்கறேன். சுந்தரத்தை நான் கல்யாணம் பண்ணிக்கறதுல ஏதாவது ஆட்சேபணை உனக்கு உண்டா?''

''எங்கம்மாவக் கேக்கணும்.''

''உனக்கு உண்டா ஹேமா?''

''தெரியாது வினோலி. கடைசிவரைக்கும் அண்ணா, அம்மான்னு உறவு சுமுகமா இருக்கணும்னு நினைக்கிறேன். தேடிப் பெண் பார்த்துக் கல்யாணம் பண்றப்பவே உறவு சுகமில்லாத போறது. உன்னைக் கலயாணம் செய்த பிறகு...''

''நான் நல்ல மருமகளா உங்கம்மாவுக்கு இருக்க முடியாதா?''

''நீ வேற எங்கம்மா வேற.''

''ஜாதி மதம் சொல்றியா?''

''அதெல்லாம் ஒண்ணுமேயில்லைன்னு சொல்ல முடியாது.''

''ராமரைக் கும்பிடணுமா நான்.''

''எங்கம்மா ஆசைப்படலாம்.''

''உங்கம்மா இப்படிச் சொல்லலியே.''

''சொல்ல மாட்டாங்க. சொல்லத் தெரியாது. எதுவும் எனக்கு வேணும்னு சொல்வதில்லை. உள்ளுக்குள்ள ஆசை இருக்கலாம். ஐயோ பிள்ளை எங்கியோ வீட்டோட மாப்பிள்ளை ஆயிட்டானேன்னு வேதனைப்படலாம். தான் அங்கு போக முடியலை யேன்னு வருத்தப்படலாம்.

'வீட்டோட மாப்பிள்ளைன்னு நீயா தீர்மானம் பண்ணிட்டயா?''

''மூணு பொண்ணு, அப்பா இல்லை. வேற என்ன நடக்கும்? அனிதா மேத்யூஸுக்கு கேஸும் ஜெயிச்சது. மாப்பிள்ளையும் கிடைச்சுது. எங்கம்மா கதி? எங்க வீட்லயும் அப்பா இல்லையே, என் நிலைமை? இந்தக் கேஸ இதனாலதான் ஜெயிச்சதுன்னு நினைக்கிறபோது வேதனையா இருக்கு. இத்தனை பெரிய வியாபாரம். யாரும் தெரியாத பண்ணியிருக்கீங்களே... வெட்கமா இருக்கு.''

''மறுபடி மறுபடி இதை சூழ்ச்சியாவே நினைக்கிறியா?''

''யெஸ். வேற எப்படியும் தோணலை.''

''புரியறது. மம்மி போகலாம் கேஸ் ஜெயிச்சதோட உன் வேலை முடிஞ்சுது கிளம்பலாம்.''

''வினோலி, ஆற அமர யோசிக்க வேண்டிய விஷயம்...''

''எனக்கு யோசிக்கறது எதுவும் இல்லை. நாங்க எப்ப வந்தாலும் இப்படித்தான் உங்க பயம் வரும்.''

''எனக்கு சுந்தரும் முக்கியம் வினோலி. அவன் விருப்பமும் முக்கியம். இன்னும் கொஞ்சம் பொறு.



ஹேமா மேல கோவப்படாம இரு. தீர்ப்புதானே வந்திருக்கு. மிச்சமும் முடியட்டும்.'' சரஸ்வதி தடுத்தாள்.

''படியேறவே முடியாது யாரும். பங்கு கேட்க வராங்களோன்னு தோணும்.''

''அதனால என்ன?'' சுந்தரம் பேசினான்.

''நான் வருவேன். தினம் உங்க வீட்டுக்கு வருவேன். என் வாழ்க்கையை நான் தீர்மானம் பண்ணியாச்சு. வினோலி எனக்கு வேணும்.''

''அப்ப இங்க வரவே வேண்டாம்.''

அது நீ சொல்ல முடியாது. அம்மா சொல்லணும். ஆனா என் கல்யாணம்னு ஒரு கத்து கத்தினியே அதை நான் மறுக்கலே. உன் கல்யாணம் வரைக்கும் என் கல்யாணம் நடக்காது. அம்மா அனிதா மேத்யூஸுக்கு ஏதாவது குடிக்கக் கொடு.''

சரஸ்வதி உள்ளே போனாள்.

வீடு மௌனத்தில் ஆழ்ந்தது.

# 15

மழை பெய்து ஓய்ந்தது போலிருந்தது. இனி பேசுவதற்கு ஒன்றுமில்லை என்கிற அமைதி படர்ந்தது.

''நான் உங்க புள்ளையை மனசார நேசிக்கிறேன் மாமி. நான் பண்றது சரி, தப்புன்னு சொல்லிக் கொடுக்க எனக்கு அப்பா இல்லை. என் கல்யாணத்தை கம்பீரமா நடத்த எங்க வீட்ல ஆம்பளை இல்லை.''

''அம்மா நூறு ஆம்பளைக்கு சமானம்தான். ஆனா அவனால இனிமே எந்தப் பெரிய வேலையும் செய்ய முடியாது. ஹேமா, தானா புருஷன் தேடிண்டு தானா கல்யாணம் பண்ணிக்கணும்.''

''இது இக் இல்லை மாமி. வயசுக் கோளாறு இல்லை காலிங் பெல் சத்தம் கேட்டா கதவு திறக்கக் கூட பயம். வெளிய அலட்டலா டோனிடெல்லும், மிடியுமா அலட்டுவேனே தவிர உள்ள ரொம்ப பயம். இந்த பயத்தினால நான் சுந்தரத்தைப் பிடிச்சுட்டேனோன்னு தோணுது.''

''நான் தெருவுல முத்தம் கொடுத்தது எல்லாம் அலட்டல். நான் மாடர்ன்னு நானே உறுதிப்படுத்திக்கச் செய்யற காரியம். இனிமே செய்யவே மாட்டேன்.''

''உங்களுக்கு இதெல்லாம எத்தனை கஷ்டமா இருக்கும்னு அப்ப தெரியலை. இப்ப புரியுது. நான் வெயிட் பண்றேம்மா. ஹேமா கல்யாணம் முடியட்டும்.''

மிக நிதானமாய்ச் சரியான வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்து உள்ளே ஓர் உறுதி நூலிழை போல் ஓடத் தன்னை வினோலி விளக்கினாள்.

வீடு கத்தியை கீழே போட்டது. ஆனால், எதிர்ப்பே இல்லாது வினோலியாவை அணைத்துக்கொள்ளவில்லை,

யுத்தம் என்பது இப்போதைக்கு இல்லை. எனினும், வரவேற்பும் நடைபெறவில்லை. சரி என்கிற சம்மதம் சொல்லவில்லை.

ஹேமாவின் கல்யாணம் நடக்கட்டும் என்று வினோலியாவை விலக வைத்த விதம் அதற்குள் என்ன வேண்டுமானாலும் நடக்கும் என்கிற தன்மையைக் கொண்டிருந்தது.



ஹேமா கல்யாணம் நாளைக்கா நடக்கும். நாலு வருஷம் ஆகலாம் 'இரு. முடிந்தால் இரு.' என்று அலட்சியப்படுத்தியது.

ஆனால் வினோலி இதமாய்ப் பேசினாலும், உள்ளே உறுதியாய் இருந்தாள்.

ஆரம்பத்திலேயே அந்த வீட்டின் வெறுப்பைச் சம்பாதித்துக் கொண்டுவிடக்கூடாது என்பதில் கவனமாய் இருந்தாள்.

அனிதா மேத்யூஸுக்கு எதிர்ப்புகூட வலிக்கவில்லை. சரஸ்வதியின் பிடி கொடுக்காத தன்மை கோபம் கொடுத்தது.

'என்ன கேவலமான விஷயம் பேசிவிட்டேன் என்று இவன் விலகிப் போகிறான்' என்கிற வேதனை வந்தது.

'எத்தனை இழைந்தாலும் ஜாதி முக்கியமா? எவ்வளவு உதவி செய்தாலும்,நேரத்தில் குலம், கோத்திரம் ஞாபகம் வருமோ? மனிதர்கள் எப்போதும் உயர்ந்தவர்கள் அல்ல. ரொம்ப நல்லவர்கள் கூட சில சமயம், சில இடத்தில் சுயநலவாதிகள்தான்.'

இந்தப் பெண் வினோலி திடீரென்று உள்ளே வந்து பேசியது போதும். பின் வாங்குகிறான் என்கிற மாதிரி கெஞ்சிவிட்டு போய்விட்டது.

வினோலி இன்றிரவு தூங்காது.

ஹாலில் விளக்குப் போட்டு சோபாவின் மூலையில் நகம் கடித்து உட்கார்ந்திருக்கும்.

ஏதாவது விசாரித்தால் என்னைத் தனியே விடு என்று சீறும்.

வயசுப் பெண் மனதை எவரிடமும் பகிர்ந்துகொள்ள முடியாமல் தனியே இருப்பது கொடுமை. அதை ஒரு தாய் பார்த்துக் கொண்டிருப்பதும் கொடுமை.

பழரசம் குடித்து மெல்ல வெளியே வரும்போது சரஸ்வதி தனியே வந்து ஏதும் சொல்வாள் என்று ஓர் ஆசை தோன்றியது. சரஸ்வதி வாசல்படியோடு நின்று விட்டாள்.

நீ எத்தனை உதவி செய்தாலும் என் வாழ்க்கையை எவ்வளவு மேம்படுத்தினாலும் நான் வேறு, நீ வேறு என்று கேட்க முயலவில்லை.

"உங்களுக்காக பூஜை உங்களுக்காக தியானம் என்றெல்லாம் பேசிய பெண் இவள். ஆனால் அவள் இடத்தில் நான் இருந்தாலும் இப்படித்தான் முடிவு செய்யத் தெரியாமல் இருப்பேனோ?"

ஆனால் ஓர் ஆறுதல்—சுந்தரம் வீடு வரைக்கும் வந்து கைத்தாங்கலாய் உள்ளே வந்து கைத்தாங்கலாய் உள்ள கூட்டி வந்தான்.

"வேற ஏதாவது வாங்கணுமா?" என்று சாதாரண மாய்க் கேட்டான்.

"வினோலி இங்க வா எல்லா இடத்திலும் ஏன் ஹேர் பேண்ட் போடறே?" என்று அதட்டினான்.

சமையலறையில் இருக்கின்ற வினோலியைத் தேடிப் போனான்.

அணைத்து வினோலிக்கு ஆறுதல் சொல்லியிருப்பான் போல இருக்கிறது இரண்டு பேர் முகங்களும் சிவந் திருந்தன.



'எதுக்கும் கவலைப்பட வேண்டாம் ஆன்ட்டி. நான் வரேன்.' என்று போனான்.

என்ன வித கவலை என்று புரியவில்லை.

வினோலிக்கு செய் என்று கேஸ் கொடுத்தாயே. நின்று ஜெயித்துக் கொடுத்தேனே. என்ன நடந்தது வினோலிக்கு? இப்போது பையன் என்ன சொல் கிறான் என்று புருஷன் கேள்வி கேட்கலாம். கேட்காதும் போகலாம்.

காசு வந்த பிறகு எவனாவது கல்யாணம் செய்துக்கு வானா?

அதுவும் முப்பது லட்சம் வந்த பிறகு திரும்பி பார்ப் பானா?

நீ முட்டாள். எடை போடத் தெரியாத முட்டாள் என்று பேச்சு வருமா தெரியவில்லை.

ஆனால் பெண் யாரையோ காதலிக்க அவள் காதலிக்கும் பையன் வீட்டுக்கு உதவி செய்வது போய் நிற்பது எங்கேயோ ஒரு இடத்தில் இகழ்ச்சியாய் இருக் கிறது எங்கேயோ ஒரு சிறிய கம்பீரம் குறைகிறது.

இத்தனை நேரம் ஒரு மன அழுத்தத்தில் இருந்த தாலோ என்னவோ உடம்பில் ஓர் அயர்ச்சியும் இடது கையில் வலியும் வந்துவிட்டன. தலைபாரம் அதிகமாகி விட்டது.

மிஸ்டர் மேத்யூஸ் இருந்திருந்தால் இந்த வீட்டின் முகமே வேறு.

குழந்தைகளுக்கு அப்பா இருக்கிறார் என்கிற நம் பிக்கை இப்படி நிலை வருவதைத் தடுத்திருக்கும்

இப்போது ஏனோ ஓர் இருள் சூழ்ந்திருக்கிறது.

இது விலகுமா? எப்போது என்பது தெரியவில்லை. நாளையே எல்லாம் சரியாகி விடாதா என்கிற ஆவல் வருகிறது

ஆகாது.

மெல்ல மெல்லத்தான் இறுக்கம் போகும். இன்னும் பத்து நாட்களில் சொத்து மாற்றம் பற்றித் தெரிந்து விடும். அதற்குள் எந்தக் கெடுதலும் நடக்காது இருக்க வேண்டும்.

ஹேமா வீட்டை விட்டுக் கிளம்பும்போது போய் வருகிறேன் என்று யாரிடமும் சொல்லவில்லை. சொல்லப் பிடிக்கவில்லை.

''என்னடி கிளம்பிட்டியா என்று அம்மா வலியக் கேட்டபோது, 'ஆமா, என்ன இப்ப?' என்று பார்வை தான் பார்க்க முடிந்தது.''

படி இறங்கி ஆட்டோ பிடித்து ஆபீஸ் போனபோது வீட்டுச் சண்டையின் எதிரொலி போல் அலுவலகம் 'உர் என்று இருந்தது போல் தெரிந்தது.

நேற்று டெலிவரி செய்யப்பட்டவைகளின் லிஸ்ட் கையில் கொடுத்தார்கள்.

ஒரு லட்சத்தி பதினாறாயிரம் ரூபாய்க்கு நேற்று வேலைகள் நடந்திருந்தன. பாதி பணம்தான் கைக்கு வந்திருந்தது.

நிரந்தர வாடிக்கையாய் உள்ள பெரிய கம்பெனிகள் மாதாந்திரமாய்ப் பணம் தரும்.

யார் யார் எவ்வளவு தரவேண்டும் என்கிற கணக்கை இப்போது எடுக்கவேண்டும். பாதி வேலையில் ஜெனரல் மேனேஜரிடமிருந்து அழைப்பு வந்தது.

''ஹேமா, ரொம்ப பிஸியா இருக்கியா?''



''என்ன சார், சொல்லுங்க.''

''ஒரு ஃபெர்ட்டிலைஸர் கம்பெனியோட இன்னிக்கு அப்பாயின்ட்மென்ட் இருக்கு ஹேமா. நீ என்கூட வரணும்.''

''புது லிங்க்கா?''

''யெஸ். மன்த்லி அகௌன்ட். இது புடிச்சா பெரிய விஷயம். நம்ம கம்பனில பாதிபேர் அவங்ககூட மெயில் ஹேன்டில் பண்ணத் தேவைப்படும்.

''கன்னா பின்னான்னு ரேட் கேட்பான்னு நினைக்கிறேன். எழுவத்தியஞ்சு பைசாக்கு சிங்கப்பூர் லெட்டர் போகுமான்னு கேட்கறான். பிஸினஸ் நான் பேசறேன். அகௌன்ட்ஸ் மெயின்டனன்ஸ் எப்படின்னு நீ பேசணும். ஸிஸ்டம் கொஞ்சம் மாறும்.''

''போகலாம் சார்.''

''காலையிலேயே வரேன்னு சொல்லிட்டேன். உனக்கு வேலை இங்க நிறைய இருக்கா?''

''நேத்தி அகௌன்ட்ஸ் தொடவேயில்லை சார்''

''நாளைக்கு செய்துக்கலாம் வா''

● ● ●

நுங்கம்பாக்கத்தில் ஆறாவது மாடி முழுக்க உரக் கம்பெனி இருந்தது.

உள்ளே குளுமையான நீலமாகவும், முற்றிலும் ஏ. ஸி செய்யப்பட்டும் தடலடியான மேக்கப்பில் இருந்தது.

ஆட்கள் அதிகம் அலட்டிக் கொண்டார்கள்.

வியாபாரம் பேச பதினொரு நிமிடமே ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றார்கள்.

ஆறு அதிகாரிகள் அந்தப் பதினோரு நிமிடத்தில் மாற்றி மாற்றிக் கடிதம் பட்டுவாடாப் பற்றிக் கேட்டார்கள்.

''சிலசமயம் உர சாம்பிள் போக வேண்டியிருக்கும். ஒரு கிலோ, இரண்டு கிலோ எடை இருக்கும். இந்தியாவில் எல்லா மூலை முடுக்குக்கும் அனுப்புவோம். எப்படி ஹாண்டில் செய்வீர்கள்?''

ஒரு கிலோவுக்கு இத்தனை? நூறு மைலுக்கு இவ்வளவு? என்று சொல்ல, 'அதிகம், அதிகம்.' என்று கூச்சலிட்டார்கள்.

பதினோராவது நிமிடம். சரி, மூன்றுமாதம் டெம்பரரி காண்ட்ராக்ட் போட்டுக் கொள்ளலாம் சர்வீஸ் திருப்திகரமாக இருப்பின் தொடரும். இல்லையெனில்... எச்சரித்தார்கள்.

அவர்களே ஒரு புதிய ரேட் சொன்னார்கள்.

''ரொம்ப கம்மி சார்.'' ஹேமா ஜெனரல் மேனேஜர் காது கடித்தான்.

''எங்கள் திறமையைச் சோதித்துப் பார்க்கிற வண்ணமாய் மூன்று மாத காண்ட்ராக்ட் என்று சொல்வதால் உங்கள் ரேட் பற்றி நான் எதுவும் மறுப்பு சொல்லவில்லை.

''உங்கள் வேலை பளு எத்தனை குறைகிறது என்பது தெரிந்தபிறகு எங்கள் அருமையை உணர்வீர்கள்.

''இந்த ரேட் மூன்று மாதத்திற்குத்தான், உங்கள் நட்பு வேண்டித்தான்.



''இதற்குப் பிறகு நாம் தனியாக எங்கள் சர்வீஸ் சார்ஜ் பற்றிப் பேசலாம். இப்போதைக்கு நீங்கள் தரும் காக ஏற்றுக் கொள்கிறேன்''

# 16

மூன்று மாதத்திற்குப் பிறகு நாம் தனியாக எங்கள் சர்வீஸ் சார்ஜ் பற்றிப் பேசலாம். இப்போதைக்கு நீங்கள் தரும் காக ஏற்றுக் கொள்கிறேன்,'' என்றார் மானேஜர்.

அந்த மூன்று மாத காண்ட்ராக்ட் ஏற்று அந்த கால கட்டத்திற்கு ஒப்பந்தம் போட முடிவாகியது.

ஒருவேளை பார்சல் தொலைந்து போனால், அதனால் கம்பெனிக்கு நஷ்டம் வந்தால், அதை எப்படி ஏற்பது எவ்விதம் ஈடுசெய்வது என்பதைத் தனியே வேறு நபரிடம் பேச அந்தக் கம்பெனி கைகாட்டியது.

''ஹேமா, யார்கிட்ட பேசச் சொல்றாங்களோ, பேசிட்டு வா''

''லீகல் டிபார்ட்மெண்ட்ன்கறாங்க சார். எனக்கு ரொம்ப லீகலா பேசினாங்கன்னா புரியாது.''

''முடிஞ்சவரைக்கும் பேசு. கையெழுத்துக்குப் பேப்பர் கொண்டு வா. இப்படி பெரிய ஆளுங்களோட பிஸினஸ் வச்சுக்கிட்டா நமக்கும் லீகல் அஸிஸ்டெண்ட் தேவை.''

''கண்டிப்பா சார். அவங்க லாங்க்வேஜ் வேற.''

''உனக்கு யாராவது டைனமிக்கா இருக்கிற லாயர் தெரியுமா? இல்லை ஹெட் ஆபீசுக்குச் சொல்லி ஆள் கேட்கலாமா?''

''சந்தானம்.''

''என்ன?''

''தன்னிடமிருந்து சட்டென்று அவன் பெயர் ஏன் வந்தது என்று ஹேமா அதிசயித்தாள். அவனை டைனமிக் என்று எதனால் யோசித்தோம் என்று கேள்வி கேட்டுக் கொண்டாள்.

''கூட்டிண்டு வாயேன்.''

''யாரை சார்?''

''அந்த சந்தானத்தை''

ஹேமா பதில் சொல்லவில்லை.

காலையிலிருந்து மங்கலாய் இருந்த மனசு, திரி தூண்டி விட்டதுபோல லேசாய் வெளிச்சமாயிற்று. அதற்குக் காரணம் புரியவில்லை.

● ● ●

நமக்குன்னு லீகல் அட்வைஸர் யாரும் கிடையாதா சார்?''

''இருக்கான். ஹெட் ஆபீஸ்ல இருக்கான். தேவைப் பட்டா வருவான். பெரிய வக்கீல். பார்க்கறதே கஷ்டம்.

''நம்ம பிராஞ்சுக்குனு யாராவது வேணும். இந்த காண்ட்ராக்ட் இந்த லீகல் அட்வைஸரை வச்சு செய்துண்டேன். இவனையே பர்மனெண்டா வச்சுக்கலாமோன்னு நேர போய் ஹெட் ஆபீஸ்ல கேட்கணும். கேட்கறதுக்கு



முன்னாடி நாம தேர்ந்தெடுத்தவன் எப்படியாப்பட்டவன்னு பார்க்கணும் ''

''அடுத்தது லௌகிகம். பைசா எத்தனைன்னு கேள்வி வரும், இவன் பாட்டுக்கு ஒரு காண்ட்ராக்ட் படிச்சுப் பார்த்து ம்ம்னு சொல்றதுக்குப் பத்தாயிரம்ன்னா, நிறைய விஷயம் இருக்கு. நீ சும்மா கமிட் பண்ணிக்காத கூட்டிண்டு வா''

''கமிட் பண்ணாத எப்படி சார் கூப்பிடறது?''

''சும்மா எங்க மானேஜர் பார்க்கணும்னு சொன்னார்னு கூப்பிடேன்.''

''மானேஜருக்கு போன் இருக்கா. நான் உடனே வரேன்னுவார்.''

''வயசானவா அப்படிதான ஜோவியலா பேசுவா.''

''இல்ல சார். இவர் யெங்.''

''சந்தானமா?''

''யெஸ் சார்!''

''என்ன வயசு?''

''இருபத்தி எட்டு. இருபத்திஒம்போது இருக்கும்.''

''வேண்டாம். கூட்டிட்டு வராதே.''

''ஏன்?''

''வைத்தியனும். வக்கீலும் வயசாளியா இருக்கறது தான் நல்லது. சின்ன பையன் வேண்டாம்.''

''இது தேவையில்லாத பேச்சு. வயசான முட்டாள் எத்தனை பேர் இல்லை?''

20249
3736362

''நான் இருக்கேனே போறாதா? வக்கீலும் முட்டாளா இருந்தா வம்புல மாட்டிப்போம். என் ஒன்று விட்ட பெரியப்பா ஒருத்தர் பழங்காலத்து வக்கீல்...''

மேற்கொண்டு அவர் பேசியது எதுவும் ஹேமாவின் காதில் விழவில்லை. என்னவோ தன்னை அருகே கூப்பிட்டு முகத்தில் அடித்தாற்போல் உணர்ந்தாள்.

ஆனால் இங்கே அதிகம் பேசமுடியாது. பேசினால், உனக்கென்ன அக்கறை? எந்தவித காண்டாக்ட் என்று கேள்வி வருமோ என்கிற பயமும் வந்தது. சரி யாராவது கிழவனைப் பார்த்துக் கொள்ளட்டும் என்று தோன்றியது.

அன்று மாலையே உரக் கம்பெனியிலிருந்து கட்டு கடிதங்கள் வந்து இறங்கின.

படு சீப்பா ஒருகூரியர் கிடைச்சிடுச்சு சாவடிப்போம என்கிற தன்மை தெளிவாய்த் தெரிந்தது.

பதினாறு பட்டிணங்கள், மீதி எல்லாம் உட்புற நகரங்கள். சில கடிதங்கள் கிராமங்களுக்கும் போக வேண்டியிருந்தது.

எல்லாவற்றிலும் அவசரம் என்கிற முத்திரை இருந்தது. பெரிய பார்சல்கள் எதுவுமில்லை எல்லாம் கடிதங்கள்.

ஒரு கவரை வெய்யிலில் தூக்கிப் படிக்கக் கவர் தாண்டி கடிதத்தில் எழுத்துக்கள் தெரிந்தன. 'லெட் அஸ் நோ தி டேட் அண்ட் டைம்' இன்னொரு கவரிலும் அதே வாக்கியம் படிக்க முடிந்தது.

கடிதக் கற்றையை வாரிக்கொண்டு மானேஜர் அறைக்குப் போனாள். கவர் பிரிச்சு பார்க்கலாமா?''

மானேஜர் கவலையானார்.



ஊசியால் கவரின் நுனியை மெல்ல ஓட்டை போட்டு ப்ளேட் செலுத்தி மடிப்பு ஓரமாய் கிழித்துப் படிக்க உரக் கம்பெனி கடிதம் வந்த தேதியையும், நேரத்தையும் உடனடியாய் டெலிகிராம் கொடுக்கச் சொல்லியிருந்தது.

''இது அ. .ாவடி சார். பிரச்சினையான கம்பெனி. எந்த காண்ட்ராக்டரும் இல்லை, டகார்னு நாற்பத்தி ஏழு லெட்டர். கெட்டிக்காரத்தனமா இது? நம்ம கூரியர் மக்கு முண்டமா? எரியுது சார்.''

மானேஜர் யோசித்தார்.

''இப்பவே இவ்வளவு தந்திரமா இருக்காங்க. காண்ட்ராக்ட் போடறபோது எவ்வளவு கிறுக்குத்தனமா இருப்பாங்க? நாளைக்கு ஒரு கிலோ சாம்பின் எதாவது அனுப்பிட்டு வரலைன்னா நாம தண்டம் அழணும். அழறது என்ன கழிச்சுட்டு காசு தருவான். வேலை செய்யலாம் வீம்புக்கு விரட்டினா ஆகாது. நாம ஜாக்கிரதையா இருக்கறது நல்லது இல்லைன்னா கெட்ட பேர் வரும்.''

''இப்ப என்ன செய்யமுடியும்? வேலை செய்து காட்டணும்.''

மிகக் கவனமாய் பதினேழு பேர் கொண்ட அந்தக் கம்பெனி இயங்கியது. எல்லா கிளைகளுக்கும் தந்தி அனுப்பி உரக்கம்பெனி கடிதத்தைத் தனியே டெலிவரி செய்யச் சொன்னது சுண்டைக்காய் காப்பணம் சுமைக் கூலி முக்காப்பணமா?

'ஒரு கவருக்கு நாப்பது ரூபா செலவு பண்ணிட்டோம்'' ஹேமா ஆபீஸ் விட்டுக் கிளம்பும் போது மறுபடி எச்சரித்தாள்.

''இன்டீரியர் விலேஜுக்கு நாளைக்குப் போகாது.

இரண்டு நாள் ஆகும். அங்கதான பிடிக்கப் போறாங்க நம்மை." மானேஜர் கவலைப்பட்டார்.

ஆபீஸ் விட்டு கிளம்புகிற போது உரக்கம்பெனிஃபோனில் பேசியது. நாளையிலிருந்து ரெகுலர் தபால் வரும் தயாராய் இருக்கவும் என்று எச்சரித்தது.

"அந்த சந்தானத்தை இப்ப வரச் சொல்ல முடியுமா?

"ஏன் சார்?"

"நம்ம ரூல்ஸ் ரெகுலேஷன் நாம சொல்ல வேண்டாமா? நமக்கு லீகல் அட்வைஸர் வேண்டாமா?"

"எங்கே இருப்பார் தெரியலையே?"

"என் கார் எடுத்துக்கிட்டுப் போயேன்."

"உங்க பெரியப்பா...?"

"அவருக்கு கூரியர்ன்னா என்னன்னு தெரியாதும்மா ரொம்ப வயசாளி விட்டுடு"

"வக்கீல் வயசாளியா இருக்கணும்னு சொன்னீங்க?"

"ஐயோ தப்பு விட்று மாசத்துக்கு ஒன்னரை லட்சம் ரூபா பிஸினஸ் உரக்கம்பெனி கொடுத்தால்தான் இந்த சர்வீஸ் பண்ண முடியும்."

"கொடுக்கலைன்னா?"

"சண்ட பிடிச்சு கேட்கணும்"

"எவன் ஒத்துக்குவான்?"

"இல்லைன்னா நம்ம கம்பெனி கஷ்டப்படும்."

"இதைத்தான் அப்பவே சொன்னேன். அடிமாட்டு ரேட் சார்ன்னு. டவுன் டெலிவரியில் டைம் காரண்டி தரலாம். இன்டீரியர் விலேஜ் எந்த காரண்டியும்



தரமுடியாது. பட் வி வில் ட்ரை டு ஹெலப் மேக்ஸிமம் பாஸிபிள் காணி மடம் கன்யாகுமரிலேர்ந்து இருவது கிலோமீட்டர் இருக்கு, மூணு நாளாகும் போஸ்ட் போக நாளைலேர்ந்து டெலிவரின்னாக்க அப்ப நாளைலேர்ந்து காண்ட்ராக்ட் தானே?"

"நீ அவனை கூட்டிட்டு வாயேன்"

"ட்ரை பண்றேன். அந்த ஆளும் பிஸி."

வீட்டுக்குப் ஃபோன் செய்து வர தாமதமாகும் என்று அம்மாவிடம் சொல்லிவிட்டுக் கம்பெனி காரில் ஹை கோர்ட் கிளம்பினாள்.

ஏழு மணிக்கு கோர்ட் இருக்காது வக்கீல்களும் இருக்க மாட்டார்களா. விடிய விடிய சேம்பரில் வக்கீல்கள் இருப்பதுண்டே இது ஒரு சான்ஸ்தான்.

போய் என்ன பேசுவது, யாராய்ப் பேசுவது? கூரியர் கம்பெனி ஆளாகவா ஹேமலதா என்றா?

'குட்டி சிக்கியிருச்சு நானு நான் தாங்கலை தேடிகிட்டு நேர வந்துருக்கு என்று புறம் பேச ஏதுவாகுமோ?'

'கூரியர் கம்பெனியா பத்து பசங்களை வச்சுக் கல்யாணப் பத்திரிகை கொடுப்பாங்களே அந்த சமாச்சாரமா? கேலி வருமோ!

கோர்ட் வளாகத்தில் உள்ள விளக்கு ஒளியை மரங்கள் மறைத்துக் கொண்டிருந்தன. தூண்கள் தடுத்துக் கொண்டிருந்தன. இரவு நேரத்தில ஹைகோர்ட் பேய் பங்களா மாதிரி ஹேமாவுக்குத் தெரிந்தது.

சந்தானத்தின் சீனியர் பெயர் என்ன என்று யோசித்துக் கொண்டே ஹேமா வளாகத்தைச் சுற்றி வந்தாள்.

''என்னையா எதிர்த்துப் பேசற? எல்லாம் தெரிஞ்சு போச்சா உனக்கு ரொம்ப கெட்டிக்காரனாயிட்டியா? எனக்குத் தெரியும் யாரை எங்கே அனுப்பணும்னு'' அதட்டலாய்க் குரல் கேட்டது ஹேமா நின்றாள்.

''சார் இந்த கேஸ் மொத்தத்தில் நான் ஒர்க் பண்ணேன். நான்தான் பிரிபேர் பண்ணினேன். ஆர்க்யுமென்ட்டுக்கு அவரை அனுப்பினீங்க. அவருக்கு என்ன தெரியுமாம்?

'அட' இது சந்தானத்தின் குரல்

''அவன் உன்னைவிட நாலு வருஷம் சீனியர். உன்னைவிட அவனுக்கு எல்லாம் நல்லாவே தெரியும்.''

''அப்ப அவரையே ஹேண்டில் பண்ணச் சொல்ல வேண்டியதுதானே சார், பேப்பர் பிரிபேர் பண்றவரைக்கும் என்னை வேலைவாங்கிட்டு வாதாட அவர் போகணும் நீங்களே ''

''அப்படித்தான்யா. அவன், வாதாட நீ ஒர்க் பண்ணனும்.''

''நான் உங்களுக்குத்தான் ஜூனியர், உங்க ஜூனியருக்கு ஜூனியர் இல்லை.''

''நாளைக்கு என்னையும்தான் கேள்வி கேட்பே.நான் தானே எல்லா உதவியும் செஞ்சேன். அதனாலதானே ஜெயிச்சேன்னு பேசுவே.''

''அதுக்கு ஒத்துக்கிட்டுத்தான் உங்களுக்கு ஜூனியரா இருக்கேன்.''

''என் ஜூனியர்ன்னா நான் சொல்றத செய்.''

''நாளைக்கு இன்னொரு ஜூனியர் நேரா லா காலேஜிலேர்ந்து வருவான். அவனுக்கும் நான் சகலமும் செய்து தரணுமா?''



''யெஸ்.''

''நோ. நோ சார். நெவர்.''

''மேட்டர் சிம்பிள் சந்தானம். அந்த பேப்பரைத் தரப் போறியா இல்லையா?''

''நான்தான் ஆர்க்யூ பண்ணுவேன். இது என் கேஸ் சார்.''

''கெட் லாஸ்ட்.''

''சந்தோஷம் சார். நீங்க சௌக்கியமா இருக்கணும்.''

''நன் ஆப் யுவர் பிஸினஸ்.''

பேப்பர் கிழிபடும் ஓசை கேட்டது. பெட்டி மூடும் ஓசை கேட்டது. ஏதோ டிராயர் திறந்து மூடும் சத்தம் வந்தது.

சந்தானம் வெளியே வந்தான். ஹேமாவைக் கவனிக்காது தாண்டினான். வராண்டாவில் நடந்து படியிறங்கினான்.

பின் தொட முனைந்த ஹேமாவை யெஸ் என்று யாரோ அழைத்தார்கள்.

மிஸ்டர் சந்தானம் இருக்காரா?''

''சந்தானமா, அப்படி யாரும் இங்க இல்லையே.'' சீனியர் பேசினார்.

உலகம் கொடூரமானது. கேவலமானது. சட்டென்று உள்ளவரை இல்லாமல் செய்வது.

''தேங்க் யூ.''

''நான் ஏதாவது ஹெல்ப் பண்ணணுமா?''

''ஒரு லீகல் கன்ஸல்டன்ஸி வேணும்.''

''உள்ளே வாங்க...''

''யாரு நீங்க.''

வேண்டுமென்றே உரக்கம்பெனிப் பெயர் சொன்னான்.

''உள்ள வாங்க.''

''நோ. நான் மிஸ்டர் சந்தானம் தேடறேன்.''

''அவர் இப்ப சர்வீஸ்ல இல்லை. உள்ள வாங்க.''

''அப்ப எதுக்கு வரணும். நான் வீட்டுக்குப் போறேன். தேங்க் யூ.''

திரும்பி நடந்தான். பின்னால் உள்ளவன் ஏமாற்றத்தில் உழல்வது தெரிந்தது. வளைவு திரும்பினான். படியிறங்கினான்.

எங்கே அவன் பேசிக் கொண்டிருந்தானோ அதற்கு நேர் கீழே மோட்டார் சைக்கிளில் உட்கார்ந்து சந்தானம் அவன் வருவதைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

முகம் கறுத்திருந்தது.

''என்ன?''

''தனியா பேசணும்.''

''என்ன விஷயம்?''

''லீகல் அட்வைஸ்.''

''உங்களுக்கா?''

''இல்லை என் கம்பெனிக்கு.'' சேம்பரிலிருந்து இப்போது ஸீனியரும் அந்த ஜூனியரும் அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.



''அடடா, அந்தக் கம்பெனியா? தேங்க் யூ. தேங்க் யூ வெரிமச்.'' சந்தானம் உரக்கப் பேசினான். அவன் கை பற்றி பலவந்தமாய் குலுக்கினான்.

நடிக்கிறான் என்பது தெரிந்தது.

''உட்காருங்க.''

''கார்ல வந்திருக்கேன்.''

''அட உட்காருங்க.'' மோட்டார் சைக்கிளில உட்கார்ந்தான். அவன் அமர வண்டியைத் திருப்பினான்.

கம்பெனி காரை பின்னால் வரும்படி ஹேமா சைகை செய்தான். மோட்டார் சைக்கிள் போக, கம்பெனி கார் பின்னால் வந்தது.

□ □ □

## 17

உலகம் அவர்கள் இருவரைப்பற்றி கவலைப்படாது. அன்றைய தினத்தின் கடைசி வேலைகளை பரபரப்பாய் செய்துகொண்டிருந்தது.

ஹேமா அந்தப் பகல் முழுவதும் உழைத்திருந்தாலும் அன்றைய வேலையை மறுபடியும் புதிதாய் துவங்கியது போல உணர்ந்தான், இவனோடு ஆபிஸ்போய் இறங்கி அறிமுகப்படுத்தி மறுபடியும் பேசத்துவங்கி, இவன் விஷயத்தைப் புரிந்து கொண்டு, யோசித்து, அந்த யோசனை ஆராயப்பட்டு, சரி இன்னது செய்யலாம் என்று முடிவு செய்ய இரவு இரண்டு ஆகும். அல்லது மூன்று ஆகும்.

குடிக்கவும் உண்ணவும் ஏதேனும் உயர்தரமாய் வரவழைத்து தருவார்கள். ஆனால் உறக்கமும் கொள்ள வேண்டியிருக்கிறதே. மூளை தன்னைப் புதுப்பித்து கொள்ள வேண்டியிருக்கிறதே.

ஹேமாவுக்கு பயமாக இருந்தது. உடம்பின் அயர்ச்சி தானாது மூளையின் சோர்வு தானாது இவன் சொல்வது புரியாமலேயே சரி என்று சொல்லிவிடப் போகிறோமோ இவன் புரிந்து கொள்ளாமலேயே ஏதேனும் சொல்லப் போகிறானா என்ற கவலை வந்தது.

சந்தானம் பாட்டு பாடியபடியே வண்டியை ஓட்டிக் கொண்டிருந்தான்.

''உங்க ஏரியா வந்திருச்சு எந்த பக்கம் ஆபீஸ்இருக்கு ''அவன் கேட்டான். அவன் வழி சொன்னாள. அவர்கள் படி ஏறினார்கள். மேனேஜர் கைகுலுக்கினார்.

''டீ, காபி, கூல்டிரிங்ஸ், எது விரும்புவீர்கள்'' ஆங்கிலத்தில் கேட்டார்,

எல்லா அலுவலகத்திலும் பேசப்படும் வழக்கமான, புழுத்துப்போன உபசரிப்பு இது. சந்தானம் லேசாய் வெறுப்படைந்தவன்போல் சற்று நேரம் மவுனமாய் இருந்தான்.

''மூணுமே கொண்டாரச் சொல்லுங்க', என்றான்.

''ஜோக் அடிக்கிறீங்களா?'' மேனேஜர் கேட்டார்.

''இதுல எதுனா ஒன்னுதா வரும்னா உங்களுக்கு எது இஷ்டமோ அதை வரவழைங்க.''

மேனேஜர் ''காபி'' என்று ஆர்டர் செய்தார். அவன் என்ன விஷயம் என்று கேட்க தொண்டையை செருமிக் கொண்டார்

''எங்கள் கூரியர்க்கு எழுபத்திநாலு சிறிய கிளைகளும், அம்பத்தி ஒன்பது பெரிய கிளைகளும்'' என்று ஆரம்பித்தார். சந்தானம் கை உயர்த்தினார்.

''பார்லிமெண்ட் எப்படி நடக்கிறது என்று டெல்லிவாலாவுக்கு சொல்லித் தராதீர். உங்கள் குரியரின் மகத்



துவம்பற்றி நான் அறிந்திருக்கிறேன். உங்கள் பிரச்சனை என்ன இங்கு நான் என்ன செய்ய வேண்டும் என்பதை மட்டும் சொல்லுங்கள்.''

மேனேஜர் மெல்லியதாய் கடுப்பானார் சற்று கோபத்தோடு ஹேமாவைப் பார்த்தார்.

''பிளீஸ் நான் சொல்றேன் சார். ''ஹேமா சந்தானத்தை நோக்கித் திரும்பினான். ஒரு உரக்கம்பெனிக்கு குரியர் சர்வீஸ் செய்யக் கிடைத்திருக்கும் ஆர்டர் பற்றிச் சொன்னான். அதே நேரம் உரக்கம்பெனி தேவையற்ற கெடுபிடிகள் செய்வதை காட்டினான். நாளை உரக்கம்பெனியோடு செய்ய வேண்டிய ஒப்பந்தம் அந்த ஒப்பந்தம் செய்ய ஒரு சட்ட நிபுணர் தேவை என்பதையும் சொன்னான்.

சந்தானம் ஆழ்ந்து கேட்டான். அசையாது உட்கார்ந்திருந்தான்.

''இந்த உரக்கம்பெனிதானே இவருடைய கம்பெனி தானே. இவர்தானே ஜெனரல் மேனேஜர். இவர்தானே செகரட்டரி, எனக்கிது பெரிய விஷயமில்லை. நாளை அக்ரிமெண்ட் போடுகிறபோது நானும் வருகிறேன் அப்போது பார்த்துக்கொள்ளலாம்.''

'என்ன மிகச்சுலபமாக சொல்கிறீர்கள். அது மிகப் பெரிய அக்ரிமெண்ட்.''

''நண்பரே ஒப்பந்தம் என்று வந்துவிட்டால் ஆயிரம் ரூபாய் ஆனாலும் சரி, ஆறு கோடியானாலும் சரி, நிபந்தனை ஒன்றே ரூபாயின் அளவால் ஒப்பந்தம் பெரிதாவதில்லை முடிந்தவரை வார்த்தை சிக்கல் இல்லாத ஒரு ஒப்பந்தம் நல்லது. கடித டெலிவரிக்கு என்ன வாங்குகிறீர்கள் என்ன கணக்கு. அதை மட்டும் கொடுங்கள் போதும்.''

''எப்படி இதை சாதாரணமாக எடுத்துக் கொள்கிறீர்கள் சந்தானம்'' ஹேமாவும் கேட்டாள்.

''அந்த உரக்கம்பெனிக்கு ஆறு, ஏழு லாயர்கள் உண்டு. கம்பெனி பெரிது என்பதால் சட்ட நிபுணர்கள் அப்படி பிரித்து வைப்பார்கள். அவர்கள் லீகல் டிபார்ட்மெண்ட் என்று ஏற்படுத்தி ஆறு, ஏழு 'லாயர்களை வேலைக்கு வைத்துக் கொள்வார்கள். வழக்கு என்று வந்தால் வாதாட வெளியே உள்ள பெரிய வக்கீல்களை ஏற்பாடு செய்து கொள்வார்கள்'' ஹேமா புரிந்தது என்று தலையாட்டினாள்.

''உதாரணமாக நிலச்சம்பந்தமான வழக்கு இவரிடம் தொழிலாளி சம்பந்தமான வழக்கு இவரிடம். முதலீடு, ஷேர் சம்பந்தமான வழக்கு இவரிடம் என்று பிரியும். அதேபோல குரியர் சம்பந்தமான ஒப்பந்தங்களை தனியாய் ஒரு பெரிய வக்கீலுக்கு கொடுத்து விடுவார்கள்.''

''சரி இப்ப என்னங்கிற அதுக்கு'' மேனேஜர் தமிழுக்கு தாவினார்.

சந்தானம் சட்டென்று ஒரு நொடி அவரை உற்றுப் பார்த்தான்.

''நான் இன்னாத்த சொல்லிடப் போறேன். என்னாண்ட உட்டுறு. நான் கவனிச்சுக்கிறேன். நீ பேஜார் படாதன்றேன்.'' வெளியே கேலியாக தெரிந்தாலும் அவன் குரலுக்கு அடியில் ஒரு எரிச்சல் இருந்தது. அந்த எரிச்சல் ஹேமாவுக்கு சங்கடம் கொடுத்தது. வந்த முதல் நாளே ஏகத்தாளமாக பேசுகிறானே. கம்பனி வக்கிலாய் இவனை வைத்துக் கொள்வது எப்படி மிகவும் வறுத்தெடுப்பானோ என்று கவலைப்பட்டாள்.

ஹேமாவின் முகத்தில் ரேகை மாறுவதை சந்தானம் பார்த்து விட்டான். மெல்ல அவள் புறங்கையைத் தொட்டு 'தமாஷ்' என்றான்.



''நண்பரே நான் பேசுவதை தெளிவாகக் கேட்டுக் கொள்ளுங்கள். குரியர் ஒப்பந்தம் எனக்கு அத்துபடி இதற்கு முன் இரண்டு குரியர் ஒப்பந்தங்கள் செய்திருக்கிறேன். இதன் ஒவ்வொரு அங்குலமும் நான் அறிவேன். இது தவிர அந்த உரக்கம்பனிக்கு லீகல் அட்வைசர் யார் என்று எனக்கு தெரியும். நாளை அவரும் வருவார் என்னை ஏறிட்டுப் பார்ப்பார். சினமாவார். நான் நாலு வார்த்தை பேசுவேன். பிறகு என்னை அவர் ஆரத்தழுவிக் கொள்வார்'' சந்தானம் ஆங்கிலத்தில் பேசினான்.

''என்னையா சொல்றீர்'' மேனேஜர் கேட்டார்.

''என் சீனியர் வக்கீலுக்கு வேண்டாத வக்கில். அந்த உரக்கம்பனி வக்கில். என்னைக் கண்டதும் என் சீனியர் ஞாபகம் வரும். என்மீது கோபம் வரும். நான் அவரிடம் போய், நான் அந்த சீனியரோடு இல்லை என்று சொல்வேன். நேற்றிலிருந்து தலை முழுகிவிட்டதாய் தெரிவிப்பேன். அந்த வக்கில் என்னை கட்டிக் கொள்வார். உனக்கு என்ன உதவி வேண்டும் கேள் என்று கேட்பார். நான் உங்கள் பெயரைச் சொல்வேன்,'' அவர்களுக்கு மெல்ல புரிந்தது. சந்தானம் கைகூப்பியபடியே எழுந்தான்.

''உங்க சம்பளம் என்னான்னு சொல்லவேயில்லையே'' மேனேஜரும் கைகூப்பினார்.

''இது ரொம்ப முக்கியமா.''

''ஹெட் ஆபீஸுக்கு எழுதணுமே.''

''ஏன் நீங்க தீர்மானம் பண்ண முடியாதா?''

''நான்தான். ஆனா ஒரு வார்த்தை எழுதிடறது நல்லது'' மேனேஜர் முறுவலித்தார்.

''எங்கேயிருக்கு ஹெட் ஆபீஸ்.''

''பாம்பே.''

''பாம்பேயில ஒரு வக்கீலுக்கு என்ன பீசோ அதை தரச்சொல்லுங்க.''

''மெட்ராஸ் கொஞ்சம் சீப்'' மானேஜர் பல் காட்டினார்.

''எது சீப்பு. சுத்தரிக்காயா, வக்கீலா.''

''இரண்டும்!' என்று சொல்லத் துவங்கிய மேனேஜரை ஹேமா கை உயர்த்தி அடக்கினாள்.

ஹெட் ஆபீஸுக்கு போன் பண்ணி கேட்டுச் சொல்லுங்க சார்.''

''மெல்ல சொல்லுங்க போறும்'' சந்தானம் அறையைவிட்டு வெளியேறினான். ஹேமா ஓடிப்போய் ஒப்பந்த சம்பந்தப்பட்ட பேப்பர்களை எடுத்து வந்தாள்.

''ஹேமா எப்படி போகப் போறே'' மேனேஜர் கேட்க,

''ஆட்டோவுல சார்'' பதில் சொன்னாள்.

''நான் டிராப் பண்றேன் ஹேமா. கீழ் குரலில் சந்தானம் அவளுக்கு மட்டும் கேட்கும்வண்ணம் பேசினான்.

''சார். நான் லாயரோட போயிடறேன் சார். அவர் என்னை வீட்ல டிராப் பண்ணுவாரு.''

''சரி, அப்ப இருந்து நான் ஹெட் ஆபீஸ் பேசிட்டுப் போயிடறேன். நீ கிளம்பு.''

வெளியே சென்னை வெகுவாய் அடங்கியிருந்தது. வெம்மை குறைந்து குளிர்காற்று வீசத்துவங்கியது.

''சோம்பேறி'' சந்தானம் திடீரென்று கத்தினான்.

''என்ன, யாரு'' ஹேமா வியப்புடன் கேட்டாள்.

''உங்க மேனேஜர்''



''ஏன்''

''கடைசிவரைக்கும், காபியோ, டீயோ, கூல்டிரிங்கோ கொடுக்கலேயில்லை. சீனியரோட கத்திட்டு வந்தனா தலைவலி மண்டையை பிளக்குது.''

''லெப்ட்ல திருப்புங்க, லெப்ட்ல திருப்புங்க''ஹேமா கத்தினாள். மோட்டார் சைக்கிள் சடேரென்று இடது பக்கம் திரும்பியது. பின்னால் வந்த ஸ்கூட்டர்காரன் அலைகழிந்தான். பிரேக் போட்டு நின்று திட்டினான்.

''உங்க வீடு அந்தப்பக்கம் தானே, ஏன் இப்படி திருப்பச் சொன்ன''

''காபி சாப்பிட்டு போலாம்''

''எங்கே''

''சரவணாஸ்ல''

''மணி பத்தாயிடுச்சு.''

''சரவணா பதினொரு மணிவரைக்கும் திறந்திருக்கும்.''

லஸ் டி ராதாக்ருஷ்ணன் சாலைக்குத் திரும்பியது. திறந்தவெளியில் பத்து பதினொரு ஸ்கூட்டர் நின்றிருந்தன. மழை வருவதுபோல் ஈரக்காற்று வீசியது. கூட்டம் சற்றுக்குறைவாக இருந்தது. மரத்தடுப்பு அருகே உட்கார்ந்து கொண்டார்கள்.

''பதினாலு இட்லி நெய் சாம்பார், ஆப்பம் தேங்காய்ப் பால் இது ரெண்டும் ரெண்டு செட், ஒரு பிரைட் ரைஸ். இரண்டு டிகிரி காபி'' ஹேமா ஆர்டர் செய்தாள்.

''எனக்கு காபி போதும் ஹேமா''

''டின்னர் முடிச்சுடலாம் சந்தானம் எனக்குப் பசி.''

அவர்கள் இருவரும் சற்றுநேரம் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டார்கள்.

"அது இன்னா இடீர்னு சந்தானம் ஞாபகம் வந்திடுச்ச." அவன் சாதாரணமாக கேட்டாலும் அவனுக்கு நடிக்கவேண்டும் என்று தோன்றியது.

"அன்னிக்கு ஆட்டோல ஏத்தி பின்னாலயே வண்டி ஓட்டியாந்து பாதுகாப்பு கொடுத்தீங்க இல்ல அதான் ஒக்காயிடுச்ச" நாணிக்கொண்டே சொன்னான்.

அந்த நடிப்பை அவன் சட்டை செய்யவில்லை. அவனையே லேசான ஆச்சர்யத்துடன் பார்த்துக்கொண்டிருந்தான்.

"சீனியர்கிட்ட சண்டை போட்டுட்டு வெளியே வர போது, நம்ம முகரைக்கு எவன் கேஸ் கொடுப்பான். இனி பொழப்பு எப்படி ஓடும்னு கவலைப்பட்டுகிட்டே தான் வந்தேன். எங்கனா இட்லி கடை ஆரம்பிச்சுடலாம்னுகூட நினைச்சேன். இன்னி தேதிக்கு டாக்டர்க்கோ, இன்ஜினியர்க்கோ, வக்கீலுக்கோ காசு வர்றதில்லை. ஹோட்டல் தொழில்தான் நூத்துக்கு நூறு லாபம். இந்த சரவணா ஹோட்டல் ஓனர் ராஜகோபால் சாதாரணமா இருந்தவர் தான்தெரியுமா. இன்னிக்குஏழெட்டு பிராஞ்ச் ஓகோன்னு ஆயிட்டார்."

"மிஸ்டர் உழைச்சா எந்த தொழில்லயும் முன்னுக்கு வரலாம்."

"வக்கீல் தொழில்ல முடியாதுங்க"

"ஏன்"

"ஏகப்பட்ட கும்பல் காம்படிஷன்"

"இருந்தாலும் டக்குனு ஒரு கேஸ் கிடைச்சுடுச்சில்லே"



"அதான் ஆச்சர்யம் ஹேமா. அதுவும் எங்க சீனியர் கண்ணெதிர, அவர் காதுபட இன்னொரு கேஸ் கிடைச்சது பாரு உனக்கு கோவில் கட்டி கும்பிடணும் ஹேமா."

"பக்தா நான் சொல்லுகிறபோது, நான் சொல்லுகிற இடத்தில், நான் சொல்லுகிற விதமாய் நீ எனக்கு கோவில் கட்டுவாயாக. அப்போது உலகோர் கை கூப்பி நிற்பர். தேவர்கள் பூமாரி பொழிவர். அதுவரை இடைவிடாது என் நாமத்தையே சொல்லிக் கொண்டிரு. நாம சங்கீத்தனம். பாவ விமோசனம்" டம்ளர் நீரில் விரல் தோய்த்து அவன் மீது தெளித்தாள். அவன் அப்போதும் அசையாமல் அமர்ந்திருந்தான்.

"என்ன பீஸ் வாங்கறதுன்னே எனக்கு தெரியலை ஹேமா, பாம்பேல வக்கீலுக்கு பீஸ் ஜாஸ்தி, அந்த பீஸ் எனக்கு தருவாங்களா தெரியலை. பீஸ் கம்மியாயிருந்தா கூட பரவாயில்லை ஹேமா, உங்க லீகல் அட்வைசரா நான் இருக்கேன். என் பீஸ்ல உனக்கு ஏதாவது கமிஷன் தரணும்னாலும் தரேன். எவ்வளவு அதிர்ஷ்டம் பார்த்தியா வேலை வேணாம்னு உதறிட்டு வெளியே வரேன். இன்னொரு வேலை நிக்குது. ஹேமா எங்க சீனியரை உட்டுப்போகணும்னு நான் எத்தனை தடவை ட்ரைப் பண்ணியிருக்கேன் தெரியுமா. பல அவமானங்கள், பல சோதனைகள் இப்ப போயிடலாம், அப்ப போயிடலாம்னு தள்ளிப் போட்டுகிட்டே வந்தேன். நேத்திலேர்ந்து டென்ஷன் ஆரம்பிச்சு; இன்னிக்கு டமால்னு வெடிச்சுடுச்சு. சர் தான் போடான்னு முடிவு பண்ணி சண்டை போடற நேரம் நீ என்டராயிட்ட அவரைவிட்டா வேற நாதியில்லைனு எங்க சீனியர் நினைச்சிருந்தார். டக்குனு நீ வந்து கூப்பிடவே அவர் மூஞ்சி பேய் அடிச்சாப்பல ஆயிடுச்சு."

தனக்குதானே பேசிக் கொள்பவன் போல் சந்தானம்

ஒரு வியப்பில் பேச ஹேமா அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

''இந்த அக்ரிமெண்ட் வேலை சரியா பண்ணீங் கன்னா தென்னிந்தியாவுல இருக்கிற எங்க எல்லா பிராஞ் சுக்கும் நீங்களே லீகல் அட்வைஸரா இருக்கலாம். தனியா பீஸ்தராத, பெருசா ஒரு சம்பளம் போட்டு ஆபீஸ்ல உட்கார வெச்சுடுவோம்.''

''நான் ஒத்துக்க மாட்டேன் ஹேமா. ஒன்னு நான் எங்க சீனியரைவிட பெரிய வக்கிலாகனும் இல்ல, எங்க சீனியரை வக்கிலா வைச்சுக்கற அளவுக்கு பெரிய ஆளாக னும். லீகல் டிபார்ட்மெண்ட்னு ஒரு கம்பனியில இருக் கிறது கிட்டதட்ட வக்கில் குமாஸ்தா வேலை. பெரிய வக்கிலுகிட்ட கைகட்டி காத்திண்டு இருக்கிற வேலை. நான் செய்ய மாட்டேன். ஒன்று வக்கிலா இருப்பேன். இல்ல ஹோட்டல் வைப்பேன்.''

உணவு வந்தது அவன் பேச்சை நிறுத்தினான்.

''ஹேமா, ஹோட்டலோ, வக்கிலோ சாவறமட்டும் உன்னை மறக்க என்னால முடியாது. என் மரியாதை சரியுற நேரத்துல என்னை தூக்கிவிட்ட பார் உன்னை மறக்கமுடியாது.''

''நான் உதவி பண்ணறதுக்குன்னு வரலை சந்தானம் உதவி கேக்கறதுக்கு வந்தேன்'' ஹேமா நிதானமாய் பேசினாள்.

'எனக்கு அது பத்தி அக்கறையில்லை. ஏன் என் னைத் தேடினு வந்த. அதுவும் அந்த நேரமா பாத்து ஏன் வந்தான்னவோ ரொம்ப சந்தோஷமா இருக்கு ஹேமா.''

''எமோஷனலான ஆளுதான் நீங்க''



''யாரு இல்லை எல்லாரும் எமோஷனல்தான்; ரெகு லேட்டர் போட்டு கன்ட்ரோல் பண்ணிக்குவோம். எல்லாம் என் காலுக்குகிழேன்னு கம்பீரமா நிப்பான், அப் புறம் தனியா போய் ஜெயிச்சுட்டேன். ஜெயிச்சுட் டேன்னு குதிப்பான். உன் கம்பெனியில எனக்கு குதிக் கனும்னு தோணிச்சு. சரவணாஸ்லயும் குதிக்கனும்னு தோணிச்சு. அடக்கிகிட்டேன்.

''எப்பதான் குதிப்பீங்க'' அவள் விளையாட்டாய் கேட்டாள்.

''உன்னை உங்க வீட்டில விட்டுட்டு. நீ வீட்டுக் குள்ள போனபிறகு, கேஸ் கிடைச்சிடுச்சு, கேஸ் கிடைச் சிடுச்சு. டாய் சீனியர் எனக்கு கேஸ் கிடைச்சிடுச்சுன்னு கத்துவேன். அத்தினி சந்தோஷம்.''

வாழ்க்கை வியப்பானது. மிகமிக வியப்பானது. ஹேமா சொன்னாள்.

இத்தனைக் கோடி ஆண்டுகள் வாழ்ந்தும், மனித னால் வாழ்க்கையின் சூட்சுமத்தை கண்டுபிடிக்க முடிய வில்லை.

''இதே சமயம் நாளைய வேலைப் பற்றிய கவலை யும் எனக்கு வருகிறது சந்தானம்.''

''எனக்கு வரவில்லை ஹேமா இது எனக்கு தெரிந்த வேலை. என் சீனியரே எதிரே வந்து நின்றாலும் கண்ணில் விரல் விட்டு ஆட்டுவேன்.''

''உரக் கம்பெனி எங்கள் எதிரி அல்ல கஸ்டமர்''

'பகை என்று தீர்மானித்து விட்டால் பிரச்சினையே இல்லை. முறுக்கிக் கொண்ட உறவுதான் பிரச்சினை. உரம் கெட்ட நட்புதான் ஆபத்து. உரக்கம்பெனியை நான் கவனமாக கையாளுவேன் கவலையை விடு.''

அவர்கள் உணவு முடித்து காபி குடித்தார்கள். காபி குடித்துவிட்டு காசு கொடுத்தார்கள்.

மோட்டர்பைக் அவர்களை சுமந்துகொண்டு ஹேமாவின் வீடு நோக்கிப் போயிற்று.

ஹேமாவின் அம்மா வராண்டாவிளக்கை அணைத்துவிட்டு, வனவாச நேரத்தில், இந்தமாதிரி இருட்டான சமயத்தில் ராமரும் சீதையும் என்ன பேசிக் கொண்டிருப்பார்கள். எவ்விதம் அமர்ந்து பேசிக் கொண்டிருப்பார்கள் என்று கற்பனை செய்து கொண்டிருந்தாள்.

மிகவும் கம்பீரமான கணவன். பிரியத்தின் உச்சியில் நின்ற மனைவி. தாவரங்கள் சூழ்ந்த சில்லென்ற காடு, கண்ணுக்கு தெரியாத தூரத்தில் காவலாய் கொழுந்தன் ராமரும், சீதையும் என்ன பேசுவார்கள்.

ஹேமாவின் அம்மா சரஸ்வதியின் காதுக்குள் ராமரின் குரல் கேட்டது.

□ □ □

# 18

நீங்கள் ஒரு நல்ல கணவன் மனைவி என்று அந்த கணவன் மனைவிக்கு தெரிந்தால் போதுமா ஊர் சொல்ல வேண்டும். அடடா என்ன ஒற்றுமை என்று பாராட்ட வேண்டும்.

ஆனால் ராமனும் சீதையும் காட்டில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆள் அரவமே இல்லாத காட்டில் யார் பாராட்டுவார்கள். கொழுந்தனோ பேச மாட்



டான். கூப்பிட்டு கேட்டால் ஒழிய பதில் சொல்ல மாட்டான். ஜனங்களையே பார்க்காமல் ராமருக்கும், சீதைக்கும் எத்தனை கஷ்டமாக இருந்திருக்கும்.

பிறவியிலேயே காட்டுவாசியாக இருந்தால் பரவாயில்லை. ராமரும் சீதையும் நகரவாசிகள். அரச குடும்பத்தினர். இடைவிடாது ஜனங்களுக்கு நடுவே வாழ்ந்தவர்கள். ஜெய கோஷத்துக்கு நடுவே நடந்தவர்கள். தினந்தோறும் மாலையும், மரியாதையும் பெற்றவர்கள். விழாக்களை தலைமையேற்று ரசித்தவர்கள்.

அவர்கள் கேட்கவே பாட்டு, அவர்கள் பார்க்கவே நடனம், அவர்கள் சிரிக்கவே கோமாளி விளையாட்டுக்கள் என்று வாழ்க்கையை நடத்தியவர்கள் சட்டென்று எல்லாம் மறைந்து இடைவிடாது சில் வண்டின் ரீங்காரம் உள்ள காட்டிற்கு வந்து விட்டார்கள். வணங்கவோ, வாழ்த்தவோ, பாராட்டவோ ஆளில்லாத வனத்துக்கு வந்து விட்டார்கள்.

யாராவது வந்து பேசினால் நன்றாக இருக்கும் என்று அவர்களுக்கும் தோன்றியிருக்காதா? அப்படி தோன்றியிருந்தால் என்ன செய்திருப்பார்கள். இல்லாததை இருப்பதாய் நினைத்துக் கொண்டிருப்பார்கள் கற்பனை செய்து இருப்பார்கள்.

கொஞ்சம் மேடான இடத்தில் சிம்மாசனம் மாதிரியான பாறையில் உட்கார்ந்து எதிரே மிகப் பெரிய அரச சபை இருப்பதாய் சீதை நினைக்க அதை ராமர் புரிந்து கொண்டு அந்த சபையை நோக்கி ஏதேனும் பேச ஆரம்பிக்கலாம். கை உயர்த்தி எதிரே உள்ள புல்வெளியை ஆசிர்வதிக்கலாம், இங்கே இருக்கிற எல்லோரும் சௌக்கியமா என்று ராமர் கேள்வி கேட்கலாம். எல்லோரும் என்றால் எல்லா ஜீவராசிகளும் என்று அதில் அர்த்தம் தொனிக்கலாம்.

அந்த மாலை வேளையில் ராமரை நோக்கி முயல், ஆமை, குயில், மணிப்புறா, ஓணான், வெட்டுக்கிளி, நத்தை, குருவி, வண்டு என்று ஏகப்பட்ட உயிரினங்கள் வந்து உட்காரும். சீதைக்கு ஒரே குதூகலம்.

அயோத்தியின் அரசனுக்கு இவை எல்லாம் கட்டுப் பட்டவைதானா, இவையெல்லாமும் பிரஜைகள்தானா• இவைகளை குசலம் விசாரிக்கவும் இவைகளின் குறைகள் தீர்க்கவும் என் புருஷனான ஸ்ரீ ராமச்சந்திரமூர்த்திக்கு தெரியுமா?

''மரம் கொத்தி எங்கே அதோ அங்கு உட்கார்ந்திருக் கிறது.''

''மீன்கொத்தி எங்கே இதோ வந்து இறங்குகின்றது.''

''மயில் குரங்கெல்லாம் வராது போலும் அவை பெரிய உருவங்கள் இவை சிறிய உருவங்களுக்கான கூட்டம். இங்கே மிகப்பெரிய உருவம் நாரை. பஞ்சவர்ணகிளி.''

புருஷனும் மனைவியும் அதிகம் அசையாமலிருக்க சற்று தொலைவே இருந்த பிராணிகள் கூட்டம் மெல்ல மெல்லஅருகே வந்தது. அணில் பிள்ளைகள் தான் முதலில் தொட்டன. பிறகு முயல்கள். பிறகு பூனைகள், பிறகு ஆமைகள் என்று மெல்ல மெல்ல நெருங்கி வந்தன, ராமருடைய கருணையை பார்வையாய், பேச்சாய். தொடலாய் அனுபவித்தன. ஒரு அணில் எலுமிச்சை பழத்தின் அளவுக்கு ஒரு நாவப்பழத்தை கொண்டு வந்து கொடுத்தது. ராமர் அம்பின் நுனியால் கொட்டை நீக்கி அதை சீதையிடம் கொடுத்தார். சீதை அதை உள்ளங் கையில் வாங்கி அப்படியே வாயில் போட்டுக் கொள்ள. காட்டில் உள்ள அத்தனை அணில்களும், சந்தோஷக் கூச்சல் எழுப்பின.

''அட நாமும் எதாவது கொண்டு வந்து கொடுத் திருக்கலாமே'' முயல்கள் தவித்தன. ஆமைகள்



வெட்கத்தால் சுருங்கின. ஒரு பஞ்சவர்ணக்கிளிக்கு ரோஷம் வந்து தன் பேடையோடு ஜில்லென்று பறந்து போயிற்று.

போன வேகத்திலேயே இரண்டும் திரும்பி வந்தன' பெரிய திராட்சைக் கொத்து, முழங்கை உயரக் கொத்து, மெல்ல சிறகடித்து சீதாதேவிக்கு முன்னால் இறக்கின. தேவி கணவனைப் பார்த்தாள் அவன் சரி என்றதும், உள்ளங்கை நிறைய உதிர்ந்து புருஷனிடம் கொடுத்தாள். புருஷன் போதும், போதும் என்று சொல்ல பாதி ராமர் கையிலும், பாதி திராட்சை சீதை கையிலும் இருந்தது. புருஷனும் மனைவியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். ஒன்றாய் திராட்சயை வாயில் போட்டுக் கொண்டார்கள்.

கிளி கூட்டத்திற்கு ரெக்கை படபடக்கிற சந்தோஷம். விதவிதமான கிளி கூச்சல்களில் காடே கலங்கியது. கிளிகள் வானத்தில் கரணம் அடித்தன. தரைக்குப் பாய்ந்தன. மேலேழுந்தன. வானத்தில் வளையமிட்டுப் பறந்தன. அந்த வளையத்துக்குள் கோர்த்தது போல இன்னொரு கிளி வளையமும் உருவாக்கின. ஆமைகள் சரிவிற்கு ஒடி போய் புரண்டு பார்த்தன. முயல்கள் எழுந்து நின்றன. ராமர் கை உயர்த்த மறுபடியும் அமைதி வந்தது.

கிழங்கு தோண்ட முயல்கள் ஒட ராமர் தடுத்தார். கைதட்டி அருகே அழைத்தார். சகல பிராணிகளும் அவ ரையே பார்த்துக் கொண்டிருந்தன.

ஒரு பெரிய நத்தை முன்னேறியது.

''எனக்கு என்ன கொடுக்கிறதுன்னு தெரியலை. என் னால இதுதான் தரமுடியும்னு'' சிரமப்பட்டு முதுகில இருக்கிற ஒட்டை விட்டு வெளியே வந்தது.

''இந்த ஒடு எடுத்து தலை கொண்டைல வச்சுக்கலாம். மார்ல மாலையா போட்டுக்கலாம், உங்க ப்ரண

சாலையில அழகா தொங்க விடலாம்'' என்று கருண்டபடி சொன்னது. தன்னிடம் தருவதற்கு எதுவுமில்லாமல் தன்னையே தந்தது. ராமர் அந்த நத்தையை கருணை யுடன் பார்த்தார். ஒட்டை எடுத்து வைத்துக் கொண்டார். எல்லா உயிரினங்களும் நத்தையை எட்டி எட்டி பார்த்து வணங்கின. பிராணிகளின் பார்வை படப்பட நத்தை தியான நிலைக்கு போனது அசையாது நின்றது.

ஓணானுக்கு எதைக்கொடுப்பதென்றே தெரியவில்லை. அடர்ந்த புதர்களுக்குள்ளே அங்குமிங்கும் ஓடியது. சின்ன சின்னதாய் நகம் அளவுக்கு மலர்ந்ததாய் பல்வேறு வித பூக்களை நாக்கு நீட்டி கொய்தது. சிகப்பு நீலம்,மஞ்சள். வெள்ளை என்று பறித்து. ஒரு கொத்தாக்கி சீதையின் காலடியில் வைத்தது. சீதாதேவி அந்த மலர்களை வாரி முகர்ந்து பார்த்தாள். உடம்பு தூக்கி தலை நிமிர்ந்து நின்ற ஓணான் தலையில் மெல்ல உதிர்த்தாள் எல்லா பிராணிகளும் அதன தன் குரலில் சந்தோஷம் தெரிவித்தன. அந்த ஓணானின் உடம்பு. சிகப்பாய், நீலமாய், மஞ்சளாய் வெள்ளையாய் மாறியது. ஒவ்வொரு பக்கமும் ஒவ்வொரு வண்ணத்தில் மின்னியது.

நெடு நேரம், சபையோர்களை விதம், விதமாய் கொஞ்சி சந்தோஷமடைய செய்து விட்டு கணவனும், மனைவியும் பர்ணசாலை திரும்பினார்கள். அந்தி சாயும் நேரத்தில் அந்த வனாந்திரத்தில் ராமா, ராமா என்று உயிரினங்கள் விதவிதமாய் குரல் எழுப்பின ஒலிகள் வெவ்வேறாக இருந்தாலும் உள் அர்த்தம் ராமநாம மாகவே இருந்தது.

அன்புள்ள அரசனுக்கு உலகம் முழுதும் அரச சபை தான். உயிரினங்கள் எல்லாம் குடிமக்கள்தான் மனிதர்கள் மனிதர்களோடுதான் பேச வேண்டுமா என்ன உள்ளே



கருணை இருப்பின் உயிரினங்கள் எல்லாவற்றோடும் பேசலாம் உறவாடலாம்.

சரஸ்வதி தலையை சிலுப்பிக் கொண்டாள் தன் கற்ப னையை தானே மெச்சிக் கொண்டாள்.

ராமாயணத்தில் என்ன எழுதியிருக்கோ தெரியலை. எழுதினதெல்லாம் மனசுல பதியவும், பதியலை. நானா எனக்குள்ள ஒரு ராமாயணம் கற்பனை பண்ணின்டு வரேன். இந்த ராமாயணம் என் மனசுக்குள்ளேயே இருக் கும். இன்னொரு மனுஷாளுக்கு தெரியாமலேயே இருக் கும். ஆனாலும் இதுவும் ராமாயணம்தான்.

சரஸ்வதிக்கு எதிரே இருப்பது தெரியவில்லை. கண் கள் எதிரே பார்த்துக் கொண்டிருந்தாலும் பார்த்த பொருளை மனம் பற்றிக்கொள்ளவில்லை. பர்ணசாலைக் குள் போன ராமரும் சீதையும் என்ன செய்வார்கள் என்று யோசித்து கொண்டிருந்தாள். கீழே மோட்டார் சைக்கிள் சத்தம் கேட்டது.

ராமரும் சீதையும் போல அழகாய் அமைப்பாய் ஆணும், பெண்ணுமாய் இருவர் இறங்கினார்கள்.

''இப்படி ஒரு வாய்ப்பு கொடுத்ததற்கு மிகுந்த நன்றி ஹேமா'' சந்தானம் கை நீட்டினான். ஹேமா பற்றிக் கொண்டாள்.

நாளை ஒப்பந்தம் நன்று முடிய என் அட்வான்ஸ் வாழ்த்துக்கள். ஒன்றுபடுவோம், வெற்றி பெறுவோம். ஹேமா அவன் கையை குலுக்கினாள். ஒருவரை ஒருவர் பற்றியபடி சிறிதுநேரம் நின்றார்கள். அந்த தொடலில் நட்பு மட்டுமே இருந்தது.

மேலே இருந்து பார்த்துக் கொண்டிருந்த சரஸ்வதி சட்டென்று சுயநினைவுக்கு வந்தாள்.

"யாரது ஹேமாவா, எதற்கு எவன் கையையோ பற்றிக்கொண்டு நிற்கிறாள்" ஆச்சர்யப்பட்டாள். சரஸ்வதிக்கு கோபம் வரவில்லை மாறாய் சிரிப்பு வந்தது.

இந்த மாதிரி உங்கண்ணா நின்னத பார்த்துட்டு தானே நீ கத்தின, இப்ப நீ நிக்கறியே கேள்வி வந்தது.

ராமரையும், சீதையையும் விலகி நின்று பார்ப்பது போலவே தன் மகளையும் அந்த அன்னியனையும் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"வாழ்க்கை நம்ம ரெண்டு பேரையும் சேர்த்து வைக்கப் போவுது ஹேமா, நான் லவ், கிக்குன்னுல்லாம் பேசலை, உன்னை மாதிரி அழகான பொண்ணை பார்த்ததேயில்லைன்னு பொய் சொல்லப் போறதில்லை. நீயில்லைன்னா செத்துருவேன்னு டயலாக் அடிக்கப் போறதில்லை. உன்னை பார்த்ததிலேருந்து இடைவிடாம ஒரு குரல். இவதான், இவதான்னு, என் மனசிலே தோணினத நான் சொல்றேன். பதிலுக்கு ஏதாவது சொல்லுனு நான் எதிர்பார்க்கவேயில்லை, நான் வரட்டுமா? அவன் கையை விடுவித்துக் கொள்ள முயல ஹேமா இறுக்கிப் பற்றிக்கொண்டாள்.

"உலகத்துல கிடைக்கறது சிரமமான விஷயம் என்ன தெரியுமா சந்தானம், நல்ல பிரண்ட்ஷிப். நல்லவனா ஒரு சினேகிதன் கிடைக்கறது ரொம்ப கஷ்டம். அந்த பிரண்ட் கெட்டிக்காரனா இருந்தா அதிர்ஷ்டம். நல்லவனாகவும், கெட்டிக்காரனாகவும் இருக்கிற ஒரு சினேகிதனை பெண்கள் ரொம்ப சீக்கிரமா புருஷனா மாத்திடுவாங்க. ஐ லவ் யுன்னு சொல்லிடுவாங்க. காரணம் என்ன தெரியுமா புருஷன் நல்ல சினேகிதனா இருக்கணும்னு ஆசைதான்."

"ஹேமா அவனைத்தாண்டி வெகு தொலைவில் பார்த்தாள்.



"நீங்க நல்லவர்னு தெரியும். உங்க கெட்டிக்காரத்தனத்தை நாளைக்கு புரூஃப் பண்ணுங்க. என் மனசுக்குள்ள ஏகப்பட்ட திட்டம் இருக்கு. அவசரப்பட்டு நானோ, நீங்களோ லவ்யூன்னு சொல்ல வேண்டாம். ரொம்ப வியாபாரத்தனமாவும் பழகவேண்டும். எனக்கு உங்க மேல ஒரு ஈர்ப்பு இருக்கு அடிக்கடி நானும் உங்களைப் பத்தி யோசனை பண்றேன். அழகு உயரம் தமாஷ் இது மட்டும் பார்த்து காதல் வராது. வாழ்க்கையில முன்னேறணும்கிற ஆர்வம் இருக்கணும். அதுக்காக ராப்பகலா உழைக்கத் தெரியணும். நேர்மையோட பணம் சம்பாதிக்கத் தெரியணும். நாம இன்னும் பேசி பழகிப் பார்ப்போம். பிறகு அவசியம்னா லவ் யூ சொல்வோம். என்னைப் பத்தியும் மால்ல மால்ல புரிஞ்சுக்குங்க. என்னைப் பத்தி நானே உங்களுக்கு ஒரு தகவல் சொல்றேன். எனக்கு சமைக்கத் தெரியாது. ஒரு வேளை என்னை கல்யாணம் பண்ணிண்டா நீதான் சமைக்கணும்."

அவன் வாய் விட்டுச் சிரித்தான்.

"எனக்கு நல்லா சமைக்கத்தெரியும். ரசம் செய்றதில நான் எக்ஸ்பர்ட். ஞாயிற்றுக்கிழமை நண்பர்களுக்காக நான் மசால்தோசை வார்த்துக் கொடுப்பேன். அடுத்த தடவை மசால்தோசை போது உன்னைக் கூப்பிடறேன்."

அவள் சிரிப்பு அவனையும் தொற்றிக் கொண்டது.

நெற்றியோடு நெற்றி இடித்து சிரித்துக் கொண்டார்கள். மாடி வராண்டாவிலிருந்து பார்க்க அவர்கள் இருவரும் முத்தமிட்டுக்கொண்டதுபோல்தான் இருந்தது.

சரஸ்வதி திடுக்கிட்டாள். கோபமானாள். "ஊருக்கெல்லாம் ஒரு நியாயம். உனக்கு ஒரு நியாயமா. இப்ப நீ தெருவில முத்தம் கொடுக்கறியே. உன்னைக் கேட்பாரில்லே

லையா, நீ மேல வா' உன்னை உண்டு இல்லைனு பண்ணிடறேன்.

எழுந்து போய் கதவைத் திறந்துவிட்டு மறுபடியும் வந்து வராண்டாவில் உட்கார்ந்து கொண்டாள்.

மகள் வீட்டுக்குள் நுழையும் சத்தம் கேட்டது. ''அம்மா'? என்கிற விளிப்பு கேட்டது. அவள் வீடு முழுவதும் அலையும் சப்தம் கேட்டது.

ஹேமா வராண்டாவை எட்டிப் பார்த்தாள். பயந்து போய் பின் வாங்கினாள்.

''அம்மா.''

''என்ன''

''இங்கியா உட்கார்ந்திருக்கே''

''வேற எங்க உட்கார்ந்திருக்கறது''

''இருட்டில உட்கார்ந்து என்னம்மா பண்ணுற''

''சும்மா உலகத்தை பார்த்தினுருக்கேன்''

''இங்கேயிருந்து உலகம் முழுக்க தெரியறதா என்ன''

''இந்த தெருதான் என் உலகம். இந்த தெரு முழுக்க தெரியறது. யார் வரா, யார் போறா, யார் யாரோட பேசறா, என்ன பண்ணுறா எல்லாம் தெரியறதே'.

''என்னம்மா சொல்ற''

''பார்த்ததை சொல்றேன்''

''என்ன பார்த்தே''

''எவனோ எவளுக்கோ முத்தம் கொடுத்துனுருக்கான், நடு ரோட்டில''

ஹேமா முத்தம் கொடுக்கவில்லை. முத்தம் கொடுக்க வேண்டும் என்கிற எண்ணம் கூட இல்லை. அம்மா தன்னைதான் குறிக்கிறாள் என்று தைக்கவே இல்லை.



''எந்த ஜோடி, யார் முத்தமிட்டுக் கொண்டது. அண்ணாவா, வினோலியாவா ஆவலாக எட்டிப் பார்த்தாள்.

''மோட்டார் சைக்கிள் போயிடுத்து'' அம்மா குரலின் இளக்காரம் அப்போதுதான் தைத்தது.

என்னைத்தான் சொல்கிறாளா நான் எங்கே முத்தமிட்டேன். வக்கீலுடன் கைக் குலுக்கினாள். அது காதலா, என்ன அபத்தம் அது.

கிட்டதட்ட காதல் என்று சொன்னவனை விலக்கி நிறுத்தி வைத்த என்னையா இளக்காரமாய் பேசுகிறாய்;

ஹேமாவுக்கு கோபம் வந்தது.

''எங்க மோட்டார் சைக்கிள் நின்னது.''

''அங்கத்தான்''

''மோட்டார் சைக்கிள்ல இறங்கினவா முத்தம் கொர்டுத்துண்டாளா''

''ம்ம்''

''நீ பார்த்தியா''

''பார்த்தேன்''

''இறங்கினது நான்''

''சரி''

''இறக்கிவிட்டது என் கம்பெனி வக்கீல். பேர் சந்தானம். எம். ஏ. பி. எல்.''

''சரி''

''என்ன சரி''

''நீ என்ன சொன்னாலும் சரி''

''மிண்டல் 'பண்றியா. என்ன உன் புள்ளைன்னு நினைச்சுண்டியா''

''கை குலுக்கினேனே''

''ஆமாம் கை குலுக்கினோம். நாளைக்கு அவன் தலையெழுத்தை நிர்ணயம் பண்ற வேலை. நன்னா இருன்னு கை குலுக்கினேன்.''

ஹேமா இடுப்பில் கை வைத்து பேசினாள்.

''அந்த வேலையை அவனுக்கு வாங்கி கொடுத்தது நான், அதனால அவன் கைகுலுக்கினான்''

''எதுக்கு தொடணும். நன்னா இருன்னு சொன்னா போறாதா. தீங்களால கைக்குலுக்கினதோட நிக்க முடியறதா, எல்லாம்தான் தாண்டி போறேள்.''

''என்ன எல்லாம் தாண்டினோம். என்ன உளர்றே.''

''சரிதான் போடி'' சரஸ்வதி சிடுசிடுத்தாள்.

''நான் முத்தம் கொடுத்தேங்கறியா.''

''ஆமாம்''

''அதை நீ மேலேருந்து பாத்தியா.''

''ஆமாம்.''

''நீ ஒரு பைத்தியம்'' ஹேமா இறைந்தாள்.

சரஸ்வதி அவளையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

''ரோடுல ராமர் போறாரான்னு பாக்கிற பைத்தியம். ராமரை உள்ள கூப்பிட்டு உப்புமா பண்ணித்தர்ற பைத்தியம். நீ எதையாவது சரியா பார்க்கறியா. எதையாவது சரியா புரிஞ்சுக்கிறியா. எதைப் பத்தியாவது சரியா பேசறியா, நீ இப்படியே போனாக்கா புடவையை கிழிச்சுனு நிப்பே. என்னை ராட்சசியா நினைச்சு தட்டு முட்டு சாமானை தூக்கி அடிப்ப'' மூச்சு எகிற ஹேமா கத்தினாள்.



''அங்க நின்னு கை குலுக்கினது நான். ஆனா நான் முத்தம் கொடுக்கலை. கொடுக்க மாட்டேன். உம்புள்ளைய நான் சொல்லிட்டேன்னு எம்மேலே அபாண்டமா பழி போடறியா'' ஹேமாவுக்கு கண்கள் சிவந்தன.

''ஒன்று ஞாபகம் வைச்சுக்கோ நீயும் வேண்டாம், உன் புள்ளையும் வேண்டாம்னு தூக்கிப் போட்டுட்டு போறதுக்கு ரொம்ப நாழியாகாது. ஒரு தடவை அப்படி தூக்கிப் போட்டேன். செத்தாலும் திரும்பி வர மாட்டேன்.''

அவள் கூச்சலை உற்றுப் பார்த்துவிட்டு சரஸ்வதி வெறுப்போடு சிரித்தாள். அப்பனை அப்படியே உரித்து வைத்திருக்கிறது என்று நினைத்துக் கொண்டாள்.

''மிரட்டாதடி நான் வாழ்க்கையில ஏகப்பட்ட மிரட்டல் பார்த்துட்டேன், உன் மிரட்டல் என்னை ஒன்றும் பண்ணாது. போறவாளை யார் தடுக்க முடியும். போய்டுவேன், போய்டுவேன்னு பயமுறுத்தினா போயேன். எனக்கு ராமர் இருக்கார் என்னை அவா பார்த்துப்பார். நான் ராமர் பைத்தியம் தான்டி, ராமருக்கு உப்புமா பண்ணிப் போடற பைத்தியம் தான். நானும் போனா திரும்ப மாட்டேன். ஒரே அடியா போய்டுவேன்'' சரஸ்வதி மேலே கை காட்டினாள். ஹேமாவுக்கு என்ன பேசுவது என்று தெரியவில்லை. வீடு மீது அவளுக்கு வெறுப்பு வர ஆரம்பித்தது.

வீட்டின் மீது அதிருப்தி ஏற்பட்ட பெண்கள்தான் வெளியே உள்ள ஆண்களை காதலிக்க ஆரம்பிக்கிறார்கள். ஹேமாவுக்கு இன்னும் சற்று நேரம் சந்தானத்தோடு பேசிவிட்டு வந்திருக்கலாம் என்று தோன்றியது.

● ● ●

# 19

ஆனால் மரணம் என்பது அவ்வளவு எளிதான விஷயமல்ல. உயிரோடிருக்கும் போது மரணத்தை எதிர்கொள்ளுவேன், நான் அதை கண்டு அஞ்சவில்லை, என்றோ ஒருநாள் சாகப்போகிறோம், இன்று செத்தால் என்ன, நாளை செத்தால் என்ன இந்த வசனங்கள் எல்லாம் மரணத் தருவாயில் மறந்து விடுகிறது.

உலகத்தில் எல்லோரும் உணர்ந்த, அதே சமயம் பகிர்ந்து கொள்ள முடியாத ஒரு சூட்சுமம் ஒன்று இருக்கிறது.

நீ அந்த கருப்பைக்குள்ளேயே இருக்க முடியாது. பூமிக்கு போய்தான் ஆகவேண்டும், என்று குழந்தைக்கு அறிவுறுத்தப்படுகிறது. உள்ளே குழந்தை பதட்டமாகிறது. நகரு நகரு என்ற கட்டளை வருகிறது. உடனே நகர்தல் ஏற்பட்டு விடுகிறது. உடம்பின் நடு மையத்தில் இருக்கின்ற உயிர்ச்சக்தி போடுகின்ற அந்த கட்டளையைப் பற்றி, அந்த உணர்வு பற்றி யாரிடமும் பகிர்ந்து கொள்ளவே முடிவதில்லை. அப்படி ஒரு உணர்வு இருந்தது என்று ஞாபகம் வைத்துக் கொள்ளக்கூட முடிவதில்லை. உலகத்தின் அதிசயங்கள் பார்க்க பார்க்க, உலக விவகாரங்களில் மூழ்க, மூழ்க இது இந்த நினைவு பின்தங்கிப் போய் விடுகிறது. எங்கேயோ ஒளிந்து கொண்டு விடுகிறது. பிறப்பின் சூட்சுமம் மரணத்திற்கு முன்பு ஞாபகம் வருவதில்லை. போ போ பூமிக்கு போ என்று சொல்லப்பட்ட விதம் அவசரப்படுத்தப்பட்ட கட்டளை,உந்தி நகர்த்தப்பட்ட விதம் ஞாபகம் வருகிறது இது ஞாபகம் வந்த நேரம் மரணம். இது மரண நேரத்தில் ஞாபகம் வரும்



அப்போது உணர்வுகள் உள்முகமாக திரும்பிவிடும். மிக அமைதியாய், மிக தீவிரமாய் எல்லா வெளி உலக தொடர்புகளையும் அறுத்துவிட்டு உள்ளே பார்க்க ஆரம்பிப்பார்கள். அதற்குமுன் வாழ்க்கையில் ஒரு போதும் அப்படி உட்கார்ந்திருக்கமாட்டார்கள். உள்முகமாய் பார்ப்பது அந்நேரம் கைக்கூடும். உள்ளே இருக்கும் உயிர் சக்தி வெளியே சிதறும் மனதை உள்ளே அழைக்கும். இனி வெளியே எந்த வேலையும் இல்லை ஒடுங்கு. உள்ளே ஒடுங்கு என்று கட்டளை வரும்.

மனசு தன் வேலையை செய்யாமல் மற்ற விஷயங்களை பற்றி சிந்திக்காமல், தன்னைக் கவனிக்கத் துவங்கி, தன்னைக் கவனிப்பதிலிருந்தும் தப்பி, எந்த சக்தியின் வினைவால் உயிரோடிருப்பதும், யோசிப்பதும், சுவாசிப்பதும் நடக்கிறதோ, அந்த சக்தியை பார்க்க ஆரம்பித்து விடும். மனசு அந்த சக்தியை பார்த்தபிறகு வேறு எதையும் பார்க்காது.

மெல்ல, மெல்ல மரணமடைந்தாலும் யுத்தத்தில் ஒரு துப்பாக்கி குண்டு நெற்றிப்பொட்டைத் தாக்க மரணமடைந்தாலும், வாகனம் மோதி நசுங்கி இறந்தாலும் உயிர்ச்சூழலை மனம் பார்க்கின்ற அனுபவம், அந்தச் சூழலுக்குள் மனம் சிக்கி ஒடுங்குகின்ற அனுபவம் நிகழத்தான் செய்யும். விபத்தில் இறப்பவர்கள், மரணத்துக்கு அரைமணி நேரத்துக்குமுன் அல்லது ஒருமணி நேரத்துக்கு முன் அல்லது அன்று தூங்கி எழுந்த விடியலில் இந்த அமைதியை உணர்ந்திருப்பார்கள். பிறகு புறக்கணித்திருப்பார்கள்.

ஆனால் இந்த கவனித்தல் நிகழாமல் மரணம்வராது. கவனித்தல் நிகழும்போது மரணம் வரும்.

இந்த கவனித்தல்தான் மகான்கள் சொல்லுகின்ற தன்னை அறிதல். மனம் அந்த உயிர்ச்சூழலை தொட்டு அதிர்ந்து திரும்பும்போது தன் உறவுகள் பற்றியும், தன்

வாழ்க்கை பற்றியும், நண்பர்கள் பற்றியும் வேறு ஒரு பார்வை கொண்டுவிடும். ரொம்ப சுத்தமான பார்வை அது. விருப்பு, வெறுப்பு, பிடிக்கும், பிடிக்காது, நல்லது, கெட்டது என்பதெல்லாம் தாண்டி எந்த அபிப்ராயமுமின்றி தன் தொடர்புகளை பார்க்கும் பார்வை அது.

நினைவுகள் இடைவிடாது ஆட்டம் போடுவதால் வெளியிலிருந்து தொடர்ந்து விதம் விதமாய் தாக்குதல் வந்து கொண்டிருப்பதால் மனதின் அடி ஆழத்தில் ஏற்படும் சலனங்களை கவனிக்கமுடியாது போய்விடும். ஆனால் மனம் தந்திரமுடையது. வெளித்தாக்குதல்கள் இல்லாத கனவுக்குள் உத்தேசங்களை சொல்லிவிடும். உயிர்ச்சக்தி நழுவத்துவங்கிவிட்டது. இனி வெகுநாள் இந்த கூட்டுக்குள் இருக்காது என்பதை உணர்த்த ஆரம்பித்துவிடும். கனவாக வெளிப்படும். அந்த கனவு கொடுத்த அதிர்ச்சியில் மனசு உள்நோக்கித்திரும்பிவிடும். உயிர்ச் சக்தியை மனம் கவனிக்கத் துவங்கிவிடும.

சரஸ்வதியின் புருஷனுக்கு கனவு வந்தது அந்தக்கனவில் அவன் நிர்வாணமாக நிற்கிறான். ஒரு உலோகப் பதுமைபோல நிற்கிறான். அந்தப்பதுமைக்குள் மிக பவித்ரமான, மிகவும் பொக்கிஷமான ஒரு ஒளிக்கல் இருக்கிறது, அந்த ஒளிக்கல்லை நாலைந்து பேர் வழி மறித்து கேட்கிறார்கள். உடம்புக்குள் கைவிட்டு அந்தக் கல்லைக் கொடு என்று தலையில் அடிக்கிறார்கள். பின் தலை அடித்த இடம் வலித்தது. விலகி ஓட முயற்சி செய்தார். அவர்கள் அசைய முடியாதபடி நெருங்கிக் கொண்டார்கள். இறுக்கினார்கள். ஒரு மூச்சுத்திணறல் ஏற்பட்டது.

உலோகமயமான தன் உடம்பை அவர். தன் மன வலிமையால் இன்னும் உறுதியாக்கிக் கொண்டார். அவர்கள் கோபம் அடைந்தார்கள். அவரை மிரட்டத் துவங்கினார்கள். ஒருவனோடு அவர் சண்டை போட்டுக் கொண்டிருந்த நேரத்தில், இன்னொருவன் அவர் முதுகில்



டிரில்லிங்மெஷினை வைத்து அழுத்தினான். இயக்கினான். முதுகில் மிகப்பெரிய வலி ஏற்பட்டது. அவர் துடித்து திரும்ப அடித்து தரையில் போட்டார்கள்.

நெஞ்சின்மீது முழங்கால் வைத்து அழுத்தி மார்புக் குழிக்கு சற்றுமேலே இடப்பக்கமாய் சற்று ஒரு ஓட்டைப் போட்டார்கள். சுத்தியால் மார்பை தட்டி உலோக உடம்பை உடைத்தார்கள். அவர் நெஞ்சுக்குள் கை விட்டு அந்த ஒளி பொருந்திய கல்லை எடுத்தார்கள். ஒரு வழிப்பறி திருடர்கள்போல அவர்கள் நடந்து கொண்டார்கள். அவருக்கு கோபம் வந்தது. இது பாதுகாப்பில்லாத அரசாங்கம் என்கிற எண்ணம் வந்தது.

ஒளிப் பொருந்திய அந்த கல்லை எடுத்துக் கொண்டு அவர்கள் காணாமல் போனார்கள். அவரால் எழுந்திருக்கவே முடியவில்லை. அவர் செத்துவிட்டதாக அவர் நண்பர்கள் சொல்லிக்கொண்டு போவது அவர் காதில் விழுந்தது. அவர் அழத்துவங்கினார். கனவு கலைந்துவிட்டது.

விழித்து எழுந்தபோதும், ஓட்டைப் போடப்பட்ட நெஞ்சும், முதுகும் வலித்தன. ஒரு பயத்தை மனம்உணர்ந்தது. உள்ளே இருந்த வைரக்கல் எங்கே, மனம் கனவிலிருந்து விடுபடாமல் உள்ளே பார்த்தது. தன் உயிர்ச் சக்தியை அவர் பார்க்கத் துவங்கினார்.

அதைப் பார்க்கிறபோது உடம்பு முக்கியமில்லாமல் போகிறது. உடம்பை பார்க்கிறபோது அந்த உயிர்ச்சுழல் தெரிவதே இல்லை.

எது நான் உடம்பா, அல்லது உயிர்ச்சுழலா. அவர் மரணம் பற்றி யோசிக்க ஆரம்பித்தார். வாழ்க்கை அபத்தமாகபட்டது. இந்த கர்வத்தால் நெல் முனை அளவு கூட லாபம் இல்லை என்று தெரிந்தது.

சரஸ்வதியின் பங்கை இனி வழக்காடாமல் அவனுக்கு கொடுத்துவிட வேண்டியதுதான் அவன் சீதனமாக

கொண்டுவந்த காசில் வியாபாரம் செய்து பலமாகியிருக்கிறோம். அவள் நகைகளைவிற்று வீடுகட்ட மரம் வாங்கியிருக்கிறோம். அவள் குழந்தை பெற்று தர அவள் உடம்பை உபயோகப்படுத்தியிருக்கிறோம். கர்வப்பட்டிருக்கிறோம். தன் கர்வம் வளர அவளை அதட்டியிருக்கிறோம். அடித்திருக்கிறோம். பதிலுக்கு அவள் எந்த தொந்தரவும் செய்ததில்லை. மாறாய் அவள் அடங்கிப்போயிருக்கிறாள்.

சரஸ்வதி உன்னோடு நடந்த சண்டை இன்றோடு போதும். உன்னோடு என்னால் இன்னமும் சரசமாட முடியாது. ஆனால் சமாதானமாக முடியும். இனி வழக்கை இழுக்கப் போவதில்லை. தீர்ப்பை ஏற்று நானாக சொத்தை திருப்பி தரப்போகிறேன்.

அவர் படுக்கையை விட்டு லலகி காலை கடன்களை முடித்தார். நெஞ்சு வலி இருந்தது. வலி குறைய மருந்து சாப்பிட்டார் சோர்வு நீங்க தானாய் ஒரு ஊசிபோட்டுக் கொண்டார். சிறிதளவு மது அருந்தினார். அலுவலகத்தின் பக்கம் போனார்.

தனக்கு கீழ் வேலை செய்யும் பெண்களின் உடம்பை ஒரு ஆவலோடு பார்த்தார். அபரிதமான கற்பனைக்குள் இறங்கினார். அந்தக் கற்பனைகள் காமம் வளர்த்தன. மீண்டும் சிறிது மது அருந்தினார். ஒரு பெண்ணோடு உரசிக் கிடக்கவேண்டும் என்ற எண்ணம் எழுந்தது. தன் சுகத்துக்காக வைத்திருநத கொங்கணிக்காரியின் ஞாபகம் வந்தது.

காரில் ஏறி டிரைவரை அங்கே ஓட்டச் சொன்னார்.

இந்தநடிச்சிக்கும் எதாவது தாரைவார்க்கவேண்டும். எல்வளவு ஏகமாய் ஒத்துழைத்து இருக்கிறாள். இவளும் இவரோடு படுத்து குழந்தைகள் பெற்று இருக்கிறாள் சமீபமாய் சம்பாதித்தவைகளை இவளுக்கு எழுதி வைத்து விடவேண்டும்.



இப்படிச் செய்யப் போகிறேன். இன்று இவ்வளவு தொகைக்கு காசோலை தரப்போகிறேன். அடுத்த வாரம் இன்னொரு தொகை தரப்போகிறேன் என்று பேசினால் போதும் கொங்கணிக்காரிக்கு உடம்பு பிய்த்துக்கொண்டும் குழந்தைகளை போ போவென்று வெளியே விரட்டுவாள். பாய்ந்து மேலே படுத்துக்கொண்டு மூச்சுதிணற கொஞ்சுவாள். மெத்து, மெத்தென்ற வெள்ளை உடம்பு கொஞ்சுவது பரவசம்.

மனசு விதம், விதமாய் கற்பனை செய்தது. வெறியில் அவர் பல்கடித்தார். கை விரல்களை இறுக்கினார். மறுபடி நெஞ்சு வலித்தது.

உள்ளே எதாவது பிரச்சினை ஆகிவிட்டதா, ஏன் இப்படி வலிக்கிறது முறுக்கி திரிவதுபோல ஏன் இருதயத்தில் ஒரு வலி. வியர்வை இருக்கிறதா, இல்லையே. இடது கையில் வலி உண்டா, இல்லையே. தலைவலி, தலைக்கணம் எதுவும் காணோமே. நெஞ்சில் மட்டும் இந்த வலி ஏன்.

நேற்றிரவு ரொட்டியோடு சாப்பிட்ட பட்டாணி மசாலாவின் வேலையா. வயிற்றுக்கோளாறா. உப்புசம் ஒரு மாதமாக இருக்கிறது. பட்டினி கிட என்கிறார்கள்.

பட்டினி கிடக்க குடிப்பதை நிறுத்தவேண்டும். குடித்தால் பசிக்கிறது. பசித்தால் கொஞ்சம் குடிக்கத்தோன்றுகிறது. குடிக்காமல் இருக்க முடியவில்லை. கொங்கணிக்காரியின் வீட்டுக்குபோய் குடிப்பதற்கு கொடுடி நாயே என்றுதான் கேட்க வேண்டும்.

அவள் வீட்டு வாசலில் ஒரு மோட்டார் சைக்கிள் நின்றிருந்தது. அது புது மோட்டார் சைக்கிள்.

பீனாருலியாவைத் தேடி மோட்டார் சைக்கிள் யார் வரப்போகிறார்கள். அவள் சொந்தக்காரர்களா, அல்லது வேறு ஏதேனும் வேலையாட்களா.

வாசலில் ஒரு பச்சைக்காகிதம் புரண்டு நிமிர்ந்தது. பூங்கொத்து கடை பெயர் எழுதப்பட்டிருந்தது. பீனாருனியா எதற்கு பூங்கொத்து கொடுக்கிறார்கள். யார் பூங்கொத்து கொடுக்கிறார்கள். சட்டென்று ஒரு சந்தேகம் வந்தது.

வண்டியை விட்டு கீழிறங்கி, தோட்டக் கதவை திறந்து வலமாய் அந்த வீடு சுற்றியபடியே பின்பக்க சாக்கடைகளை கவனமாகத் தாண்டி, கொல்லையான் கம்பிக்கதவுக்கு அருகே போய் கைவிட்டு கதவு திறந்து சமையலறைக்குப்போய் அங்கிருந்து ஹால் அடைந்து, படுக்கை அறை கதவை லேசாய் அழுத்த அது தாழிட்டு இருப்பது தெரிந்தது. கதவுக்கு மேலே தெய்ப்பு கண்ணாடி பொருத்தப்பட்ட வெண்டிலேட்டர், வெளிச்சம் மட்டும் உள்ளே போக வேண்டும் என்று செய்த ஏற்பாடு வெளியே ஹால் இருட்டாக இருந்தது. உள்ளே அறை வெளிச்சமாக இருந்தது. பேச்சுக் குரல் கேட்டது.

சக்கர சோபாவை தள்ளி வந்து கதவுக்கு ஒட்டினார் போல் வைத்து, சோபாவின் கைப்பிடியில், கால் வைத்து கண்ணாடியில் முகம் வைத்துஉள்ளே என்ன நடக்கிறது என்று பார்த்தார்.

முகம் தெரியவில்லை. உடம்பு தெரிந்தது. உடம்பின் அசைவுகள் தெரிந்தன. குரல் இப்போது தெளிவாகக் கேட்டது. குரல் வைத்தும் அசைவுகளை வைத்தும் உள்ளே என்ன நடக்கிறது என்பதை புரிந்துகொள்ள முடிந்தது-

அது கூடல்.

பீனாருனியா எவனையோ அனுபவித்துக் கொண்டிருக்கிறாள். எவனோ அனுபவிக்க தன்னை தந்து கொண்டிருக்கிறாள்.



வெள்ளை வெளேரென்ற உடம்பு துணியின்றிதுள்ளுவது தெரிந்தது. எவனோ மிருந்த வன்மையாய் அவளை ஆளுமை செய்ய அவள் இறக்கமாய் கத்துவது கேட்டது.

அவருக்கு உடம்பு நடுங்கியது. குபீரென்று வியர்த்தது. மெல்ல வாசல் நோக்கி நடந்தார். கதவு திறந்து தோட்டத்துக்கு இறங்கினார் .தோட்டக் கதவை ஆத்திரத்துடன் எட்டி உதைத்தார். காரின் பின்கதவு டிரைவர் திறந்துவிட உள்ளே உட்கார்ந்துகொண்டார். பின் சீட்டில் சுருண்டு படுத்துக் கொண்டார்.

நெஞ்சு வலித்தது.

முன்னைவிட அதிகமாக 'வலித்தது. இன்ஜினை ஓட விட்டு ஏ. ஸியை இயக்கச் சொன்னார்.

முதுகிலிருந்து ஒரு வலி கிளம்பி தோளை தாக்கியது. பீனாருனியா வளர்ப்பிலேயே ஒழுக்கம் கெட்ட நாய். பேச்சிலும், அடி தடி ரசனையிலும் கைதேர்ந்தவள் வக்கிரமான எல்லா படுக்கை விளையாட்டுகளுக்கும் ஏற்றவள்,

பெரிய திலகமும்,சிவந்த கலர் உதட்டுசாயமும் அடிக்கடி நழுவும் மார்சேலையும், அட்டகாசமான சிரிப்பும் தான் அவள் ஆயுதங்கள்.

எஜமான் என்கிற அர்த்தம் வரும் சொல்லைத்தான் அவள் அழைப்பதற்கு உபயோகப்படுத்துவாள்.

இன்று உங்களுக்கு பிறந்தநாள் அல்லவா, நீங்கள் எனக்கு என்ன பரிசு தரப்போகிறீர்கள் என்றுகேட்டாள், அவர் நகைக்கடையிலிருந்து ஆறு சவரன் சங்கிலி கொண்டுவரச் செய்தார்.

''எஜமானே இன்று உங்கள் பிறந்தநாள் அல்லவா. இந்த அடிமை உங்களுக்காக பரிசு தர விரும்புகிறாள். நீங்கள் கண்ணை மூடிக்கொள்ளுங்கள். பரிசு உங்கள் மடியில் வைக்கப்படும்'' என்று சொன்னாள்.

அவர் கண்களை மூடிக்கொள்ள மடியில் யாரோ உட்கார்ந்தார்கள். சட்டென்று கண்ணைத் திறக்க இடுப்பில் பாவாடை மட்டும் அணிந்த பதினெட்டு வயதுப்பெண் அவரைத் தழுவிக் கொண்டாள்.

எஜமான் மூன்று நாட்கள் இவளோடு சந்தோஷமாக இருக்க வேண்டும் என்பது இந்த அடிமையின் விருப்பம்.

அரக்கனுக்கு மதுவும், மாமிசமும்தான் நிவேதனம். இவை இரண்டும் சேர்ந்த பெண் மிகப்பெரிய பரிசு.

"இந்தப்பெண் வயது என்ன சொன்னாய், பதினெட்டா."

மறுபடியும் நகைக்கடைக்கு போன் செய்தார். அரை சவரனால் பதினெட்டு சவரன் எடை காசுகள் கொண்டுவரச் சொன்னார். அந்தக் கொங்கணிக்காரியின் கைகளில் கொட்டினார்.

வந்தப்பெண் புடவைகள், கலர் டி.வி. முத்துமாலை, கொலுசு, மெட்டி என்று வாங்கிக்கொண்டு போயிற்று.

இப்படியெல்லாம் செய்தவளிடம் ஏண்டி இவ்விதம் செய்கிறாய் என்று கேட்க முடியாது. கேட்டால் பீனாருஸியா எதுவும் செய்யலாம்.

ஆனாலும் இது துரோகம். அயோக்கியத்தனம். காசுக்கு ஒருவனும், காமத்திற்கு ஒருவனும் என்று அலைகிற பேயாட்டம்.

இந்த நாய் நான்தானே உன் மனைவி, நான்கானே உன் மனைவி எப்படி அடிக்கடி கேட்கிறது. பல இடங்களில் அவர் பெயரை உபயோகிக்கிறது. தன் குழந்தைகளை இவர் நேரே வந்து பள்ளிக்கூடத்தில் சேர்க்க வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தது.



ஆனால் மனைவி செய்கிற வேலையா இது. ஒரு தாயின் மரியாதையா இது.

ஆனால் எப்படி எப்படியோ உபயோகமானவன் எப்படி எப்படியோதான் வாழ்க்கை நடத்துவான். மூளையில் கட்டப்படாத மாடு புறம்போக்கில் மேயும்.

அவர் பின் சீட்டைவிட்டு இறங்கி டிரைவர் சீட்டில் அமர்ந்து கொண்டார். டிரைவரை பின்சீட்டில் உட்காரச் சொன்னார். கோபமாய் ஹாரன் அடித்தார். அவருடைய கார் கறுப்பு பிலிம் ஒட்டிய கண்ணாடி கார். உள்ளே யார் இருக்கிறார் என்று வெளியே இருப்பவர்களுக்கு தெரியாது. வெளியே இருப்பவரை உள்ளே உட்கார்ந்து துல்லியமாகப் பார்க்கலாம்.

பீனாருஸ்யா வெளியே வந்தாள். கார் பார்த்துவிட்டு உள்ளே ஓடினாள்.

அவளை பார்த்தமாத்திரத்தில் அவருக்கு கோபம் தலைக்கேறியது. கொல்ல வேண்டும் என்கிற வெறி வந்தது. எவனோ ஜீன்ஸ் பேண்டும், டீ சர்ட்டுமாய், வெளியே ஓடி வந்தான். நாப்பது வயது வழுக்கை தலையாய் இருந்தான். மோட்டார் சைக்கிளில் தாவி ஏறினான் உதைக்கத் துவங்கினான்.

அவனைப் பார்க்க மேலும் ஆத்திரம் பொங்கியது.

அவர் கியர் மாற்றினார். கிளட்சை தளரவிட்டு ஆக்ஸிலேட்டரை அழுத்தினர். வண்டி சக்கரம் தரையை பறித்து மின்னலாய் முன்னேறியது. மோட்டார் சைக்கிளை இடித்து கொத்தி தூக்கிப் போட்டது.

அவன் அலறலோடு உயரக் கிளம்பி தோட்டத்துக்குள் பாய்ந்து கொய்யாச் செடியின் மீது விழுந்து கிளை முறித்து தரையில் விழுந்தான்.

இது நாயடி, பேயடி அவன் எழுந்திருக்க நாலு மாசமாகும்.விலா நிச்சயம் முறிந்திருக்கும். தெருகூடும். போலீஸ் வரும் என்ன என்று கேட்கும். இந்த தேவடியாளுக்கு தைரியமிருந்தால் என்பெயரைச் சொல்லட்டும்

நான் ஊர்லேயே இல்லை என்று நிரூபிக்க முடியும். வக்கீல் வைத்து வாதாட முடியும். அடிபட்டவன் யார் என்ன உறவு, ஏன் வந்தான். என்ன செய்தான் என்றெல்லாம் கேள்வி கேட்க முடியும். போலீஸையும் கேள்வி கேட்கும்படி செய்ய முடியும்.

வீட்டுக்குப் போனதும் அந்த குடிகேடிக்கு போன் செய்ய வேண்டும்.

''இடித்தது நானே கள்ளத்தனமாய் உன்னைத் தொட்டவனுக்கு நான் தந்த தண்டனை இது. எங்கேனும் என் பெயரைச் சொன்னால், உன்னைச் சந்தி சிரிக்க வைக்க எனக்குத் தெரியும். உனக்கென்ன தண்டனை என்று யோசிக்கிறாயா? வெகு விரைவில் அது உன்னைத் தீண்டும்.''

காரை வேகமாக ஓட்டிக் கொண்டு போனவருக்கு சிரிப்பு வந்தது டிரைவர் பதறினான்.

''பயப்படாதே இந்தவிபத்தோடு உனக்கு சம்பந்தமே இல்லை' அவர் வாக்கு கொடுத்தார்.

சந்தோஷத்திலும், அதிர்ச்சியிலும் வியர்வை பொங்கி, பொங்கி வந்தது. நெஞ்சை விட்டு விட்டு திருகி திருகி வலித்தது. தோள்பட்டையை தாக்கிய வலி இடக்கை வழியாக மோதிரவிரல் நகர்ந்து தாக்கியது.

கடும் சோர்வு சூழ்ந்தது வண்டியை ஓடும் போது விட்டுவிட்டு படுத்து விடலாமா என்று தோன்றியது.

''வண்டியை நான் ஓட்டறேங்கையா விட்டுறுங்கைய்யா'' டிரைவர் கெஞ்சியபடி வந்தான்.



அவர் வண்டியை ஒரு நர்ஸிங்ஹோமுக்குள் செலுத்தினார். போர்டிகோவில் சட்டென்று பிரேக் போட்டு நிறுத்தினார், கீழே இறங்கினார். படிகளில் ஏறி நடுஹாலில் நின்றார்

''யார் இங்கே டாக்டர், யார் இங்கே கார்டியாஸ்பெஷலிஸ்ட். எனக்கு நெஞ்சு வலிக்கிறது. ஈறுகள் வலிக்கின்றன. இடது கையில் குடைச்சல் இருக்கிறது. வியர்த்து ஊற்றுகிறது. இது மாஸிவ் அட்டாக். உடனே என்னை கவனியுங்கள்'' என்று கத்தினார்.

கோட்டுப் பையிலிருந்து செக் எடுத்து ஆஸ்பத்திரியின் பெயர் எழுதி ஏழேழு நாட்கள் தள்ளி மூன்று தேதிகள் எழுதி மூன்றிலும் கையெழுத்திட்டு, அருகே வந்த டாக்டரின் பெயர் கேட்டு, கை குலுக்கிவிட்டு அவரிடம் செக் கிழித்து கொடுத்தார். மெல்ல சோபாவில் உட்கார்ந்து மயக்கமானார்.

மனிதர்களில் வெகுசிலருக்கே இவ்விதமாக செயல்பட முடியும்.

□ □ □

# 20

இங்கே முதல் சிகிச்சை யோசிப்பை நிறுத்துவது. ஆழ்ந்து தூங்கச் செய்வது. குளிர்சாதனம் பொருத்திய தனியான அறையில் அவரைப் படுக்க வைத்து மயக்க ஊசி போட்டார்கள். பிராணவாயு செலுத்தினார்கள், சலைன் சொருகினார்கள். நெஞ்சில் பசை தடவி மானிட்டர் பொருத்தினார்கள். வலி குறையவும், ரத்த ஓட்டம் சீராகவும், மருந்துகள் கொடுத்தார்கள். மூன்று

குழாய்கள் அடைபட்டு இருக்கின்றன என்று கண்டு பிடித்தார்கள்.

அவர் அலுவலகத்திற்கு விஷயம் தெரிவித்து அவரது உறவினர், நண்பர்கள் யாரேனும் அருகில் இருந்தாக வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.

அவரது அலுவலகம் ஆழமாய் யோசித்து, டிரைவருடன் கலந்து பேசி, நடந்ததை தெரிந்து கொண்டு சரஸ்வதிக்கு தகவல் அனுப்பினார்கள்.

சரஸ்வதி அப்போது ராமருக்காக வெண்பொங்கல் செய்து கொண்டிருந்தாள்.

உரக்கம்பனியில் சந்தானமும்,ஹேமாவும் நிபந்தனைகளை விவாதித்துக் கொண்டிருந்தார்கள்.

வினோலியாவின் வீட்டில் சுந்தரம் அவளை அணைத்துக் கொண்டிருந்தான்.

வினோலியாவை அவள் அம்மா அனிதா மேத்யூஸ் மிகக் கடுமையாக கோபித்துக் கொண்டாள். இரவு பகல் எல்லா நேரமும் திட்டித் தீர்த்தாள்.

''உன்னுடைய லவ் என்பது கீழ்த்தரமானது. உன் உடம்பு உணர்ச்சி வேகத்துக்கு ஈடு கொடுக்க முடியாமல் உன்னை அலை பாய வைக்கிறது. உண்மையில் தவறு உன் மீது அல்ல. உன் தகப்பன் மீது. ஒரு நடிகையின் கேஸில் ஜெயித்து விட்டு,இரண்டு பெட்டி பணம் எடுத்து வந்து அவைகளை படுக்கையில் பரப்பி அவைகள் மீது படுத்துப் புரண்டு கொக்கரித்த உன் தகப்பனுடையது.''

காமம் மிகுத்த தகப்பனுக்கு பிறந்த குழந்தை காமத்தோடுதான் இருக்கும். உணர்ச்சிகளை அடக்க முடியாத பெண் இல்லறத்தில் சிறக்க முடியாது.



''நீ சுந்தரத்தை திருமணம் செய்து கொண்டாலும் சந்தோஷமாக இருப்பாயா என்பது எனக்கு சந்தேகமே. திருப்திப்படுத்த முடியாத பெண்ணாக மாறிவிடப் போகிறாயோ என்பதே என் கவலை.''

மோகம்தான் வாழ்க்கை என்று ஒரு பெண் நிர்மானித்து விட்டால், அவளைவிட பெரிய நச்சு விஷயம் இந்த உலகத்தில் வேறு எதுவுமில்லை.''

''பெண் விடுதலை என்ற விஷயத்தை, எல்லா பெண்களுக்கும் விடுதலை என்கிற விஷயத்தை இந்த சென்னையில் முதன் முதலாய் பேச ஆரம்பித்தது உன் தாய். இந்த அனிதா மேத்யூஸ். ஆனால் பெண் விடுதலை என்கிற பெயரில் கன்னத்தனத்தை நான் ஆதரித்ததே இல்லை.''

''வினோலியா ஒன்று புரிந்துகொள் காதல் என்பதை கர்வமாக நீ தயவு செய்து என்னிடம் சொல்லாதே. கண்டதும் காதல் என்பதெல்லாம், உண்டு மதர்த்த வேலை இல்லாத பெண்களுக்குத்தான். வாழ்க்கையில் முன்னேற்றம், தேடல், தெரிந்து கொள்ளல், பிறருக்காக போராடுதல் என்று தெரியாத பெண்களுக்குத்தான், இவற்றில் ஏதாவது ஒன்றை கடைபிடித்திருக்கிறாயா, ஏதேனும் ஒரு விஷயத்தை சாதித்திருக்கின்றாயா, சாதிக்க வேண்டும் என்கிற எண்ணமாவது உனக்கு உண்டா.''

''உடம்பு பற்றியே சிந்தித்து உடம்பு பற்றியே ஏங்குகிற பெண்ணாய் ஏன் போனாய். தவறு என் மீதும் இருக்கிறது. என் வக்கீல் தொழிலைப் பார்க்கிற மும்முரத்தில் நான் உங்களைக் கவனிக்கவில்லை. உடல் நலிவுற்றதால் உன் அசைவுகளை உற்றுப் பார்க்கவில்லை.''

''வழக்குக்காக என்னிடம் வந்த பையனுக்கு எதிரே நீ குலுங்கி நடந்திருக்கிறாய். அவனை விழி விரியச் செய்திருக்கிறாய். வினோலியா பெண்ணின் கவர்ச்சிகள்

வெகு சீக்கிரம் கரையக் கூடியவை. தன் கவர்ச்சியை நம்பின எந்த பெண்ணும் முட்டாளாவாள்.''

''வினோலி குடித்தனம் நடத்த, தாய்மை அடைய காதலிப்பது நல்லது. அதற்காக புருஷன் தேடுவது உத்தமம்.''

''எந்த எண்ணமும் இல்லாமல், அழகாக இருக்கிறோம் என்ற எண்ணத்தில் மட்டுமே அலட்ட ஆரம்பித்தால் அது ஆபத்தில் முடியும். சுந்தரம் பாதிக்கப்பட்ட பையன். தகப்பனால் கடுமையாய் மிரட்டப்பட்ட பையன். தாய் துடிப்பதை பார்த்தபையன். பினாருலியா என்கிற கேடு கெட்ட பெண்ணால் அவமானப்படுத்தப்பட்ட பையன். எல்லா பிரச்சினையையும் எதிர் கொள்ளும் ஆரோக்கியமானவனல்ல,''

''நீ எவனோடவாவது சிரித்துபேசுவதை கண்டால், சுந்தரத்துக்கு கோபம் வரலாம். உன்னை வெட்டிபோடும் ஆத்திரம் வரலாம். பெண்கள் சோரம் போகிறவர்கள் என்கிற தவறான அபிப்ராயம் அவனுக்கு இருக்கலாம்.''

''சந்தேகப்படுகிற புருஷன் ஒரு பெண்ணுக்கு கணவனாக அமைந்துவிட்டால் அதை விட நரகம் வேறு எதுவுமில்லை வினோலி.''

''உன் விஷயத்தில் இது மட்டுமே பிரச்சினை இல்லை, ஹேமா என்கிற உன் நாத்தியைப்பற்றி நீ மிகக் கவனமாக இருக்க வேண்டும், உனக்கு நேர் எதிரான பெண் அவள். அவளால் காதலிக்க முடியாது. ஏனெனில் அவளும் பாதிக்கப்பட்ட பெண் தான்.''

''தகப்பனின் அன்பை தெரியாது. தாயின் துன்பங்கள் மட்டுமே பார்த்து வளர்ந்த பெண். சொந்தக்காலில் நிற்க வேண்டுமென்று யோசிக்கிற பெண். கட்டி ஆள வேண்டும் என்று விருப்பமுள்ள பெண். அவளால்



காதலுக்கு ஏங்குகிற பெண்களையும், காதலிக்கிற பெண்களையும் ஏன் உன்னைப்போல் ஒரு ஆணின் கைப்பட்டு ஹார்மோன்கள் துரிதமாகி கட்டுமஸ்தாய் இருக்கிற பெண்களையும் பிடிக்காது.''

''எழுதித் தருகிறேன். உன்னை அவள் மாடு என்று தான் நினைப்பாள். அண்ணனை சொத்துக்காக மயக்கி போட்டிருக்கிறாள் என்றுதான் நினைப்பாள்.''

''வினோலி இப்போது என் பிரச்சினை என்ன தெரியுமா? உன் கல்யாணத்துக்கு முன்னால் நான் செத்துப் போய்விடக்கூடாது. ஹிந்துவோ, முஸ்லீமோ, கிறிஸ்துவனோ எனக்கு ஜாதி வேற்றுமையில்லை வினோலியா. நீ செட்டிலாகி விடவேண்டும். இல்லையெனில் நீ எந்த கதியாலாயோ என்கிற பயத்தில் என் மரணம் முழுமையாகாது. என் ஆவி இந்த வீட்டை விட்டுப் போகாது. மரணம்கூட சந்தோஷமாக இல்லையெனில், அதைவிட கேவலமான பிறவி உலகத்தில் வேறு எதுவுமில்லை. என்னைக் கேவலமாக்கி விடாதே.''

அனிதா மேத்யூஸ் கண்களிலிருந்து ஜலம் பெருகியது. வினோலியா விக்கி, விக்கி அழுதாள்.

அம்மா சொன்ன மற்ற வாக்கியங்கள் எல்லாம் மறந்துவிட்டன. திருமணமாகி செட்டிலாகி விட வேண்டும் என்று உத்தேசித்ததே நெஞ்சிலிருந்தது. அவள் சுந்தரத்தை இறுக்கிப் பிடிக்க முடிவு செய்தாள். திட்டமிட்டாள். என்ன பேசுவது என்று ஒத்திகைப் பார்த்தாள். செயலில் இறங்கினாள்.

அனிதா மேத்யூஸ் அயர்ந்து தூங்கி கொண்டிருந்த நேரம். சுந்தரம் வந்தபோது ஓடிப்போய் தழுவிக்கொண்

டாள். நெஞ்சு அழுந்த உதடு கவ்வினாள். அவன் முகத்தை கையிலேந்தி கொண்டாள்.

''இதான் கடைசி சந்திப்பு. இதான் கடைசி முத்தம். இதான் கடைசி இது'' என்று தழுவிக் கொண்டாள்.

அவள் இறுக்கிய இறுக்கத்தில், உரசிய அசைவுகளில் சுந்தரம் ஆடிப்போனான்.

''ஏன் கடைசி, என்ன ஆயிற்று'' என்று திகைத்தான்.

''வினோலி என்ன நடந்தது.''

அவள் மௌனமாக இருந்தாள்.

''என் அம்மா எதுவும் சொன்னார்களா?''

அவனுக்கு அவன் அம்மாதான் பிரச்சினையான பெண்மணி என்பது எண்ணம். ஹேமாவால் உடைக்கப்பட்ட நேரத்தில் அவன் காதலுக்கு அம்மா கடும் எதிர்ப்பு தெரிவிப்பாள் என்று பயந்தான்.

நாலு பேருக்கு நடுவே பிரச்சினை கிளப்பாத அம்மா. பிறகு மெல்ல வந்து அனிதா மேத்யூஸிடம் அழுதிருக்கலாம் என்று நினைத்தான். அம்மா அழுது அனிதா மேத்யூஸ் அழுது பிறகு வினோலியா அழுகிறாள் என்று நினைத்தான்

அம்மா அழுதால் தன்னால் எதுவுமே செய்ய முடியாது என்று பயந்தான்.

''சொல்லு வினோலியா என அம்மா ஏதும் சொன்னாங்களா. உங்களை பார்க்க வந்தாங்களா.''

வினோலியா இல்லை என்று தலையசைத்தாள்.

''உங்கம்மா வரலை யார்கிட்ட எதுவும் சொல்லவும் இல்லை.''



அவனுக்கு நிம்மதியாயிற்று. அம்மா எதிரி இல்லையெனில் வேறு யார் எதிரி.

''எங்கம்மா திட்டினாங்க. உனக்கு இன்னாத்துக்கு லவ்வு, உன்னால சரஸ்வதி வீட்டில போய் அரைநாள் குடித்தனம் பண்ண முடியுமா, குடித்தனம் பண்ண அவ பொண்ணு ஹேமா விடுவாளா. சுந்தரம் அவங்கம்மாவுக்கு அடங்கினவன் வீணா ஒரு, குடும்பத்தை கெடுக்காதே.'' அப்படின்னு திட்டினாங்க.''

அனிதா மேத்யூஸ் தன்னை சந்தேகிக்கிறாள் என்றதும் சுந்தரத்திற்கு கோபம் வந்தது.

''நீயேன் சரஸ்வதி வீட்டில குடித்தனம் பண்ணனும். நீயேன் ஹேமாவுக்கு பதில் சொல்லணும் நீ என் பொண்டாட்டி, நீ என்கூட குடித்தனம் பண்ணி எனக்கு பதில் சொல்லு.''

அவன் கட்டிக் கொண்டிருந்தவளை வெகுதாராளமாக தொட்டான். காதலனாக ஒரு பெண்ணை தொடுவது என்பது வேறு கணவனாக தொடுவது என்பது வேறு அவன் தடவியதும். இறுக்கியதும் ஒரு கணவனைப் போலிருந்தன. பேச்சாலும், தொடலாலும் அவன் சந்தோஷமடைந்தாள்.

''என்னை கல்யாணம் பண்ணிக்குவியா?''

''என்ன கேள்வி இது வினோலியா'' அவன் கோபமானான்.

''எனக்கு நம்பிக்கையில்லைன்னு அம்மா சொன்னாங்க.''

''உங்கம்மா நம்பறதுக்கு நான் என்ன பண்ணனும்.'

''தெரியலையே.''

''ரிஜிஸ்டர் மேரேஜ் பண்ணிக்கலாமா'' சுந்தரம் கேட்டான்.

அவள் எதிர்பார்த்தது இந்த கேள்வியைத்தான். ஆனால், உடனே ஆவல் காட்டவில்லை.

''அது நல்லாருக்கும்மா. உங்கம்மா ஒத்துக்குவாங்களா''

''எங்கம்மா ஒத்துக்குவாங்களா தெரியலை ஆனா எதிர்க்கலை.''

''நிஜமாவா.''

''நிஜமாதான்'' வினோலியாவை லவ் பண்றியா, நீ என் மூஞ்சியில முழிக்காதன்னு சத்தம் போட்டுருக்கணும் போடல.''

''ஏன் போடல.''

''அனிதா மேத்யூஸ் மேல அம்மாவுக்கு மரியாதை. புருஷன் தூக்கிப் போட்டபோது, உலகம் கேலி பண்ண போதுகூட நின்ன ஒரே ஜீவன் அனிதா மேத்யூஸ். உங்கம்மாவுக்காக,எங்கம்மா எதுவேணா செய்வாங்க.''

''ஆனா ரொம்ப அமைதியா இருந்தாங்களே,என்னை ஒத்துக்கிட்டா மாதிரி சொல்லவேயில்லையே''

''எப்ப மறுக்கலையோ அப்ப ஒத்துகிட்டா மாதிரி தானே.''

''கூப்பிட்டு நெத்தியில ஒரு முத்தம் கொடுத்திருக்கலாம்ல, மருமகளேன்னு ஒரு வார்த்தை சொல்லியிருக்கலாம் இல்ல.''

''அந்த ஹேமாவால சொல்லலைன்னு நினைக்கிறேன்.

''அத்தினி பயமா, ஹேமா மேல உங்கம்மாவுக்கு.''



அவ தன் கல்யாணம் பாழா போயிடும்னு கத்தறாளே.

சுந்தரம் தன் தங்கையைப் பற்றி கவலையோடு பேசினான், வினோலியா சில கணங்கள் ஆழ்ந்து யோசித்தாள்

''ஹேமா சொல்றது சரிதான். அவ கல்யாணம் பாதிக்கும். ஒரு பொண்ணை கலைச்சிட்டு ஒருபொண்ணு வாழ முடியுமா இதான் கடைசி முத்தம் இதான் சந்திப்பு. அவனை இருக்கி தழுவி கொண்டாள்.

''சும்மா இருடி'' அவன் சிறினான்

பல நாள் தொட்டு பழக்கப்பட்ட புருஷனைப்போல் நடந்து கொண்டான் பயமும் வெட்கமும் அவளை ஒரு சேரத் தாக்கின. பயம் தலையை கவ்வியது. வெட்கம் இடுப்பை தாக்கியது. அவள் தவித்தாள் அவன் அதிகம் தொடாதிருக்க அவனை இறுக்கி கொண்டாள். அவன் பிரித்து அவளை தனக்கு சுலபமாய் வைத்துக் கொண்டான். இந்த உடம்பு முழுவதும் எனக்கு என்பது போல் தொட்டான்

''ரிஜிஸ்டர் மேரேஜ் பண்ணிட்டா என்ன'' அவளை தொடவிட்டு கேள்வி கேட்டான்.

''தாராளமா பண்ணிக்கலாம்''

'அதுக்கு ரிஜிஸ்டர் பண்ணனுமில்லை.''

''ஆமாம்,''

''ரிஜிஸ்டர் பண்ணி பதினைந்து நாளைக்கப்புறம் தான் கல்யாணம் பண்ண முடியும் இல்ல.''

''ஆமாம்''

''நாம ரிஜிஸ்டர் பண்ணா, வேற யாரு அப்ஜெக்ட் பண்ணுவாங்க''

''யாரும் பண்ண மாட்டாங்க''

''ஹேமா பண்ணுமா''

''ஹேமால்லாம் அப்ஜெக்ட் பண்ணா செல்லுபடியா காது. நான் வேற எவளுக்காவது புருஷனா இருந்து இவன் என் புருஷன். இவன் வேறு திருமணம் செய்ய முயற்சிக்கிறான். அரசாங்கம் இதை தடுத்து நிறுத்த வேண்டும். அப்படின்னு யாராவது அட்ஜெக்ட் பண்ணலாம். அதுக்குத்தான் பதினைந்து நாள் தவிர. வேற எதுக்கும் இல்லை;''

''நீ வேற எவளுக்காவது புருஷனாயிருக்கியா'' அவள் விஷயத்தின் கனத்தையெல்லாம் விட்டுவிட்டு சட்டென்று கொஞ்சினாள்.

அவன் வேகம் கொள்ள அந்த கொஞ்சல் உதவியது.

'உட்கார்ந்திருந்த கட்டிலில் அவள் மல்லாக்க சாய்ந்தாள். இந்த நிலம் முழுவதும் என்னுடையது என்பதாக அவன் பார்த்தான்

நிலம் புரண்டு விம்மிற்று, அவன் ஆர்வமிக்க ஒரு உழவன் போல் ஆளுமை செய்தான்,

இன்ன பெயர் கொண்ட இன்னார் மகனை, இன்ன பெயர் கொண்ட இன்னாரின் மகனான நான் இந்த தேதி இந்த மாதம். இந்த வருடத்தில் திருமணம் செய்து கொள்கிறேன் என்று சொல்லி சத்தியம் செய்து கையெழுத்திட்டால் என்ன செய்வதற்கு சுதந்திரம் உண்டோ' அந்த சுதந்திரத்தை கையெழுத்திடாமல் அவர்கள் கைப்பற்றினார்கள்.

கணவன், மனைவி என்று பிறர் சொல்லும் முன்னே கணவன் மனைவியாய் நடந்து கொண்டார்கள்.

உணர்வால் உறவு ஏற்பட்டது. உறவு பின்னிக் கொண்டிருந்தபோது உணர்வு மீண்டும் குரல் கொடுத்தது.



''என்னைக் கைவிட்டற மாட்டியே சுந்தரம்.''

''நீ பொண்டாட்டி, நான் புருஷன், இதுல கைவிடறது எங்க. இன்னொரு தடவை இப்படியொரு சந்தேகமே வர வேணாம். யாராவது கேட்டா எங்க கல்யாணம் முடிஞ்சு போச்சுனு சொல்லு, எப்பன்னு கேட்ட இந்த தேதி நேரம் கிழமை சொல்.''

இதுவரை காதலியாய் இருந்தவள் சட்டென்று மனைவியானாள்

''கேஸில ஜெயிச்ச சொத்து எப்ப கைக்கு வரும்.''

''எங்கம்மாவதான் கேட்கணும்.''

''அதில உங்களுக்கு எவ்வளவு பங்கு வரும்''

''பாதி, பாதி''

''பாதின்னா, எத்தனை ரூபா.''

''இருபது லட்சம்.''

20249
3736362

''என்ன பண்ணுவீங்க அந்த காசை வெச்சுட்டு.''

''ஏதாவது பிஸினஸ் பண்ணலாம்னு இருக்கேன்.''

''என்ன பிஸினஸ்?''

''மெட்ராஸ்ல அடுக்குமாடி வீடு ஜாஸ்தியாயிடுச்சு எல்லாருக்கும் வீடு நல்லா வைச்சுக்கணும்னு தோணிடுச்சு,''

''அதனால.''

''இண்டீரியர் டெக்கரேஷன் செய்ய ஆரம்பிக்கப் போறேன். வீடு கட்டறபோதே போய் நிக்கப் போறேன்' கட்டின வீட்டிலயும் போய் கேட்கப் போறேன்.''

''நல்லாருக்கே'' அவன் வியந்தான்.

''நிறைய திட்டம் வைச்சுருக்கேன்.''

''எப்படி''

''ஹை லெவல் ஆளுங்களுக்குதான் இண்டீரியர் டெக ரேஷன்கிறது கிடையாது மீடியம் லெவல் ஆளுங்களுக்கு கூட உண்டு. நான் மிடில் கிளாஸ் கிட்ட கேன்வாஸ் பண்ணுவேன். மூவாயிரம், நாலாயிரத்துல டெக்கரேட் பண்ணுவேன். ஆனா கடை பேரு...''

''என்ன கடை பேரு?''

''த ஹை லெவல்''

''வெரிகுட்'' அவள் துள்ளினாள்.

இப்போது அவனை அடைவது அவள் முறை யாயிற்று.

காதலியர்கள் கண் காட்டினால் கடல் மணலை கயிராக திரிக்கலாம் என்பது உண்மை.

''கான்வாஸிங்கை என்கிட்ட விடு சுந்தரம். டெக்கரே ஷனை நீ நின்னு கவனி.''

''இது லேபர் நிறைஞ்ச விவகாரம். ஆளுங்களை வச்சு வேலை வாங்கனும். கார்பெண்டர், கருமான்,எலக்டீரிஷி யன் அப்படின்னு நிறைய பேர் வேணும்.'' அவன் ஆழ்ந்த யோசிப்புடன் பேசினான்.

''தாஜா பண்ணி வேலை வாங்குவோம், ராப்பகலா பாடுபடுவோம்.''

''ஒரு ஸ்டோர் ரூம், ஒரு ஆபீஸ்'' அவன் கண்கள் கனவில் மிதந்தன. வால் பேப்பர் விற்போம். ஒட்டியும் தருவோம். பிறகு பர்னிச்சர், தொங்கும் விளக்குகள் அப்பு றம் இன்னொரு ஆசையும் இருக்கு.''

''என்ன''



''நர்சரி வைக்கனும், தொட்டியில வர்ற செடிகளா நிறைய வைக்கணும். மேல் மாடில கார்டன் போடச் சொல்லணும்.''

அவர்கள் பகலெல்லாம் பேசிக் கொண்டிருந்தார்கள் புருஷன் மனைவி போல் பழகிக் கொண்டிருந்தார்கள்.

''சுந்தரம் இங்கு இருக்கானா'' சாஸ்வதி ஆட்டோ வில் வந்து இறங்கினாள் வாசலில் நின்று கேட்டாள்.

''சுந்தரம். உங்கம்மா. இப்ப நீ உள்ளயிருக்க வேண் டாம். சுவரேறி பின் வீட்டில் குதிச்சுரு. சரசரன்னு அடுத்த தெருவுக்கு போயிடு. சுத்திவா. அப்பத்தான் நுழையற மாதிரி பேசு. அதான் எல்லாருக்கும் நல்லது.''

''இது ரிஸ்க் இல்லியா. அடுத்த வீட்டில் குதிப்பது தப்பில்லையா.''

''டேக் ரிஸ்க். வேறு வழியேயில்லை.''

அவள் துரத்தினாள். அவன் ஓடினான்.

சரஸ்வதி உள்ளே நுழைய அனிதா மேத்யூஸ் தட்டி எழுப்பப்பட்டாள்.

ஈரத்துணியால் முகத்தை துடைத்துக் கொண்டு சரஸ் வதி சொல்வதைக் கேட்டாள்

''ஹார்ட் அட்டாக்கா, ஆஸ்பத்திரியில் இருக்கானா. உன் புருஷன் உனக்கு சொத்து கொடுத்துடுவான் கவலைப் படாத. நானும் வரேன்.வினோலியா சுந்தரம் வந்தானா'

''இல்லியேம்மா அவர் வந்து மூணு நாள் ஆவுதே.''

''நீ ஏன் இவ்வளவு டயர்டா இருக்க வினோலியா, தலையெல்லாம் கலைஞ்சு கிடக்கு.''

''நானா உடற்பயிற்சிகள் செய்து கொண்டிருந்தேன் தாயே'' வினோலியா பவ்யமாக கூறினாள்.

காலிங்பெல் சத்தம் கேட்டது.

சுந்தரம் உள்ளே நுழைந்தான். அவனும் களைப்பாக இருந்தான்.

''அப்பா ஆஸ்பத்திரியிலா. நாம் எதற்கு போய் பார்க்க வேண்டும். அந்த மிருகம் செத்துப் போகட்டும் பிறகு போய் பார்க்கலாம்.'' விஷயம் கேள்விபட்டு உரக்க கத்தினான்.

''ச்சூ'' வினோலியா அதட்டினாள்.

''மரண சமயம் உன் தகப்பனார் மனம் மாறி இருக்கக் கூடும் அவரைப் பார்த்துவிட்டு வருவது மிக முக்கியம்.

''என்ன முக்கியம்'' வினோலியாவை தெரியாதது போல் சுந்தரம் சீறினான்.

'உன் சொத்துக்களை உன் தந்தை கோபமின்றி தரலாம். இது முக்கியமில்லையா'' வினோலியா கேட்டாள். சுந்தரம் கார் ஏற்பாடு பண்ணி வருவதாய் வெளியே ஓடினான்.

வினோலியாவின் பேச்சுக்கு சுந்தரம் கட்டுபடுவதை அனிதா மேதயூஸ் சந்தோஷத்துடனும், சரஸ்வதி கவலையுடனும் குறித்துக் கொண்டார்கள்,

□ □ □ □

## 21

கூரியர் கம்பெனி மேனேஜரும், ஹேமாவும் சந்தானம் வீட்டுக்கு போய் அவனைக் காரில் ஏற்றிக் கொண்டார்கள். சந்தானம் வெள்ளை வெளேர் என்ற



உடையில் இருந்தான், அது தவிர கையில் கருப்பு கோட் வைத்திருந்தான். சிறிய ப்ரீஃப்கேஸ் எடுத்து வந்தான்.

யாரையோ ஒரு பெரியவர் அவனை வாசல்வரை வந்து வழியனுப்புவது தெரிந்தது. மெல்ல அவனைத் தழுவிக்கொண்டு நெற்றியில் முத்தமிட்டு அவன் தலையில் கை வைப்பது காரில் இருந்தபடியே பார்க்க முடிந்தது. சட்டென்று அந்த மாதிரி ஒரு அன்புக்கு மனம் ஏங்கியது. ''நான் இருக்கிறேன் ஹேமா...உன்னுடைய எல்லா முயற்சிகளுக்கும் பின்னாலும் என் அறிவும் அன்பும் துணையிருக்கும்'. என்று அப்பா மாதிரி ஒரு ஆண் தனக்கும் சொல்ல வேண்டும் என்கிற ஆசை வந்தது.

தன் மீது இதுபோல் யாருமே அன்பு வைக்கவில்லையே...தன்னிடம் உண்மையான அக்கறை காட்டக் கூடிய ஒரு மனிதர் தனக்கு அருகே இல்லையோ...ஒரு கேள்வி வந்தது, அம்மா அவளுடைய சிறிய கோட்டுக்குள் வாழ்கிறாள். அண்ணா வேறு ஒரு பெண்ணை ஹேமாவைவிட முக்கியம் என்று தீர்மானித்து விட்டான்.

ஹேமா என்ன செய்கிறாள்...ஹேமா எங்கே போகிறாள்...ஹேமாவின் எதிர்காலம் என்ன என்று யாருமே யோசிக்கவில்லை, யோசிக்கப் போவதுமில்லை. சந்தானம் காரில் உட்கார்ந்து அந்தப் பெரியவரை நோக்கி கை காட்டினான்.

''அது என் அப்பா ஹேமா...வேறு ஒரு சமயம் படபடப்பில்லாத நேரம் நான் அவரை உனக்கு அறிமுகப் படுத்துகிறேன். ரொம்ப ஜாலியான ஆள். வெறும் வக்கீல் மட்டுமல்ல, பிரமாதமாக சமைப்பார், பொண்டாட்டிக்காக கத்திரிக்கா கறி செய்துகொண்டிருக்கிறார். இன்றைக்கு எனக்கு முதுகு தேய்த்து குளிப்பாட்டி விட்டார்'' சந்தானம் கண் சிமிட்டினான் ஹேமாவின் ஏக்கம் இன்னும் ஆழமாயிற்று.

அதற்குப் பிறகு அவர்கள் உரக்கம்பெனியோடு நடத்த வேண்டிய ஒப்பந்தம் பற்றிபேசினார்கள். எதற்கு ஒத்துக் கொள்வது எதற்கு மறுப்பது என்பதை தீர்மானித்துக் கொண்டார்கள். உரக்கம்பெனியோடு நெருங்கும் போது அந்த மூவரும் எந்த பேச்சுமின்றி அமைதியாய் இருந்தார்கள்.

உரக்கம்பெனி அவர்களை போலியான உற்சாகத்துடன் வரவேற்றது.

''இதைத்தான் கற்றுக் கொள்ள வேண்டும். ஹேமா அவனுக்கும் இது முக்கியமான ஒப்பந்தம்தான். ஆனாலும் தடால்புடாவென்று வரவேற்கிறான் பார்த்தாயா?''

''உரக்கம்பெனியின் முதலீடு பலம் பார்க்கும் போது நாம் ஒன்றுமே இல்லை சந்தானம். ஒரு அடிமையை விலை பேசி வாங்கி விட்டதாய்தான் அவன் இன்னும் நினைக்கிறானே தவிர ஒரு வியாபாரமாகவே கருதவில்லை. உன் சீனியரின் எதிரி வந்திருக்கிறாரா...பார் உரக்கம்பெனியின் வக்கில் ஏதும் சிக்கல் பண்ணாமல் இருக்க வேண்டுமே...என்பதுதான் என் கவலை'' ஹேமா அடிக்குரலில் பேசினாள்

''நான் காலையிலேயே பேசிவிட்டேன் ஹேமா...கவலைப்படாதே. ஏழரை மணிக்கு அவருக்கு போன் செய்து என்னை அறிமுகம் செய்து கொண்டேன். என் சீனியரை விட்டு விலகி விட்டேன் என்று தகவல் தெரிவித்தேன். அதற்குப் பிறகு ஒரே ஆசீர்வாதம்தான். இத்தனை நாள் ஒரு மிருகத்தோடு இருந்திருக்கிறோம்...இனி மனிதர்களோடு இருந்து மனிதர்களைப் புரிந்து கொள் என்று பேசினார். என்னை நேரில் பார்க்க ஆவல் இருப்பதாய் தெரிவித்தார். உரக்கம்பெனியோடு ஒப்பந்தம் பண்ண வருவதாக உங்கள் கம்பெனி பெயரைச் சொன்னேன். இன்றைக்கே பாக்கிறோமா...ரொம்ப சந்தோஷம். உன்



சீனியரைப் பற்றி உனக்கு நிறைய சொல்கிறேன் என்று பேசினார்.''

அவர்கள் தன் அறையில் உட்கார வைக்கப்பட்டார்கள்.

''நாம் பத்துமணிக்கு கூடிப்பேச வேண்டிய மீட்டிங் தவிர்க்க முடியாத காரணத்தால் அரை மணிநேரம் தள்ளிப் போகிறது. தயவு செய்து இந்த தாமதத்தைப் பொறுத்துக் கொள்ள வேண்டும் இந்த தாமதம் உங்களுக்கு சிரம, இல்லாத வண்ணம் எங்கள் உரக்கம்பெனி பற்றி. நாங்கள்சமீபத்தில் நடத்திய டீலர் விழா பற்றி ஒரு கேஸட் காண்பிக்கிறோம், இதைப் பார்ப்பது உங்களுக்கு உதவும்''.

ஹேமாவின் கூரியர் மேனேஜர் கோபமாய் ஏதோ சொல்ல வாயெடுக்க ஹேமா அவரை அடக்கினாள் அவர்கள் படம் பார்க்கத் துவங்கினார்கள்.

சந்தானம் ஏதோ நினைவுக்கு வந்தவன் போல அந்த அறையிலிருந்த போனை உபயோகப்படுத்தி யாரிடமோ தொடர்பு கொண்டான் அடிக்குரலில் பேசினான் போனை வைத்துவிட்டு ஹேமாவிடம் வந்தான்.

''நான் நினைத்தது சரி ஹேமா.''

''என்ன?''

''இந்த உரக்கம்பெனி வக்கில் அதாவது என் சீனியருக்கு எதிரி. என்னைப் பற்றி விசாரிக்கப் போயிருக்கிறார், நான் உண்மையிலேயே என் சீனியரை விட்டு விலகி விட்டேனா என்று தகவல் அறிய நேரடியாய் போயிருக்கிறார்.''

''உங்கள் பேச்சை நம்பவில்லை என்று அதற்கு அர்த்தமா?''

''வக்கீல் யாரையும் நம்பக்கூடாது தன் கட்சிக்காரன் மீதும் சந்தேகம் இருப்பதே நல்ல வக்கீலுக்கு உண்டான உயர்ந்த தகுதி. இந்த உரக்கம்பெனி வக்கீலுக்கு சரியான படி தகவல் கிடைக்க வேண்டுமென்பதுதான் என் கவலை.''

''என்ன தகவல்?''

''நான் என் சீனியரோடுதான் இருப்பதாய் எவனாவது சொல்லி விட்டால் இந்த ஒப்பந்தம் நாயடி பேயடி படும். நான் சீனியரிடம் இல்லை என்பதை எப்பாடுபட்டாவது இங்கு நிரூபிக்க வேண்டும்.''

எதிரே டெலிவிஷன் கம்பெனியின் தொழிற்சாலையை, கைபடாத உரமூட்டைகள் தயாரானதைக் காட்டிக் கொண்டிருந்தது. டீலர்கள் விழா என்று எழுத்துக்கள் மின்னின. தமிழ்நாடு டீலர்கள் அதிகம் பேர் வந்திருந்தார்கள். எழுபது பேர் தனித்தனியே அறிமுகப்படுத்தப்பட்டார்கள்.

அவர்கள் வெறும் உரக்கம்பெனி ஆளாக இல்லாது அவர்கள் வசிக்கும் இடத்தில் பெரிய புள்ளிகளாகவும் இருந்தார்கள் வேறு தொழிலும் செய்தார்கள்.

''இந்த கேஸட் வாங்கி காப்பி எடுத்துக்க ஹேமா அநேகமா இந்த உரக்கம்பெனி இவர்களுக்குத்தான் கடிதமோ, பார்சலோ அனுப்பும்; பிரச்சினை வந்தால் யாரை சந்திப்பது என்று இந்த கேஸட் வைத்து அறிய முடியும்.''

அறைக்கு வெளியே பேச்சுக்குரல் கேட்டது உரக்கம்பெனி ஆட்கள் கான்ஃபரன்ஸ் ஹாலில் நுழைந்தார்கள், மேனேஜர்களிடம் கை குலுக்கினார்கள். சற்று இடைவெளி விட்டு ஜெனரல் மேனேஜர் உரக்கம்பெனி வக்கீலோடு உள்ளே நுழைந்தார்.



''இங்கு சந்தானம் என்பவர் யார்? உரத்த குரலில் தெளிவான ஆங்கிலத்தில் அந்த வக்கீல் கேட்டார் ஒரு கிழட்டு சிங்கம் போல இருந்தார்.

சந்தானம் எழுந்து நின்றான் அவர் முன்னே போய் கை கூப்பினான்.

வெள்ளைச்சட்டை கார்பெட் பட சாஷ்டாங்கமாய் அவர் காலில் விழுந்தான் அவன் நெற்றி அவர் ஷூவைத் தொட்டது.

''கடவுளே... கடவுளே...என்ன இது...'' உரக்கம்பெனி வக்கீல் அவனை மேலே தூக்கினார். உரக்கம்பெனி மேனேஜர்கள் இந்த நமஸ்காரத்தை எதிர்பாராது உறைந்து போயிருந்தார்கள்.

அந்த வக்கீல் சந்தானத்தைக் கனிவுடன் பார்த்தார் அவன் கைகளை இறுகப்பற்றிக் கொண்டார்.

உன்னைப் பற்றி விசாரிக்க போயிருந்தேன். அதனால்தான் தாமதம் ...நிறைய திட்டிவிட்டு வெளியேறி விட்டாயாமே...உன்னைவிட பெரிய ஆளாக மாறுவேன் என்று சபதமிட்டாயாமே ...உனக்கு எதிரி நான்தான் என்று சொல்லிவிட்டு வந்தாயாமே...கேட்க கேட்க சந்தோஷமாக இருந்தது. நான் வழக்கில் ஜெயிப்பதாக தன் மனைவியை சோரம் போக சொல்கிறவன் உன் சீனியர். அவன் உண்மையான முகம் உனக்கு தெரிந்திருக்காது, பிற்பாடு அதை உனக்குச் சொல்கிறேன் உன்னோடு வந்திருப்பவர்கள் யார்...''

''கூரியர் கம்பெனி என்னுடைய முதல் க்ளயண்ட் இவர்கள்தான் என் சீனியரை விட்டு வெளியே வந்ததுமே மிக எதேச்சையாக இந்தப் பெண் வந்து தான் வேலை செய்யும் கூரியர் கம்பெனி வக்கீலாக இருக்க என்னை அழைத்தார்; நான் என் சீனியரை விட்டு வந்தது நல்லது என்பதற்கு அத்தாட்சியாக நல்ல சகுனமாக இது எனக்கு

இருந்தது. இந்த ஒப்பந்தத்தை நல்லபடி முடிக்க உறுதி கொடுத்திருக்கிறேன்'' சந்தானம் இன்னும் குரல் தாழ்த்தினான்.

''உங்கள் எதிரே ஒப்பந்தம் செய்யவேண்டுமே என்கிற நடுக்கம் எனக்குள் இன்னமும் இருக்கிறது. உங்கள் அனுபவத்திற்கு முன்நான் சிறுகுழந்தை. என் தவறுகளை எனக்குச் சுட்டிக்காட்டி எனக்கு ஆதரவாக இருந்து என்னை ஆசீர்வதிக்கவேண்டும்.''

''அது என் கடமை. ஒரு அயோக்கியனை உதறி, பிரிந்து வெளியே வந்திருக்கிறாய். அது சரியான முடிவு என்று காட்டவே உனக்கு உடனே ஒரு வேலை கிடைத்திருக்கிறது. கடவுளருள் அப்படித்தான் இருக்கும். இந்த உரக்கம்பெனி ஒரு மதயானை. ஆனால் அங்குசம் என்னிடம் இருக்கிறது. நீ கவலைப்படவேண்டாம். அவனிடமிருந்து விலகி சாய்ந்துகொண்டார்.

கூரியர் கம்பெனி கேட்ட தொகையை ஒப்புக்கொள்வதாக உரக்கம்பெனி சொல்லியது. ஒரு கிலோ இரண்டு கிலோ உரபார்சல்கள் அனுப்புவது பற்றி கேள்வி கேட்டது. அது தொலைந்து போனால் அங்கு உண்டான தொகை கூரியர் கம்பெனி கட்டவேண்டும் என்று வற்புறுத்தியது. உரக்கம்பெனி வக்கீல் டக்கென்று இடைமறித்தார்.

''மிஸ்டர் ஜெனரல் மேனேஜர், நமது உரக்கம்பெனி ஒரு வருடத்திற்கு எத்தனை டன் உரம் தயாரிக்கிறது?''

''பல ஆயிரம் டன்கள்'' என்று பதில் வந்தது.

''ஒரு கிலோ, அரை கிலோவாய் மாதிரிகள் எத்தனை டன் அனுப்பப்படும்?''

வருடத்திற்கு அரை டன் அனுப்பப்படும் என்று பதில் வந்தது.



''ஆக...நீங்கள் கூரியரை பயமுறுத்துவதற்குக் காரணம் உரம் காணாமல் போய்விடுமே என்பதற்காகஅல்ல. அது டெலிவரி செய்யப்படவேண்டும் என்கிற கட்டாயத்திற்காக. அரை டன் உரத்தை ஏமாற்றி இந்த கூரியர் கம்பெனி கோட்டை கட்டிவிடாது. அதே சமயம் ஏமாறவும் கூடாது. நாம் இதை வேறுவிதமாக அணுகுவோம். சாம்பிள் பார்சலுக்கான தொகையை சற்று அதிகரிப்போம். ஆனால் அந்தத் தொகை உடனே தரப்படமாட்டாது சாம்பிள் வந்து சேர்ந்தது என்று கையெழுத்தும் ரப்பர் ஸ்டாம்பும் வாங்கியவர்கள் போட்டுத்தந்த காகிதம் பார்த்து, நாம் அந்தத் தொகையைத் தருவோம் மாதாமாதம் கவர் டெலிவரிக்கு காசு கொடுத்தால் மூன்று மாசத்துக்கொருமுறை சாம்பிள் டெலிவரி தருவோம்.''

''சேதம் அடைந்தது என்று தகவல் வந்தால் என்ன செய்வது?'' ஒரு மேனேஜர் கேள்வி எழுப்பினார்,

''உரம் என்பது ஒரு ரசாயனப்பொருள். அது சேதம் அடையாதபடி அடைத்துக்கொடுப்பது உங்கள்பொறுப்பு. அதையும் மீறி சேதம் அடைந்தால் பெரிய மனசு பண்ணி பொறுத்துக் கொள்ள வேண்டும். ஒரு கூரியர் கம்பெனி வேண்டுமென்றே சேதம் ஏற்படுத்தாது. கொடுக்கிற காசுக்கு விரைவாய் வேலை செய்கிறார்களா என்று பாருங்கள். தாமதம் மட்டுமே பொறுத்துக் கொள்ள முடியாத விஷயம். ஒவ்வொரு இடத்திற்கும் டெலிவரி நேரம் என்ன என்பதை உட்கார்ந்து பேசுங்கள். அது போல் இன்னொரு மடங்கு இயற்கைச் சீற்றங்களின் போது கொடுங்கள். இவர்கள் சரியாக டெலிவரி செய்யவில்லையெனில் வேறு கூரியர் பாருங்கள். ஒரு கூரியரை நேரத்துக்கு டெலிவரி செய்யவில்லை என்று தண்டிக்க இயலாது ''

கூரியர் கம்பெனிக்கு சாதகமாகவே அந்த உரக்கம்பெனி வக்கீல் பேசுவது எல்லோருக்கும் புரிந்துவிட்டது. சொந்தக் குழந்தையை லேசாய் பயமுறுத்துவதுபோல செல்லமாய் கூரியர் கம்பெனியை எச்சரித்தாரேயொழிய எந்தக் கடுமையும் இல்லாது மீட்டிங் முடிந்தது.

உரக்கம்பெனியிடமிருந்து ஒரு லட்சருபாய் டெலிவரி செய்ததற்கும், செய்யப் போவதற்கும் அட்வான்ஸாக காசோலை தரப்பட்டது. மறுபடி எல்லோரும் கை குலுக்கினார்கள்.

உரக்கம்பெனி வக்கீல் அவசரமாக வெளியேறி காரில் ஏறினார். சந்தானம் பின்னால் ஓடினான்.

''மிக்க நன்றி ஐயா.''

''எனக்கும் சந்தோஷம் சந்தானம். உனக்கு உதவ முடிந்தது என்பதில் எனக்கும் சந்தோஷம். நல்லவர்களுக்கு கடவுள் உதவி செய்வார். தனியாக நிற்பதற்கு முயற்சி செய். யார் அந்தப் பெண்...உனக்கு என்ன உறவு.''

''உறவில்லை ஐயா. நட்புதான். இனிமேல் உறவாகலாம். அதற்கான வாய்ப்பு இருக்கிறது. ஆனால் இதுபற்றி நான் கனவுகள் ஏதும் காணாமல் இருக்கிறேன்.

''சபாஷ். அதுதான் ஆண் பிள்ளைக்கு அழகு. நல்ல பெண் மனைவியாக வரவேண்டும் என்று விரும்புவது வேறு. கனவு காண்பது வேறு. விருப்பத்தை அடைய முடியும். வெறும் கனவு கண்டால் அடையமுடியாமலும் போய்விடும்...விருப்பத்தைக் கனவாக மாற்றாமலிரு. என் வாழ்த்துக்கள்.'' அவர் கார் நகர்ந்தது.

சந்தானமும் ஹேமாவும் கூரியர் கம்பெனி மேனேஜரும் தங்கள் காரில் ஏறிக்கொண்டார்கள். அலுவலகம் வந்தார்கள். வாழ்த்துக்கள் பரிமாறிக் கொண்டார்கள்.



''ஹேமா, இவரை மறுபடியும்இவருடையவீட்டிலோ கோர்ட்டிலோ இறக்கிவிடு'' மேனேஜர் சொன்னார்,

''கார் கொடுத்தால் போறாதா சார்''

''போறாது கூட்டிவந்தது போலவே இறக்கிவிடவும் வேண்டும், எனக்கு வேலை இருக்கிறது. நீ போ.''

ஹேமாவும், சந்தானமும் காரில் ஏறினார்கள், சந்தானம் வீடு நோக்கி கார் போயிற்று.

● ● ●

# 22

இந்த முறையும் சரவணாஸ் போனார்கள். அடையும், அவியலும். குழம்பு சாதமும், தயிர் சாதமும் வாங்கிக் கொண்டார்கள. ஒரு கடப்பைக்கல் மேஜை ஓரம் நின்றுகொண்டார்கள்.

''இந்தக் கூரியர் கம்பெனில உன் பதவி என்ன?'' சந்தானம் சட்டென்று கேட்டான்.

''உதவி மேனேஜர், ஏன்?''

''இப்ப இந்த ஒப்பந்தம் நல்லபடியா முடிஞ்சதோட க்ரெடிட் யாரைச் சேரும்?''

''மேனேஜரைத்தான் போய்சேரும். இந்நேரம்தானே எல்லாம் செய்ததாக ஹெட் ஆபீஸுக்கு தெரிவிக்கப்பட்டிருக்கும்.''

''நான் அந்த மேனேஜருக்காக உதவி செய்யவில்லை ஹேமா.''

''எனக்குத் தெரியும், ஆனால் ஒரு கம்பெனியில் வேலை செய்கிற எனக்கு தனியான உதவி என்ன செய்ய முடியும்.''

''அது வாஸ்தவம்தான்: அதே சமயம் நீ ரொம்ப முக்கியம் என்பதுவும் உன் மேனேஜருக்கு ஞாபகப்படுத்த வேண்டும்.''

''அது அவசியமில்லை சந்தானம்.''

''ஏன்?''

''நான் தொடர்ந்து இந்த கம்பெனியில் வேலைசெய்யப்போவதில்லை. அதிகபட்சம் இன்னும் ஆறு மாதங்கள் தான் இருப்பேன். பிறகு தனியாக ஏதாவது தொழில் துவங்கலாம் என்று எண்ணம்.''

''என்ன வியாபாரம்?''

''தெரியவில்லை. யோசிக்க வேண்டும்.''

''இங்கே சம்பளம் போதவில்லையா?''

''சம்பளம் முக்கியமில்லை. வேலைக்கு போகிறேன் என்கிற கர்வம் தான் முக்கியம். நிர்வாகம் பற்றி கற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்குத்தான் இங்கு இருக்கிறேன்.''

''தனியாய் செய்ய காசு வேண்டாமா?' '

''வரும்.''

''அட...நானும் கேள்விப்பட்டேன்' தீர்ப்பாகிவிட்டதல்லவா...என்ன சொல்கிறார் உன் தகப்பன்.''

''தீர்ப்பு எங்களுக்கு சாதகம்தான். ஆனால் அப்பா என்ன செய்யப்போகிறார் என்பதுதான் தெரியவில்லை.

''தனியாக பிஸினஸ் என்றால் கவனமாக இரு. இன்றைய சூழ்நிலையில் வியாபாரம்போல் ஒரு அற்புத



மான விஷயம் எதுவுமில்லை. அதே சமயம் காசுவகுளிக்கவும் நமக்கு தெரிய வேண்டும். என்ன வியாபாரம் பண்ணலாம் என்கிற எண்ணம் துளிகூட இல்லையா ''

''இதே கூரியர் சர்வீஸ் நடத்த வேண்டும் என்றே எண்ணம்...தமிழ்நாட்டில் ஆட்கள் கிடைப்பது எளிது. படித்த இளைஞர்கள் நிச்சயம் கிடைப்பார்கள். ஆனால் நிறைய இளைஞர்கள் சோம்பேறிகள். லட்சியமில்லாதவர்கள் இடைவிடாது உழைப்பது தவறு என்று கருதுபவர்கள். லீவு வேண்டுமென்று எதிர்பார்ப்பவர்கள். அதனால் இருபத்தைந்து பேர் வேலை செய்ய வேண்டிய இடத்தில் முப்பத்தைந்து பேர் போட்டுக் கொள்ள வேண்டும். துரிதமாய். திறமையாய் வேலை செய்பவனுக்கு அதிக பணம் கொடுக்க வேண்டும். பம்பாய், டெல்லி. கல்கத்தா மூன்று இடங்களுக்கு போய் பெரிய கூரியர்களை சந்தித்து சென்னைக்கு மட்டும் டெலிவரி செய்ய ஒரு கூரியர் ஆரம்பிக்க போகிறேன். பூந்தமல்லி ஹைரோடில் இடம்பிடிக்கப் போகிறேன். சென்ட்ரல், எக்மோர் தொட அதுதான் வசதி. சென்னையின் வியாபார மையம் வடசென்னையில் தான் இநக்கிறது இதெல்லாம், கோர்ட் தீர்ப்பு சொன்ன காசு வந்தால்தான். இல்லையெனில் வெறும் உதவி மேனேஜர்தான்.''

''திருமணம் பற்றி ஏன் ஒன்றும் பேசமாட்டேனென்கிறாய்?''

''என்ன பேசுவது சந்தானம்? நான் அப்பா வளர்க்காத பெண். புருஷன் ஒதுக்கி வைத்த தாயால் வளர்க்கப்பட்ட பெண் சாஸ்திர சம்பிரதாயங்களோ பண்டிகைக்கான சமையலோ செய்யத் தெரியாத பெண். கொஞ்சம் அழகாய் இருக்கிறேன் என்பதைத் தவிர எந்த பிளஸ் பாயிண்ட்டும் இல்லை.''

''என் வாழ்க்கை பற்றி சொல்லியிருக்கிறேனல்லவா'

சந்தானம் சாம்பார் சாதம் வழித்து சாப்பிட்டபடி கேட்டான்.

''உன் அம்மா இரண்டாவது மனைவி அவ்வளவு தானே '

''வேறு ஜாதி.'' சந்தானம் தயிர்சாதம் கிளறினான்.

''அதனாலென்ன...''

''எனது இரண்டு அக்காளும் காதல் திருமணம்... இரண்டு திருமணங்களும் வெவ்வேறு ஜாதி.''

''அதனாலென்ன...''

''எனக்கு மனைவியாய் வருபவள் ஒதுக்கி வைக்கப்பட்டதாயின் மகளா என்று நான் பார்க்கப் போவதில்லை பார்க்கின்ற யோக்கியதையும் இல்லை.''

''சந்தானம், நேரடியாக பேசு என்னைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமென்று ஏன் துடிக்கிறாய்.''

''அதற்கு பல காரணங்கள்...''

''என்னென்ன...''

''நீ ஒரு டக்கர் குட்டி. இது நம்பர் ஒன். நீ படித்தவள். இது நம்பர் டூ. பேசிப் பழகத் தெரிந்த பெண். நம்பர் த்ரீ. நீ ஒரு நிர்வாகி. நம்பர் நாலு. உன்னை மாதிரி கம்பெனி ஆரம்பிக்கிற பொண்ணோடு ஒட்டிக் கொண்டால் வாழ்க்கை சௌகர்யமாக இருக்கும். வெள்ளை சட்டை, வெள்ளை பேண்ட், கார், ஏஸி ரூம், பஞ்சு மெத்தை என்றெல்லாம் கிடைக்கும்.''

ஹேமா அவனையே வெறித்துப் பார்த்தாள்.



''இப்போது பார்த்தாயே ஒரு சிறிய வீடு...அது கடந்த நான்கு வருடங்களாகத்தான் என் அம்மாவுக்குக் கிடைத்திருக்கிறது. அதற்கு முன் ஒரு ஒண்டுக் குடித்தனத்தில்தான் நாங்கள் இருந்தோம். ஒரு சமையலறை ஒரு படுக்கையறை. ஒரு ஹால் இதுதான் எங்கள் வீடு. வாரத்திற்கு ஒருமுறை தான் அப்பா வருவார். அவர் வரும்போது அவருடைய மனோநிலையைக் கவனித்து பிறகுதான் காசுகேட்க வேண்டும். அப்பாவுக்கு அவ்வளவு வருமானம் இல்லை அப்பா இரண்டாவது திருமணம் செய்து கொண்டதால் அவருக்கு சொத்து மறுக்கப்பட்டது. அப்பா வழக்காடவில்லை இரண்டாவது திருமணம் செய்தது நியாயமெனில் என் சொத்து எனக்கு வரும்என்று சும்மா இருந்து விட்டார். வெறும் கோதுமைக் கஞ்சியைக் குடித்துவிட்டு நான் பல நாட்கள் பள்ளிக்கூடம் போயிருக்கிறேன். தீபாவளிக்கு தீபாவளிதான் பள்ளிக்கூட யூனிஃபார்ம் எடுத்துத் தரப்படும். என் முதல் அக்கா பிரேமா என்று பெயர். அவள் லவ் பண்ணியது வீட்டுக்குத் தெரிந்து ஒரே ரகளை. அம்மா அழுதாள். கத்தினாள் உனக்கெதுக்குடி லவ் என்று அடித்தாள்.''

''பிரேமா ஒரே வார்த்தையில் பதில் சொன்னாள். அவன் பணக்காரன்மா. என் வீடு உறைந்து போயிற்று.''

''திங்கறதுக்கு விதம்விதமா வாங்கித் தரார்ம்மா. காதுக்கு, மூக்குக்கு, கைக்குன்னு தினம் ஏதோ ப்ரெஸண்ட் பண்றார். சொந்தமா மரக்கடை வச்சிருக்கார். என்னைவிட பன்னெண்டு வயசு பெரியவர். அவனை வளைச்சுப் போட்டா நம்ம வீடு சௌகர்யமா இருக்கும்னு நினைக்கிறேன் என்று சொல்லி அழுதாள்.''

அப்பாவும், அம்மாவும் அவனைப் போய் பார்த்தார்கள். திருப்பதியில் திருமணம் செய்தார்கள்.

இன்றைக்கு அக்கா இருநூறு சவரன் நகை வைத்திருக்கிறாள். ஒரே ஒரு குழந்தை பெற்றிருக்கிறாள். மடிப்பாக்கத்தில் பெரிய வீடு கட்டியிருக்கிறாள். ரொம்ப சந்தோஷமாக இருக்கிறாள். ரெண்டாவது அக்காவும் அதேவழி. அதே கதை. நான்கு வருடம் முன்புதான் அப்பாவுக்கு சொத்து கிடைத்தது. இந்த வீடு வாங்கினோம். முதல் முதலாய் சோபா வாங்கினோம். மின்விசிறி வாங்கினோம். என் அம்மா போன தீபாவளிக்குத்தான் நாலாயிரம் ரூபாய்க்கு ஒரு பட்டுப்புடவை வாங்கினாள். அதுவும் நான் வற்புறுத்தி வாங்கினாள். நானும் சௌகர்யமாக இருக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்.''

சந்தானம் சாப்பிட்டு முடித்து சிறிய ஏப்பம் விட்டான். ''பிறர் காசில் உட்கார்ந்து திங்கிற ஜாதியில்லை நான். ஒரு புஷ்வேண்டும். சற்று கைதூக்கிவிட வேண்டும். அப்படி கைதூக்கி விடறபோ உன் அம்மாவைப் பாட்டிதானே என்று சொல்லாதிருக்க வேண்டும். உன் அக்கா ஓடிப்போனவள் தானே என்று இழிவுபடுத்தாது இருக்க வேண்டும், ஏனெனில், அவர்கள் மிக நல்ல மனிதர்கள். வாழ்க்கை வசதிகள் சரியாகக் கிடைத்திருப்பின் என் அக்கா இருவருமே ஐ. பி. எஸ். ஐ. ஏ. எஸ். ஆக வந்திருப்பார்கள். என் இரண்டாவது அக்கா புருஷனுக்கு கீழே சார்ட்டட் அக்கௌண்ட்டெண்ட் படித்துக் கொண்டிருக்கிறாள். அவள் பி. காம் முடிக்கப்பட்ட பாடு எனக்குத்தான் தெரியும். இன்று மூன்று பெண்களுக்கு பி. காம். முடிக்க பணம் கட்டுகிறாள். ஒவ்வொரு தீபாவளிக்கும் அவர்களுக்கு நல்ல உடைகள் வாங்கித் தருகிறாள்.''

''என்னை ஒரு இழி பிறப்பாய் நீ நினைக்கலாம். என்னை விட பணக்காரனாய் 'பாரேன் என்று கேலி



செய்யலாம். ஆனால் யார் வாழ்க்கையும் கேலியானது அல்ல.''

''சந்தானம் ப்ளிஸ்'' ஹேமா கை உயர்த்தி நிறுத்தினாள். இரண்டு கைகளாலும் முகத்தைப் பொத்திக் கொண்டாள். சந்தானத்தின் வாழ்க்கை தன்னை விட கொடுமையான வாழ்க்கை. தன் அம்மாவை விட, சந்தானத்தின் அம்மா வேதனைப்பட்டவள். ஆனால் அந்த குடும்பம் மெல்ல, மெல்ல, மேலே வந்துவிட்டது' சரியோ, தவறோ, நூறு சதவிகித ரிஸ்க் எடுத்து செட்டிலாகி விட்டது.

இந்த சந்தானத்தை திருமணம் செய்து கொள்ளலாம். இப்போது சரி என்று அடங்கி, ஒடுங்கியிருக்கிற சந்தானம், திருமணத்திற்கு பிறகு ரௌத்திரம் காட்டலாம்.

தன்னுடைய யோக்கியதைக்கு. தகப்பன் சரியில்லாத நிலைக்கு இதுமாதிரி ஆண்கள்தான் சரி. எங்கியாவது ஒரு ஹோட்டல் ஹாலில் மாலை மாற்றிக் கொள்வதுதான் நல்லது.

ஆனால் அந்த வசந்தங்கள் எல்லாம் வரும் முன்கையில் காசு வேண்டும். கொஞ்சுகிறானே, கெஞ்சுகிறானே என்று மயங்கிவிட்டு திருமணத்திற்கு தலையாட்டினால், காசு இல்லாதது பெரிதாய் கண்முன் நிற்கும். உடை உணவு விஷயங்கள் எல்லாம் இழுபறியாகும். காசில்லாத ஒரே காரணத்திற்காகவே காதல் கசக்கும்.

இவன் மீது இப்போது ஏற்படுகின்ற இந்த பரிதாபம் காதலாகி விடகூடாது. எனக்கு ஒரு அகமுடையான் வேண்டுமே என்கிற ஆத்திரம் காதலாகி விடக்கூடாது. கல்யாணம் செய்து கொண்டால்தான் சமூகத்தில் மதிப்பு என்கிற கணிதம் காதலாகிவிடக் கூடாது.

என் சௌகரியங்கள் என்னை காதலிக்க தூண்ட வேண்டும். என் வருமானம் எனக்கு காதலிக்க தைரியத்தை தரவேண்டும். என் சுறுசுறுப்பின் விளைவால் நான்காதலிக்க வேண்டும். என் இலக்குகளை நான் தொட்ட சந்தோஷத்தில் எவனையாவது லவ் பண்ணலாமா. என்று அலையவேண்டும். நான் மட்டும் இப்படியிருந்தால் போதாது, நான் காதலிக்கிற ஆணுக்கும் இதே புத்தியிருக்க வேண்டும்.

வேலை நேரத்தில் பெண் பிள்ளை நினைப்பும், புணருகின்ற ஆசையும் உடையவனால் வாழ்க்கையில் ஜெயிக்க முடியாது. ஜெயிக்க விருப்பமில்லாதவனோடு என்னால் குடித்தனம் பண்ண முடியாது. இதை சந்தானத்துக்கு புரியவைக்க வேண்டும்.

காசு மட்டுமே என் குறிக்கோள் இல்லை. நிறைய காசு இருக்கிறவனுக்கு என்னால் மனைவியாக முடியாது. நான் சம்பாதிக்க வேண்டும். நான் ஜெயிக்க வேண்டும். நான் என் இலக்கை தொடவேண்டும் என்மீது எனக்கு மதிப்பு வந்தால்தான் எனக்கு பிறர் மீது காதல் வரும். இல்லையெனில் இடைவிடாது என்னை பயம் கவ்விக்கொண்டிருக்கும். பயமிருக்கும் போது காதலிக்க முடியாது. கடவுள் பார்த்துக் கொள்வார் என்று கண்மூட முடியாது.

சந்தானம் இதை புரிந்து கொண்டால் காதலிக்கலாம். இல்லையெனில் டாட்டா சொல்லி விடலாம். பூசி மழுப்புவதை விட காதலா. இல்லையா என்று தவிக்க விடுவதை விட காதல் என்ற விஷயம் எனக்கு இவ்விதம்தான் என்று சொல்லிவிடலாம்.

''சந்தானம் நமது காதல் அல்லது திருமணம்பற்றி பின்னால் பேசலாமா இப்போதைக்கு நட்பாக இருக்கலாமா.''



''இருக்கலாம்.'' நம்முடைய வியாபாரத்தை பற்றி பேசும்போது நம்மைப்பற்றி அதிகம்புரிந்துகொள்ளலாம். நம்மைப் பற்றி புரிந்துகொள்ளுகிற விதமாய் பழகலாம். நாம் அன்னியமுமில்லை உறவுமில்லை. அப்படி ஒரு புதிய சூழ்நிலையை நாம் உருவாக்கி கொள்ளலாம். சிறிதுகூட பொய்யில்லாமல் இருக்கலாம். முழு உண்மையோடு பழகலாம், உனக்கு நான் குடை பிடித்துக்கொண்டு வரலாம். எனக்கு நீ முதுகு தேய்த்துவிடலாம். உன் செருப்புகளுக்கு நான் பாலிஷ் போட்டு தரலாம். என் ஜட்டியை நீ துவைத்துப்போடலாம்'

''வெளியே யாராவது கேட்டா நான் ஹேமாவின் வக்கீல் என்று மட்டுமே சொல்வேன். பிறர் உன்னைப் பழிக்க இடம் கொடுக்க மாட்டேன். என் காதலை, உன் மீதுள்ள நேசத்தை நாலு பேருக்கு முன் இரைந்து நான் உன்னை அவமானப்படுத்த மாட்டேன். நாம் தொடர்ந்து பயணப்படுவோம், காலம் நம்மைச் சேர்த்து வைக்கட்டும்.''

''நம் யோக்கியதைகளை பிறரிடம் அலட்டிக்கொள்கிற போதுதான் பிரச்சினை வருகிறது. என்னை உனக்கு தெரியும். உன்னை எனக்கு தெரியும். மேலும் தெரிந்து கொள்ளவே பழகுகிறோம். காதலியை மிரட்டி காதலில் வெற்றி பெற முடியாது என்பது எனக்கு தெரியும் ஹேமா.''

''சரி இப்ப யார் பில் கொடுக்கறது.'' ஹேமா கண் சிமிட்டியபடியே சொன்னாள்.

''நானும் இல்லை, நீயும் இல்லை. இந்த சாப்பாட்டை உன் கம்பெனி கணக்கில் எழுது உன் மேனேஜர் என்னோடு லஞ்சக்கு வராதது என்னை அவமானப் படுத்திய விஷயம் என்று சொல், உரக்கம்பெனி தன் வக்கிலை எப்படி நடத்தியது என்று பார்த்தாயா? அந்த

மரியாதையுடன் நடத்த வேண்டும் என்று சொல்'' மிரட்டிவிட்டு கண் சிமிட்டினான்.

''இப்போ உங்களை கோர்ட்ல டிராப் பண்ணனுமா, வீட்டுல டிராப் பண்ணனுமா.'

''சீனியரைப் பார்த்து என் சம்பளத்தைகேட்கவேண்டும். என் கணக்குப்படி என் காசு இருபத்தி மூன்றாயிரம் அவரிடம் உள்ளது. அதை வாங்கி வரவேண்டும். சீனியர் இருக்கிறாரா என்று போன் செய்துவிட்டு வருகிறேன்.''

ஹோட்டலில் இருந்த போனை உபயோகப்படுத்தி, யார் கூடவோ பேசினான். சட்டென்று அவளுக்கு அருகே வந்தான். சில வினாடிகள் யோசித்தான்.

''ஹேமா, நான் என் வீட்டுக்கு போன் செய்தேன். உன் மேனேஜர் சற்றுமுன் போன் செய்தாராம். உன் அப்பாவுக்கு உடல்நிலை மிக மோசமாக உள்ளதாம். இதை உன் அம்மா போன் பண்ணி உனக்கு தெரிவிக்க சொன்னாளாம். நீ எங்கிருந்தாலும் அப்பல்லோ ஆஸ்பத்திரிக்கு சீக்கிரம் வரச்சொன்னார்.''

ஹேமா திடுக்கிட்டாள், யோசித்தாள்.

''என் அப்பாவுக்கு உடம்பு சரியில்லையெனில் என் அம்மாவுக்கு என்ன வந்தது. எதற்கு நான் அப்பல்லோ ஆஸ்பிட்டல் போக வேண்டும். இறக்கும் தருவாயில் என்னை மன்னித்து விடு ஹேமா என்று அப்பா கேட்க அவரை நான் மன்னிக்க வேண்டுமா. கல்லானாலும் அப்பன், புல்லானாலும் தந்தை என்று அவரை ஏற்றுக் கொள்ள வேண்டுமா? நான் அப்பல்லோ போகமாட்டேன் சந்தானம். சொல்லிவிட்டு அவள் நகம் கடித்தாள்.

''ஹேமா, உன் தகப்பனுக்காக வேண்டாம் உன் தாய்க்காக போய் வா. உன் தாயினுடைய கௌரவத்துக்காக போய் வா.''



''புருஷனான உன் துணையில்லாமல் ஒரு பிள்ளையை, ஒரு பெண்ணை நான் வளர்த்திருக்கிறேன் என்று அவள் கர்வப்பட்டுக்கொள்ள ஒரு வாய்ப்புக்கொடு. மிகக் கெட்டிக்காரியாக சுயபலம்மிக்க படிப்பும், பண்பும் மிளிர்ந்த ஒரு மகளை நான் வளர்த்திருக்கிறேன் என்று அவள் பேசட்டும். உன் தந்தைக்கு நீ இரக்கப்படவேண்டாம். ஹேமா மரண நேரத்திலும் உன் தந்தை மாறாமல் இருக்க கூடும். உன் தாயிடம் ஏக தாளமாக பேசக் கூடும். கடைசி நேரத்தில் தலைமுடியை பிடித்து உலுக்கிவிட்டுப் போகலாம் என்று எண்ணக்கூடும். அவளை பாதுகாக்க போய் வா.''

''என் அப்பாவின் முதல் மனைவி சற்று பணக்காரி. சொத்து வராத நிலமை எங்கப்பாவுக்கு ஏற்பட்டதும், நாள் தவறாது சண்டை போடுவாளாம். என் அம்மாவோடு தொடர்பு ஏற்படுவதற்கு முன்பே கூட தன் குலப்பெருமை சொல்லி என் தந்தையின் தந்தையை இழித்துரைப்பாளாம். அவளுக்கு மிக மோசமான மரணம் வந்தது. அவளது பிள்ளைகளை அருகே நிற்க வைத்து அவள் செய்த தவறுகளை அப்பா சுட்டிக் காட்டினாராம். குல கவுரவம், பூர்வீக சொத்து, தற்போது கிடைத்த குழந்தைகள் அவரின் உயர்வு எல்லாம் சுட்டிகாட்டி, உன்னோடு யார் வருவார்கள், எதை தூக்கிக்கொண்டு போகப் போகிறாய் என்று கேட்டாராம். சகலத்தையும் விட்டு ஒதுக்கிவிட்டு ஒரே ஒரு முறை கடவுளே என்று குரல் கொடுக்கச் சொன்னாராம். அவள் உரக்க குரல் கொடுத்துவிட்டு அப்பாவை நோக்கி கைகூப்பிவிட்டு செத்துப் போனாளாம்.''

''உன் அப்பா உன்னோடு பேச முயற்சித்தால் உன் அப்பாவிடம் கேள் ஹேமா. உன்னோடு இப்போது என்ன உறவு என்று கேள்.''

''ஒரு வேளை இதற்கெல்லாம் வாய்ப்பில்லாமல் இன்னேரம் உன் அப்பா இறந்திருக்கலாம். நீ ஜனிப்பதற்கு காரணமாய் இருந்த உடம்பை ஒருமுறை பார்த்துவிட்டு வா.''

ஹேமா பில்லுக்கான காசை வைத்துவிட்டு வெளியே வந்தாள். சந்தானமும் அவனும் காரில் ஏறிக்கொண்டார்கள். ஹேமா சில வினாடிகள் மவுனமாக இருந்தாள்.

''டிரைவர் எங்களை அப்பல்லோ ஆஸ்பத்திரியில் விட்டுட்டு, நீ எங்கியாவது சாப்டுட்டு ஆபீஸ் போய்டுப்பா.'' கண் மூடி சீட்டில் சாய்ந்து கொண்டாள்.

அடுத்தது என்ன நடக்கப் போகிறது என்று தெரியாததுதான் வாழ்க்கையின் மிகப் பெரிய சுவை. தெரிந்து விட்டால் வாழ்க்கை சாரமற்று இருக்கும்.

□ □ □

## 23

சரஸ்வதி பயந்து பயந்து அந்த ஆஸ்பத்திரிக்குள் நுழைந்தாள.

தனியான ஒரு அறையில் அவள் புருஷனை படுக்க வைத்திருந்தார்கள். உடம்பெல்லாம் ப்ளாஸ்டிக் குழாய்கள் பரவிக் கிடக்க, அயர்ந்து தூங்குகின்ற புருஷனைப் பார்த்ததும் வியப்பாக இருந்தது. முகம் வற்றிப்போய் கிடந்தது. கடைவாய் ஓரம் எச்சில் வழிந்திருந்தது. தலைமுடி பரட்டையாய் கிடந்தன. ஒரு நீலக் கலர் கவுன் மட்டுமே உடம்பில் இருந்தது. கைநகங்கள் வெட்டப் படாமல் இருந்தன. வலது கால் கட்டை விரலில்



ப்ளாஸ்டர் சுற்றப்பட்டிருந்தன. அந்த ப்ளாஸ்டர் அழுக்காய் இருந்தது.

''உனக்கு கூட இந்த மாதிரி வேதனையெல்லாம் வருமா, நீ கூட நோயுக்குள் விழுவாயா? ஆமாம் நான் மிருகம், ஆமாம் நான் ராட்சசன் என்று கத்தினாயே, எந்த ராட்சசன் இப்படி இளைத்து செத்திருக்கிறான். நீ ராட்சசன் இல்லையா'' அவள் அருகே போய் உற்றுப் பார்த்தாள்.

அவள் புருஷனின் அலுவலக ஆட்கள், அவளைத் தெரிந்தவர்கள் வணக்கம் சொன்னார்கள். டாக்டருக்கு அவளை அறிமுகம் செய்து வைத்தார்கள்.

''விட்டா தூங்கினே இருப்பார் எழுப்பு, தட்டி எழுப்பு'' டாக்டர் கட்டளையிட இரண்டு நர்சுகள் அவரை உலுக்கி எழுப்பினார்கள். அவர் கண் திறந்தார். சகலரையும் பார்த்துவிட்டு சரஸ்வதியின் மீது பார்வையை நிறுத்தினார்.

''இவங்கயார் தெரியுதா''டாக்டர் சரஸ்வதி குறித்துக் காட்ட கண்களை மூடிக் கொண்டார்.

''கண்களை திறந்து பாருங்க, இவங்க யாரு''

''நான் பாவி'' அவர் கண்களை திறந்து பார்த்து விட்டு மூடிக் கொண்டார்.

''வேக் அப் ஓல்ட் மேன், இவங்க யாரு''

''சரஸ்வதி''

''சரஸ்வதி உங்களுக்கு என்னா வேணும்.''

''வொய்ப்''

''உங்க ஒய்ப் கிட்ட பேசுங்க''

''நான் பாவி''

''அதையே சொல்லிட்டு இருக்காதீங்க ஓல்ட்மேன். உங்களால தெளிவா சிந்திக்க முடியுதான்னு நான் பார்க்கணும். இவங்களோட பேசுங்க.''

அவர் கண்மூடி சற்று நேரம் அமைதியாக இருந்தார்.

''சரஸ்வதி, நாளைக்கு வரும் போது அனிதா மேத்யூஸ் கூட்டிட்டு வா. தீர்ப்புப்படி உனக்கும் குழந்தைகளுக்கும் சேரவேண்டிய சொத்தை நான் கொடுத்திடறேன். அது தவிர எனக்கிருக்கிற எல்லா சொத்துக்களையும் உன் பேருக்கே எழுதி வச்சிடறேன்.'' மூச்சு வாங்கினார்.

''மன்னிப்பு கேட்டா சரியாபடாது. நான் கேட்கவும் போறதில்லை. அதேசமயம் நான் செத்துடப் போறேன்றது தெளிவா தெரியுது. இதுவரைக்கும் இல்லாத பயம் வருது. இப்பவும், கடவுளை நம்ப முடியலை. கடவுள் யார்னு தெரியலை. ஆனா நான் கத்தி ஆடனது எல்லாம் முட்டாள்தனம்னு தெரியுது. முட்டாள்தனம்னு தெரிஞ்சாலும் நான் அப்படித்தான் இருப்பேன். அடுத்த ஜென்மம்னு ஒன்னு இருந்தால் தயவு செய்து மனைவியா வராதே. நீ ரொம்ப நல்லவ. அதனாலதான் சொல்றேன். எனக்கு நீ மனைவியா வராதே. அனிதா மேத்யூஸ் எங்கே.''

''கீழே இருக்கா.''

''நம்ம பையன் எங்கே?''

''வராண்டாவில நிக்கிறான்.''

''போய் கூப்பிட்டு வா''

அலுவலக ஆள் ஒருவர் வேகமாக நகர்ந்தார். அவர் சரஸ்வதியையே பார்த்துக் கொண்டிருந்தார்.



''அனிதா மேத்யூஸ் வரச்சொல்லு''

இன்னொரு குமாஸ்தா ரிஸப்ஷனுக்கு ஓடினார்.

மகன் உள்ளே நுழைந்ததும் உற்சாகமானார். அவர் படுக்கையின் தலைப்பக்கம், மெல்ல தூக்கப்பட்டது. சாய்ந்து உட்காரும்வண்ணம் அமைக்கப்பட்டது.

''தம்பி, நல்லாயிருக்கியா'' அப்பா கேட்டதும் சுந்தரம் மெல்ல முன்னேறி அவர் கைகளை பிடித்துக் கொண்டான்.

''தம்பி, ஐ'யம் ஸாரின்னெல்லாம் நான் கேட்கப் போறதில்லை. வாழ்க்கைய விளையாட்டா ஆரம்பிச்சேன். வெறியோட நடத்தினேன். அதுக்கு உண்டான பலனை அனுபவிச்சிட்டிருக்கேன். ஒரு வகைல இதுகூட நல்லாதான் இருக்கு. தொடர்ந்து ஜெயிச்சுக்கிட்டிருந்த ஒரு விளையாட்டு டீம் திடீர்னு ஒரு தடவை தோத்தா என்ன செய்யும்? அதையும் சந்தோஷமாக எடுத்துக்கும்.''

''அட...தோக்கறதுன்னா இதானா அப்படீன்னு ரஸிக்கும். என்னைத் தோற்கடிச்சிட்டேல்ல. அடுத்த தடவை வா. கதறக் கதற பதிலுக்கு தோற்கடிக்கிறேன். அப்படீன்னு சொல்லும்.''

''நான் மறுபடி பிறப்பேன். மறுபடி கேம் விளையாடுவேன். தொடர்ந்து ஜெயிப்பேன். எனக்கு மறுபடி பிறக்கணும். மறுபடி பிறந்து இப்ப பண்ண ஆட்டபாட்டமெல்லாம் மறுபடி பண்ணணும். அதே சமயம் ரொம்ப நல்லவனா நடிக்கவும் தெரியணும்'' சரஸ்வதியின் புருஷன் சொல்லிவிட்டு எல்லோரையும் பார்த்தார். தேடினார் ''ஹேமா வரலையா?''

''இல்லை, வந்துட்டு கீழ உட்கார்ந்திருக்கா''

''அது ரோஷமான பொண்ணு. என்னை மாதிரி''

''டாக்டர்ஸ் என்ன சொல்றாங்க தம்பி...சீக்கிரமே சரியாயிடுங்கறாங்களா... டூப் அடிக்கறாங்க. ரெண்டு நாளைக்கு மேல தாங்க மாட்டேன். உள்ள ரிப்பேராயிச்சுன்னு நல்லா தெரியுது.''

''சாவு ரொம்ப கிட்ட வந்துருச்சு தம்பி. சாவுங்கறது ஒரு மாதிரி நழுவி ஒரு ஓட்டை வழியா வேற ஒரு இடம் போறது. மறுபடியும் இங்க வர முடியாது. வர வெகு நாளாகும். அப்படித்தான் தோணுது. சாவு எனக்குப் பயமல்ல தம்பி. ஆச்சரியமா இருக்கு, என்னை மாதிரி கிறுக்கனோடு உங்கம்மா மாட்டினதுதான் வேதனை. அவளோடு அட்ஜஸ்ட் பண்ணிட்டுபோக என்னால முடியலை. நல்லவேளை டைவோர்ஸ் பண்ணிட்டேன். பண்ணலைன்னா என்கூட இருந்து இந்நேரம் செத்திருப்பா. அனிதா மேத்யூஸ் வரலைன்னா வேற யாராவது ஒரு வக்கீல் கொண்டா, ஒரு உயிலுக்கு உண்டான ஸ்டாம்ப் பேப்பர் எடுத்துட்டு வரச்சொல். என் ஆடிட்டரை வரச்சொல். ஒரு ரெண்டு மணிநேரத்துல எல்லாம் முடிச்சுரலாம்.''

''நீங்க சரியாய்டுவீங்கப்பா. உங்களுக்கு ஒன்னுமில்லை. சுந்தரம் சமாதானமாய் சொன்னான்.

''தயவு செய்து என்கிட்ட உங்கம்மா மாதிரி பேசாத, சுந்தரம். ஹார்ட் சரியா வேலை செய்யலேன்றதை தெள்ளத தெளிவா கண்டு பிடிச்சுட்டேன். வலிக்கலை, சுந்தரம். வலி குறைய இஞ்செக்ஷன் போட்டிருக்காங்க. ஆனா உள்ள கழண்டுபோச்சு. கப் கப்புன்னு நிக்குது. பேசறது கஷ்டமா இருக்கு. தூங்கணும்போல தோணுது. தூக்கத்திலயே பிராணன் போயிடணும்னு ஒரு நினைப்பு வருது.''

அவர் இன்னும் சரியாக உட்கார்ந்துகொண்டார்.



அனிதா மேத்யூஸுக்கு நான் சொல்றது புரிஞ்சு அதை உயிலா மாத்தறதுக்கு ரெண்டு நாளாவும். அவ சாட்சியா இருக்கட்டும். வேற ஒரு நல்ல வக்கீலா கொண்டா. இது கேள்விப்பட்டா அந்தக் கிழவி 'ஒன்னு, கத்துவா நமக்கு வேலையாவணும் தம்பி. உயில் எழுதத் தெரிஞ்ச ஒரு வக்கீல் வேணும், கொண்டாறியா.''

சுந்தரம் வெளியே வந்தான். அனிதா மேத்யூஸ் வெராண்டாவில் உள்ள நாற்காலியில் சற்று துவண்டு போய் உட்கார்ந்திருந்தாள். சுந்தரம் அவள் அருகே போய் மெல்ல தோள்பிடித்தான். என்னம்மா செய்கிறது என்று கேட்டான்.

''உன் அப்பா செத்து விடுவார் என்று தோன்றுகிறது, சுந்தரம்''

''இல்லையம்மா உள்ளே தெளிவாய் பேசிக்கொண்டிருக்கிறார்''

''எதனாலேயோ அவரைப் பார்க்க எனக்கு விருப்பமேயில்லை.''

''எனக்கு புரிகிறது அம்மா. நீங்கள் இங்கேயே இருங்கள்'' சொல்லிவிட்டு கீழே ஓடினான்.

அந்த ஹால் விட்டு போர்டிகோவுக்கு போகும் போது எதிரே ஹேமா வந்தாள், அவள் கூடவே வந்த இளைஞன் மீது சுந்தரம் பார்வையை நிறுத்தினான்.

''சுந்தரம், என்னாச்சு...அம்மா எங்க...''

''அப்பா ஈஸ் ஸிங்கிங். அம்மாவோட பேசிட்டிருக்கார். தீர்ப்புக்கு கட்டுப்படறாராம். புதுசா உயில் எழுதப் போறாராம். ஒரு வக்கீல் வேணும்னார்.''

''இது சந்தானம், என் கம்பெனி லாயர். நீ உயில் எழுதுவியா சந்தானம்.''

''நல்லா எழுதலாம், ஹேமா, இவர் உன் அண்ணாவா?''

''ஆமா, இது சுந்தரம். எங்கண்ணா.''

அவர்கள் கை குலுக்கிக் கொண்டார்கள்,

''ஸ்டாம்ப் பேப்பர் வேணும், பாண்ட் பேப்பர் வேணும். டைப் பண்றது பெட்டர். சிரமம்னா கையலகூட எழுதிடலாம் ஹேமா கார் அனுப்பிச்சிட்டமே.

''என்கிட்ட கார் இருக்கு, வாங்க'' சுந்தரம் அழைக்க அவர்கள் இருவரும் வெளியேறினார்கள்.

ஹேமா மாடிக்கு போனான், அப்பாவின் பெயர் சொல்லி அறை தேடினான். உள்ளே நுழைந்தான்.

அம்மா அப்பாவின் நெற்றியில் கைவைத்து வலது கையால் டம்ளர் பிடித்து ஏதோ திரவம் கொடுத்துக் கொண்டிருக்க அனிதா மேத்யூஸ் அருகே உள்ள நாற்காலியில் தலை கவிழ்ந்து உட்கார்ந்திருந்தாள்.

''கல்யாணம் பண்ணி வச்சிரு சரஸ்வதி .ஒன்னும் தடை சொல்லாதே. இந்தக் கிழவி மூஞ்சிய பார். இவனுக்கும் டைம் நெருங்கிடுச்சு. ஒரு லெவலுக்கு மேலே தாங்க மாட்டா. இவனுக்குப் பிறகு இவ பொண்ணு எங்க போகும். சுந்தரத்துக்கு பிடிச்சிருக்குன்னா தடை சொல்லாதே. கல்யாணம் பண்ணி வச்சிரு. இத்தினி நான் உனக்கு உதவி செய்திருக்கிறான். ஆனால் இந்தக் கல்யாணம் வெறுப்பாதான் இருக்கு, இல்லே...சரஸ்வதி உன்னைத்தான் கேட்கிறேன்.

அப்பா லேசாய் அதட்டினார் நிறைய இருமினார்.

ஹேமா உள்ளே நுழைய இடது கை தூக்கி விரல்களை அசைத்து வா...வா என்று கூப்பிட்டார். ஒரு எட்டு வயக சிறுமியைத்தான் அப்படி அழைப்பார்கள்.



ஹேமா வேண்டுமென்றே எதிர் சுவர் பக்கம் நின்று கொண்டான்.

● ● ●

# 24

''இது யார் சரஸ்வதியின் புருஷன் படுத்துக் கொண்டே கேட்டார்.

''சந்தானம். லாயர்.''

''யாருடைய லாயர்''

சுந்தரம் ஒரு நிமிடம் தயங்கி நம்முடைய லாயர் என்றான். அவர் சிரித்தார்.

''இந்த பதில் போதாது சுந்தரம். அனிதா மேத்யுஸ்க்கு இவரை தெரியுமா. சரஸ்வதி இவரை அறிவாளா ,உனக்கு இவர் நண்பரா. எந்தவிதத்தில் நாம் இவரை நம்பலாம்.''

''இவர் ஹேமாவின் நண்பர்.''

சட்டென்று அப்பா விழித்தார். தொலைவில் நின்ற ஹேமாவை ஆழ ஊடுருவினார்.

''ஆனால் ஹேமா எனக்கு சிநேகிதமாக இல்லையே... அப்பா வேண்டாமென்று சொல்கிறானே. வேண்டாம் என்பதனால் தானே விலகி நிற்கிறான்.''

அங்கே சற்று அமைதி நிலவியது. சந்தானம் தொண்டையை கனைத்துப் பேசத் துவங்கினான்.

''ஹேமா உங்களை உணர்ச்சிவசப் படுத்தக் கூடாது என்பதற்காக விலகி நிற்கிறாள். உங்களுக்கு உடல்நிலை சரியில்லை என்றதும், ஹேமா அழுதது எனக்குத் தெரியும்.''

''எப்படித் தெரியும்.''

''செய்தி வந்த போது நானும் ஹேமாவும் ஹோட்டலில் பகல் உணவு சாப்பிட்டுக் கொண்டிருந்தோம்.

''தினம் சாப்பிடுவீர்களா.''

''இன்று ஒரு ஒப்பந்தம் முடித்தோம். ஹேமாவின் கம்பனிக்கு நான் வக்கீலாக இருக்கிறேன். அப்படி நான் வக்கீலாக இருக்க காரணம் ஹேமா. ஒப்பந்தம் சரிவர முடிந்ததால், ஹேமாவின் கம்பெனி செலவில் எனக்கு லஞ்ச் தரப்பட்டது.

''என் மகளை பற்றி என்ன நினைக்கிறீர்கள், சந்தானம்.''

''மிகத்துடிப்பான பெண். மிகத் திறமைசாலி. திட்டமிடலும், நிர்வாகத் திறமையும் அவளிடம் இயல்பாக உள்ளன. மிகக்கடுமையான உழைப்பாளி. எல்லாவற்றையும்விட இனிமையானப் பெண்.''

''உன்னை எதனால் ஹேமா தன் கம்பெனிக்கு ரெக்கமண்ட் செய்தாள்.''

''நேர்மை, உழைப்பு இந்த இரண்டே காரணங்கள் தான்.''

''எப்படி பழக்கமாயிற்று ''

''ஹேமாவின் தோழியின் திருமணத்தில் சந்தித்துக் கொண்டோம்.''

''உன் தகப்பனார் என்ன செய்கிறார்''



''வக்கீலாக இருக்கிறார்.''

''மிஸ்டர் சந்தானம் அம்மாவை இம்சை செய்தால் குழந்தைகளுக்கு அப்பாவின் மீது இயல்பாய் வெறுப்பு வந்துவிடும். ஹேமா என்னை வெறுக்கிறாள் என்று தெரியும். அவள் அன்பு எனக்கு தேவையுமில்லை. ஹேமா சரஸ்வதியைப் போல. உறவுகள் கோபதாபங்கள் வெகு சீக்கிரத்தில் உச்சத்துக்கு வந்துவிடும். அம்மாதிரிப் பெண்களுக்கு சரியான துணை இல்லையெனில், திறமையான வழிகாட்டி இல்லையெனில் அதிகம் பாதிக்கப்படுவார்கள் தானும் கஷ்டப்பட்டு பிறரையும் கஷ்டப் படுத்துவார்கள். நீ என்ன கொண்டு வந்திருக்கிறாய் ''

''உயில் எழுதுவதற்கான ஸ்டாம்ப் பேப்பர், பாண்ட் பேப்பர்''

''கையால் எழுதப் போகிறாயா.''

''உங்களுக்கு தொந்தரவு இல்லையெனில் டைப் செய்யத் தயார். இந்த ஆஸ்பத்திரி அலுவலகத்தில் கேட்டிருக்கிறேன். வாடகைக்கு தருவதாக சொல்லியிருக்கிறார்கள். நீங்கள் சொல்ல, சொல்ல நான் டைப் அடித்து விடுவேன், ஒரு உயில் எழுதும்போது வார்த்தைகள் அமைக்க வேண்டிய விதம் எனக்கு அத்துபடி. நீங்கள் கையெழுத்திட்ட உயிலை நாளையே நான் ரிஜிஸ்டர் செய்து விடுவேன். நாளை மாலையே உங்களிடம் கொண்டு வந்து காட்டுவேன். அவசியமானால் நாளை மறுநாள் பத்திரிகையில் இப்படி சொத்து மாறிய விஷயத்தை முக்கியமான பேப்பர்களில் வரச்செய்து விடுவேன்.''

''எதற்கு சொத்து மாறிய விஷயம் பேப்பரில் வர வேண்டும்.''

''உங்கள் சொத்து தனக்குதான் என்று வேறு யாரும் நினைத்துவிடக் கூடாது அல்லவா. பாத்தியதையில்

இருப்பவர்கள் உங்களை வந்து தொடர்பு கொள்ளலாம் அல்லவா.''

''கெட்டிக்காரன். என்னைப் புரிந்து கொண்டு பேசுகிறாய். நீ ஹேமாவின் காதலனா.''

''நண்பன்.''

''உன் நட்பு காதலாக மாறுமா,''

''மாறலாம். மாறித்தான் ஆகவேண்டும் என்று கட்டாயமும் இல்லை.''

''அவளை மடக்க முயற்சி செய்து கொண்டிருக்கிறாயா?''

''வாய் திறந்து கேட்டேன். சில லட்சியங்களை அடைந்தபிறகு யோசிக்கலாம் என்று ஹேமா சொல்லி விட்டாள்.''

''வெரிகுட். நான் சொல்வதை எழுதிக்கொள். என் சொத்துக்கள் பூராவும் மூன்றாகப்பிரித்து என் மனைவி சரஸ்வதி, என் மகன் சுந்தரம், என் மகள் ஹேமாவுக்கு தருகிறேன். இந்த சொத்துக்கள் விற்கப்பட்டு, ரொக்க மாய் மாற்றப்பட்டு இவர்களுக்குப் போய் சேரவேண்டும் என்பதே என் விருப்பம், இது கட்டாயமில்லை. என் சொத்துக்கள் வரிசை கீழ்கண்டவாறு.''

பெரிய பட்டியல் கொடுக்கப்பட்டது. முக்கால் மணி நேரமாயிற்று. கட்டிலின் முதுகு பகுதியை கீழ் இருக்கச் சொல்லி அவர் புரண்டு படுத்துக்கொண்டார்.

சந்தானம் மருத்துவமனை அலுவலகத்திற்கு ஓடினான். யோசித்து, யோசித்து ஒரு மணி நேரத்தில் டைப் செய்தான். அனிதா மேத்யுவிடம் காண்பித்தான். கிழவி பாராட்டி சந்தானத்தின் முதுகு தட்டிக் கொடுத்தது. சுந்தரமும் ஹேமாவும் படித்துப் பார்த்தார்கள்.



சரஸ்வதி புருஷன் தலை பக்கமே அமர்ந்து இடைவிடாது ராமர் பெயரைச் சொல்லிக் கொண்டிருந்தாள். மெல்லிய குரலில் மட்டுமே பாடினாள்.

ஆத்மனே நீ மிக நல்லவன். நீ கடவுளின் ஒரு பகுதி. அகந்தை உன்னை சிறைப்படுத்திக் கொண்டுவிட்டது. உன்னை அதன் சௌகரியத்துக்குப் பழக்கப்படுத்திக் கொண்டுவிட்டது. வேடனுக்கு வேட்டையாட மட்டுமே பயன்படும் காட்டு நாய்கள்போல் நீ வளர்ந்து விட்டாய். உன் இரத்தம் படர்ந்த பற்களையும், வெறிமிகுந்த கண்களையும் வேடன் பாராட்டி தடவிக் கொடுக்கிறான் விதவிதமாய் மாமிசம் போடுகிறான்.

ஆத்மனே ஒருநாள் தேங்கி கிடக்கும் மழை மீது உன் முகத்தை எதேச்சையாய் பார்ப்பாய். முகர்ந்து முகர்ந்து நீ போகும்போது-திடீரென்று உன் முகம் உனக்கு தெரிய வரும். உன் பிரதிமையை பார்த்துவிட்டு ஏதோ மிருகம் என்று பயந்து பின் வாங்குவாய் இதுவா நான் என்று வியப்பாய். நானே என் முகம் பார்த்துவிட்டு பயந்தேனே. முயலும், மானும், மயிலும் வாத்தும் எப்படி பயப்படும் என்று எண்ணுவாய்.

ஆத்மனே அதுவரை ஆடிய வேட்டை அலுப்பாய் போகும், ஆனால் வேடன், உன்னை அடிப்பான், விரட்டுவான், மறுத்தால் கட்டிப்போட்டு பட்டினி போடுவான். அப்போது அந்த வேடன் முகம் கோரமாக இருக்கும். அகந்தை கோரமானது ஆத்மனே. பாசக் கயிறை கடித்து அறுத்து அகந்தையை விட்டு ஓடிப்போ. நகர்புறத்தில் குதூகலமான குழந்தைகள் இருக்கும் வீட்டில் நல்ல நாயாய் சேர்ந்துகொள்.

ஆத்மனே நீ நல்லவன். நன்றியுள்ள நாயாய் மாறி விடு. ஆத்மனே நீ நல்லவன், மிருதுவான குரலில் பாட்டுப் பாடினாள். அவள் புருஷன் அசையாது படுத்துக்கொண்

டிருந்தான். அவன் ஹிருதயத்தோடு இணைக்கப்பட்ட மானிடரில் ஒரு அசைவு தொடர்ந்து தவறாகவே வந்து கொண்டிருந்தது.

சரஸ்வதியின் புருஷன் விழித்துக் கொள்ள வேண்டும் என்று எல்லோரும் காத்துக் கொண்டிருந்தார்கள்.

''என் அப்பனைப்போல் கெட்டிக்காரன் உலகத்தில் எவனுமில்லை சந்தானம். ஒரு உயில் எழுதிவைத்து அதில் கிட்டதட்ட எண்பது லட்ச ரூபாய் சொத்துகள் காட்டி அதைப் பிறகு கையெழுத்துப் போட்டுக் கொள்ளலாம் என்று தூங்குகிறார் பார். மூன்று பேரை நாய்கள்போல காக்க வைக்கிறார் பார். எவ்வளவு கெட்டிக்காரத்தனம் இது. இன்னும் அரைமணி நேரம் பார்க்கப் போகிறேன் பிறகு கிளம்பிப்போய் விடப்போகிறேன்.''

''போகக்கூடாது ஹேமா இந்த சொத்து வாங்குவது பற்றி நீ வெட்கப்பட தேவையில்லை. இதில் ஒரு பகுதி ஜீவனாம்சம். இன்னொரு பகுதி உன் தாய் கொண்டு வந்த சீதனம், அந்த சீதனத்தை முதலாக வைத்து கிடைத்த லாபம். மீதி உள்ளது உன் தாத்தாவின் சொத்து. பரம்பரை பாத்தியதை. உன் தந்தை இதில் அழித்ததுதான் அதிகம் தவிர உழைத்து எடுத்தது மிகவும் குறைவு. முறையாக பராமரிக்கப்பட்டிருந்தால், தென்னிந்தியாவில் பத்து பணக்காரக் குடும்பங்களில் ஒரு குடும்பமாக உன் குடும்பம் இருந்திருக்கும். அப்பன் காசு எனக்கு எதற்கு என்று கோபித்துக் கொண்டு போகாதே என்னால் அதைவிட அதிகமாக சம்பாதிக்க முடியும் என்று ஆடாதே.''

சந்தானம் அவள் முதுகில் கை வைத்துக் கொண்டே வராண்டாவில் பேசிக் கொண்டு போனான்.

''நீ பணக்காரியுமில்லை, ஏழையுமில்லை. அதனால்தான் உனக்கு பணத்தின் அருமை புரியவில்லை.



ஒருதட்டு சோறு இல்லாமல் நீ தவித்ததில்லை. பத்து லட்ச ரூபாய் முதலீடு போட்டு ஒருதொழில் ஆரம்பித்ததும் இல்லை. நெயில் பாலிஷ், கண்மை, சுடிதார் என்று சிறிய செலவுகளுக்கு காசிருந்து சந்தோஷப்பட்டிருக்கிறாய். தனியாக தொழில் ஆரம்பிக்கிற போது பத்தாயிரம் பத்தாயிரமாய் எத்தனை காசு கைவிட்டு போகும் தெரியுமா, எப்படி செலவாகும் தெரியுமா. உன்காசு உனக்கு வரப்போகிறது ஹேமா. முட்டாள் தனமாய் முரட்டுதனம் காட்டாதே. உன் சொத்து மதிப்பை உன் அப்பா சொல்ல. சொல்ல எனக்கு மயக்கம் வந்து விட்டது.''

''உன்னைப் பற்றி அதிகம் தெரியாமல் உன்னை விரும்புவதாய் சொல்லி விட்டேனே என்கிற பயம் வந்து விட்டது இப்போது கிடைத்திருக்கும் சொத்துகளை ரொக்கமாக்கி கொள்ள வேண்டும் என்று உன் தந்தை விரும்புகிறார். சரியானபடி ரொக்கமாக்க வேண்டுமென்றால் இரண்டு வருடங்கள் ஆகும்.''

''ஹேமா கொள்ளையடிக்காமல், பொய் பேசாமல், பிறரை வஞ்சித்து நாசமாக்காமல், கேவலமான தொழில்களில் இறங்கி பிழைக்காமல் நிறைய காசு சம்பாதிப்பது மிகக்கடினம். மிகமிகக் கடினம். நீ இப்போது நாய் மாதிரி காசுக்கு காத்துக் கொண்டிருக்கவில்லை. நீ தங்கப் பாலத்தில் நின்று கொண்டிருப்பது தெரியாமல் நின்று கொண்டிருக்கிறாய் அது உன்னுடைய தங்கப்பாலம் என்று தெரியாமல் நின்று கொண்டிருக்கிறாய்.''

''ஹேமா, உன் தமையன் மிக அற்புதமான ஆள் ஒரே ஒரு வாக்கியம் சொன்னான். அவனைக் கட்டிக் கொண்டு முத்தமிட வேண்டும்போல் தோன்றியது''

''வறுமையும், அவமானத்தையும் நான் நன்கு அனுபவித்திருக்கிறேன் சந்தானம். இந்த சொத்து என் கைக்கு

வந்தால் எனக்கு கர்வம்வராது. இது கடவுளுடைய அருள் என்று ஒரு கனிவு வரும். நான் சம்பாதிப்பதே யாரையாவது சந்தோஷப்படுத்த என்கிற கொள்கை வரும்.''

''இந்த சொத்து வராவிட்டால் என்ன செய்வானாம்'' ஹேமா மெல்லிய சீற்றத்தோடு பேசினாள்.

''கடவுளுக்கு விருப்பமில்லை நான் உயர்ந்த நிலைக்கு வர நானே உழைக்க வேண்டும் என்று வெகு வேகமாக இறங்கிவிடுவேன் என்றான்.''

''சந்தானம், நீ சொன்னதுபோல் இது என்னுடைய தங்கபாலம் எனில் எனக்கு வரட்டும். என் அப்பாவை என்னால் மன்னிக்க முடியாது. அவர் அளித்து நான் வாங்கிக் கொள்ள எனக்கு விருப்பமில்லை. நான் ஆபீஸுக்கு போகிறேன். பிறகு வீட்டிற்கு போகிறேன். என் தகப்பன் செத்துப்போனால் எனக்கு சொல்.'' ஹேமா அவனை விட்டுவிலகினாள்.

''சந்தானம் என் மீது நீ காட்டுகிற அக்கறை, நிதானம் எல்லாம் பிடித்திருக்கிறது. எனக்கு இந்தசூழ்நிலை பிடிக்காமல்தான் போகிறேன். என்னை மன்னித்துவிடு'' விறுக் விறுக்கென்று வெளியே நடந்தாள்.

அவள் ஆட்டோவில் ஏறி நகர்ந்த சமயம் சந்தானத்தை சுந்தரம் கூப்பிட்டான். அவனுடைய அப்பா கண் விழித்து விட்ட தாக சொன்னான்.

''மிஸ்டர் சந்தானம் உரக்க படிங்க.''

சரஸ்வதியின் புருஷன் கட்டளையிட சந்தானம் உயிலை உரக்கப் படித்தான்.

''ஹேமா எங்கே'' அவர் கேட்டார்.

'ஆபிஸுக்கு போயிருக்கிறாள்.''



''ஏன்?''

''சில பொறுப்புகளை ஒப்படைத்து விட்டு வர.''

''கோபித்துக் கொண்டு போகவில்லையே.''

''இல்லை.''

''உன்னை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது, சந்தானம். ஹேமாவை விடாதே. விரட்டி மடக்கு. உன்னைப் போல் தெளிவு கனிவு தெரிந்தவன் தான அவளுக்கு புருஷனாக வேண்டும். அவளைப் போலவே முறுக்கி கொள்கிறவன் புருஷனாக வந்தால் சிரமமாகி விடும். எங்கே கையெழுத்துப் போட வேண்டும்.''

ஆறு பக்கங்களில் அவர் கையெழுத்துப் போட்டார். அனிதா மேத்யூஸ் சாட்சி கையெழுத்துப் போட்டாள்.

''மிஸஸ். மேத்யூஸ், உன்னிடம் நான் முறையற்று பேசியிருக்கிறேன், என்னை மன்னித்துவிடு. உனக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று தோன்றுகிறது. என் கழுத்து செயின், இந்த பிரேஸ்லட் எல்லாம் உனக்கு தருகிறேன். மறுக்காமல் வாங்கிக் கொள்.''

''இவை எனக்கு வேண்டாம், தோழனே. இவைகளை உன் மருமகளுக்கு கொடு.''

''மருமகளா யார்.''

''உன் மகனின் மனைவி.

''அது தெரிகிறது யார்.''

''என் மகள். வினோலியா.''

''வந்திருக்கிறாளா''

''வினோலி'' அனிதா மேத்யூஸ் அழைக்க வினோலி ஜீன்ஸ் பேண்ட்டும், தொள, தொள சட்டையுமாய் வந்தாள்.

அவர்கள் எல்லோரும் வினோலியைப் பார்க்க, வினோலியா தலை குனிந்தாள்.

''வினோலியா உனக்கு ஒன்று சொல்கிறேன் கேள். புதுமை என்பது நிகழ்காலத்திலிருந்து சற்று தள்ளியிருப்பது. மிகவும் தள்ளியிருப்பது அல்ல. நான் மிகத்தள்ளி வாழ்ந்துவிட்டேன். அதனால் நான் உனக்கு சொல்கிறேன், சுந்தரம் அவன் தாயைப்போல. அவனை காயப்படுத்தாமல் நடந்துகொள். வாழ்க்கை உனக்கு எளிதாக இருக்கும்.''

''அம்மா நான் நமஸ்கரிக்க வேண்டுமா'' வினோலியா கேட்டாள்.''

''தயவுசெய்து செய்யாதே, வினோலி நான் உனக்கு எந்த உதவியும் செய்யவில்ஸ்ல. நீ என்னை நமஸ்கரிக்கத் தேவையில்லை. நீ இங்கு இருப்பதே எனக்கு கிடைத்த மரியாதை, சரஸ்வதி நீ வீட்டுக்குப் போகலாம், என்னை பார்க்க வந்ததுசந்தோஷம். நாம் நண்பர்கள், பகைவர்கள் அல்ல. நான் சாகும்போது தனியே சாக விரும்புகின்றேன். நீயோ, ஹேமாவோ வந்தால் நான் அழுதுவிடக் கூடும் சுந்தரம் தயவுசெய்து உன் காசில் இந்த ஆஸ்பிட்டல் பில்லை செட்டில் செய்துவிடு. இந்த இரண்டு நர்ஸ்களுக்கும் தலா ஐந்தாயிரம் ரூபாய் டிப்ஸ் கொடு. இது தவிர இந்த ஆஸ்பத்திரிக்கு ஒரு லட்சரூபாய் நன்கொடை கொடு. நீயும் வீட்டுக்கு போய்விடு. ஆஸ்பத்திரி என் சாவை தெரிவிக்கும். மிஞ்சிப்போனால் மூன்று நாட்கள் இவர்கள் காப்பாற்ற முயற்சித்தாலும் எப்படி சாவது என்று எனக்கு தெரியும்.''

''சாவு அப்படியெல்லாம் வராது.'' சரஸ்வதி குமுறிய குரலில் சொன்னாள்.



''சரஸ்வதி, சரஸ்வதி... போகும்போது என்னிடம் திட்டு வாங்காதே. நான் மூன்று நிமிடம் தம்பிடித்தால் என் நுரையீரல் அவஸ்தைப்பட்டு ஹிருதயம் வெடித்து விடும். ஹ்ருதயம் அவ்வளவு பலவீனமாக இருக்கிறது. நீ போய் அமைதியாய் உன் கடவுளோடு பேசு. நீ ஒரு நல்ல வழி கண்டுபிடித்திருக்கிறாய். தொடர்ந்து அந்த வழியில் போ. நன்றி அனிதா.'' கை கூப்பி கண் மூடிக் கொண்டார்.

அவர்கள் எல்லோரும் வெளியே வந்தார்கள். சரஸ்வதி வீட்டுக்குப்போக விரும்பினாள்.

● ● ●

# 25

வீட்டுக்குப் போய் குளித்துவிட்டு கண்மூடி உட்கார்ந்து கொள்ள வேண்டும். வராண்டாவிலோ, பூஜை அறையிலோ விளக்குகளை அணைத்துவிட்டு புடவையை இழுத்து போர்த்திக் கொண்டு ராமரோடுபேசவேண்டும்.

என் புருஷனை அனாதையாக சாகவிடாதே. தாதிகள் மட்டும் இருக்கும்போது சாகவிடாதே. அதை ஆரோக்கியமாக்கு. இன்னும் ஆயுசு கொடு. அவர் உடம்பை, ஹிருதயத்தை வலுவாக்கு. அதனுடைய புத்திக்கு இறைநாட்டம் வந்ததெனில் மிக உயர்ந்த மனிதனாக இருக்கும். பல பேருக்கு அதன் இருப்பு உபயோகமாக இருக்கும்.

அதை அனாதையாக சாக விடாதே. மரணம் கண்டு அதுபயப்படாது. ஆனால் ராமா உன் பெயரைசொல்லிக்

கொண்டே சாவதுதெளிவானது. தெளிவானசாவுசந்தோஷமானது. என்புருஷனுக்காக இந்த நொடியிலிருந்துஉன் பெயரை சொல்லத் துவங்குகின்றேன். அதை ஆரோக்கியமாக்கு.

சரஸ்வதி ராம நாமம் சொல்லத் துவங்கினாள். காரில் ஏறினாள். வீட்டிற்குப் போனாள். குளித்தாள். குத்துவிளக்கு ஏற்றினாள். ராமர் படத்திற்கு நமஸ்காரம் செய்தாள். அப்படி குனிந்து நமஸ்கரிக்கிறபோது எதிரே யாரோ நின்றிருப்பது போன்ற ஒரு பிரமைஏற்பட்டது. அவள் புருஷன் நீண்ட ஆஸ்பத்திரி அங்கியுடன் நின்றிருப்பதாய் தோன்றியது. நிமிர்ந்து பார்க்க ராமர் படம் சிரித்தது. மறுபடி புருஷன் நலத்திற்காக நமஸ்கரித்தாள். புருஷன் அவள் எதிரே போய் வருகிறேன் என்பது போல் கை கூப்பினான்.

என்ன அது என்று குழம்பிய வண்ணம் எழுந்து நின்றாள். லேசாய் தள்ளாடிற்று.

அனிதா மேத்யூஸை அவள் வீட்டில் விட்டுவிட்டு வர சுந்தரம் போயிருக்கிறான். சுந்தரமும், வினோலியாவும் காரில் முன் சீட்டில் உட்கார்ந்து வந்தார்கள். அப்படி உட்கார்ந்தபோது தொட்டுக் கொண்ட சுதந்திரமும், ஏற்பட்ட நெருக்கமும் அவர்கள் எல்லையை தாண்டி விட்டார்கள் என்று உணர்த்தின.

சரஸ்வதி அதை கவனிப்பதை பார்த்துவிட்டு, அனிதா மேத்யூஸ் உதடு பிதுக்கி வேறு பக்கம் முகம் திருப்பிக் கொண்டாள். இந்தக் குழந்தைகளை கண்டிக்க முடியாது. அதிலும் பெண் குழந்தை துணிந்துவிட்டால் யாரும் எதுவும் செய்யமுடியாது. அனிதாவோடு திருப்பி பேச அந்த வினோலியா தன் நெஞ்சு முழுவதையும் சுந்தரத்தின் புஜத்தில் தேய்த்து கொண்டிருக்கிறாள். சுந்தரமும் அவளை மிகுந்த சொந்தத்தோடு பார்க்கின்றான்.



ஆனால் ஹேமா விலகி நிற்கிறது. பின் கை கட்டி தனியே எங்கேயோ வெறித்துப் பார்க்கிறது. ஆழ்ந்த சிந்தனையில் இருக்கிறது. அந்த சந்தானம் அவனை முதுகில் கை வைத்து வராண்டாவில் பேசிக் கொண்டிருந்தான் அவனை விட்டு விலகவுமில்லை, ஒட்டவுமில்லை. ஒரு ஆண் தொட்டதை விரும்பினாலோ விலகினாலோ அவள் பெண்ணாக இருக்கிறாள் என்று அர்த்தம். அந்த தொடலைப் பற்றி அக்கறை இல்லாது இருப்பின் அவள் ஆணாக இருக்கிறாள் என்று அர்த்தம். ஆணாக இருக்கிற பெண் ஆபத்தானவள். அழுத்தமாக இருப்பது பற்றி அவளுக்கு ஆசை வந்துவிட்டால் தேவையற்றதற்கெல்லாம் அழுத்தமாக இருந்து தொலைப்பாள்.

ஆனால் ஏன் இப்படி புருஷனுடைய நினைவு, தோற்றமாக வருகிறது. ராமா அதைக் காப்பாற்று. அதன் புத்தி நாலு பேருக்கு உதவும்படி செய். வராண்டாவுக்கு போய் உட்கார்ந்து கொள்ளலாம் என்று உட்கார காலியான தெருவில் வெள்ளை அங்கியுடன் யாரோ நடந்து போய்க் கொண்டிருந்தார்கள். அந்த நடை புருஷனுடைய நடை போலிருந்தது. மனம் பதறத் துவங்கியது.

தூங்கிக் கொண்டிருந்த ஹேமாவை உலுக்கி எழுப்பி ஆஸ்பததிரிக்கு போவதாகச் சொல்லிவிட்டு வெளியே வந்தாள். ஆட்டோ பிடித்து அவசரமாய் அப்பல்லோ ஆஸ்பத்திரிக்கு போ என்றாள்.

''யாருக்குனா உடம்பு சரியில்லையாம்மா'' ஆட்டோக்காரன் ஆவலாய் கேட்டான் ஆமாம் என்றதும் மின்னல் வேகத்தில் பறந்தான். போர்டிகோவில் சடன் பிரேக் போட்டு நிறுத்தினான்.

சரஸ்வதி முதல் மாடிக்கு ஓடினாள். அறை வாசலில் கூட்டமிருந்தது. அந்தக் கூட்டம் பார்த்ததும் பகீரென்றது. அந்தக் கொங்கணிக்காரி நெஞ்சில் அறைந்து கொண்டு அழுதாள். சரஸ்வதியின் புருஷனை கண்டபடி ஏசினாள். ஆஸ்பத்திரி ஆட்கள் அவளை அப்புறப் படுத்திக் கொண்டிருந்தார்கள்.

சரஸ்வதியின் புருஷனை கவனித்துக் கொண்டிருந்த நர்ஸ் ஓடி வந்தாள்.

''மிஸஸ், சரஸ்வதி, யார் இவள் மிக மிக கேவலமான ஜந்துவாக இருக்கிறாளே. உன் புருஷனைப்பற்றி மிக ஆபாசமாக பேசுகிறாளே. இவள் பேசும் கேவலமான வார்த்தைகளையெல்லாம் இதற்கு முன் நான் கேட்டதே யில்லை. மனிதர்கள் இப்படி வாழ்வார்களா என்று எனக்குத் தெரியாது. இவள் யார், இவளை அடித்து விரட்டலாமா.''

''இவள் பீனாருஸியா என் கணவரின் இரண்டாவது மனைவி. என் கணவர் இவளை ஆபாசமாக நடத்தி யிருக்கலாம். அதனால் அவள் ஆபாசமாக பேசலாம். என் கணவர் இவளை ஏன் மறந்து விட்டார் என்று தெரியவில்லை. என் கணவர் எப்படியிருக்கிறார்.''

''இவள் வருகையால் படபடப்பாகி விட்டார். உங்கள் கணவரும் ஏகப்பட்ட கெட்ட வார்த்தைகள் பேசினார். ஒழுக்க குறைவைப் பற்றி திட்டினார்.

''ஒழுக்கக் குறைவா...என்ன அது.''

''என் காசில் வாழ்ந்து விட்டு. வேறு எவனோடோ படுத்து...அந்த மாதிரி.''

''அய்யோ''

''ஆமாம் அப்படித்தான் படுப்பேன் என்று இவள் சொல்கிறாள் நீ செய்யவில்லையா என்று கேட்கிறாள்,



சுற்றியிருந்த ஆறு பேரும் ஆடிப்போய் விட்டோம். உங்களால் அவளை சமாதானப்படுத்த முடியுமா, உங்களுக்குள் பேச்சு வார்த்தை உண்டா''

சரஸ்வதி யோசித்தாள் மெல்ல பீனாருஸியாவை நோக்கி அவள் முன்னேறினாள்.

''பீனா''

''என்ன'' பாம்பு சீறியது. மனிதர் கண்களில் அத்தனை ஆங்காரம் இருக்குமா. இருந்தது.

''உனக்கென்ன வேணும்''

''காசு வேணும்டி. காசு, இராவும் பகலுமா...'' அவள் கத்த சரஸ்வதி கை உயர்த்தினாள்.

''உனக்கு நான் தரேன். உன் ரெண்டு பசங்களுக்கும் ஆளுக்கு பத்து லட்சம் தரேன். என் சொத்திலேர்ந்து தரேன். என் தலைமேல சத்தியமா தரேன். இங்க கத்தாத போ''

பாம்பு சட்டென்று அடங்கியது. சந்தேகத்துடன் பார்த்தது.

உலகத்தில் எத்தனை தெய்வங்கள் உண்டோ அத்தனை தெய்வங்கள் சாட்சியாக சொல்கிறேன். இருபது லட்சம் உனக்கு நிச்சயமாக கிடைக்கும்.''

பீனா வராண்டா சேரில் உட்கார்ந்து கொண்டாள். முகம் கவிழ்த்துக் கொண்டாள். அந்த பகுதி அமைதியானது. சரஸ்வதி அறைக்குள்ளே ஓடினாள். டாக்டர்கள் அவரைச் சுற்றி நின்று கொண்டிருந்தார்கள்.

சலைன் டியூப்பில் புதிய ஊசிகள் சொருகப்பட்டன.

''ஹி இஸ் சிங்க்கிங். அவர் மனைவியை கூப்பிடு. அப்போதாவது அவர் அமைதியாகிறாரா என்று பார்க்க

லாம்'' நாலு பேர் அழுத்திக் கொண்டிருந்த போதிலும் அவர் உடம்பு தூக்கி தூக்கிப் போட்டது சரஸ்வதியை அவர் முகத்துக்கு அருகே உட்கார வைத்தார்கள்.

''என்னா நான் வந்திருக்கேன் பாருங்கோ. சரஸ்வதி வந்திருக்கேன் பாருங்கோ. கொஞ்சம் கண்ணைத் திறந்து என்னை பாருங்கோ, ராமா. ராமசந்திரா. ரங்கப் பிரபு. லக்ஷ்மி நரசிம்மா ஆஞ்சநேயா, பரபிரம்மா-யோகி ராம் சுரத்குமார்,''

அவர் காதுகளில் மந்திரம் போல் மறுபடி மறுபடி இதைச் சொன்னாள். உடம்பு தூக்கிப் போடுவது நின்றது. முகத்தில் ஒரு அமைதி படர்ந்தது. சரஸ்வதி அவர் தலையை வருடிய வண்ணம் காதோரம் உதடு வைத்து இனிய குரலில் திரும்பத் திரும்ப இதைச் சொன்னாள்.

அவர் மெல்ல தலைத் திருப்பி சரஸ்வதியைப் பார்த்தார்.

''என்னை மன்னிச்சுடு, சரஸ்வதி. நான் உன்னை ரொம்ப கொடுமை படுத்திட்டேன், சரஸ்வதி தேவையில்லாத கர்வம் காட்டிட்டேன், சரஸ்வதி. நான் தப்பு சரஸ்வதி. நான் ஆண். அறிவாளி. கட்டுமஸ்தானவன். பணக்காரன்...எல்லாம் தப்பு, சரஸ்வதி. இதெல்லாம் மயக்கம். பொய். சாவுதான் நிஜம். நான் உடம்பில்லை. உன்னை நான் மக்குன்னு நினைச்சது தப்பு. நான்தான் மக்கு. என் கர்வம்தான் மக்கு. உன்னை புரிஞ்சுக்க எனக்கு தெரியலை சுந்தரம் எங்கே. அந்த கொங்கனிக்காரி வந்திருக்கா. உன்னை ஏதாவது பண்ணிடுவா. டாக்டர், அந்த குண்டு பொம்பளைகிட்டேயிருந்து என் வொய்பை காப்பாத்துங்க அவளை உள்ளே சேர்க்காதீங்க''

''வாசல்லதான் உட்கார்ந்திருக்காங்க''



''வாசல்ல உட்கார்ந்திருக்கிறாளா'' அவர் எழுந்திருக்க முயற்சி செய்தார். டாக்டர் அழுத்தினார்.

''நர்ஸ்...'' கத்தினார்.

''இப்படி செய்யாதீங்க. படுத்து கண்ணை மூடுங்க''

''சரஸ்வதியை கொங்கனிக்காரி கொன்னுடுவா'' அவர் திக்கி திக்கி பேசினார். சரஸ்வதியின் கையை இறுக்கிப் பிடித்துக் கொண்டார். அதில் காதல் இருந்தது.

''இவங்கதான் இரண்டு புள்ளைக்கு இருபது லட்ச ரூபாய் தரேன்னுட்டாங்களே, அப்புறம் ஏன் கொல்லப் போறா'' நர்ஸ் ஒரு ஆற்றாமையோடு பேசினாள்.

''இருலதா பீனாவுக்கா அவன் திகைத்தான், உனக்கு முப்பது லட்ச ரூபாய்தான் வரும் சரஸ்வதி. ஏன் அவளுக்கு''

''பாவம் ரெண்டு குழந்தைங்க வைச்சிட்டு இருக்காள்லியா'' சரஸ்வதி மிகச் சாதாரணமாக சொன்னாள்.

அவர் அயர்ச்சியோடு கண்கள் மூடினார். சரஸ்வதியின் இடது கையை எடுத்து நெஞ்சில் வைத்துக் கொண்டார்.

''ராமா, ராமச்சந்திரா ரங்கப் பிரபு'' சரஸ்வதியின் இனிமையான குரல் அவர் காதில் விழுந்தது.

''நீ ரொம்ப பெரியவள் சரஸ்வதி'' அவளை ஆவலோடுப் பார்த்தார். சிரமப்பட்டு தலையை அவள் பக்கம் நகர்த்திக் கொண்டார்.

"இப்ப என்னமோ காதில சொல்றியே அதை சொல்லு. அது சொல்றபோது சந்தோஷமா இருக்கு. நீ சொல்ற போது நானும் சொல்விட்டுருக்கேன்."

அவள் மறுபடி சொல்லத் துவங்கினாள். அவர் உதடுகளும் அதை முணுமுணுத்தன. உடம்பு ஒருமுறை முறுக்கிப் போட்டது. மானிட்டரில் துடிப்பு துரிதமாகியது. சட்டென்று நிதானமாகியது. மெல்ல குறைந்து கொண்டே வந்தது. க்ளக் என்ற சத்தம் தொண்டையிலிருந்து வந்தது. மானிட்டர் துடிப்பு நேர்கோடாகியது. சரஸ்வதி எதையும் கவனிக்காது அந்த மந்திரத்தையே சொல்லிக் கொண்டிருந்தாள்.

தாதிகள் கருவிகளை கழட்ட ஆரம்பித்தார்கள். டாக்டர்கள் விலகி வராண்டாவுக்குப் போனார்கள், சலைன் உடம்பிலிருந்து பிடுங்கப்பட்டது. சரஸ்வதி நிமிர்ந்து என்னவென்று கேட்டாள்.

"உயிர் போய் இரண்டு நிமிஷம் ஆயிடுச்சு மேடம்."

சரஸ்வதி அவர் தலையை கோதிக் கொடுத்தாள். நெற்றியில் முத்தமிட்டாள். மெல்ல விலகிப் போய் அந்த உடம்பை பார்த்து முகவாயில் கை வைத்து வியந்தாள்.

"இதுவா என் புருஷன். இதுக்கும், எனக்குமா சண்டை. இந்த உடம்பிலிருந்த கர்வம் இப்போது எங்கே. இந்த உடம்பிலிருந்து காணாமல் போனது, உயிரா, கர்வமா, உயிருக்கு கர்வம் உண்டா. உயிருக்கு எண்ணம் உண்டா, நான், நான் என்று இது நெஞ்சைத்



தட்டிக் கொண்டதே அப்போது நான் என்று இது சொன்னது உடம்பையா, உயிரையா. அந்தக் கர்வம் இந்த உடம்புக்குள்தான் இருக்கும். எங்கேனும் ஒளிந்து கொண்டிருக்கும். உயிர் அந்த கர்வத்தை உடம்பில் விட்டுவிட்டு ராமா, ரங்கப்பிரபு என்று போய்விட்டது."

சரி இனி மேற்கொண்டு என்ன, குழந்தைகளுக்குச் சொல்ல வேண்டும். அவள் வெளியே வந்தாள். அவளைக் கண்டதும் மீனா எழுந்து வந்தாள்.

"என் குழந்தைகளும் கொள்ளிப் போடணும். அது அவர் குழந்தைங்கதான்."

"போடச் சொல்லு எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் உயில் தெளிவா இருக்கு. உனக்கு சொத்து இல்லை. அவர் தரலேன்னாலும், நான் தரேன். போய் குழந்தைகளை கூட்டிட்டு வா. நீ வராத இங்கிருந்து பாடி போகாது."

"நானும் காட்டுக்கு வரேன் சுந்தரம். எங்கள் குடும்பத்துல பெண்கள் காட்டுக்கு வருவதுண்டு. சுடுகாடு புனிதபூமி.

சரஸ்வதி முழுவதும் நின்று வேடிக்கைப் பார்த்தாள். கணவன் என்ற விஷயம் எலும்புக் கூடாக சாம்பலாக இருப்பதையும் கண்குளிர ரசித்தாள். உலகின் எல்லா சந்தோஷமும், எல்லா துக்கமும் முடிவது இங்கயே. இவ்விதமே. இந்த உலகில் பிடித்துக் கொள்ள எதுவுமே இல்லை. எதைப் பிடித்துக் கொண்டாலும் முடிவு இதுவே. பிடிக்காமல் பிடித்து ஒட்டாமல் ஒட்டியிருப்பதே சிறப்பு.

ஹேமா, சுந்தரம், மருமகள், மருமகன் எல்லோரும் இங்கேதான் முடியப் போகிறார்கள். வேறு எதையும் பிடித்து விடாமல் இருக்க ராமரை பிடித்துக் கொள்ளப் போகிறேன்.

தும்பிக்கையால் எல்லாவற்றையும் தொட்டுக் கொண்டிருக்கிற, பற்றி இழுத்துக் கொண்டிருக்கிற யானையினிடத்தே சங்கிலியை கொடுத்து விடுவார்கள். சங்கிலியை தும்பிக்கையால் பற்றிக் கொண்டிருக்கிற யானை வேறு எதையும் பற்றாது.

எதையும் பற்றாமலிருக்க வேறு எங்கேயாவது போய் விடவேண்டும். ஏதாவது ஆஸ்ரமத்தில் சேர்ந்துவிட வேண்டும். புருஷனிடமிருந்த நகைகள், பேங்க் தொகை பாத்திரங்கள் என்று எடுத்து மறுநாள் மாலையே பீனா குளியாவை அழைத்துக் கையில் கொடுத்தாள். பீனா தன் குற்றம் பற்றி பேச வாயெடுக்கையில், சரஸ்வதி கை உயர்த்தி அதட்டினாள்.

''அவருக்கு நான் போறலை. உனக்கு அவர் போறலை, இவ்வளவுதானே. குழந்தைகளை ஜாக்கிரதையா வளர்த்துண்டு வா அது போறும்.''

ஹேமாவின் பங்கு முப்பத்திரண்டு லட்ச ரூபாய் வந்தது. தன் பங்கிலிருந்து சுந்தரம் ஐந்து லட்ச ரூபாய் ஹேமாவின் திருமணத்திற்காக என்று அவளிடம் கொடுத்தான். தன் திருமண நாளைச் சொன்னான்.

ஆனால் சுந்தரமும், விஜோலியாவும் திருமணத்தை விட வியாபாரத்துக்கு இடம் பிடிப்பதிலேயே அதிக நேரம் செலவழித்தார்கள். இண்டீரியர் டெகரேட்டர்



பார்க்க டெல்லிக்கு பயணமானார்கள், பயணமான அன்று காலை ஒரு மணிநேரத்தில் திருமணத்தைசரஸ்வதியின் முன்பு முடித்துக் கொண்டார்கள். [illegible] வந்து அனிதாவை கட்டிக் கொண்டார்கள். [illegible]துக் கொண்டு விமான நிலையம் [illegible]ார்கள்.

''டெல்லிக்கு எதற்கு அனிருதனா வியாபாரமா?''

''ரெண்டுந்தான்.''

''அம்மா'' ஹேமா அழைத்தாள்.

20249
373636

''கீழ ஒரு பிளாட் விலைக்கு வருது. இன்னிக்கு சாயந்திரம் அட்வான்ஸ் தரேன். சந்தானத்தின் அப்பாவையும், அம்மாவையும் அதுல குடி வைக்கிறேன். கூரியர் கம்பனி ஆரம்பிக்க சந்தானம்பார்ட்னர். இப்போதைக்குஇதுதான் பிளான். எனக்கும் சந்தானத்துக்கும் சரியா வந்தால் திருமணம். இல்லேன்னா இப்படியே இருப்பேன். கடைசி வரைக்கும் இருப்பேன்.''

''காசு வருவதற்கு முன்னயே எனக்கு ஆம்பிளைன்னா பயம். இப்ப அந்த பயம் இன்னும் அதிகமாகறது. முப்பத்திரமு லட்ச ரூபாய் காசு. இந்த வீடு எனக்குன்னு இருக்கிற நகைகள் எல்லாமுமே அதிகமா இருக்கு. என்னால யாரையும் நம்ப முடியலை. நம்பிக்கையா ஒரு ஆள் வருகிற வரைக்கும் நான் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்.

சந்தானமும், அவன் வீடும் குடி வந்த பிறகு சரஸ்வதிக்கு வெளியேறும் ஆசை வந்தது. கேரளத்தின் எல்லையில் உள்ள காசர்கோடு பக்கம் இருக்கிற ஆனந்த ஆஸ்ர

மத்திற்கு போக விரும்பினாள். அங்கேயே தங்கியிருக்க ஆசை தெரிவித்தான். ஆஸ்ரமம் வரச்சொன்னதும் புறப் பட்டு போனான்.

''உன் பயம் நியாயம் ஹேமா, உன்னை நான் அவ சரமே படுத்தலை. ஒரு ரெண்டு வருஷம் டைம் வைச் சுக்கோ. அதுவரைக்கும் பிஸினஸ் பார்ட்னராவே இரு, போதும். என்னை எங்க வீட்டை பிடிச்சிருந்தா பிறகு பார்த்துக்கலாம். நாளைக்கு தேனாம்பேட்டையில் ஒரு இடம்போய் பாத்துட்டு வரலாமா.''

அவள் தலையாட்டினாள்.

சந்தானமும் போய், அம்மாவும் போய் தான் மட்டும் தனியாக இருக்கும் வீட்டில் வராண்டாவில உட்கார்ந்து கொண்டாள். குளிரெடுத்தது. புடவையை போர்த்திக் கொண்டாள். எதனாலயோ கல்யாண ஆசை வரவில்லை உடம்பு வாளிப்பாக இருப்பினும்அதில் காமம் குதிக்கவே யில்லை. அம்மா அடிக்கடி சொல்வது ஞாபகம் வந்தது.

வீணை என்று ஒன்று செய்தால் அது மீட்டப்பட வேண்டும். பெண் என்று ஒருவள் இருந்தால் அவள் திருமணம் செய்துகொள்ள வேண்டும்.

நான் வீணை. மீட்டப்படாத வீணை. விநோலியா வும் வீணை. ஆனால் விநோலியாவை சுந்தரம் துரிதகதி யில் வாசித்துக் கொண்டிருப்பான்.



காதலிக்க வேண்டும் என்று லட்சியம் வைத்திருந் தான். அந்த லட்சியத்தில் வெற்றி பெற்று விட்டான். என் லட்சியம் வேறு. அப்பா மாதிரி தனியே நின்று காட்ட வேண்டும். யாராலும் அதிகாரம் செய்யப்படா மல் அதிகாரம் செய்து வாழ வேண்டும்.

அதுவரை நான் மீட்டாத வீணையாகவே இருப் பேன்.

அம்மா எங்கே இருப்பாள்... யோசனை தடம் மாறிற்று. ராமர் சீதையைத் தேடி மைசூர், மங்களூர், கேரளா வழியாகத்தான் போனதாகச் சொல்கிறார்கள். அம்மா இந்தக் கல்லில்தான் ராமர் உட்கார்ந்தார் என்று எந்தப் பாறையாவது கும்பிட்டு கொண்டு இருக்கலாம். இது அம்மா உட்கார்ந்த இடம். என் பிரியமுள்ள அம்மா ராமரை நினைத்துக் கொண்டு தியானம் செய்த இடம். ஹேமாவுக்கு ஒரு சிறிய நெகிழ்ச்சி உண்டாயிற்று. அவள் அம்மா மாதிரியே அங்கே உட்கார்ந்து கொண் டாள்.

□ முற்றும் □

20249
3736362